॥ श्रीः ॥

॥ श्रीराधाकृष्ण परब्रह्मणे नमः ॥

प्रश्नारूढफलनिर्णयः

ப்ரச்ஞாரூடபல நிர்ணயம்.

தமிழுரையுடன்.

இச்சிறந்த உரை
மஹாமஹோபாத்தியாய
வேதாந்தகேஸரி பங்காளுடு ப்ரம்ஹஸ்ரீ
கணபதி சாஸ்திரிகள் அவர்களின் முக்கிய சிஷ்யரும்,
வியாகரணவேதாந்த சாஸ்திர பாரங்கதரும், பாகவத
பகவத்கீதோபன்யாஸகரும், சோதிடமந்திர சாஸ்திர வித்வானும்,
'ஆர்யமத ஸம்வர்த்தனீ' பத்திராதிபருமான
ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
அவர்களால் இயற்றித் தமது "ஆர்யமத ஸம்வர்த்தனீ"
அச்சுக்கூடத்தில் அச்சிட்டு சென்னையில்
பிரசுரஞ் செய்யப்பட்டது.

காபிரைட்.] 1932. [விலை ரூ 3-[illegible]-0

ஆர்யமதஸம்வர்த்தனீ பிரஸ்,
72 பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இப்புஸ்தகம் கிடைக்குமிடங்கள்.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
திருவல்லிக்கேணி, சென்னை.

அல்லது:—

கஸ்தூரிரங்கவிலாஸ், நடேசய்யர் தெரு, மாம்பலம் சென்னை.

K. Krishnamurti Iyer.



कडलङ्गुडि नटेशशास्त्री

ज्यौतिषिकः

व्याकरण वेदान्त शास्त्र पारङ्गतः, भागवत भगवद्गीतोपन्यासकः

ब्रह्मसूत्रशाङ्करभाष्यादि वेदान्तग्रन्थानां, बृहज्जातकादि ज्यौतिषग्रन्थानां, श्रीमद्भागवतस्य च

द्राविड भाषानुवाद सम्पादकः,

आर्यमतसंवर्द्धनी पत्रिकासंपादकश्च ॥

श्रीमते वासुदेवाय नमः ॥

ப்ரஸ்னாரூடபல நிர்ணயம்.

முகவுரை.

ப்ரஸ்னம், ஆரூடம் இவைமூலம் காணவேண்டியபலன் இன்னதென இதில் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதுபற்றி வடமொழியிலுள்ள "प्रज्ञानदीपिका" (ப்ரக்ஞானதீபிகை) என்றநூலுக்கு இப்பெயர்கொடுத்து எமதறிவுக்கெட்டியவரை அதைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். ஆகவே ப்ரஸ்னாரூடமூலம் பலன்காண முயலுபவர் இந்நூலைப் படிப்பது மிகவும் அவஸ்யமாகும். மேலும், தமிழில் செய்யுள்முறையில் வெளியிடப்பட்ட ஜினேந்திரமாலை என்ற ப்ரஸ்னாரூட நூலானது இந்த ப்ரக்ஞானதீபிகையின் மொழிபெயர்ப்பேயொழிய தனிநூலன்று என்பதை விளக்கவேண்டி வடமொழிநூலுக்கு நேருக்குநேராக ஜினேந்திரமாலையிலுள்ள சிலபாடல்களை ஆதியில் சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். ஆகவே நாமிதுவரை வெளியிட்டுள்ள ப்ருஹத்ஜாதகம், ஜாதகத்வாதசபாவபல நிர்ணயம், பலதீபிகை, ஜாதகசந்திரிகை, கோசரபல நிர்ணயம், உடுதசாபல நிர்ணயம், சகுனபல நிர்ணயம், ஆகிய இந்நூல்களை ஆதரிக்கும் தமிழுலகம் இதையுமாதரித்து எமதுசிரமம் பயன்படுமாறு செய்யுமென நம்புகிறோம். நாம் பலவேலைகளுக்கிடையே இவ்வேலையையும் செய்துவந்திருப்பதில் இதில் ஏதேனும் சொற்பிழை பொருள் பிழை இருக்குமாயின் அதை அடுத்தபதிப்பில்தான் திருத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

கஸ்தூரிரங்கவிலாஸ், நடேசய்யர் தெரு, மாம்பலம் சென்னை.

(12-8-1932)

விஷய அட்டவணை.

உபோத்காத காண்டம். (1)

	பக்கம்.
பிரஸ்னசாஸ்திர ஸ்வரூப நிரூபணம் ...	1
கிரந்தக்காரரின் தைவவணக்கம், பிரதிக்ஞை முதலியன ...	2
இந்தக் கிரந்தத்தில் நிரூபணம் செய்யப்படப் போகின்ற விஷயங்களைச் சுருக்கமாய்க் கூறல் ...	3

தாதுக்ஞான காண்டம். (2)

ஸூரியாதிக் கிரஹங்களுக்கு ஒருவருக் கொருவருக் குள்ள சத்துருமித்திர ஸமத்தன்மையை நிரூபித்தல்..	4
மேற்கூறிய விஷயமாய் ஜினேந்திரமாலையில் கூறப்பட்டுள்ள பாடல்கள்	5
மேஷாதிராசிகளுக்கு இன்னின்னக் கிரஹங்கள் அதிபரென்பது ...	”
இன்னின்னராசிகளுக்கு இன்னின்னக் கிரஹம் மித்திரனென்பது ...	6
ஸூரியாதிக் கிரஹங்களின் உச்சவீடுகள் ...	”
உச்சராசிகளிலுள்ள அத்யுச்சபாகங்கள் ...	”
ஸூரியாதிகளின் சத்துருக்கிரஹங்கள் ...	7
ஸூரியாதிகளின் நீசராசிகள் ...	”
ராஹுவாதிகளின் நீசவீடுகளும் மித்திரசத்துருவீடுகளும் ...	8
சதுஷ்கேந்திரங்களின் ஸ்வரூபம்	”
இன்னின்னவிடத்தைக்கொண்டு இன்னின்னதை ஆராய வேண்டும் என்பது ...	”
பிருஷ்டோதய ராசிகள்	9
பிருஷ்டோதயாதிக் கிரஹங்கள்	”
ராசிகளுக்கும், கிரஹங்களுக்கு மின்னவிடத்தில் பலமென்பது	”
மானுஷாதிராசிகளும் மானுஷாதிக் கிரஹங்களும் ...	”
ராசிகளின் வீதிகள் ...	10

	பக்கம்.
ஆரூடராசிகளும், ப்ரதிஸூத்திரக் கிரமமான பார்வையும்..	”
கிரஹங்களுக்கு ஆகாசாதிபாவம் கூறல் ...	11
சத்திரராசியைக் காண்பதற்கு உபாயம் ...	12
இவ்விஷயத்தைப் பற்றி ஜினேந்திரமாலை கூறுவது ...	14
கிரஹங்களின் பூர்ணதிதிருஷ்டிகளைக் கூறல்	15
இன்னின்னவிதமான திருஷ்டியில் இன்னின்னார் பலம் பெற்றவராவர் என்பது ...	”
ராசிகளுக்கும், கிரஹங்களுக்குமுள்ள திருஷ்டியின் பிரிவுகள்.	16
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ...	”
நஷ்டாதிதிரவ்யங்களின் திக்கைக் காண்பிக்கும் ராசிகள் ...	17
ஸ்திரீபுருஷராசிகளும், ஸ்திரீபுருஷக் கிரஹங்களும் ...	”
தனியாகவும், சேர்ந்தும் வஸிக்கின்ற ராசிகளும் கிரஹங்களும்.	18
ராசிகளுடையவும், கிரஹங்களுடையவும் ஜாதிகள்	”
முற்கூறியவிஷயமாய் ஜினேந்திரமாலைக் கூறுவது ...	19–20
ராசிகளின் நிறங்கள் ...	21
கிரஹங்களின் நிறங்கள் ...	”
முற்கூறியவிஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ...	”
ஸூரியாதிகளின் ஆகிருதிகள் ...	22
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ...	”
கிரஹங்களின் கிரணங்கள்	”
ராசிகளின் கிரணங்கள் ...	”
கிரணங்கள் விஷயமான வேறுமதம் ...	24
கிரஹங்களின் பரிமாணம்	”
கிரஹங்களின் யோஜனைகள்	”
கிரஹங்களின் வயதுகள் ...	25
கிரஹங்களுக்குரிய ரஸங்கள் ...	”
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ...	”
கிரஹங்களின் இன்னின்னபாகத்தில் அடையாளம் (மச்சம்) இருக்குமென்பது ...	26
கிரஹங்கள்மூலம் சரீரத்தில் குறிப்பானவிடத்தில் அடையாளம் காணும் முறை ...	”

பக்கம்.
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... 26
கிரஹங்களைக்கொண்டு கொம்பின் பேதமறியும் முறை ... 27
நிற்கும்ராசி, நடக்கும்ராசி, தூங்கும்ராசி இவற்றைக் கூறல். ”
ராசிகளுக்குரிய தேசங்களும், அவைமூலமறியவேண்டிய நஷ்டதிரவ்யாதி ஸ்தானங்களும் .... ”
இவ்விஷயமாயுள்ள மதபேதம் 28
கிரஹங்கள் மூலம் காணவேண்டிய நஷ்டாதிதிரவ்யங்களின் ஸ்தானம் ... ”
கிரஹங்களுக்குரிய வர்ஷமாஸாதிகளைக் கூறல் ... 29
ஸ்தானத்தை அனுஸரித்து ஏற்படும் வர்ஷாதி காலங்கள் ... ”
கிழக்குமுதலிய திசைகளில் யாமக்கிரமமாய் கிரஹங்கள் ஸஞ்சரிக்கும் முறை ... 30
மேற்கூறியவிஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது 32
ஆரூடாதிபனைக்கொண்டு திக்கைத்தீர்மானித்தல் ... 35
ராசிகளிலும், கிரஹங்களிலும் தாதுமூல ஜீவன்களைக் கூறல். 36
ஸ்தானபேதத்தை யனுஸரித்துக் கிரஹங்களுக்கு ஏற்படும் தாத்வாதி ஸம்க்ஞைகள் ... 37
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... ”
கிரஹங்களின் லோஹங்கள் 39
ஸூரியாதிகளுக்குரிய சிலாவர்க்கங்கள் .... ”
ஸ்தானவிசேஷத்தை யனுஸரித்துக் கிரஹங்கள் மூலம் காணவேண்டிய தாதுக்கள் ... 40
கிரஹங்களின் ரத்தினங்கள் ... ”
மேற்கூறியவை விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... ”
கிரஹங்களின் ஆபரணங்கள் ... 42
ஷை விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... ”

மூலக்ஞான காண்டம். (3)

ஸூரியாதிகளுக்குரிய மரம் செடிகொடிகளைக் கூறல் ... 44
ராசிகளுக்குரியமரம், செடி, கொடிமுதலியன ... ”

பக்கம்.
மேற்கூறியவிஷயமாய் வேறுசிலரின் மதம் ... 44
மேற்கூறியவிஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... 45
ஸூரியாதிகளுக்குரியவிருக்ஷாதிகளின் பாகங்கள் ... 47
மேற்கூறியவிஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... ”
கிரஹங்களுக்குரிய தான்யங்கள் ... 49
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது .... ”
முற்கூறியதான்யங்கள் விளையுமிடங்கள் 50
முற்கூறியவிஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... ”

ஜீவக்ஞான காண்டம். (4)

பஞ்சபூதங்களுள் இன்னின்ன பூதமாக இன்னின்னக் கிரஹமாகின்றதென்பது 51
கிரஹங்களுக்கு பஞ்சேந்திரிய ரூபத்வத்தையும், விஷய ரூபத்வத்தையும் கூறல் ... ”
இன்னின்னக் கிரஹங்களுக்கு இத்துணைக்ஞானம் என்பது. ”
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... 52
செவ்வாய் முதலான 5கிரஹங்களின் வர்க்கங்களைக் கூறல்.. 53
இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவது ... ”
கிரஹங்களுக்குரிய அவயவங்களைக் கூறல் ... 55
நினைக்கப்பட்டபிராணி இன்னதென்பதைக் கூறல் ... ”

நஷ்டமுஷ்டி சிந்தாகாண்டம். (5)

மேஷராசியில் ஸூரியாதிகளிருப்பதன்மூலம் காணவேண்டிய ஜீவவர்க்கங்கள் ... 59
விருஷபத்தில் ஸூரியாதி கிரஹங்களிருப்பதன் மூலம் காணவேண்டிய ஜீவவர்க்கங்கள் .... ”
கிரஹங்கள் அந்தந்தராசிகளிலிருப்பதன் மூலம் காணவேண்டியஜீவவர்கங்கள் ... 60
ஒருவன் ஒன்றை மனத்தில் எண்ணிக் கொண்டுதான் எண்ணினபொருள் யாதெனக் கேட்டால் அதையறிவதற்கு உபாயங்களை விரிவாய் கூறல் ... 61-64

பக்கம்.

ஆரூட காண்டம். (6)

சந்திரன் ஆரூடாதி ராசிகளிலிருப்பதன் மூலம் அறிய வேண்டியவைகள் ... 64
உதயராசிலிருந்து ஆரூடராசிக்கு ஏற்படுகின்ற ஸ்தான ஸங்க்யையை யனுஸரித்துக் காணவேண்டிய பலன்... 65
பாவபரிகல்பனை செய்யவேண்டிய முறை ... ”
மனத்திலுல் எண்ணப்பட்டபொருளை இன்னதென அறிவதற்கு உபாயம் ... ”

சத்திர காண்டம். (7)

உதயராசியிலிருந்து சத்திரராசிக்கு ஏற்படும் ஸ்தான எண்ணை அனுஸரித்தும், அதில் இருக்கின்ற கிரஹங்களை யனுஸரித்தும் காணவேணடிய பலன்கள்... 66

உதய காண்டம். (8)

குரு, புதன், சந்திரன், சுக்கிரன் முதலியோர் ப்ரஶ்ன லக்கினத்திலிருப்பதன் பலன் ... 67

நஷ்ட காண்டம். (9)

இன்னின்னராசி உதயமாகி இன்னின்னராசி ஆரூடராசியானுல் நஷ்டமானபொருள் கிடைக்குமென்பது ... 68
சரராசி உதயாரூட சத்திரராசியாகவும்,ஸ்திரராசி உதயாரூடசத்திர ராசியாகவும், உபயராசி உதயாரூடசத்திரராசியாகவுமாவதன் மூலம் காணவேண்டிய பலன். 70
கிரஹங்கள் அந்தந்த ஸ்தானங்களில் இருப்பதன் மூலம் காணவேண்டிய நஷ்டமான லோஹத்திரவ்யங்கள்.... 72
கிரஹங்கள் அந்தஸ்தானங்களிலிருப்பதன் மூலம் காணவேண்டிய நஷ்டமான பிராணிகள் .... ”
கிரஹங்கள் மூலம் காணவேண்டிய நஷ்டதிரவ்யங்களிருக்கும் ஸ்தானங்கள் ... 73
கிரஹங்கள்மூலம் காணவேண்டியத் திருடர்களின் ரூபங்கள் முதலியன ... ”

பக்கம்.

இன்னின்னராசி உதயமானுல் நஷ்டத்திரவ்யம் கிடைக்காதென்பது ... 74
நஷ்டமானபொருளிருக்கும் திக்கு, மறுபடியும் அது கிடைக்கும் நாள் இவற்றை அறிவதற்கு உபாயம் .... ”

லாபாலாப காண்டம். (10)

லாபத்தைத்தரும் யோகங்களும், அவற்றை நாசமாக்கும் யோகங்களும் 75
சத்துரு, மித்திரனுவதற்கும், ஆயுளுக்கு ஹானி, பந்தனம் இவற்றுக்குமுரிய யோகங்கள் 76
ராஹுமூலம் காணவேண்டிய பலவிசேஷங்கள் ... 77
ஸ்திரீகளுடன் சேர்க்கை தனலாபம் இவற்றுக்குரிய யோகங்கள். ”

ரோக காண்டம் (11)

பொதுவாய் வியாதிசாந்தமாவதற்கும், ஆகாமைக்குமுரிய யோகங்களைக் கூறல் ... 78
இன்னின்னக் கிரஹங்கள் மூலமின்னின்ன இடத்தில் வியாதியைக்காண வேண்டும் என்பது ... 79
ரோகநிவிருத்தியுண்டாகும் காலத்தைக் கூறல் ... 80
ரோகஸ்தானத்தை அந்தந்தக் கிரஹங்கள் பார்ப்பதன் மூலம் காணவேண்டிய ரோகங்கள் ... 81
பிரஶ்னகாலத்திய நக்ஷத்திரத்தைக்கொண்டு இன்னின்னவிடத்தில் வியாதி இருக்குமென்பதைக்கூறல் ... 82

மரண காண்டம் (12)

மரணமுண்டாகாமைக்குரிய யோகம் 83
மரணயோகங்கள் ... 84
பலம் பெற்றஸூரியாதிக்கிரஹங்கள்மூலம் காணவேண்டியமரணநிமித்தம் .... ”
இத்துணைதினங்களில் மரணமுண்டாகும் என்பதைக் கூறல். 85

ஸ்வர்க்க காண்டம். (13)

ஸ்வர்க்கம், நரகம் முதலிய லோகங்களை யடைவதற்கும், மிருகாதி ஜன்மங்களை யடைவதற்குமுள்ள கிரஹயோகங்கள் ... 86

பக்கம்.

போஜன காண்டம். (14)

மேஷாதிராசிகள் உதயமாவதன்மூலம் காணவேண்டிய போஜ்யவஸ்துக்கள் ... 87
கிரஹங்கள் மூலமறியவேண்டிய சுவைகள் ... ”
மற்றும் போஜனஸம்பந்தமான விஷயங்களைக் கூறல் ... 88

ஸ்வப்ன காண்டம். (15)

மேஷாதி ராசிகள் உதயமாவதன்மூலம் சொல்லவேண்டிய ஸ்பவப்னத்தில் காணப்படும் பொருள்கள் 89
4மிடத்தில் ஸூரியாதிக் கிரஹங்களிருப்பதன் மூலம் அறியவேண்டிய ஸ்வப்னத்தில் காணப்படும் பொருள்கள். 91

நிமித்த காண்டம். (16)

உதயலக்கினத்தில் ஸூரியாதிக் கிரஹங்களிருப்பதன் மூலம் காணவேண்டிய சகுனங்கள் ... 92

விவாஹ காண்டம். (17)

விவாஹப்பிரஸ்னலக்கினத்தில் ஸூரியாதிகளிருப்பதன் பலன். 93
பிரஸ்னலக்கினத்துக்கு 2மிடம் முதலியவற்றில் ஸூரியாதிகளிருப்பதன் பலன் ... ”

காம காண்டம். (18)

ஸ்திரீதுஷ்டையாக விருப்பதற்கும்,பதிவிரதையாக விருப்பதற்குமுரிய யோகங்கள் ... 97
பந்துக்களை த்வேஷிப்பவள், பதிவ்ரதையாகவும் ரூபமுள்ளவளாகவு மிருப்பவள், பரபுருஷனுடன் சேருபவள் முதலிய ஸ்திரீகளின் லாபயோகம் ... 98
சந்திரன் நீசாதிவர்க்கங்களை யடைந்திருப்பதன் மூலம் காணவேண்டிய ஸ்திரீலாபங்கள் ... 99
போகத்தின் எண்ணைக் காண்பதற்கு உபாயம் ... 100

புத்திர காண்டம். (19)

ஸ்திரீகள் புத்திரனுண்டாவதைப் பற்றிக் கேட்டால் பதில் சொல்லவேண்டிய முறைகள் 102

பக்கம்.

கர்ப்பத்திலிருப்பது ஆணுபெண்ணு என்று பகுத்தறிவதற்கு உபாயம் ... 103
பிரஸவமுண்டாகும் தினத்தை அறிவற்கு உபாயம் ... ”

புத்திராரிஷ்ட காண்டம். (20)

பிள்ளை, தாய், தகப்பன் இவர்களுக்கு மரணமோ, வியாதியோ உண்டாவதற்குரிய யோகங்களைக் கூறல் ... 104

சுரிகா காண்டம். (21)

கத்தியின் லக்ஷணம் முதலியவற்றைக் கூறல் ... 106

சல்ய காண்டம். (22)

16விதமான சல்யங்களைக் கூறல் ... 108
துஷ்டசல்யம், சுபசல்யம் இவற்றைக் கூறல் ... 109
அஹிசக்கிரமும், சல்யமிருக்குமிடமும் ...109-111
ஸூரிய நக்ஷத்திரம் சந்திரநக்ஷத்திரம் இவற்றைக் கூறல்... 112
சந்திர ஸூரியர்களிருக்குமிடத்தை யறிவதற்குரிய கணிதம். ”
நிதி, சல்யம் இவற்றைக்காண்பதற்கு உபாயம் ... ”
சந்திரனை ஸூரியாதிகள் பார்ப்பதன்மூலம் நிதி இத்தகையதாகவிருக்கும் என்று கூறல் ... 114
நிதி வைக்கப்பட்டிருக்கும் பாத்திர மித்தகையதாக விருக்கு மென்பது ... 115
இத்தனை அகழத்தில் நிதி இருக்கு மென்பது .... ”
மற்றும் நிதி ஸம்பந்தமான விஷயங்களைக் கூறல் ..116-118

கூபகாத காண்டம். (23)

கூபகாத சக்கிரமமைக்கும் முறை ... 120
பிராதக்காலம் முதல் மத்யாந்ஹம் வரையிலும், மத்யாந்ஹம் முதல் ஸாயங்காலம் வரையிலும் அமைக்கவேண்டிய கூபகாதசக்கிரம் ... ”
ஸூரியாஸ்தமனம் முதல் பாதிராத்திரிவரையிலும், பாதிராத்திரிக்குமேல் ஸூரியோதயம் வரையிலும் அமைக்கவேண்டிய கூபகாத சக்கிரம் 121

பக்கம்.

இன்னின்னவிடத்தில் ஜலம் கிடைக்குமென்பது ... 123

ஜலம் அதிக ஆழத்திலும், ஸமீபத்திலுமிருப்பதை அறிதற்கு உபாயம் 124

நல்லஜலம் உப்புஜலம் இவை கிடைப்பதின் யோகம் ... ”

கிரஹங்கள் மூலமறியவேண்டிய கிணர்வெட்டப்படும் பிரதேசங்கள் ... 125

கிணர் வெட்டப்படும் இடம் பிறருடையதா? தன்னுடையதா? வென்பதைக் காண்பதற்கு உபாயம் ... 126

ஸேனா காண்டம். (24)

எதிர்த்துவரும் சத்துருவுக்கும், எதிர்க்கப் படுபவனுக்கும் நேருகின்ற ஜயாபஜயங்களையும், ராஜியையும் விரிவாய் கூறல் ..126-132

யாத்திரா காண்டம். (25)

யாத்திரை மூலமேற்படுகின்ற லாபாலாபங்களை விரிவாய் கூறல் ..133-136

விருஷ்டி காண்டம். (26)

மழை பொழிவதற்கும், பொழியாமைக்கு முரியநிமித்தங்களைக் கூறல் ..137-138

நௌகா காண்டம். (27)

கப்பல் இன்னஸமயத்தில்வரும், இன்னஸமயத்தில் புறப்படும் என்பதை விரிவாய்க் கூறல் 138

கார்யஸித்தி காண்டம். (28)

கார்யஸித்தியை யறிவதற்குரிய யோகங்களை விரிவாய்க் கூறல் ... 140

விஷய அட்டவணை முற்றிற்று.

ஸ்ரீகோபாலன் துணை.

சோதிடப்ரக்ஞான தீபிகை

என்ற ப்ரச்னாருடபல நிர்ணயம்.

உபோத்காத காண்டம்.

அவதாரிகை—சோதிடசாஸ்திரமானது கணிதம், ஜாதகம், சாகை (ப்ரஸ்னாருடம்) என மூன்றுவிதமாகும். அவற்றுள் ஒருவன் ஜனித்தகாலத்தில் உதயமாகும் லக்கினத்தையும், அக்காலமுள்ள கிரஹநிலையையுங் கொண்டு ஜாதகம் அமைத்து அதன் மூலம் அவனது வாழ்நாளில் நிகழும் சுபாசுபங்களை யுபதேசிப்பது ஜாதகசாஸ்திரமெனப்படும். ஒருவனுக்குத் திடீரெனநேர்ந்த பொருள் முதலியவற்றின் நஷ்டத்தையும், அவ்விதநஷ்டம் இன்னின்னவகையில் நிகழ்ந்ததென்பதையும், தனதுகையில் ஒருபொருளை மரைத்துவைத்துக் கொண்டு அஃதின்னதென்பதைக் கேழ்க்குங்கால் அதையறியும் முறையையும் பிறவற்றையும், மனதில் ஒன்றை எண்ணிக்கொண்டு அதைப்பற்றிய விவரத்தை யறியவிரும்புங்கால் அதையறிவதற்குரிய முறையையும் ப்ரஸ்னம் செய்பவர்வந்த காலத்தில்உதயமாகும் லக்கினத்தையும் அக்காலமுள்ள கிரஹநிலையையும் கொண்டு அவ்விஷயமான நிர்ணயத்தைத் தெளிவாயுபதேசிப்பது ப்ரஸ்னாருட சாஸ்திரமெனப்படும். கிரஹம் முதலியவற்றின் தத்கால பிற்காலநிலையைத் தெளிவாயுபதேசிப்பது கணிதசாஸ்திர மெனப்படும். ஆகவே, 1 ஜாதகம், 2 சாகை (ப்ரஸ்னாருட சாஸ்திரம்.) 3 கணிதசாஸ்திரம் ஆகிய 3 ஐயும் தமது எதிர்காலபலனை யறிய விருப்பமுள்ளவர் நிஸ்சயமாய் அறிய

வேண்டுவது அவஸ்யமாகிறது. ஆகவே ஜாதகமூலம் எதிர்கால பலனை யறியும் முறையை விளக்கும் நூல்களைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டிருப்பதுபோல ப்ரஸ்ஞாரூடமூலம் எதிர்காலாதிகளில் நிகழும் பலனையுணர்த்தும் சோதிட ப்ரக்ஞானதீபிகை என்ற இந்நூலையும் தமிழில் பெயர்த்து அதை முதன்மையாகக் கொண்டும், ஆங்காங்கு ஜினேந்திரமாலை முதலிய நூல்களிலுள்ளவற்றையும் சேர்த்தும் ப்ரஸ்ஞாரூடபல நிர்ணயம் என்ற பெயருடன் வெளியிடுகிறோம். ப்ரக்ஞானதீபிகையின் முதல்ஸ்லோகம் பின்வருமாறு—

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥ १ ॥

கருத்துரை—வெண்ணிறமான வஸ்திரத்தைத் தரித்தவரும், சந்திரனுக்கொத்த நிறமுள்ளவரும்,நான்குகைகளுள்ளவரும், யானையினது போன்ற முகமுள்ளவருமான (கணபதியை) எல்லா வூறுகளும் சாந்தமாவதற்குவேண்டித் தியானித்தல் அவஸ்யமானது. (1)

श्रीमद्गङ्गाधरसुतं चन्द्रलेखावतंसकम् ।
सिद्धिदं सर्वविद्यानां वन्दे दन्तावळाननम् ॥ २ ॥

(க—ரை) கங்கையைத் தரிக்கும் பரமசிவனார் குமாரரும், சந்திர கலையைத் தலையிலணிந்தவரும், எல்லாவித்யைகளுடையவும் ஸித்தியைத் தருபவருமான யானைமுகத்தோனை வணங்குகிறேன்.

ज्ञानप्रदीपकं नाम शास्त्रं लोकोपकारकम् ।
प्रश्नादर्शं प्रवक्ष्यामि सर्वशास्त्रानुसारतः ॥ ३ ॥

(க—ரை) லோகோபகாரஞ்செய்கின்றதும், ப்ரஸ்னவிஷயத்திற் கண்ணாடிபோன்றதும், க்ஞானப்ரதீபகம் எனப்பெயருள்ளதுமான சாஸ்திரத்தை அவ்விஷயமாகவுள்ள எல்லாச் சாஸ்திரத்தையும் அனுஸரித்துச் சொல்லத்தொடங்குகிறேன். (3) (எ—று)

भूतं भावि वर्तमानं शुभाशुभनिरीक्षणम् ।
पञ्चप्रकारमार्गञ्च चतुः केन्द्रबलाबलम् ॥ ४ ॥
आरूढछत्रवर्गञ्चाप्युदयादिबलाबलम् ।
क्षेत्रदृष्टिं नरं नारीं युग्मं वंशञ्च वर्णकम् ॥ ५ ॥

मृगादिनररूपाणि किरणानि च योजनम् ।
आयुरासनमाद्यन्तं परीक्ष्य कथयेद्बुधः ॥ ६ ॥

(க—ரை) சென்றகாலம், எதிர்காலம், நிகழ்காலம், சுபாசுபப்பார்வை, நான்கு கேந்திரங்களின் பலாபலம், ஆகிய ஐந்துப்ரகாரமான மார்க்கத்தையும் (4) ஆருடம், சத்ரம் (தென்மொழியில் இதைக்கவிப்பு என்பர்) இவற்றின் வர்க்கத்தையும், உதயாதிகளின் பலாபலத்தையும், * ராசிகளின் பார்வையையும் புருஷன், ஸ்திரீ, நபும்ஸகன் வம்சம், வர்ணம் (நிறம்) இவற்றையும். (5) மிருகாதிகளுடையவும் மனிதனுடையவும் ரூபங்களையும், கிரஹங்களின் கிரணங்களையும், அவற்றுக்குச் சொல்லிய யோஜனங்களையும் (தூரம் அல்லது காதம் இவைகளையும்) ஆயுள், இருப்பு, ஆத்யந்தம் இவற்றையும் நன்கு பரீக்ஷித்துப் புத்திமானுயுள்ளவன் பலன் சொல்லவேண்டும். (6)

चरस्थिरोभयं राशिं तत्प्रवेशस्थलानि च ।
निशा दिवस संध्याश्च काल देश स्वभावकान् ॥ ७ ॥
धातुं मूलञ्च जीवञ्च नष्टं मुष्टिञ्च चिन्तनम् ।
लाभालाभौ गदं मृत्युं भुक्तिं स्वप्नञ्च शाकुनम् ८ ॥
जातकर्मायुधं शल्यं कूपं सेनागमं तथा ।
सरिदागमनं वृष्टिमर्घं नौसिद्धिमादितः ॥ ९ ॥
क्रमेण कथयिष्यामि शास्त्रे ज्ञानप्रदीपके ।
ज्ञानप्रदीपके शास्त्रे ह्युपोद्धातः प्रकीर्तितः ॥ १० ॥

ஆகவே சராராசி, ஸ்திரராசி, உபயராசி, அவற்றின் ப்ரவேசஸ்தலங்கள், இரவு, பகல், இவற்றின் ஸந்தி இவைகளையும், காலம், தேசம், ஸ்வபாவம் இவைகளையும், தாது, மூலம், ஜீவன் இவற்றையும் நஷ்டம், முஷ்டி (கையைமூடி மறைத்துவைத்திருப்பது முஷ்டியெனப்படும்) சிந்தனம் (மனத்தில் ஒன்றை எண்ணிக்கொண்டு அதைப்பற்றிக்கேட்பது சிந்தனம் எனப்படும்) இவற்றையும், லாபா

* இந்தப்ரச்னசாஸ்திரத்தில் கிரஹங்களுக்குப் போல ராசிகளுக்கும் பார்வையுண்டு.

லாபங்களையும், வியாதியையும், மரணத்தையும், ஆஹாரத்தையும், ஸ்வப்பினத்தையும், †சாகுனத்தையும், (7-8) உண்டான காரியத்தையும், ஆயுதத்தையும், சல்யத்தையும், கிணற்றையும், ஸேனையின் வரவையும், அதுபோலவே நதியின் வரவையும், மழையையும், விலையின் விவரத்தையும், கப்பலின் ஸித்திமுதலியவற்றையும், அடிமுதல் கொண்டு, (9) முறையே க்ஞானப்ரதீபகமென்ற இந்தச் சாஸ்திரத்தில் சொல்லப்போகிறேன். க்ஞானப்ரதீப சாஸ்திரத்தின் உபோத்காதப்ரகரணம் இவ்விதம் கூறப்பட்டது. (எ-று) (10)

க்ஞானதாது காண்டம் 2.

अथ वक्ष्ये विशेषेण ग्रहाणां मित्रनिर्णयम् ।
भौमस्य मित्रे शुक्रज्ञौ भृगोर्ज्ञारा*र्कमन्त्रिणः ॥ ११ ॥
अङ्गारकं विना सर्वे ग्रहाः मित्राणि मन्त्रिणः ।
आदित्यस्य गुरुर्मित्रं शनेर्विद्गुरुभार्गवाः ॥ १२ ॥
भास्करेण विना सर्वे बुधस्य सुहृदस्तथा ।
चन्द्रस्य मित्रे जीवज्ञौ मित्रवर्ग उदाहृतः ॥ १३ ॥

(க-ரை) ‡கிரஹங்களின் மித்ரத்வாதிவர்க்கம்—இனி கிரஹங்களின் மித்ரத்வாதி நிர்ணயத்தை விசேஷமாகச் சொல்லுகிறேன். செவ்வாய்க்கு—சுக்கிரன், புதன், இருவரும் மித்திரர்கள். சுக்கிரனுக்கு—புதன், செவ்வாய், ஸூரியன், குரு, இவர்கள் மித்திரர்கள். (11) குருவுக்கு—செவ்வாயைத் தவிர்த்து மீதமுள்ள க்ரிஹங்கள் மித்திரர்களாவர். அதாவது:—ஸூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், சனி இவர்கள் குருவுக்கு மித்திரர்கள் என்றும் ஸூரியனுக்கு குரு மித்திரன். சனிக்கு புதன், குரு, சுக்கிரன் இவர்கள் மித்திரர்களாவர். (12) அவ்விதமே புதனுக்கு ஸூரியனைத்தவிர்த்து மீதமுள்ள சந்திரன், செவ்வாய், குரு, சுக்கிரன், சனி இவர்கள் யாவரும் மித்திரர்களாவர். சந்திரனுக்கு குருவும் புதனும் மித்திரர்களாவர். இவ்விதம் மித்திரவர்க்கமானது சொல்லப்பட்டது. (13) இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது:—

சேய்க்குப் புதன் புகராஞ்சேய்மால் சுன்பொன் புகர்க்காம்
வாய்த்த பொன்னே ரவிக்கா மந்தனுக்கு—வாய்த்த
புகர் புலவன் பொன் மதிக்குப் புந்தியுடன் பொன்னும்
பகர்புலவர் நட்புரைத்த பாங்கு (11)

(இ-ள்) செவ்வாய்க்குப் புதனும் சுக்கிரனும், சுக்கிரனுக்குச் செவ்வாய் புதன் குரு சனி இவர்களும், ஸூரியனுக்குக் குருவும், சனிக்குப் புதன், குரு, சுக்கிரன் இவர்களும் சந்திரனுக்குப் புதன் குரு இவர்களும் மித்திரர்கள். (எ-று)

புந்தி கதிர் வெள்ளி மதி பொன்னுக்கு நட்பாகு
மந்தன் பொன் வெள்ளிசேய்மா மதியும்—புந்திக்
குறவாகுமென்றுரைப்ப ரொள்ளிய நூல்வல்ல
வறிவாளர் நட்பதனையாய்ந்து (12)

(இ-ள்) குருவுக்கு புதன் ஸூரியன் சுக்கிரன் சந்திரன் இவர்களும், புதனுக்கு சனி குரு சுக்கிரன் செவ்வாய் சந்திரன் இவர்களும் மித்திரர்களாவர் (எ-று)

ராசீயதிபர்கள்.

मेषवृश्चिकयोर्भौमस्तुलावृषभयोस्सितः ।
कन्यामिथुनयोस्सौम्यः शनिर्मकरकुम्भयोः ॥ १४ ॥
धिषणो मीनधनुषोः सिंहस्य दिनकृद्भवेत् ।
कुळीरस्य निशानाथः क्षेत्राधिपतयः क्रमात् ॥ १५ ॥

(க-ரை) மேஷம் விருஶ்சிகம் இவற்றுக்குச் செவ்வாயும் துலாம் விருஷபம் இவற்றுக்குச் சுக்கிரனும், கன்னி மிதுனம் இவற்றுக்குப் புதனும், மகரகும்பங்களுக்குச் சனியும், மீனம் தனுஸ் இவற்றுக்குக் குருவும், ஸிம்ஹத்துக்கு ஸூரியனும், கடகத்துக்குச் சந்திரனும் முறையே ராச்யதிபர்களாவர். (எ-று) (14, 15)

† இதைப்பற்றிய விஷேத்தை நமது "சகுனபல நிர்ணயம்" என்ற புஸ்தகத்திற் பரக்கக்காண்க.

* ज्ञार्कि इति च पाठः । அதன் படி சனி என்று பொருள்.

‡ இந்தச் சாஸ்திரதில் சொல்லப்படும் மித்ரத்வாதிகளுக்கும், ஜாதக சாஸ்திரத்திற் சொல்லப்படும் மித்ரத்வாதிகளுக்கும் முரண்பாடுண்டு எனக்காண்க.

இன்னின்ன ராசிகளுக்கு இன்னின்ன கிரஹம் மித்திரனென்பது.

धनुर्मिथुनपाठीन कन्योक्षाणां शनिस्सुहृत् ।
रविश्चापान्त्ययोरारस्तुलायुग्मोक्षयोषिताम् ॥ १६ ॥
कोदण्डमीनमिथुनकन्यकानां शशी सुहृत् ।
बुधस्य चापनक्राळिकर्क्यजोक्षतुलाघटाः ॥ १७ ॥
क्रियो मिथुनकोदण्डकुम्भाळिमकरा भृगोः ।
गुरोः कर्कतुलाकुम्भमिथुनोक्षमृगेश्वराः ।
राशिमैत्रं ग्रहाणाञ्च मैत्रमेवमुदाहृतम् ॥ १८ ॥

(க—ரை) தனுஸ், மிதுனம், மீனம், கன்னி, விருஷபம் இவற்றுக்குச் சனி மித்திரனுவான். தனுஸ் மீனம் இவற்றுக்கு ஸூரியனும், துலாம் மிதுனம் விருஷபம் கன்னி இவற்றுக்குச் செவ்வாயும் மித்திரராவர். (16) தனுஸ் மீனம் மிதுனம் கன்னி இவற்றுக்குச் சந்திரனும், புதனுக்கு—தனுஸ், மகரம், விருஶ்சிகம் கடகம் மேஷம் விருஷபம் துலாம் கும்பம் இவையும், (17) சுக்கிரனுக்கு—மேஷம், மிதுனம் தனுஸ் கும்பம் விருஶ்சிகம் மகரம் இவையும், குருவுக்கு கடகம் துலாம் கும்பம் மிதுனம் விருஷபம் ஸிம்ஹம் இவையும் மித்திரவீடுகளாகும். ராசிகளுக்குக் கிரஹமைத்ரமும், கிரஹங்களின் ஒன்றுக்கொன்று மைத்ரமும் இவ்விதம் இந்தச் சாஸ்திரத்திற் சொல்லப்பட்டது. (18)

ஸூரியாதிக்கிரஹங்களின் உச்சவீடுகள்.

सूर्येन्द्वोः परिघे जीवे धूमज्ञशनिभोगिनाम् ।
शक्रचापकुजाणूनां शुक्रस्योच्चास्त्वजादयः ॥ १९ ॥

(க—ரை) ஸூரியனுக்கு மேஷமும், சந்திரனுக்குவிருஷபமும், பரிகத்துக்கு மிதுனமும், குருவுக்குக் கடகமும், தூமனுக்கு ஸிம்ஹமும், புதனுக்கு கன்னியும், சனிக்குத் துலாமும், ராஹுவுக்கு விருஶ்சிகமும், இந்திரதனுஸ்ஸுக்கு தனுஸ்ஸும், செவ்வாய்க்கு மகரமும், அணுவுக்குக் கும்பமும், சுக்கிரனுக்கு மீனமும் முறையே உச்சவீடுகளாகும். (19)

அத்யுச்ச பாகங்களாவன.

अत्युच्चं दशमं वह्निमनुयुग्मतिथीन्द्रियैः ।
सप्तविंशति विंशत्या भागाः सप्तग्रहाः क्रमात् ॥ २० ॥

(க—ரை) ஸூரியனுக்கு 10-வதும், சந்திரனுக்கு 2-வதும், செவ்வாய்க்கு 28-வதும் புதனுக்கு 15-வதும், குருவுக்கு 5-வதும், சுக்கிரனுக்கு 27-வதும், சனிக்கு 20-வதுமான பாகங்கள் உச்சராசியில் அத்யுச்ச பாகங்களெனப்படும். (எ—று) (20)

ஸூரியாதிகளின் சத்துருக்கிரஹங்கள்.

बुधस्य वैरी दिनकृच्चन्द्रादित्यौ भृगो रिपू ।
बृहस्पतेरिपुर्भौमः सितचन्द्रात्मजौ विना ॥ २१ ॥
भौमस्य रिपवो भानोर्विना जीवं परेऽरयः ।
गुरुसौम्यौ विना चन्द्रं रवीन्दुवनिजान्विताः ।
शनेश्च रिपवस्सर्वे तेषां तत्तद्गृहाणि च ॥ २२ ॥

(க—ரை) புதனுக்கு ஸூரியன் சத்துரு. சுக்கிரனுக்கு சந்திரன் ஸூரியன் இவர்கள் சத்துருக்கள். குருவுக்குச் செவ்வாய் சத்துரு. செவ்வாய்க்கு சுக்கிரன் புதன் இவர்களைத்தவிர்த்து மீதமுள்ள ஸூரியன் சந்திரன் குரு சனி இவர்கள் சத்துருக்கள். (21) ஸூரியனுக்கு குருவைத்தவிர்த்து மற்ற சுக்கிரன் சந்திரன் செவ்வாய் புதன் சனி இவர்கள். சத்துருக்கள் உத்தரார்த்தம் பொருத்தமாக இல்லை. சனிக்கு எல்லாக்கிரஹங்களும், சத்துருக்கள். அவர்களுடையவீடுகளும் சத்துரு வீடுகளேயாகும். (எ—று) (22)

ஸூரியாதிகளின் நீசராசிகள்.

रवेर्वणिगळिस्त्विन्दोः कुळीरोङ्गारकस्य च ।
ज्ञस्य मीनमजस्सौरेः कन्या शुक्रस्य कथ्यते ।
सुराचार्यस्य मकरस्त्वेतेषां नीचराशयः ॥ २३ ॥

(க—ரை) ஸூரியனுக்குத்துலாமும், சந்திரனுக்கு விருஶ்சிகமும், அங்காரனுக்குக் கடகமும், புதனுக்கு மீனமும், சனிக்கு மேஷமும், சுக்கிரனுக்கு கன்னியும், குருவுக்குக் மகரமும், நீசராசிகளாகும்.

ராஹ்வாதிகளின் நீசவீடுகளும் மித்ரசத்ரு வீடுகளும்.

राहोर्वृषो युगञ्चेन्द्रधनुषोऽणोर्मृगेश्वरः ।
परिवेषस्य कोदण्डः कुम्भो धूमस्य नीचभूः ॥ २४ ॥
मित्रं तुलानक्रकन्या युग्मचापवृषास्त्वहेः ।
कुम्भः क्षेत्रमहेश्शत्रुः कुळीरो नीचभूर्वृषः ॥ २५ ॥

(க—ரை) ராஹுவுக்கு விருஷபமும், இந்திரதனுஸுக்கு மிதுனமும், அணுவுக்கு ஸிம்ஹமும், பரிவேஷத்துக்கு தனுஸ்ஸும், தூமனுக்குக் கும்பமும் நீசவீடுகளாகும். (24) ராஹுவுக்குத் துலாம் மகரம் கன்னி மிதுனம் தனுஸ் விருஷபம் இவை மித்திர வீடுகளாகும். கும்பம் ஸ்வக்ஷேத்திரமாகும். கடகம் சத்துரு வீடாகவும், விருஷபம் நீசவீடாகவுமாகும். (எ—று) (25)

சதுஷ்கேந்திரங்களாவன.

उदयादि चतुर्थन्तु जलकेन्द्रमुदाहृतम् ।
तच्चतुर्थञ्चास्तमयं तत्तुर्यं वियदुच्यते ।
तत्तुर्यमुदयञ्चैव चतुष्केन्द्रं प्रकीर्तितम् ॥ २६ ॥

(க—ரை) உதயலக்னத்திலிருந்து நான்காமிடம் ஜலகேந்திரமெனப்படும். அதற்கு நான்காமிடம் (அதாவது 7 மிடம்) அஸ்தமனம் எனப்படும். அதற்கு நான்காமிடம் (அதாவது 10 மிடம்) ஆகாசமெனப்படும். அதற்கு நான்மிடம் உதயம் எனப்படும். இவ்விதம் நான்கு கேந்திரங்களும் சொல்லப்பட்டன. (26)

கேந்திரத்தில் சிந்திக்கவேண்டிய பலன்.

चिन्तनीयन्तु हिबुके दशमे स्वप्नचिन्तनम् ।
छत्रे मुष्टिञ्च यन्नष्टमस्ते चारूढतोऽपि वा ॥ २७ ॥

(க—ரை) நான்காமிடம், ஏழாமிடம், இவற்றால் ஸ்வப்பனத்தைப்பற்றி சிந்திக்கவேண்டும். * சத்ரத்தில் (கவிப்பில்) முஷ்டியையும், ஏழாமிடத்தில் நஷ்டத்ரவ்யத்தையும் காண்க. ஆரூடலக்னத்தைக் கொண்டும் முற்கூறியபடி காணவேண்டும். (27)

* சத்ரம் (கவிப்பு) இதன் லக்ஷணத்தை 41-வது சுலோகத்திற் காண்க.

பிருஷ்டோதயாதிராசிகள்.

चापोक्ष कर्किनक्राजा स्ते पृष्ठोदयसंज्ञकाः ।
तिर्यङ्मीनस्तथा शेषा राशयो मस्तकोदयाः ।
द्वन्द्वोदयौ मीनमृगावन्ये सर्वे स्वभावजाः ॥ २८ ॥

(க—ரை) தனுஸ், விருஷபம், கடகம், மகரம், மேஷம், இவைகள் பிருஷ்டோதயராசிகளாகும். மீனம் திர்யக் உதயமாகும் ராசியாகும். மீதமுள்ளராசிகள் சீர்ஷோதய ராசிகளாகும். மீனமும் மகரமும் இரண்டாக உதயமாகும் ராசிகளாகும். மற்றராசிகள் எல்லாம் ஸ்வபாவமாக உதயமாகும் ராசிகளாகும். (28)

பிருஷ்டோதயாதி கிரஹங்கள்.

अर्काङ्गारकमन्दास्तु सन्ति पृष्ठोदया अमी ।
राहुजीवभृगुज्ञाश्च ग्रहाः स्युर्मस्तकोदयाः ।
उद्यतस्तिर्यगेवेन्दुकेतू तत्र प्रकीर्तितौ ॥ २९ ॥

(க—ரை) ஸூரியன், செவ்வாய், சனி இவர்கள் பிருஷ்டோதயக் கிரஹங்களாகும். ராஹு குரு சுக்கிரன் புதன் இவர்கள் சீர்ஷோதயக்கிரஹங்களாகும். சந்திரனும் கேதுவும் குருக்காகவே உதயமாகும் கிரஹங்களாகும். (எ—று) (29)

उदये बलिनौ जीवबुधौ तु पुरुषाः पुनः ।
मध्ये चतुष्पदो सूर्यभूमिजौ बलिनौ तथा ॥ ३० ॥
चतुर्थे शुक्रशशिनौ जलराशी बलोत्तरौ ।
कर्कोलिर्बलवानस्ते खेटकश्च शनैश्चरः ॥ ३१ ॥

(க—ரை) குரு புதன் இவர்களும், புருஷராசிகளும் உதயத்தில் பலமுள்ளனவாகும். நாற்கால் ராசிகளும், ஸூரியன் செவ்வாய் இவர்களும் பத்தாமிடத்தில் பலமுள்ளனவாகும். (30) ஜலராசிகளும், சுக்கிரன் சந்திரன் இவர்களும் நான்காமிடத்தில் பலமுள்ளனவாகும். கடகம், விருஶ்சிகம், இந்த ராசிகளும், சனியும், 7மிடத்தில் பலம் பெற்றனவாகும். (எ—று) (31)

மானுஷாதி ராசிகளும் மானுஷாதி கிரஹங்களும்.

युग्मकन्या धनुःकुम्भ तुला मानुषराशयः ।
चतुष्पदा मेषवृष सिंहचापा भवन्ति हि ॥ ३२ ॥

कुलीराली बहुपदौ पक्षिणौ मृगमीनभौ ।
द्विपदाः कुम्भमिथुनतुलाकन्या भवन्ति हि ॥ ३३ ॥
द्विपदाः जीवविच्छुक्राः शन्यर्कारा श्चतुष्पदः ।
शनिसौम्यौ बहुपदौ द्रुतं याति निशाकरः ।
शनिसूर्यौ जानुगती पद्भ्यां यान्तीतरे ग्रहाः ॥ ३४ ॥

(க—ரை) மிதுனம், கன்னி, தனுஸ்ஸின் முற்பாதி, கும்பம், துலாம், இவை மானுஷராசிகளாகும். மேஷம், விருஷபம், ஸிம்ஹம், தனுஸ்ஸின் பிற்பாதி, இவை நாற்கால் ராசிகளாகும். (32) கடகம், விருஸ்சிகம், இவை பலகாலுள்ளனவாகும். மகரம், மீனம், இவைகள் பக்ஷிகளாகும். கும்பம், மிதுனம், துலாம், கன்னி, இவைகள் இரண்டுகாலுள்ளனவாகும். (33) குரு புதன் சுக்கிரன் இவர்கள் இரண்டுகாலுள்ளவராவர். சனி ஸூரியன் செவ்வாய் இவர்கள் நாற்கால் பிராணிகளாவர். சந்திரன் புதன் இவர்கள் வெகுகாலுள்ள பிராணிகளாவர். சந்திரன்வேகமுள்ள கிரஹமாகும். சனியும் ஸூரியனும் முழங்கால்களால் செல்லுபவராவர். மற்ற கிரஹங்கள் கால்களால்நடப்பவராவர். (எ—று) (34)

ராசிகளின் வீதிகளாவன.

उदीयन्तेऽजवीथ्यान्तु चत्वारो वृषभादयः ।
युग्मवीथ्या मुदीयन्ते चत्वारो वृश्चिकादयः ।
उक्षवीथ्यामुदीयन्ते मेषमीनतुलास्त्रियः ॥ ३५ ॥

(க—ரை) மேஷவீதி என்றும், விருஷபவீதி என்றும், மிதுன வீதி என்றும் ராசிகளின் வீதிகள் 3ஆகும். அவற்றுள் மேஷவீதியில் விருஷபம், மிதுனம், கடகம், ஸிம்ஹம் இந்நான்கும் உதயமாகின்றன. மிதுனவீதியில் விருஸ்சிகம், தனுஸ், மகரம், கும்பம் இந்நான்கும் உதயமாகின்றன. விருஷப வீதியில் மேஷம் மீனம் துலாம் கன்னி இந்நான்கும் உதயமாகின்றன. (எ—று) (35)

ஆரூடராசிகளும், ப்ரதிஸூத்ரக்ரமமான பார்வையும்.

राशिचक्रं समालिख्य प्रागादिवृषभादिकम् ।
प्रदक्षिणक्रमेणैव द्वादशारूढसंज्ञकम् ॥ ३६ ॥

वृषस्य वृश्चिकश्चैव मिथुनस्य शरासनम् ।
मकरस्तु कुलीरस्य सिंहस्य घट उच्यते ॥ ३७ ॥
मीनस्तु कन्यकायाश्च तुलाया मेष उच्यते ।
प्रतिसूत्रक्रमादेते परस्परनिरीक्षकाः ॥ ३८ ॥

(க—ரை) ராசிசக்கிரத்தை எழுதவேண்டும். அதில் கிழக்கு முதலாகவும், விருஷபாதியாகவும், ப்ரதக்ஷிணக்ரமமாகவே ஆரூடமெனப்பெயரிய ராசிகள் 12ஆகும். (36) விருஷபத்துக்கு விருஸ்சிகமும், மிதுனத்துக்கு தனுஸ்ஸும், கடகத்துக்கு மகரமும், ஸிம்ஹத்துக்குக் கும்பமும், (37) மீனத்துக்குக் கன்னியும், துலாத்துக்குக் மேஷமும் ஆக இவ்விதம் இந்த ராசிகள் ப்ரதிஸூத்ரக்கிரமமாக ஒன்றையொன்று பார்க்கின்றனவாக வாகும். (எ—று) (38)





ஆகாசாதிக் கிரஹங்கள்

गगनं भास्करः प्रोक्तश्चन्द्रो भूमिरुदाहृतः ।
पुमान् भानुर्वधूश्चन्द्रो भूचक्रप्राणवान् रविः ।
भूचक्रदेहश्चन्द्रस्स्यादिति शास्त्रस्य निर्णयः ॥ ३९ ॥

(க—ரை) ஸூரியன் ஆகாசமாகவும், சந்திரன் பூமியாகவும் சொல்லப்படும். ஸூரியன் புருஷனாகவும், சந்திரன் ஸ்திரீயாகவும் ஆகும். ஸூரியன் பூசக்கிரத்துக்கு ப்ராணனாக(உயிராக)ஆவான்.

சந்திரன் பூசக்கிரத்துக்கு தேஹமாக ஆவான் என்பது சாஸ்திரத்தின் நிர்ணயமாகும். (எ—று) (39)

रविः शुक्रः कुजश्चार्किर्गुरुरिन्दुरहिर्विदः ।
ध्वजादि व्युत्क्रमेणैव तत्तत्कालं विचिन्तयेत् ॥ ४० ॥

(க—ரை) த்வஜம், தூமம், ஸிம்ஹம், நாய், விருஷபம், கழுதை யானை, காகம், இவையாக புதன் முதலியோரைத் தலைகீழாக அந்தந்த காலத்துக்கேற்றபடி சிந்தித்தறியவேண்டும். அதாவது:—புதனை த்வஜமாகவும், ராஹுவை தூமமாகவும், சந்திரனை ஸிம்ஹமாகவும், குருவை நாயாகவும், சனியை விருஷப (எருது) மாகவும், செவ்வாயைக் கழுதையாகவும், சுக்கிரனைக் யானையாகவும், ஸூரியனை காக்கையாகவும் சிந்திக்கவேண்டும் என்பதாம். (எ—று) (40)

குறிப்பு—ப்ரஸ்னமார்க்கம் என்ற கிரந்தத்திலோவெனில் இவ் விஷயம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. அதாவது:—

अर्कारजीवविच्छुक्रमन्दचन्द्राहयः क्रमात् ।
ध्वजधूमहरिश्वोक्षखरमातङ्गवायसाः ॥

ஸூரியன் த்வஜம், செவ்வாய் தூமம், குரு ஸிம்ஹம், புதன் நாய், சுக்கிரன் எருது, சனி கழுதை, சந்திரன் யானை, ராஹு காக்கை இவையாகும் என்பதாம்.

சத்ரம் (கவிப்பு) என்ற ராசியாவது.

प्रष्टुरारूढभं ज्ञात्वा तद्वीथीमवलोक्य च ।
आरूढाद्यावती वीथी तावती तूदयादिका ।
तद्राशिश्छत्रमित्युक्तं शास्त्रे ज्ञानप्रदीपके ॥ ४१ ॥
आरूढाद्भानुगां वीथीं परिगण्योदयात्तथा ।
तावता राशिना छत्रमिति केचित्प्रचक्षते ॥ ४२ ॥
मेषस्य वृषभः छत्रं मेषश्छत्रं वृषस्य च ।
युग्मकर्कटसिंहानां मेषश्छत्रमुदाहृतम् ॥ ४३ ॥
कन्याया मकरश्छत्रं तुलाया वृष उच्यते ।
वृश्चिकस्य वृषश्छत्रं धनुषो मिथुनन्तथा ॥ ४४ ॥

नक्रस्य मिथुनं छत्रं मेषः कुम्भस्य कीर्तितः ।
मीनस्य वृषभश्छत्रं छत्रत्रयमुदाहृतम् ॥ ४५ ॥

(க—ரை) ப்ரஸ்னம் செய்பவர் வந்தேறிநின்ற ராசியை அறிந்து அந்த ராசியினது வீதியையுமறிந்து ஆரூடலக்கினத்திலிருந்து வீதியானது எத்தனை எண்ணுள்ளதோ ப்ரஸ்னம் செய்பவர் வந்தகாலத்தி லுதயமானலச்னம் முதற்கொண்டு அத்தனை எண்ணுள்ள அந்தந்த ராசியானது **சத்ரம்** (கவிப்பு) என ஞ்ஞான ப்ரதீபகமென்ற இந்தச் சாஸ்திரத்திற் சொல்லப்படுகிறது. அதாவது:—மகரம் ஆரூடலக்கினமாகவும், மேஷம் ப்ரஸ்னகாலத்திலுதித்த லக்கினமாகவுமானால் இங்குகன்னி சத்திரலக்கினமாகின்றது. எவ்விதமெனின் மகரம் மிதுனவீதியைச் சேர்ந்ததாகையால் மகரத்தினின்றும் மிதுனம் 6-வது ராசியாகின்றது, இந்த 6 யும் உதயலக்கினமான மேஷத்தினின்றும் எண்ணின் கன்னி 6-வதாக வருகின்றது. ஆகவே கன்னி சத்திர ராசியாக ஏற்பட்டது. இவ்விதமே மற்றவிடத்திலும் காண்க. (41) ஆரூடலக்னத்திலிருந்து ஸூரியனடைந்த வீதிவரை எண்ணிவரும் தொகைக்கு உதயலக்கினத்திலிருந்து எண்ணிவரும் ராசியின் எண் எவ்வளவோ அந்த எண்ணுக்கொப்பான எண்ணினால் சத்ரத்தைக் காணவேண்டுமெனச் சிலர் சொல்லுகின்றனர். இதனால் ஆரூடச்சத்ரம் சொல்லப்பட்டது. (42) இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலையிற் சொல்லியிருப்பதாவது—

வந்தகயிற்றை மகிழ்ந்தெழு மட்டாயெண்ணி
யுந்தி யுதயத்தை யோர்ந்தனைச்—சிந்தித்து
நாடிக்கொணர்ந்தெண்ண நண்ணுமவன்றன்னைக்
கூடிக்கவிக்குங்குடை. (2)

(இ—ள்) ஆரூடத்தினின்றும் (ஒருவன் வந்து ஏறிநின்ற இராசியினின்றும்) ஸூரியவீதிவறை எண்ணி அவ்விதம் எண்ணிவருவ தொகைக்கு உதயத்தினின்றும் எண்ணிவரும் ராசியானது ஆரூடத்தைக் கவிக்கும் ராசியாகவாகும்.

கயிற்றினுதயங்கருதுகின்ற வீதிப்
பயிற்றிய வெண்ணோர் பாதியாக்கிக்—குயிற்றிய

வேட்சி தொட்டெண்ண விதுவுங் கவிப்பென்பர்
மாட்சியின் மிக்கோர்மதித்து. (3)

(இ-ள்) ஆரூடலக்கினத்தினின்றும் ஸூரியனுடைய வீதிவரை எண்ணிவரும் தொகையைப் பாதியாக்கி உதயத்தினின்றும் எண்ண அப்பாதியாக்கின ராசியின் எண் எத்தனையாவதாகவருமோ அந்தராசியானது ஆரூடத்தைக் கவிக்கும் ராசியாகும். இதையும் கவிப்பென்றே சொல்லலாம். (எ-று)

குறிப்பு—ஸம்ஸ்கிருதத்தில் **சத்ரம்** என்றதையே முதற்பாட்டில் **குடை** என்றுசொன்னதாகக் கொள்ளவும்.

இந்த இரண்டுபாட்டிலும் ஆரூடக்கவிப்பு சொல்லப்பட்டது. இனி சுலோகத்தில் உதயக்கவிப்பு சொல்லப்படுகிறது. மேஷத்துக்கு விருஷபமும், விருஷபத்துக்கு மேஷமும், மிதுனம் கடகம் ஸிம்ஹம் இவற்றுக்கு மேஷமும், (43) கன்னிக்கு மகரமும் துலாத்துக்கு விருஷபமும், விருஶ்சிகத்துக்கு மிதுனமும், தனுஸ்ஸுக்கு மிதுனமும் (44) மகரத்துக்கு மிதுனமும், கும்பத்துக்கு மேஷமும், மீனத்துக்கு விருஷபமும் உதயச் சத்திரங்களாகும். இவ்விதம் மூன்று சத்ரங்கள் சொல்லப்பட்டன. (45) இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை சொல்லுவதாவது—

மேடத்திடப மிடபத்து மேடமே
நாடுமியாழலவன் சிங்கத்திற்-காடாகுங்
கன்னி கோற்கேறுகவிக்குந்தேள் வின்மான்சால்
பன்னுமியாழ் மீற்கெருதுபார். (4)

(இ-ள்) மேஷத்துக்கு விருஷபமும், விருஷப மிதுனகடக ஸிம்ஹங்களுக்கு மேஷமும், கன்னி துலாம் இவற்றுக்கு விருஷபமும், விருஶ்சிகம் தனுஸ் மகரம் கும்பம் இவற்றுக்கு மிதுனமும், மீனத்துக்கு விருஷபமும் உதயக்கவிப்பாகும். (எ-று)

இவ்விஷயத்தை வேறுமுறையால் காட்டுகிறார்—

ஆடிரண்டேறீராறு மியாழ்பதினொன்றை யிருஒண்
டோடரி பெண்ணொன் பானெட்டோர் துலைதே-டேடிச்
சிவக்குஞ்சிலை யேழ் மானாறுகுடமைந்துங்
கவிக்குமீன்மூன்றெண்ணிக்காண். (5)

K. Kistnamurthi Iyer.

(இ-ள்) மேஷத்துக்கு இரண்டாவது ராசியும், விருஷபத்துக்கு 12 வதுராசியும், மிதுனத்துக்கு 11-வது ராசியும், கடகத்துக்கு 10-வது ராசியும், ஸிம்ஹகன்னிகட்கு 9-வது ராசியும், துலாம் விருஶ்சிகம் இவற்றுக்கு 8-வது ராசியும், தனுஸ்ஸிற்கு 7-வது ராசியும், மகரத்துக்கு 6-வது ராசியும், கும்பத்துக்கு 5-வது ராசியும், மீனத்துக்கு 3 வது ராசியும் உதயக்கவிப்பாகும். (எ-று)

பார்க்கும் முறை யுபதேசிக்கப்படுகிறது.

उदये सप्तमे पूर्णमर्धं पश्येत् त्रिकोणके ।
चतुरश्रे त्रिपादञ्च दशमे पादमेव च ।
एकादशे तृतीये च पादार्धं वीक्षणं भवेत् ॥ ४६ ॥

(க-ரை) உதயம் (லக்னம்) ஏழாமிடம் இரண்டையும் முழுப் பார்வையாகவும், த்ரிகோணத்தைப் பாதிப் பார்வையாகவும், 4, 8 மிடத்தை முக்கால் பார்வையாகவும், 10 மிடத்தைக் கால்பார்வையாகவும் 11மிடம், 3மிடம் இரண்டையும் அரைக்கால் பார்வையாகவும் வீக்ஷணஞ் செய்யும். (46)

இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது—

எழுவதுமேழு முழுநோக்கைந்தொன்பான்
வழுவாவரை நான் கிரைந்துந்-தழுவாத
முக்கால் பதினொன்று மூன்றுமே கானொக்கா
மெக்காலு நோக்கத்தினெண். (11)

(இ-ள்) லக்கினமும் ஏழாமிடமும் முழுப்பார்வை, 5 மிடமும் 9 மிடமும் அரைப்பார்வை, 4 மிடமும் 10 மிடமும் முக்கால் பார்வை, 11 மிடமும் 3 மிடமும் கால்பார்வை. என எக்காலத்திலும் நோக்கின் எண் கண்டுக்கொள்ளத்தக்கன. (எ-று)

रवीन्दुसित सौम्यास्तु बलिनः पूर्णवीक्षणे ।
अर्धेक्षणे सुराचार्यस्त्रिपात्पादार्धयोः कुजः ॥ ४७ ॥
पादेक्षणे बली सौरिर्वीक्षणाद्बलमीरितम् ।
तिर्यक्पश्यन्ति तिर्यञ्चो मानुषास्समदृष्टयः ॥ ४८ ॥

(க-ரை) ஸூரியன் சந்திரன் சுக்கிரன் புதன் இவர்கள் முழுப்பார்வையில் பலமுள்ளவர்கள். குரு பாதிவீக்ஷணத்திலும்

செவ்வாய் முக்கால்அரைக்கால் வீக்ஷணத்திலும், சனி கால் வீக்ஷணத்திலும் பலமுள்ளவர்கள். பஶ்வாதி ராசிகள் (அதாவது:—மேஷம், விருஷபம், ஸிம்ஹம், விருஶ்சிகம் இவைகளாம்.) குறுக்காகவும், மானுஷராசிகள் (அதாவது:—மிதுனம் கன்னி துலாம் தனுஸ் கும்பம் இவைகளாம்.) ஸமமாகவும் பார்க்கின்றன. (எ—று) (48)

ऊर्ध्वेक्षणौ पत्ररथावधोनेत्रास्सरीसृपाः ।
अन्योन्यालोकिनौ जीवचन्द्रा वूर्ध्वेक्षणो रविः ॥ ४९ ॥
पश्यत्यारः कटाक्षेण पश्यतोऽधः कवीन्दुजौ ।
एकदृष्ट्याहिमन्दौ च ग्रहाणामवलोकनम् ॥ ५० ॥

(க—ரை) பரவைராசிகள் (அதாவது:—மகரமீனங்கள்) மேல் பார்வையுள்ளன. பாம்புராசிகள் (கடக விருஶ்சிகங்கள்) கீழ் பார்வையுள்ளன. குரு சந்திரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுவர். ஸூரியன் மேல்பார்வையுள்ளவன். செவ்வாய் கடைக் கண்ணால் பார்க்கிறான். சுக்கிரனும் புதனும் கீழில் பார்க்கின்றனர். ராஹுவும் சனியும் ஒரே திருஷ்டியாகப் பார்க்கின்றனர். என இவ்விதம் கிரஹங்களின் பார்வையைக் காணவேண்டும். (49, 50)

இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது—

மதிபொன்னெதிர்முக நோக்கு மேனோக்குங்
கதிர்சேய்கடைக்கணோக்கு—மதிராத
பாகன்புகர்கவிழ்ந்து நோக்குமாம்பாம்பு சனி
யே கவிழிநோக்குமென். (10)

(க—ரை) சந்திரன் குரு இவர்கள் எதிர் நோக்குடையவர். ஸூரியன் மேல்நோக்குடையவன். செவ்வாய் கடைக்கண்பார்வையுடையவன். சுக்கிரன் புதன் இவர்கள் குனிந்து பார்வையுடையவர். சனி ராகு இவர்கள் ஒரேமாதிரியான நோக்குடையவர்.

விலங்கு விலங்கு நேர்நோக்குமா மக்கள்
சலங்காது செவ்வனே காணுங்—கலங்காது
காட்டிடமேனோக்கும் பறவை தவழ்வனவா
நீட்டிவைகணோக்கு நிலை. (9)

(இ—ள்) இருகாலுள்ளராசிகள் மனிதர் நோக்குவது போல நேர் நேராக எதிர்பார்வையை யுடையன. நாற்காலுள்ள ராசிகள்

மிருகங்கள் பார்ப்பதுபோலப் பக்கங்களில் பார்க்கும். சிறகு,கால் இவையுள்ளராசிகள் பறவைகள் நோக்குவதுபோல மேல்பார்வையுடையனவாகும். பலகாலுள்ள ராசிகள் தவழுவனபோன்று கீழ் நோக்குடையனவாகும். (எ—று)

நஷ்டாத் திரவியங்களின் திக்கை காண்பிக்கும் ராசிகள்.

मेषः प्राच्यां धनुस्सिंह्यावग्नावुक्षा च दक्षिणे ।
मृगकन्ये च नैर्ऋत्यां मिथुनं पश्चिमे ततः ॥ ५१ ॥
वायुभागे तुलाकुम्भा वुदीच्यां कर्क उच्यते ।
ईशभागेऽलिमीनौ च ज्ञेया नष्टादिसूचकाः ॥ ५२ ॥

(க—ரை) மேஷம் கிழக்கிலும், தனுஸ் ஸிம்ஹம் இவைகள் ஆக்நேயத்திலும், (தென்கிழக்கிலும்) விருஷபம் தெற்கிலும், மகரம் கன்னி இவைகள் தென்மேற்கிலும், மிதுனம் மேற்கிலும், துலாம், கும்பம் இவைகள் வடமேற்கிலும், கடகம் வடக்கிலும், விருஶ்சிகம் மீனம் இவைகள் வடகிழக்கிலும் நஷ்டம் முதலியவற்றைத் தெரிவிப்பனவாகும். (51 52) (எ—று)

நஷ்டாதித்ரவியங்களின் திக்கைக்காண்பிக்கும் கிரஹங்கள்.

अर्कशुक्रारराह्वार्किचन्द्रज्ञगुरवः क्रमात् ।
पूर्वादीनां क्रमादीशाः क्रमान्नष्टादिसूचकाः ॥ ५३ ॥

(க—ரை) ஸூரியன், சுக்கிரன், செவ்வாய், ராகு, சனி, சந்திரன், புதன், குரு இவர்கள் முறையே கிழக்கு தென்கிழக்கு தெற்கு தென்மேற்கு மேற்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கு முதலிய திக்குகளுக்கு அதிபர்களாவர். ஆகவே இவர்கள் நஷ்டாதிவஸ்துக்களுக்கு தத்தமது திக்குகளை முறையே குறிப்பவராகவுமாவர். (53)

ஸ்திரீபுருஷராசிகளும் ஸ்திரீபுருஷக்கிரஹங்களும்.

मेषयुग्मधनुःकुम्भतुलासिंह्याश्च पूरुषाः ।
राशयोऽन्ये स्त्रियः प्रोक्ता ग्रहाणां भेद उच्यते ॥ ५४ ॥
पुमांसोऽर्कारगुरवः शुक्रेन्दुभुजगाः स्त्रियः ।
मन्दज्ञकेतवः क्लीबा ग्रहभेदाः प्रकीर्तिताः ॥ ५५ ॥

(க—ரை) மேஷம், மிதுனம், தனுஸ், கும்பம், துலாம், ஸிம்ஹம் இவை புருஷராசிகளாகும். மற்றவை விருஷபம், கடகம்,

கன்னி, விருஸ்சிகம், மகரம், மீனம் இவை ஸ்திரீராசிகளாகும். ஸூரியன் செவ்வாய் குரு இவர்கள் புருஷக்கிரஹங்களாகவும், சுக்கிரன் சந்திரன், ராகு இவர்கள் ஸ்திரீக்கிரஹங்களாகவும், சனி புதன் கேது இவர்கள் அலி(நபும்ஸகக்)கிரஹங்களாகவும் ஆவர். (54-55)

தனியாகவும், சேர்ந்தும் வஸிக்கும் ராசிகளும் கிரஹங்களும்.

तुलाकोदण्डमिथुनघटकन्या नराः स्मृताः ।
एकाकिनौ मेषसिंहौ वृषकर्कालिकन्यकाः ।
एकाकिन्यः स्त्रियः प्रोक्ताः स्त्रीयुग्मं मकरान्तिमौ ॥५६॥
एकाकिनोऽर्केन्दुकुजाः शुक्रज्ञार्क्यहिमन्त्रिणः ।
एते युग्मग्रहाः प्रोक्ताः शास्त्रे ज्ञानप्रदीपके ॥ ५७ ॥

(க-ரை) துலாம், தனுஸ், மிதுனம், கும்பம், கன்னி இவைகள் (சேர்ந்துவஸிக்கும்) புருஷராசிகளாகும். மேஷம் ஸிம்ஹம் இவ்விரண்டும் தனித்து வஸிக்கும் புருஷராசிகளாகும். விருஷபம், கடகம், விருஸ்சிகம், கன்னி இவைகள் தனித்து வஸிக்கும் ஸ்திரீராசிகளாகும். மகரமும் மீனமும் இரண்டுஸ்திரீகளின் சேர்க்கையான ராசிகளாகும். (56) ஸூரியன் சந்திரன் செவ்வாய் இந்தக் கிரஹங்கள் ஏகாகியான (தனித்துவஸிக்கின்ற) கிரஹங்களாகும். சுக்கிரன், புதன், சனி, ராகு, குரு இந்தக் கிரஹங்கள் யுக்மக் கிரஹங்களாக (இருவர் சேர்ந்துவஸிக்கும் கிரஹங்களாக) க்ஞானப்ரதீபகமென்ற இந்தச் சாஸ்திரத்திற் சொல்லப்படுகின்றனர். (57)

ராசிகளுடையவும், கிரஹங்களுடையவும் ஜாதிகள்.

विप्राः कर्क्यलि मीनाश्च धनुः सिंहक्रिया नृपाः ।
तुलायुग्मघटा वैश्याः शूद्रा नक्रोक्षकन्यकाः ॥ ५८ ॥
नृपावर्ककुजौ विप्रौ बृहस्पतिनिशाकरौ ।
बुधो वैश्यो भृगुः शूद्रो नीचावार्किभुजङ्गमौ ॥ ५९ ॥

(க-ரை) கடகம் விருஸ்சிகம் மீனம் இவைகள் ப்ராம்ஹண ராசிகளாகும். மேஷ ஸிம்ஹ தனுஸ்ஸுக்கள் க்ஷத்திரிய ராசிகளாகும். மிதுன துலாகும்பங்கள் வைஸ்யராசிகளாகும். விருஷ கன்னியா மகரங்கள் சூத்ரராசிகளாகும். (58) ஸூரியன் செவ்வாய் இவர்கள் க்ஷத்திரியர்களாகவும், குருவும் சந்திரனும் ப்ராம்ஹணர்களாகவும், புதன் வைஸ்யனாகவும், சுக்கிரன் சூத்திரனாகவும், சனி ராகுக்கள் நீசஜாதிக்காரர்களாகவும் ஆவர். (எ-று) (59)

51-வது சுலோகம்முதல் 59-வது சுலோகம் வரை சொல்லிய விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது: ராசிகளின் திக்காவன—

ஆடு கீழ்பாலரிவிற்றென்கீழ்பாற்றெற்கிடபந்
தேடு மகள் சுறவுதென்மேற்கா—நீடிய
தண்டுமேற்பால் வடமேல் கோற்குடமுந்தான் வடக்கு
நண்டிது தேண்மீன் வடகீழ்நாட்டு. (36)

(இ-ள்) மேஷம் கிழக்கு, ஸிம்மம் தனுஸ் இவை தென் கிழக்கு, விருஷபம் தெற்கு, கன்னி மகரம் இவை தென்மேற்கு, மிதுனம் மேற்கு, துலாம் கும்பம் இவை வடமேற்கு, கடகம் வடக்கு, விருஸ்சிகம் மீனம் இவை வடகிழக்கு என ராசிகளின் திக்கை யறியவேண்டும். (எ-று) (36) கிரஹங்களின் திக்காவன—

நாட்டுங்கதிர்புகர் சேய்நாக நடையிலா
ஞேட்டுமதிபுலவனெண் பொன்னன்—கூட்டிக்
கொடிமுதலா யீங்கிவற்றைக் கொண்டெண்ணுங்காலை
நொடிகொளெண்கோடிக்கா றுவல். (37)

(இ-ள்) ஸூரியனுக்குக் கிழக்கு, சுக்கிரனுக்குத் தென் கிழக்கு, செவ்வாய்க்குத் தெற்கு, ராஹுவுக்குத் தென்மேற்கு, சனிக்கு மேற்கு, சந்திரனுக்கு வடமேற்கு, புதனுக்கு வடக்கு, குருவுக்கு வடகிழக்கு ஆகிய இவை அவ்வவற்றுக்குரிய திக்குகளாகும்.

இராசிகளுடைய ஆண் பெண் விதி.

கோலரியாழ் கூன்சிலை சால்கொச்சையிவையாணுகு
மாலெருது மீன்மகரமாயிழையுங்—கால் பலவாய்
நாமறியுந் தேளலவனென்றிவற்றை நானிலத்தோர்
தாமறியப் பெண்ணென்று சாற்று. (38)

(இ-ள்) மேஷம் மிதுனம் ஸிம்ஹம் துலாம் தனுஸ் கும்பம் இந்த 6 ராசிகளும் புருஷராசிகளாகும். விருஷபம் கடகம் கன்னி விருஸ்சிகம் மகரம் மீனம் இந்த 6 ராசிகளும் ஸ்திரீராசிகளாகும்.

கிரஹங்களின் ஆண் பெண் விதி.

வெள்ளி மதி ராகுபெண்ணாகுங் கேதுவோ
டொள்ளிய மால் காரியலியுளுவாங்—தெள்ளிய

சேயருக்கன் பீதகனுமென்றிவற்றை யாணாக
வாயுணர்ந்தோர் கண்டவழக்கு. (39)

(இ-ள்) ஸூரியன் செவ்வாய் குரு இம்மூன்றும் புருஷர்கள். சந்திரன் சுக்கிரன் ராகு இம்மூன்றும் பெண். புதன் சனி கேது இம்மூன்றும் அலி(நபும்ஸகக்)கிரஹம் எனப் படும். (எ-று) (39)

ராசிகளுள் தனித்தனி ஒற்றை இரட்டை இவற்றை யறியும்முறை.

யாழ்குடமுங் கோலு மிருஞ்சிலையுமாணிரட்டை
யூழிலரியாடேலாமாணொற்றை-சூழுந்
தொடி யிடபந்தேளலவன் சொல்லும் பெண்ணொற்றை
கொடி மகர மீனிரட்டை கூறு. (40)

(இ-ள்) மேஷம் ஸிம்மம் இரண்டும் ஆணொற்றை ராசிகளாகும். மிதுனம் துலாம் தனுஸ் கும்பம் இந்நான்கும் ஆணிரட்டை ராசிகளாகும். விருஷபம் கடகம் கன்னி விருஶ்சிகம் இந்நான்கும் பெண்ணொற்றை ராசிகளாகும். மகரம் மீனம் இவ்விரண்டும் பெண்ணிரட்டை ராசிகளாகும். (எ-று) (40)

கிரஹங்களின் தனித்தனி ஒற்றை இரட்டையின் விதி.

ஆரல் கதிரோனணி மதியமிம் மூன்று
மோருருவே யாகுமுணருங்கா-னீர் தருவோன்
பாகன் பசும்பொன் சனிபாம்பிவையிரட்டை
யாகுமென வுரைத்தாராங்கு. (41)

(இ-ள்) ஸூரியன் செவ்வாய் இரண்டும் ஆணொற்றைக் கிரஹங்களாகும். குரு ஆணிரட்டைக் கிரஹமாகும். சந்திரன் பெண்ணொற்றை கிரஹமாகும். சுக்கிரன் ராகு இவ்விரண்டும் பெண்ணிரட்டைக் கிரஹங்களாகும். புதன் சனி கேது இம்மூன்றும் அலியிரட்டைக் கிரஹங்களாகும். (41) (எ-று)

இராசிகளின் ஜாதியறியும் முறை.

வேந்தனரியாடாகும் வெஞ்சிலை மீன் வேதியனும்
வாய்ந்ததோர்ஞெண்டுடன் றேள்வாணிபனு-மேந்துந்
துலையாழ்குடமூன்றுஞ் சூத்திரன் கீழ்ச்சாதி
கலையேறுடன் மகளாங் காண். (42)

(இ-ள்) தனுஸ் மீனம் இரண்டும் ப்ராம்ஹணன், மேஷம் ஸிம்ஹம் இரண்டும் க்ஷத்திரியன், கடகம் விருஶ்சிகம் இரண்டும் வைஶ்யன், மிதுனம் துலாம் கும்பம் இம்மூன்றும் சூத்திரன் விருஷபம் கன்னி மகரம் இம்மூன்றும் நீசஜாதி (பஞ்சமன்) எனக் கண்டுகொள்ள வேண்டும். (எ-று) (42)

கிரஹங்களின் ஜாதியறியும் முறை.

வெய்யவன் சேய்வேந்தனும் வெண்மதிபொன் வேதியனு
மையுறையும் புந்திவணிகனு-மெய்யுறையும்
வெள்ளியது சூத்திரனுமிக்கு சனிபாம்பிரண்டு
மெள்ளிய கீழ்சாதியாமென். (43)

(இ-ள்) சந்திரனும் குருவும் பிராம்ஹணர், ஸூரியனும் செவ்வாயும் க்ஷத்திரியர், புதன் வைஶ்யன், சுக்கிரன் சூத்திரன் சனியும் ராஹுவும் பஞ்சமர் என்றறிந்து கொள்க. (எ-று) (43)

ராசிகளின் நிறமறியும் முறை.

रक्ता मेषधनुस्सिह्मा कुळीरोक्षतुलास्सिताः ।
कुम्भाळिमीनाः श्यामाः स्युः कृष्णा युग्माङ्गना मृगाः ॥

(க-ரை) மேஷம் தனுஸ் ஸிம்மம் இம்மூன்றும் சிவந்த நிறமுள்ளன. கடகம் விருஷபம் துலாம் இம்மூன்றும் வெண்ணிறமுள்ளன. கும்பம் விருஶ்சிகம் மீனம் இம்மூன்றும் பச்சை நிறமுள்ளன. மிதுனம் கன்னி மகரம் இவை கருநிறமுள்ளன. (60)

கிரஹங்களின் நிறமறியும் முறை.

शुक्रः श्वेतः कुजो रक्तः पिङ्गळाङ्गो बृहस्पतिः ।
बुधः श्यामः शशी श्वेतो रक्तस्सूर्योऽसितश्शनिः ।
राहुश्च कृष्णवर्णस्स्याद्वर्णभेदा उदाहृताः ॥ ६१ ॥

சுக்கிரன் வெண்ணிறம், செவ்வாய் சிவப்பு, குரு பொன்னிறமான அங்கமுள்ளவன், புதன் பச்சைநிறம், சந்திரன் வெளுப்பு, ஸூரியன் சிவப்பு, சனி கருப்பு, ராஹு கருப்பு, என கிரஹங்களின் வர்ணபேதங்கள் சொல்லப்பட்டன. (எ-று). (61)

இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவதாவது:—

வில்லரியாடாஞ்சிவப்பு வெள்ளேறு கோல் கடகஞ்
சொல்லரியவெள்ளை மீன்றேல்குடந்தேன்-சொல்லுங்காற்
றிண்பசுமையாகுந் திறலியாழ்கன்னிசுறு
வொண்கருமை யென்று ரைக்கவோர்ந்து. (44)

(இ-ள்) மேஷம் ஸிம்மம் தனுஸ் இம்மூன்றும் சிவப்புநிறம், விருஷபம் கடகம் துலாம் இம்மூன்றும் வெண்ணிறம், விருஶ்சிகம் கும்பம் மீனம் இம்மூன்றும் பச்சைநிறம், மிதுனம் கன்னி மகரம் இம்மூன்றும் கருப்புநிறம் என்றாம். (எ-று) (44)

புகர் புனராஞ்சேய் செம்மை பொன் பொன்னும் புந்தி
பகர் பசுமைபான் மதியம் வெண்மை-நிகரில்
விரிகதிர்க்குச் செம்மை முடவற்கிராகுக்
குரிதரு சீரொண் கருமை யோர். (45)

(இ-ள்) குரு கருமைகலந்த பொன்னிறம், ஸூரியன் செவ்வாய் இவர்கள் சிவப்பு நிறம், சந்திரன் சுக்கிரன் இவர்கள் வெண்ணிறம், புதன் பச்சை நிறம், சனி ராகு இவர்கள் கருநிறம், என்றாம். (எ-று) (45) இதுவுமது.

பருதிக்கழல் படிகமாமதிக்குச் சேய்க்குக்
குருதிபசும்பொன் குருவுக்-கரியதொரு
புந்திக்குப் பச்சையாம் பால் புகர்க்கிராகுவுக்கு
மந்தனுக்கு நீனிறமாவை. (46)

(இ-ள்) குரு பொன்போன்றநிறம், ஸூரியன் நெருப்பு நிறம், செவ்வாய் இரக்தம் போன்ற நிறம், சந்திரன் ஸ்படிகம் போன்ற நிறம், சுக்கிரன் பால் போன்ற நிறம், புதன் பசுமை, சனி ராகு இவர்கட்கு கருநிறம் என்று கண்டுகொள்க. (47) (எ-று)

ஸூரியாதிகளின் ஆகிருதிகள்.

दीर्घवृत्तं तथाऽष्टाश्रं चतुरश्रायतं तथा ।
दीर्घश्चेतिक्रमादेते सूर्याद्याकृतयो मताः ॥ ६२ ॥

(க-ரை) ஸூரியனுக்கு நீண்ட ஆகிருதி, சந்திரனுக்கு வட்டமான ஆகிருதி, செவ்வாய்க்கு எட்டுமூலையுள்ள ஆகிருதி, புதனுக்கு நான்குமூலையுள்ள ஆகிருதி, குருவுக்கு நீண்ட ஆகிருதி, சுக்கிரனுக்கு நீண்டவுருவம், சனிக்கு நீண்டவுருவம், ராகுவுக்கு வட்டமான வுருவம் என ஸூரியாதி களின் ஆகிருதி கண்டுகொள்ளத்தக்கது. ஜினேந்திரனாலயிற்கூறிய ராசிகளின்வடிவும்,கிரஹங்களின்வடிவும்.

குடந்துலை யாழ்கன்னிதனுக்கொள்பரியுமக்க
டொடர்ந்தசுறுமான் பின்முன்னகுந்-தடங்கண்ணய்

மீனிரண்டுதெற்றில் விழுந்தெழு மாமிக்கதுதன்
றூனுருவமே யுருவாஞ் சாற்று. (50)

நாற்சதுரம்வட்டந்துடிவடிவுமுக்கோண
மேற்பமைந்தநீள்வட்டமெண்கோண-நாற்சதுரம்
பாதிநெடுமைபரிதிமுதற்பாம்பீறு
யோதும்வடிவெல்லாமுரை, (51)

(இ-ள்) முன்னர் கூறியபடியேயாகும். (எ-று) (50-51)

(அ-கை) கிரஹங்களுக்குச் சொல்லிய மிருகங்களின் கொம்பு இவ்விதமென அறியும் முறையை இதனாலுபதேசிக்கிறார்—

மாலருக்கன் கோடுவளைவு மதிமொட்டை
மேலெரிச்குக் கோடுமிகக்குறிய-மேலை
முனிபுகர்க்குக் கோடு நெடிய முறிவாஞ்
சனியரவின் கோடுகுறை சாற்று. (52)

(இ-ள்) புதன் ஸூரியன் இரண்டிற்கும் கொம்பு வளைவா வானது, சந்திரனுக்குக் கொப்பு பொட்டையானது செவ்வாய்க்குக் கொப்பு குறுகினது, குரு சுக்கிரன் இவர்கட்குக் கொப்பு நீளமானது. சனிக்குக் கொப்பு முறிந்தது, ராஹுவுக்குக் கொம்பு அறுபட்டது என காணவேண்டும். (எ-று) (52)

கிரஹங்களின் கிரணங்கள்.

पञ्चैकविंशद्गिरयो नवाशाः षोडशाब्धयः ।
भास्करादिग्रहाणान्तु किरणाः परिकीर्तिताः ॥ ६३ ॥

(க-ரை) ஸூரியனுக்கு 5 கிரணங்கள், சந்திரனுக்கு 21 கிரணங்கள், செவ்வாய்க்கு 7 கிரணங்கள், புதனுக்கு 9 கிரணங்கள், குருவுக்கு 10 கிரணங்கள், சுக்கிரனுக்கு 16 கிரணங்கள், சனிக்கு 4 கிரணங்கள் என கூறப்பட்டிருக்கின்றன. (63)

ராசிகளின் கிரணங்கள்.

वसुरुद्रर्तुरुद्राश्च वह्निषट्क चतुर्दश ।
विश्वाशाः शतवेदाश्च चतुस्त्रिंशदजादिषु ॥ ६४ ॥

(க-ரை) மேஷத்துக்கு 8ம், விருஷபத்துக்கு 11ம், மிதுனத்துக்கு 6ம், கடகத்துக்கு 11ம், ஸிம்ஹத்துக்கு 3ம், கன்னிக்கு 6ம்,

துலாத்துக்கு 14ம், விருஸ்சிகத்துக்கு 14ம், தனுஸ்ஸுக்கு 10ம், மகரத்துக்கு 100ம், கும்பத்துக்கு 4ம், மீனத்துக்கு 34ம் கிரணங்களெனக் கண்டுகொள்ளவேண்டும். (எ—று) (64)

இவ்விஷயத்தில் வேறுசிலர் கூறுவதாவது.

कुळीराजतुलाकुम्भकिरणा वसुसङ्ख्यया ।
मिथुनोक्षमृगाणाञ्च किरणा ऋतुसङ्ख्यया ॥ ६५ ।
सिह्मस्य किरणास्सप्त कन्याकार्मुकयोस्तथा ।
चत्वारो वृश्चिकस्योक्ताः सप्तविंशज्झषस्य च ॥ ६६ ॥
सप्ताष्टशरवह्न्यद्रिरुद्रयुग्माब्धिषड्वसु ।
सप्तविंशतिसङ्ख्याश्च मेषादीनां परे विदुः ॥ ६७ ॥

(க—ரை) கடகம், மேஷம், துலாம் கும்பம் இவற்றுக்கு 8 கிரணங்கள், மிதுனம் விருஷபம் மகரம் இவற்றுக்கு 6 கிரணங்கள், ஸிம்ஹத்துக்கு 7 கிரணங்கள், கன்னி தனுஸ் இவற்றுக்கு 7 கிரணங்கள், விருஸ்சிகத்துக்கு 4 கிரணங்கள், மீனத்துக்கு 27 கிரணங்கள் எனச் சிலரும், மேஷாதிராசிகளுக்கு முறையே 7, 8, 5, 3, 7, 11, 2, 4, 6, 8, 7, 20ம் கிரணங்களெனச் சிலரும் சொல்லுகின்றனர்.

கிரஹங்களின் அளவு.

कुजेन्दुशनयो ह्रस्वा दीर्घा जीवबुधोरगाः ।
रविशुक्रौ समौ प्रोक्तौ शास्त्रे ज्ञानप्रदीपके ॥ ६८ ॥

(க—ரை) செவ்வாய் சந்திரன் சனி இவர்கள் குட்டையானவர், குரு புதன் ராகு இவர்கள் நீண்டவர், ஸூரியன் சுக்கிரன் இவர்கள் ஸமமானவர் அதாவது:—அதிகநீளமும் அதிகக்குட்டையுமில்லாதவர் என க்ஞானப்ரதீபக சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. (எ—று) (68)

கிரஹங்களின் * யோஜனங்கள்.

आदित्यशनिसौम्यानां योजनान्यष्टसङ्ख्यया ।
शुक्रस्य षोडशोक्तानि गुरोश्च दशयोजनम् ।
कुजस्य सप्त विख्याताः शशाङ्कस्यैकविंशतिः ॥ ६९ ॥

* 8 மையில்தூரம் ஒருயோஜனை எனப்படும்,

(க—ரை) ஸூரியன், சனி, புதன் இவர்களுக்கு 8 யோஜனை உரியதாகும். சுக்கிரனுக்கு 16 யோஜனையும், குருவுக்கு 10 யோஜனையும், செவ்வாய்க்கு 7 யோஜனையும், சந்திரனுக்கு 21 யோஜனையும் கூறப்பட்டிருக்கிறது. (எ—று) (69)

கிரஹங்களின் வயதுகள்.

भूमिजः षोडशवयाश्शुक्रस्सप्तवयास्तथा ।
विंशद्वयाश्चन्द्रसुतो गुरुस्त्रिंशद्वयास्स्मृतः ॥ ७० ॥
शशाङ्कस्सप्ततिवयाः पञ्चाशद्भास्वतो वयः ।
शनैश्चरस्य राहोश्च शतसङ्ख्यावयो भवेत् ॥ ७१ ॥

(க—ரை) செவ்வாய் 16 வயதுள்ளவனாகவும், சுக்கிரன் 7 வயதுள்ளவனாகவும், புதன் 20 வயதுள்ளவனாகவும், குரு 30 வயதுள்ளவனாகவும், சந்திரன் 70 வயதுள்ளவனாகவும், ஸூரியன் 50 வயதுள்ளவனாகவும், சனியும் ராஹுவும் 100 வயதுள்ளவனாகவு மாவான். (எ—று) (70–71)

கிரஹங்களின் ரஸங்கள் (சுவைகள்)

तिक्तं शनेश्च राहोश्च मधुरं तु बृहस्पतेः ।
अम्लं भृगोर्विधोः क्षारः कुजस्य कुलजो रसः ।
तुवरः सोमपुत्रस्य भास्करस्य कटुर्भवेत् ॥ ७२ ॥

(க—ரை) சனிக்கும் ராஹுவுக்கும் கசப்பும், குருவுக்குத் தித்திப்பும், சுக்கிரனுக்குப் புளிப்பும், சந்திரனுக்கு உரப்பும், செவ்வாய்க்குக் கரிப்பும் புதனுக்குத் துவர்ப்பும், ஸூரியனுக்கு உரப்பும் ரஸமாகும். (எ—று) (72)

ஜினேந்திரமாலை கூறுவதாவது—

காரியும் பாம்புஞ் சுவைகைக்கு மின்சுவை பொன்
மாரிபுளிக்கு மதிதுவர்க்குந் தேரிற்
கரிக்கு மாஞ் செவ்வாய் கணக்கனுவர்க்கு
மெரிக்குஞ் சுவை யிரவிக்கென். (58)

(இ—ள்) சனிக்கும் ராஹுவுக்கும் சுவைகசப்பு, குருவுக்குத் தித்திப்பு, சுக்கிரனுக்குப் புளிப்பு, சந்திரனுக்குத் துவர்ப்பு, செவ்

வாய்க்குக் கரிப்பு, புதனுக்கு உவர்ப்பு, ஸூரியனுக்கு உரப்பு இவை ரஸமாகும். (எ—று) (58)

கிரஹங்கள் மூலம் சரீரத்தின் இடதுவலது பக்கங்களிலுள்ள அடையாளத்தை யறியும்முறை.

सौम्यार्ककुजजीवानां दक्षिणे लाञ्छनं भवेत् ।
फणीन्दुशुक्रमन्दानां वामे भवति लाञ्छनम् ॥ ७३ ॥

(க—ரை) புதன் ஸூரியன் செவ்வாய் குரு இவர்கள் மூலம் சரீரத்தின் வலது பக்கத்தில் அடையாளத்தை யறியவேண்டும். ராஹு சந்திரன் சுக்கிரன் சனி இவர்கள் மூலம் சரீரத்தின் இடது பக்கத்தில் அடையாளத்தை யறியவேண்டும். (எ—று) (73)

கிரஹங்கள் மூலம் சரீரத்தில் குறிப்பானவிடத்தில் அடையாளம். காணும் முறை.

शुक्रस्य वदने पृष्ठे कुजस्यांसे बृहस्पतेः ।
कक्षे बुधस्य चन्द्रस्य मूर्ध्नि भानोः कटीतटे ।
ऊरौ शनेः पदे राहोर्लाञ्छनानि भवन्ति हि ॥ ७४ ॥

(க—ரை) சுக்கிரனுக்கு முகத்திலும், செவ்வாய்க்குப் பிருஷ்டத்திலும், குருவுக்குத் தோளிலும், புதனுக்குக் கக்ஷத்திலும், சந்திரனுக்குத் தலையிலும், ஸூரியனுக்குப் பின்தட்டிலும், சனிக்குத் துடையிலும், ராஹுவுக்குப்பாதத்திலும் அடையாளங்களுண்டு.

ஜினேந்திரமாலையில் மறுவடுக்களின் ஸ்வரூபம் பின்வருமாறு தனியாகக் கூறப்பட்டிருக்கிறது.

துத்திமலரெருக்கம்பூத் துவரைப்போழ் வகத்தி
யெத்திலே ரண்டம் புளியிலையாஞ்—சத்தியமே
மத்தை யாவாரைவடு பின்வடிவென்று
சித்தமே வந்தவர்க்குச் செப்பு. (61)

(க—ரை) ஸூரியனுக்குத் துத்திமலர் போலும், சந்திரனுக்கு எருக்கமலர் போலும், செவ்வாய்க்கு துவரம் பருப்புப் போலும், புதனுக்கு அகத்தி இலை போலும், குருவுக்கு ஆமணக்கிலைபோலும், சுக்கிரனுக்குப் புளியிலைபோலும், சனிக்கு ஊமத்திலைபோலும்,

ராஹுவுக்கு ஆவாரை யிலைபோலும் மறுவடுக்களின் ஸ்வரூபம் கண்டுகொள்ளவேண்டும். (எ—று) (61)

கிரஹங்களைக் கொண்டு ஸ்ருங்கத்தின் (கொம்பின்) பேதமறியும் முறைகள்.

बुधादित्यौ भग्नशृङ्गौ चन्द्रः शृङ्गविवर्जितः ।
तीक्ष्णशृङ्गः कुजो दीर्घशृङ्गौ जीवकवी तथा ।
शनिराहू वक्रशृङ्गौ शृङ्गभेद उदाहृतः ॥ ७५ ॥

(க—ரை) புதனும் ஸூரியனும் ஒடிந்த கொம்புடையவராவர், சந்திரன் கொம்பற்றவன், செவ்வாய் கூர்மையான கொம்புள்ளவன். குரு சுக்கிரர்கள் நீண்டகொம்புள்ளவர், சனியும் ராஹுவும் கோணலான கொம்புள்ளவராவர். என இவ்விதம் கொம்பின் பேதம் சொல்லப்பட்டது. (எ—று) (75)

நிற்கும் ராசிகளும், நடக்கும் ராசிகளும், தூங்கும் ராசிகளும்.

वृषसिंहालिकुम्भाश्च तिष्ठन्ति स्थिरराशयः ।
कर्किनक्रतुलामेषा श्चरन्ति चरराशयः ।
युग्मकन्याधनुर्मीनाः स्वपन्त्युभयराशयः ॥ ७६ ॥

(க—ரை) விருஷபம் ஸிம்மம், விருஸ்சிகம், கும்பம் என்ற ஸ்திரராசிகள் ... ம் நிற்பனவாகும். கடகம் மகரம் துலாம் மேஷம் ஆகிய நான்கு சரராசிகளும் நடப்பனவாகும். மிதுனம் கன்னி தனுஸ் மீனம் ஆகிய உபயராசி நான்கும் தூங்கும் ராசிகளாகும்.

வனப்பிரதேசம், பட்டினம் முதலியவிடங்களைக் காணும் முறை.

धनुर्मेषौ वनप्रान्ते कन्यकामिथुनं पुरे ।
हरिचापतुलामीनमकराः सलिलेषु च ॥ ७७ ॥
नद्यां कुलीरः कुल्यायां वृषः कुम्भः पयोघटे ।
वृश्चिकः कूपसलिले राशीनां स्थितिरीरिता ॥ ७८ ॥
वनकेदारकोद्यानकुल्याद्रिवनभूमयः ।
आपगातीरसद्वापीतडागसरितस्तथा ।
जलकुम्भश्च कूपश्च नष्टद्रव्यादिसूचकाः ॥ ७९ ॥

(க—ரை) தனுஸ் மேஷம் இவைகள் வனத்தின் ஓரத்திலும், கன்னி மிதுனம் இவைகள் பட்டினத்திலும், ஸிம்ஹம் தனுஸ் துலாம், மீனம் மகரம் இவை ஜலத்திலும். (77) கடகம் நதியிலும், விருஷபம் வாய்க்காலிலும், கும்பம் பாலுள்ள குடத்திலும், விருஸ்சிகம் கிணற்று ஜலத்திலுமாக ராசிகளின் இருப்பு சொல்லப்பட்டிருக்கிறது. (78) (மேஷாதி ராசிகள் முறையே) (1) வனம் (2) கேதாரம் (நெல்விளையும் பூமி) (3) உத்யானம், (4) வாய்க்கால், (5) மலை, (6) வனத்திலுள்ளபூமி, (7) நதீதீரம், (8) நல்லவாபீ (இறங்கி ஸ்னானஞ்செய்யும் பெரியகிணறு) (9) குளம், (10) நதி, (11) ஜலமெடுக்கும் குடம், (12) கிணறு ஆகியவிடங்களில் நஷ்டமான திரவியாதிகளைத் தெரிவிக்கின்றனவாக வாகும். (எ—று) (79)

இவ்விஷயத்தில் வேறு சிலர் சொல்லுவதாவது—

घटकन्यायुग्मतुला ग्रामेऽजाली धनुर्हरी ।
वने चाथकुलीरोक्ष नक्रमीना जलेस्थिताः ॥ ८० ॥

(க—ரை) கும்பம் கன்னி மிதுனம் துலாம் இவைகள் கிராமத்திலும், மேஷம் விருஸ்சிகம் தனுஸ் ஸிம்ஹம் இவைகள் வனத்திலும் கடகம் விருஷபம் மகரம் மீனம் இவைகள் ஜலத்திலும் வஸிக்கும் ராசிகளாகும். (எ—று) (80)

भौमो भूमिर्जलं काव्यशशिनौ बुधभोगिनौ ।
निष्कण्टकञ्च रन्ध्रञ्च गुरुभास्करयोर्नभः ॥ ८१ ॥
मन्दस्य युद्धभूमिश्च बलवर्तिग्रहे स्थिते ।
सूर्यार्क्यारबले भूमौ गुरुशुक्रबले च खे ।
चन्द्रसौम्यबले मद्ध्ये कैश्चिदेवमुदाहृतम् ॥ ८२ ॥
निशादिवससन्ध्याश्च भानुयुग्राशिमादितः ।
चरराशिवशादेवमिति केचित्प्रचक्षते ।
ग्रहेषु बलवान्यस्तु तद्वशात्फलमीरयेत् ॥ ८३ ॥

(க—ரை) அங்காரகன் பூமியும், சுக்கிரன் சந்திரன் இவர்கள் ஜலமும், புதனும் ராஹுவும் முள்ளில்லாதவிடமும் ஓட்டையுள்ள விடமும், குரு ஸூரியன் இவர்கள் ஆகாசமும், (81) சனி யுத்த பூமியும், ஆவர். ஆனல் பலம்பெற்ற கிரஹமிருக்குமாயின் பின் வருமாறு காண்க. அதாவது:—ஸூரியன் சனி செவ்வாய் இவர்களுக்கு பலமிருக்குமாயின் பூமியிலும், குரு சுக்கிரர்களுக்குப் பலமிருக்குமாயின் ஆகாசத்திலும், சந்திரன் புதன் இவர்களுக்குப் பலமிருக்குமாயின் நடுவிலும் ஸ்தானம் காணவேண்டுமென இவ்விதம் சிலரால் சொல்லப் பட்டிருக்கிறது. (82) ஸூரியனுடன் கூடின ராசியை ஆதியாகக் கொண்டு இரவுபகல் ஸந்தி இவைகளைக் காணவேண்டும் என்று சிலரும், சரராசிக்கிரமத்தை யொட்டி நிசைதிவஸம் இவற்றின் ஸந்தி இவைகளைக் காணவேண்டுமெனச் சிலரும் சொல்லுகின்றனர். அதாவது:—சரராசியைக் கொண்டு இரவையும், ஸ்திரராசியைக் கொண்டு பகலையும், உபயராசியைக் கொண்டு ஸந்தியையும் காணவேண்டும் என்பதாம். ஆகவே கிரஹங்களுள் எது அதிகம் பலமுள்ளதோ அதன் வசமாக பலனைச் சொல்லவேண்டும்.

கிரஹங்களுக்கு வர்ஷமாஸாதிகளைக் கூறல்.

शनेर्वर्षं तदर्धं स्याद्भानोर्मासद्वयं विदः ।
शुक्रस्य पक्षो जीवस्य मासो भौमस्य वासराः ॥ ८४ ॥
इन्दोर्मुहूर्तमित्युक्तं ग्रहाणां बलतो भवेत् ।
एतेषां घटिका प्रोक्ता उच्चस्थानजुषां क्रमात् ॥ ८५ ॥

(க—ரை) சனிக்கு 1வருஷமும், ஸூரியனுக்குப் பாதிவருஷமும், புதனுக்கு 2மாதங்களும், சுக்கிரனுக்கு 1பக்ஷமும்(15நாளும்) குருவுக்கு 1மாதமும், செவ்வாய்க்கு 7தினங்களும், (84) சந்திரனுக்கு மூஹூர்த்தமும் ஆகக் கிரஹங்களின் பலத்தைக் கொண்டு முற்கூறியவாறு காணவேண்டும். உச்சவீட்டிலிருக்கும் இந்தக் கிரஹங்களுக்கு நாழிகைளையும் இவ்விதம் காணவேண்டும். அதாவது: சனிக்கு 1நாழி, ஸூரியனுக்கு $\frac{1}{2}$நாழி, புதனுக்கு 10விநாடி, சுக்கிரனுக்கு $2\frac{1}{2}$ விநாடி, குருவுக்கு 5 விநாடி, செவ்வாய்க்கு $1\frac{1}{4}$ கால் விநாடி, சந்திரனுக்கு $\frac{1}{4}$ விநாடி எனக் காணவேண்டும் என்பதாம்.

स्वगृहेषु दिनं प्रोक्तं मित्रभे मासमादिशेत् ।
शत्रुस्थानेषु नीचेषु वत्सरानाहुरुत्तमान् ॥ ८६ ॥

(க—ரை) சொந்த வீட்டிலிருக்கும் கிரஹத்துக்கு 1 நாளும்,

மித்திரன் வீட்டிலுள்ள கிரஹத்துக்கு மாஸமும் சத்துருஸ்தானங்களிலும் நீசவீடுகளிலு மிருப்பவைகளுக்கு அதிகமான வர்ஷங்களையும் பெரியார் சொல்லுகின்றனர். (எ-று) (86)

கிழக்குமுதலிய திக்குகளில் ஸஞ்சரிக்கும் கிரஹங்கள்.

सूर्यारजीवविच्छुक्रशनि चन्द्रभुजङ्गमाः ।
प्रागादिदिक्षु क्रमशश्चरेयुर्यामसङ्ख्यया ।
प्रागादीशानपर्यन्तान्वारेशाद्यन्तकान् ग्रहान् ॥ ८७ ॥

(க-ரை) ஸூரியன், செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சனி, சந்திரன், ராகு, ஆகிய 8 கிரஹங்களும் கிழக்கு முதலிய திக்குகளில் முறையே யாம எண்ணினால் ஸஞ்சரிப்பர். அதாவது:—ஸூரிய உதயந்தொடங்கி மறு உதயம்வரை 8யாமங்களுண்டு. யாமம் ஒன்றுக்கு $7\frac{1}{2}$ நாழிகைவீதம் 8யாமங்களுக்கும் மொத்தம் 60 நாழிகைகளாகும். ஆகவே ஸூரிய உதயத்தினின்றும் முதலாவது யாமத்தில் கிழக்கில் ஸூரியனும், தென்கிழக்கில் செவ்வாயும், தெற்கில் குருவும், தென்மேற்கில் புதனும், மேற்கில் சுக்கிரனும், வடமேற்கில் சனியும், வடக்கில் சந்திரனும், வடகிழக்கில் ராகுவும், ஸஞ்சரிப்பர் என்றும். இவ்விதமே இரண்டாவது யாமத்தில் தென்கிழக்கில் ஸூரியனும், தெற்கில் செவ்வாயும், தென்மேற்கில் குருவும், மேற்கில் புதனும், வடமேற்கில் சுக்கிரனும், வடக்கில் சனியும், வடகிழக்கில் சந்திரனும், கிழக்கில் ராஹுவும், ஸஞ்சரிப்பர். மூன்றாவது யாமத்தில் தெற்கில் ஸூரியனும், தென்மேற்கில் செவ்வாயும், மேற்கில் குருவும், வடமேற்கில் புதனும், வடக்கில் சுக்கிரனும், வடகிழக்கில் சனியும், கிழக்கில் சந்திரனும், தென்கிழக்கில் ராகுவும் ஸஞ்சரிப்பர். நான்காவது யாமத்தில் தென்மேற்கில் ஸூரியனும், மேற்கில் செவ்வாயும், வடமேற்கில் குருவும், வடக்கில் புதனும், வடகிழக்கில் சுக்கிரனும், கிழக்கில் சனியும், தென்கிழக்கில் சந்திரனும் தெற்கில் ராகுவும், ஸஞ்சரிப்பார். ஐந்தாவது யாமத்தில் மேற்கில் ஸூரியனும், வடமேற்கில் செவ்வாயும், வடக்கில் குருவும், வடகிழக்கில் புதனும், கிழக்கில் சுக்கிரனும், தென்கிழக்கில் சனியும், தெற்கில் சந்திரனும், தென்மேற்கில் ராகும், ஸஞ்சரிப்பர். ஆறாவது யாமத்தில் வடமேற்கில் ஸூரியனும், வடக்கில் செவ்வாயும், வடகிழக்கில் குருவும், கிழக்கில் புதனும், தென்கிழக்கில் சுக்கிரனும், தெற்கில் சனியும், தென்மேற்கில் சந்திரனும், மேற்கில் ராகுவும் ஸஞ்சரிப்பர். ஏழாவது யாமத்தில் வடக்கில் ஸூரியனும், வடகிழக்கில் செவ்வாயும், கிழக்கில் குருவும், தென்கிழக்கில் புதனும், தெற்கில் சுக்கிரனும், தென்மேற்கில் சனியும், மேற்கில் சந்திரனும், வடமேற்கில் ராகுவும், ஸஞ்சரிப்பர். எட்டாவது யாமத்தில் வடகிழக்கில் ஸூரியனும், கிழக்கில் செவ்வாயும், தென்கிழக்கில் குருவும், தெற்கில் புதனும், தென்மேற்கில் சுக்கிரனும், மேற்கில் சனியும், வடமேற்கில் சந்திரனும், வடக்கில் ராகுவும் ஸஞ்சரிப்பர் என்று கண்டுகொள்ளவேண்டும். (எ-று) (87)

குறிப்பு—ஸூரியன் முதலிய கிரஹங்கள் கிழக்கு முதலிய திக்குகளில் ஸஞ்சரிக்கும் முறையைப் பின்வருமாறுக் காணவேண்டும். அதாவது:—மேஷாதிராசிகளை நான்கு நான்குபாதங்களாகப் பிரித்துக்கொண்டால் மேஷாதிமீனாந்த 12 ராசிகளுக்கும் 48 பாதங்கள் வருகின்றன. இந்த 48 பாதங்களையும் ஸூரியாதி ராஹுமுடியவுள்ள 8 கிரஹங்களுக்கும் பங்கிட்டுகொடுக்கக் கிரஹம் 1க்கு 6 பாதங்கள் வருகின்றன. ஆகவே ஸூரியன் மேஷத்தின் நான்கு பாதங்கள் விருஷபத்தின் 2 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல் யாமத்தில் கிழக்கில் ஸஞ்சரிக்கிறான். என்றும், செவ்வாய் விருஷபத்தின் மீதமுள்ள 2 பாதங்கள் மிதுனத்தின் 4 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல்யாமத்தில் தென்கிழக்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், குரு கடகத்தின் 4 பாதங்கள் ஸிம்மத்தின் 2 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல்யாமத்தில் தெற்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், புதன் ஸிம்மத்தின் மீதமுள்ள 2 பாதங்கள் கன்னியின் நான்கு பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல்யாமத்தில் தென்மேற்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், சுக்கிரன் துலாத்தின் 4பாதங்கள் விருஸ்சிகத்தின் 2 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல்யாமத்தில் மேற்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், சனி மீதமுள்ள விருஸ்சிகத்தின் 2 பாதங்கள் தனுஸ்ஸின் 4 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல் யாமத்தில் வடமேற்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், சந்திரன் மகரத்தின் 4 பாதங்கள் கும்பத்தின் 2 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல்யாமத்தில் வடக்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், ராகு மீதமுள்ள

கும்பத்தின் 2 பாதங்கள் மீனத்தின் 4 பாதங்கள் ஆகிய 6 பாதங்களில் முதல்யாமத்தில் வடகிழக்கில் ஸஞ்சரிக்கிறான் என்றும், சொன்னதாகக் கண்டுகொள்ளவேண்டும். இவ்விதமே இரண்டாவது யாமம் முதலியவற்றிலும் மேஷாதிமீனாந்த ராசிகளின் பாதங்களையும் கலந்துகொண்டு ஸூரியாதி கிரஹங்கள் ஸஞ்சரிக்கும் ராசி பாதங்களையும் கண்டுகொள்ளவேண்டும். (எ—று)

இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது—

கதிர் சேய் பொன்மாலோன் புகர் சனியுங்கற்றை
மதிபாம்பறுதியாய்வைத்து—மதியாற்
கதிராதிகாலங்கொண்டேழுரையாலொட்ட
லதிராதவெண்கோட்குமாம். (92)

(இ—ள்) முன்போலவேயாம். (எ—று)

இரவியெழுதூமம் வாளரவமிந்து
பரவுசனிநுட்பம்பார்க்கோனும்—விரவிய
வில்லொடுமால்பொன்சேய்வேடமிவையீராறு
நல்கடிகையவ்வைந்தாய்நாட்டு. (93)

(இ—ள்) ஸூரியன், தூமம், ராகு, சந்திரன், சனி, ஸூக்ஷ்மம் சுக்கிரன் இந்திரதனுஸ், புதன், குரு, செவ்வாய், பரிவேஷம் ஆகிய இப்பன்னிரண்டையும் முறையே விருஷபம்முதலிய ராசிதொடங்கி தலைகீழாக ஐந்துநாழிகை வீதம் அமைத்துக் கண்டுகொள்ளவேண்டும். அதாவது:— ஒவ்வொருதினத்துக்கும் 60 நாழிகளாகையால் இதை 12 ல் பங்கிட்டால் 5 நாழிகை வரும். ஆகவே முதலாவது 5 நாழிகைகளில் முற்கூறிய ஸூரியன் முதல்பரிவேஷம் முடியவுள்ள 12க் கிரஹங்களும் விருஷபம் தொடங்கி தலைகீழாக 12 ராசிகளிலும் அதாவது:—ஸூரியன் விருஷபத்திலும், தூமம் மேஷத்திலும், ராகு மீனத்திலும், சந்திரன் கும்பத்திலும், சனி மகரத்திலும், ஸூக்ஷ்மம் தனுஸ்ஸிலும், சுக்கிரன் விருஶ்சிகத்திலும், இந்திரதனுஸ் துலாத்திலும, புதன் கன்னியிலும், குரு ஸிம்மத்திலும், செவ்வாய் கடகத்திலும், பரிவேஷம் மிதுனத்திலும், ஸஞ்சரிக்கும். இவ்விதமே இரண்டாவது 5 நாழிகையில் ஸூரியன் மேஷத்திலும், தூமம் மீனத்திலும், ராகு கும்பத்திலும், சந்திரன் மகரத்திலும், சனி தனுஸ்ஸிலும், ஸூக்ஷ்மம் விருஶ்சிகத்திலும், சுக்கிரன் துலாத்திலும், இந்திரதனுஸ் கன்னியிலும், புதன் ஸிம்மத்திலும், குரு கடகத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், பரிவேஷம் விருஷபத்திலுமாகஸஞ்சரிப்பர் என்றும். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் காண்க. (எ—று)

கதிற் முதற்பாம்பீருகக் காட்டியவெண்கோட்க
டுதிதருமீசானமுதற்றேன்றிவிதியே
யிடமெவரும்வாராதியெல்லாரும்பின்ன
ரடையவருமூன்றேமுக்கால் (94)

(இ—ள்) ஸூரியன் முதல் ராகுமுடியவுள்ள 8க் கிரஹங்களும் உதயமான முகூர்த்தத்தினின்றும் அன்றையவாரத்துக்கு அதிபனான கிரஹம் முதற்கொண்டு தலைகீழாக முதல் $3\frac{3}{4}$ல் நாழிகையில் வடகிழக்குமுதலாக 8 திக்குகளிலும், இரண்டாவது $3\frac{3}{4}$லுக்கு அன்றையவாராதிபன் தொடங்கி 8க் கிரஹங்களும் வடக்கு முதலிய திக்குகளிலும், மூன்றாவது $3\frac{3}{4}$ல் நாழிகையில் அன்றைய வாராதிபன் தொடங்கி வடமேற்கு முதலாகவுள்ள 8 திக்குகளிலுமாக இவ்விதம் தலைகீழாக முறையே ஒவ்வொரு $3\frac{3}{4}$ல் நாழிகையிலும் ஸஞ்சரிப்பர் எனக் காணவேண்டும். (எ—று) (94)

குறிப்பு—ஞாயிறுமுதல் சனிமுடியவுள்ள 7 வாரங்கட்கும் ஸூரியன் முதலிய கிரஹங்கள் வாராதிபவராவர். ஞாயிற்றுக்கிழமையில் ப்ரஶ்னம் நிகழ்ந்தால் ஸூரியனை வாராதிபனென்றும், திங்கட்கிழமையில் சந்திரனை வாராதிபனென்றும் இவ்விதமே மேலுள்ள விடத்திலும் கண்டுகொண்டு முற்கூறியபடி கண்டுகொள்க.

प्रागादीशानपर्यन्तान्वारेशाद्यन्तकान् ग्रहान् ।
प्रथमे प्रहरे चैन्द्र्यां द्वितीयेऽग्न्यादिकोणतः ।
एवं याम्ये तृतीये च क्रमेण परिकल्पयेत् ॥ ८८ ॥

(க—ரை) கிழக்கு முதல் வடகிழக்கு முடியவுள்ள திக்ப்ரதேசங்களில் * வாரேசனையே ஆதியாகவும் அந்தமாகவும் உடையக்

---

* வாரங்கள் ஞாயிறுமுதல் சனிமுடிய எழுகளாயினும் எந்த வாரத்தில் ப்ரச்னம் செய்யப்படுமோ அந்தவாரேசனே 1வதாகவாகும். இதற்கு வேண்டியேதான் சுலோகத்தில் वारेशाद्यन्तकान् ग्रहान् என உபதேசிக்கப்பட்டது. இந்தச் சுலோகத்திற் சொல்லியபடிப் பொருத்திக்காணும் முறையை ஜினேந்திரமாலை 94 வது பாட்டின் உரையிலெழுதி யிருப்பதால் அங்கு கண்டுகொள்க.

கிரஹங்களை கண்டுகொள்ளவேண்டும். அதாவது:—விடியற்காலத்தில் முதல்யாமத்தில் வாராதிபனைக் கிழக்குதிக்கிலும், இரண்டாவது யாமத்தில் ஆக்நேய (தென்கிழக்கு) திக்கிலும், மூன்றாவது யாமத்தில் தெற்கிலும், நான்காவது யாமத்தில் தென்மேற்குதிக்கிலும், 5 வது யாமத்தில் மேற்கிலும், 6 வது யாமத்தில் வடமேற்கிலும், 7 வது யாமத்தில் வடக்கிலும், 8 வது யாமத்தில் வடகிழக்கு திக்கிலுமாக அமைத்துக் கண்டுகொள்ளவேண்டும். வாராதிபன் எந்த யாமத்தில் எந்த திக்கிலிருக்கின்றானோ அந்தத் திக்குக்கு அடுத்த திக்கில் அடுத்தவாராதிபனும் அதற்கடுத்த திக்கில் அதற்கடுத்த வாராதிபனும் என்றக் கிரமமாய் கிரஹமிருப்பதாய் அறியவேண்டும். அதாவது:—ஞாயிற்றுக்கிழமை முதல்யாமத்தில் ஸூரியன் கிழக்கில் ஸஞ்சரித்தால் அந்தஸமயத்தில் சந்திரன் தென்கிழக்கிலும், செவ்வாய் தெற்கிலும், புதன் தென்மேற்கிலும், குரு மேற்கிலும், சுக்கிரன் வடமேற்கிலும், சனிவடக்கிலுமாக ஸஞ்சரிப்பதாய்க் கண்டுகொள்ளவேண்டும். (எ—று) (88)

भूतं भावि वर्तमानं वारेशाद्या भवन्ति हि।
तद्दिने युक्तचन्द्रर्क्षाद्यावद्भि रुदयादिकम्।
तावद्भिर्वासरैस्सिद्धिः केचिदंशाधिपाद्विदुः॥ ८९॥

(க—ரை) வாரேசர்களான கிரஹங்கள் அதாவது:—ஸூரியன் சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களாய். வேறுசிலர் ஸூரியன் செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சனி, சந்திரன், ராஹு இவர்களே வாரேசர் என்கின்றனர். இவ்வாரேசர்களை ஆதியாகவுடைய கிரஹங்கள் முறையே சென்றகாலமாகவும், வரும் காலமாகவும், நிகழ் காலமாகவும் ஆவர். ப்ரஶ்சனதினத்தில் சந்திரனேறியிருக்கும் ராசியிலிருந்து எத்துணைராசிகள் கடந்து ப்ரஶ்னகாலத்திய உதயாதிகள் ஏற்படுகின்றனவோ அத்துணைநாட்கள் சென்று ப்ரஶ்னத்தின் பலஸித்தியேற்படும் என்பது ஒரு சாரார் மதம். வேறுசிலரோ ப்ரஶ்னதினத்தில் சந்திரனிருக்கும் நவாம்சத்திலிருந்து ப்ரஶ்னலக்கின நவாம்சாதிபன் எத்துணையாவது எண்ணிலிருக்கின்றானோ அவ்வெண்ணுக்கொப்பான தினங்கள் சென்றுபலஸித்தி யேற்படுமென்கின்றனர். (எ—று) (89)

ஆருடாதி பனைக்கொண்டு திக்கைத் தீர்மானித்தல்.

प्रश्ने निश्चित्य घटिकाः सार्धद्विघटिकाः क्रमात्।
सार्द्धद्विघटिपर्यन्तमर्कलग्नं प्रचक्षते॥ ९०॥

* तदूर्ध्वं काललग्नं तु ज्ञात्वा पूर्वादिके न्यसेत्।
तद्वशात्प्रष्टुरारूढं ज्ञात्वा चारूढकेश्वरम्।
आरूढाधिपतिर्यत्र प्रयातस्तत्र निर्गमः॥ ९१॥

(க—ரை) ஸூரியோதயம்முதல் முதல் 2½நாழிகைவரை அர்க்கலக்கினம், அதற்குப்பிறகு 2½ நாழிகை காலலக்கினம், அதற்கும் பிறகு 2½ நாழிகை அர்க்கலக்கினம் என்றக் கிரமமாய் அர்க்கலக்கின காலலக்கினங்களை 2½ நாழிகைக்கு ஒவ்வொரு லக்கினம் வீதம் மாறிமாறியறியவேண்டும். அந்த அர்க்க லக்கின காலலக்கினங்களைக் கிரமமாய் கிழக்கு முதலிய 8 திக்குகளிலும் பொருத்திக்கொள்ள வேண்டும். அதாவது:—ஸூரியோதயம் முதல் 2½ நாழிகைமுடிய அர்க்கலக்கினத்தைக் கிழக்கிலும், 2½ நாழிகைக்குமேல் 5 நாழிகைமுடிய காலலக்கினத்தைத் தென்கிழக்கிலும், 5 நாழிகைமுதல் 7½ நாழிகைமுடிய அர்க்க லக்கினத்தைத் தெற்கிலும் பொருத்திக்கொள்ளவேண்டும் என்றக்கிரமமாய் மற்ற அர்க்கலக்கின காலலக்கினங்கள் விஷயத்திலுமறியவேண்டும். ஆகவே ப்ரஶ்சனம் நேர்ந்த ஸமயத்திய நாழிகையை நிஶ்சயித்து அந்த நாழிகைக்கு அர்க்கலக்கின காலலக்கினங்களுள் எந்தலக்கினமுரியதாகின்றதோ அந்த லக்கினத்தால் அடையப்பட்ட திக்கை யறிந்து கொள்ளவேண்டும். அந்தத் திக்கேப்ரஶ்னம் செய்பவனால் ஆரூடமான (ஏறப்பட்ட) திக்காகும். 87 வது சுலோகத்திற் சொல்லியபடியோ 88 வது சுலோகத்திற்சொல்லியபடியோ எந்தக் கிரஹம் ஆரூடமான திக்குக்கு அதிபனாகின்றதோ, அந்தக்கிரஹம் ப்ரஶ்னகாலத்திலிருக்கும் திக்கில் திருடன், நஷ்டத்திரவியம் முதலியனவிருக்குமெனக்காணவேண்டும். அதாவது:—உதயாதி 14 நாழிகைக்கு ப்ரஶ்னம் நேர்ந்ததாக எடுத்துக்கொள்வோம். அச்சமயமுள்ள காலலக்கினமானது

* तथ्याकाललग्नं तु என்று வேறுபாடமிருக்கின்றது. அதன் படி பொருத்தமான பொருளைக் கண்டுகொள்க.

வடமேற்கைச்சேர்ந்தது. அந்த வடமேற்கே ப்ரஶ்னம் செய்பவ னால் ஆரூடமாகும். ஆரூடதிக்குக்கு 87 வது சுலோகப்படி சுக்கி ரன் ஆரூடாதிபனாகிறான். அவன் ப்ரஶ்னகாலத்தில் எந்தத் திக்கி லிருக்கின்றானோ அந்தத்திக்கையே நஷ்டாதித் திரவ்யங்களால் அடையப்பட்ட திக்காகத் காணவேண்டும் என்பதாம். (90–91)

अर्कोनलग्नस्य लवाः खबाणचन्द्रावशेषै रहितास्त्रिभक्ताः ।
वारान्वितास्सप्तहृताः कृतास्ते कालाख्यहोरापतयोऽर्कतस्स्युः॥

(க–ரை) ப்ரஶ்னலக்கினத்தை ஸ்புடம் செய்து அதில் ஸூரிய ஸ்புடத்தைக் கழித்து மீதமுள்ளதை விநாடியாக்கி இரண்டிடத்தில் எழுதிக்கொள்ளவேண்டும். ஓரிடத்தில் எழுதப்பட்ட தொகையில் 150 கழித்து மீதமுள்ளதை மற்றோரிடத்தில் எழுதிய விநாடியில் கழிக்க வேண்டும். அதை மூன்றினால் வகுத்து வாரத்துடன் (அன்றையவாரத்திய எண்ணுடன்) கூட்டி 7னால் வகுக்கவேண்டும். அவ்விதம் வகுத்துவரும் மீதத்தொகையை ஸூரியன்முதல் எண் ணிக்காணவரும் கிரஹமே காலஹோரைக்கு அதிபனாகும். உதா ஹரணம்—ப்ரஶ்னலக்கின ஸ்புடத்தில் ஸூரியஸ்புடத்தைக் கழிக்க மீதம்வருவது 160 விநாடிஎன்றும் பிரஶ்னதினம் புதன்கிழமை என்றும் எடுத்துக்கொள்வோம். இந்த 160 தை இரண்டிடத்தில் எழுதிக் கொள்ளவேண்டும். இவற்றுள் ஓரிடத்தில் எழுதிய 160 ல் 150 தைக் கழித்தால் பாக்கி 10 வரும். இந்த 10 யும் மற்றோரிடத்தில் எழுதிய 160 ல் கழித்தால் பாக்கி 150 வரும். இதை மூன்றினால் வகுத்தால் ஈவு 50 வரும். இத்துடன் புதவாரத் தின் எண்ணான 4 ஐ கூட்டினால் 54 ஆகும். இதை 7 னால் வகுத் தால் பாக்கி 5 வரும். இந்தஐந்தையும் ஸூரியன்முதல் எண்ணிக் கண்டால் குரு 5 வதாக வருவதால் குருவே காலஹோரைக்கு அதிபனாவான் எனக்கண்டுகொள்ளவேண்டும் என்பதாம். இந்தச் சுலோக விஷயமானவிசேஷத்தை அவரவரும் தத்தமது ஆசிரியர் மூலம் நேரில் கேட்டறிந்துகொள்ளவும். (92)

ராசிகளிலும், கிரஹங்களிலும் தாதுமூல ஜீவன்களைக் கூறல்.

मेषकर्कितुलानका धातुराशय ईरिताः ।

कुम्भसिंह्मालिवृषभान्ब्रुवते मूलसंज्ञकान् ।
धनुर्मीननृयुक्कन्याराशयो जीवसंज्ञकाः ॥ ९३ ॥
कुजेन्दुसौरिभुजगा धातवः परिकीर्तिताः ।
मूलं भृगुदिनाधीशौ जीवौ धिषणसोमजौ ॥ ९४ ॥

(க–ரை) மேஷம், கடகம், துலாம், மகரம் இவை தாதுராசிக ளெனப்படும். கும்பம், ஸிம்ஹம், விருஶ்சிகம், விருஷபம் இவை களை மூலராசிகள் என்கின்றனர். தனுஸ், மீனம், மிதுனம், கன்னி இவைகள் ஜீவராசிகளாகும். (93) செவ்வாய், சந்திரன், சனி, ராகு இவர்கள் தாதுக்களாகவும், சுக்கிரன், ஸூரியன் இவர்கள் மூலங்களாகவும், குரு, புதன், இவர்கள் ஜீவர்களாகவும் சொல்லப் பட்டிருக்கின்றனர். (எ–று) (94)

ஸ்தானபேதத்தை அனுஸரித்து கிரஹங்களுக்கு ஏற்படும்
தாத்வாதி ஸம்க்ஞைகள்.

स्वक्षेत्रे भानुवच्चन्द्रो धातुरन्यत्र पूर्ववत् ।
स्वक्षेत्रे भानुजो वल्ली स्वक्षेत्रे धातुरिन्दुजः ॥ ९५ ॥

(க–ரை) சந்திரன் தனது க்ஷேத்திரமான கடகத்திலிருந்தால் ஸூரியனைப்போலாவான். அதாவது:—மூலக்கிரஹமாகிறான். மற்ற விடங்களில் சந்திரன் தாதுக்கிரஹமாவான். சனி தனது சொந்த வீ டான மகரகும்பங்களில் கொடியாக வாவான் புதன் தனது வீடான கன்னி மிதுனங்களிலிருந்தால் தாதுக்கிரஹமாகவே யாவான். (95)

இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது—

மறிசுறாஞெண்டுகோல்வாய்ந்தமைந்ததாது
வெறிதேளெருதரிசான்மூல—நெறியாய
தண்டுசிலைமீனமொடுதாழ்குழலுந்தாழ்குழலா
யுண்டென்றசிவனுரை. (96)

(க–ரை) மேஷம், கடகம், துலாம், மகரம் இவை தாதுராசிக ளாகவும், விருஷபம ஸிம்ஹம், விருஶ்சிகம், கும்பம் இவை மூல ராசிகளாகவும், மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் இவை ஜீவராசிக ளாகவுமாகும். (எ–று)

ஆடரவன்திங்கள் சேய் காரியுந்தாதுவா
மோடிரவிவெள்ளியுயர்மூலமா—நீடிய

பொன்புலவன்சிவனுமென்பவேபொய்யாச்சீர்
நன்புலமையோர்கணயந்து. (97)

(க—ரை) சந்திரன், செவ்வாய், சனி, ராகு இவர்கள் தாதுக் கிரஹங்களாகவும், ஸூரியன், சுக்கிரன் இவர்கள் மூலக்கிரஹங்களாகவும், புதன் குரு இவர்கள் ஜீவக்கிரஹங்களாகவு மாவர்.

அருக்கனுந்திங்களுந்தன்னிலத்திற்றாது
முருக்கும்பிறநிலத்தின்மூலங்— திருத்தக்க
மந்தன்படர்மூலமாயிருக்குந்தன்னிலத்திற்
புந்தியுந்தாதுவாய்ப்பட்டு. (98)

(க—ரை) ஸூரியன் சந்திரன் இவர்கள் தமது சொந்த வீடுகளிலே இருந்தால் தாதுக்கிரஹங்களாகவும், மற்றராசிகளில் மூலக்கிரஹங்களாகவுமாவர். சனி தனது சொந்த வீட்டில் அதை மூலக்கிரஹமாகவும், மற்றராசிகளில் தாதுக்கிரஹமாகவும், புதன் சொந்த வீட்டில் தாதுவாகவும், மற்றராசிகளில் ஜீவனாகவுமாவான். (3)

தாதுவிராசியைத்தாதுக்கோணோக்கினுந்
தாதுவைத்தாதுகவிக்கினுந்—தாதுவா
மூலமும்ஜீவனுமிம்முறையாற்கண்டு
சேலனையகண்மடவாய்செப்பு. (99)

(க—ரை) ஆரூடராசியான தாதுராசிக்கு தாதுராசி சத்திரமானாலும், அந்த ராசியை தாதுக்கிரஹம் பார்த்தாலும் அதனால் காணவேண்டியது தாதுவென்றே கண்டுகொள்ளவேண்டும். ஆரூடராசி மூலராசியாகி அதற்கு மூலராசி சத்திரமானாலும், மூலக்கிரஹம் பார்த்தாலும் மூலமென்றும், ஆரூடராசி ஜீவராசியாகி அதற்கு ஜீவராசி சத்திரமானாலும், ஜீவக்கிரஹம் பார்த்தாலும் ஜீவனென்றும் கண்டுகொள்க. (99)

தாதுமூலங்கூடிற்சீவனஞ் சிவனுந்
தாதுவோடாகிற்றகுமூலந்—தாதுவா
மூலமுஞ்சிவனுமூன்றுமுடனாகிற்
சாலவலிதறிந்துசாற்று. (100)

(க—ரை) ஆரூடராசி தாதுராசியாகி அதற்கு மூலராசி சத்திரமானாலும், மூலக்கிரஹம் பார்த்தாலும், ஆரூடராசி மூலராசியாகி அதற்கு தாதுராசி சத்திரமானாலும், அதைத் தாதுக்கிரஹம் பார்த்தாலும் ஜீவனென்றும், ஆரூடராசி தாதுராசியாகி அதற்கு ஜீவராசி சத்திரமானாலும், ஜீவக்கிரஹம் பார்த்தாலும், ஆரூடராசி ஜீவராசியாகி அந்தராசிக்குத் தாதுராசி சத்திரமானாலும் தாதுக்கிரஹம் பார்த்தாலும் மூலமென்றும், ஆரூடராசி மூலராசியாகி அந்த ராசிக்கு ஜீவராசி சத்திரமானாலும் ஜீவக்கிரஹம் பார்த்தாலும், ஆரூடராசி மூலராசியாகி அதற்கு மூலராசி சத்திரமானாலும், மூலக்கிரஹம் பார்த்தாலும் தாதுவென்றும் கண்டுகொள்ள வேண்டும். (100)

கிரஹங்களின் உலோஹங்களாவன.

ताम्रं भौमस्त्रपुर्ज्ञश्च काञ्चनं धिषणो भवेत् ।
रौप्यं शुक्रश्शशी कांस्यमायसं मन्दभोगिनौ ॥ ९६ ॥

(க—ரை) *செவ்வாய் தாம்பிரமாகவும், புதன் பித்தளையாகவும், குரு ஸ்வர்ணமாகவும் சுக்கிரன் வெள்ளியாகவும், சந்திரன் வெண்கலமாகவும், சனி ராகு இவர்கள் இரும்பாகவுமாவர். (எ—று) (96)

भौमार्कमन्दशुक्रास्तु स्वस्वलोहाः स्वभस्थिताः ।
चन्द्रज्ञगुरवस्स्वस्वलोहाः स्वक्षेत्रमित्रगाः ।
मिश्रे मिश्रफलं ब्रूयाद्ग्रहाणां वा बलक्रमात् ॥ ९७ ॥

(க—ரை) செவ்வாய், ஸூரியன், சனி, சுக்கிரன் இவர்கள் தத்தமது ராசியிலிருந்தால் அவரவர்களுக்குரிய உலோஹங்களாவர். சந்திரன், புதன், குரு இவர்கள் தமது வீடு, மித்திரன் வீடு இவற்றிலிருந்தால் தத்தமக்குரிய உலோஹங்களாவர். இரண்டு மூன்று கிரஹங்கள் சேர்ந்திருந்தால் அங்கு அவரவர்களின் உலோஹங்கள் சேர்ந்தபொருளையோ, அல்லது அந்தக்கிரஹங்களுள் எது அதிகம் வலுவுள்ளதோ அதன் உலோஹத்தையோ சொல்லவேண்டும். (97)

ஸூரியாதிகளுக்குரிய சிலாவர்க்கங்களாவன.

शिला भानोर्बुधस्याहुर्मृत्पात्रं तूषरं विधोः ।
सितस्य मुक्तास्फटिके प्रवाळं भूसुतस्य च ।
आयसं भानुपुत्रस्य मन्त्रिणश्च मनश्शिलाम् ॥ ९८ ॥

---

* ஸூரியனுக்கு இந்தச்சுலோகத்தில் உலோஹ விசேஷம் குறிக்கப்படாவிடினும் தாம்பிரத்தையே உலோஹமாகக் கண்டுகொள்ளவேண்டும்.

(க—ரை) ஸூரியனுக்குப் பாறைக்கல்லையும், புதனுக்கு மண் பாத்திரத்தையும், சந்திரனுக்கு உவர் மண்ணையும், சுக்கிரனுக்கு முத்துக்கள் ஸ்படிகம் இவைகளையும், செவ்வாய்க்குப் பவழத்தையும், சனிக்கு இரும்பையும், குருவுக்கு மனோசிலையையும் உரியதாகக் கூறுகின்றனர். (எ—று) (98)

स्वोच्चादिके धाम्यधातुस्तथाऽधाम्यं तु नीचगे।
घटिताऽघटितं ब्रूयाच्छास्त्रे ज्ञानप्रदीपके॥ ९९॥

(க—ரை) கிரஹங்கள் தமது உச்சம்முதலிய ராசிகளிலிருந்தால் ஸ்புடாதிகளால் சுத்திசெய்யப்பட்ட தாதுவென்றும், **கடிதஃ**(பலதாதுக்களின் சேர்க்கையுள்ள) தாதுவென்றும் சொல்லவேண்டும். நீசத்திலிருந்தால் சுத்திசெய்யப்படாத தாதுவென்றும், **அகடிதஃ** வேறுதாதுவின் சேர்க்கையற்ற தாதுவென்று மறியவேண்டும்.

கிரஹங்களின் ரத்தினங்கள்.

नीलं शनेश्च वैडूर्यं भृगोर्मरकतं विदः।
सूर्यकान्तं दिनेशस्य चन्द्रकान्तं निशापतेः॥ १००॥

(க—ரை) சனிக்கு நீலரத்தினமும், சுக்கிரனுக்கு வைடூர்யமும், புதனுக்கு பச்சைக் கல்லும், ஸூரியனுக்கு ஸூரியகாந்தமும், சந்திரனுக்குச் சந்திரகாந்தமு முரியதாகும். (100)

இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவதாவது—

செம்புசேய்தூகன்றராகுருபொன்வெள்ளிபுகர்
நம்புசீர்வெண்கலமாநன்மதியம்—வெம்புங்
கதிரோன்முன்பித்தளையாங்காரியோடுபாம்பு
முதிராதிரும்பென்றுரை. (101)

(க—ரை) ஸூரியனுக்குப் பித்தளையும், சந்திரனுக்கு வெண்கலமும், செவ்வாய்க்குத் தாம்பிரமும், புதனுக்குத் தராவும் (மட்டமான வெண்கலமும்) குருவுக்குப் பொன்னும், சுக்கிரனுக்கு வெள்ளியும், சனி, ராகு இவர்களுக்கு இரும்பு முரியதாகும். (101)

கிரஹங்களின் கருவி (ஆயுதங்) களாவன—

ஆழ்வான் சேய்காரியணி சுங்களென்றினைத்தும்
வாழ்வாரொருவராயின்கருவி—தாழ்வில்லா

நாடறிவான் பொன் புந்தி நன்கிருவாயாட்சிகளி
னீடும் வடிவென்றே நினை. (102)

(க—ரை) ஸூரியன் செவ்வாய் சுக்கிரன் சனி இவர்களுக்கு ஒருமுகமுள்ள ஆயுதமென்றும், சந்திரன் புதன் குரு இவர்களுக்கு இரண்டு முகமுள்ள ஆயுதமென்றும் கண்டுகொள்ள வேண்டும். கிரஹங்கள் சொந்த வீட்டிலிருந்தால் அவர்களின் ஆயுதங்கள் கிரஹங்களின் வடிவமுள்ளதாகவும், மற்ற ராசிகளிலிருந்தால் ராசிகளின் வடிவமுள்ளதாகவுமாகும் என்றும் கண்டுகொள்ளவேண்டும்.

கிரஹங்களின் பாஷாணங்களாவன.

வெங்கதிரோன் கற்களா மேதைக்கு மண்டுகளாந்
திங்களுவர்நீலன்றிகழிரும்பாஞ்—சுங்கன்
பளிங்கோடு முத்துபவழஞ்சேய்பாம்பு
தெளிந்த மனோசிலை பொன்பெசன். (103)

(க—ரை) ஸூரியனுக்குக் கல்லும், சந்திரனுக்கு உவர்மண்ணும், செவ்வாய்க்குப் பவழமும், புதனுக்குப் புழுதி மண்ணும், குருவுக்குப் பொன்மணலும், சுக்கிரனுக்குப் பளிங்கு முத்து இவையும், சனிக்கு இரும்பு ஸம்பந்தமுள்ள மணலும், ராஹுவுக்கு மனோசிலைமுதலிய பாஷாணமும் உரியதாகும். (103)

கிரஹங்களின் உயர்ந்தபாஷாணவர்க்கம்.

அஞ்சனங்காரிவைடூரியம்புகராம்
வஞ்சமில் புந்தி மரகதமா—மெஞ்சிய
சூரியற்குச்சூரியகாந்தமாந் தூய்மதிக்கு
நீரிலுயர்காந்தநினை. (104)

(க—ரை) ஸூரியனுக்கு ஸூரியகாந்தமும், சந்திரனுக்குச் சந்திர காந்தமும், புதனுக்கு மரகதமும், சுக்கிரனுக்கு வைடூர்யமும், சனிக்கு நீலரத்தினமும் உரியதாகும். (104)

கிரஹங்களின் மணிவர்க்கங்கள்.

மாணிக்கமுத்துபவழமரகதமா
மாணிக்கபாம்பன்வைடூரியமுங்—கோணிறத்த
கோமேதகம்வறையிற்கோளென்பதிற்கடைவே
யாமாகத்தோன்றுமறி. (105)

(க—ரை) ஸூரியனுக்கு மாணிக்யமும், சந்திரனுக்கு முத்தும், செவ்வாய்க்குப்பவழமும், புதனுக்கு மரகதமும், குருவுக்குப் பத்மராகமும், சுக்கிரனுக்கு வைடூர்யமும், சனிக்கு நீலமும், ராகுவுக்கு வைடூரியமும், கேதுவுக்கு கோமேதகமும் உரியதாகும். (105)

கிரஹங்களின் ஆபரணங்களாவன.

नृराशौ नृखगैर्दृष्टे युक्ते वा मर्त्यभूषणम् ।
तत्तद्राशिवशादन्यत्तत्तद्रूपं विचिन्तयेत् ॥ १०१ ॥
तत्तद्ग्रहवशाद्वर्णं तत्तद्राशिवशादपि ।
बलाबलविभागेन मिश्रे मिश्रफलं वदेत् ॥ १०२ ॥

(க—ரை) மனிதராசியானது மனிதக்கிரஹத்தினால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் மனிதர்கள் தரிக்கக்கூடிய ஆபரணத்தைக் காணவேண்டும். மற்றவிடத்தில் அந்தந்தராசியை அனுஸரித்து அவ்வவற்றின் உருவத்தை ஆராயவேண்டும். பொருளின் நிறத்தை அந்தந்தக் கிரஹம், ராசி இவற்றின் பலாபலத்தைக் கொண்டு ஆராயவேண்டும். இரண்டும் ஸமானமான பலமுள்ளதாயிருந்தால் பலனையும் மிச்ரமாகவே (ராசிக்கிரஹம் இரண்டுக்குமுரியவை கலந்ததாகவே) உபதேசிக்கவேண்டும். (101–102)

இவ்விஷயமாய் ஜினேந்திரமாலை கூறுவதாவது:—

மக்களிராசியுங்கோளுமதித்துடனே
யொக்கவெழுதரும்போழ்துத்தமமா— மக்க
ளணிகலமாய்த்தோன்றுமேயக்கோணிறத்த
வணிகலமாமென்பதறி. (106)

(க—ரை) மனிதராசி உதயமாகி அதில் இரண்டுகோளுள்ளக் கிரஹமிருந்தால் மனிதர்கள் அணியும் ஆபரணத்தையும், அதற்கு அந்தக்கிரஹத்தின் நிறத்தையுமறியவேண்டும். (106)

ஆபரண விசேஷங் கூறல்.

வெள்ளிதலைப்பணியாமேதையுமிந்துங்காதி
லுள்ளபணியரவுமொண்சனியு—மொள்ளிளையாய்
நீண்டகால்கையிற்பணியாநீள்பொன்மதிசேயேன்
பாண்டக்கவாடைமேல்வை. (107)

(க—ரை) ஸூரியன், செவ்வாய், குரு இவர்களுக்குக் கழுத்திலணியுமாபரணமும், சந்திரன், புதன் இவர்களுக்கு காதிலணியுமாபரணமும், சுக்கிரனுக்குத் தலையிலணியுமாபரணமும், சனி ராஹு இவர்களுக்கு கை, கால் இவற்றிலணியு மாபரணமு முரியதாகும். (107)

பொன் மாமணிமாலை போல்வன செங்கல்லு
மன்னுகா சொன்சாணை மாமதிய—மின்னே
கரியோன் வருங்காற்கருங்கன் மயிரென்
புரியகனகமெனவோர். (108)

(க—ரை) குருவுக்குப் பொன்மணிமாலை முதலியனவும், சந்திரனுக்கு காசிமாலை, பட்டைதீர்ந்த இரத்தினங்கள் பதித்த மாலையும், சனிக்கு நீலமணிகளிழைத்ததும், கவரிமான் மயிர், புலிநகம் முதலியவைகளும் எலும்பும் பொருந்தியதுமான ஆபரணமும், இரும்பினால் செய்யப்பட்ட ஆபரணமும், உரியதாகும். (108)

ஒருக்கிரஹத்துடன் மற்றக்கிரஹம் சேர்ந்திருப்பதன்
மூலம் காணவேண்டிய ஆபரணங்கள்.

பொன்னரவுஞாண்காரைபோற்றுமணிகளுள
பொன்னெரியேற்றம்மதன்றுபொன்னனுடன்—பொன்ன
னெறிவின்றிப்பூண்பனவாவுன்புகர்பொன்முத்துச்
செறிபளிங்கொடீயமதிசெப்பு. (109)

(க—ரை) குருவுடன் ராகுசேர்ந்திருந்தால் தங்கச்சரடு, காறைகண்டிகை முதலியதையும், சுக்கிரன் சேர்ந்திருந்தால் முத்து, ஸ்படிகம் இவைபொருந்திய ஆபரணத்தையும், சந்திரன் சேர்ந்திருந்தால் ஈயத்தாலாகிய நகையையும், குரு இருந்த விடத்தில் எப்பொழுதும் தரித்துக்கொள்ளும் ஆபரணத்தையும், குருவைத்தவிர்த்து மீதமுள்ளக் கிரஹங்கள் இருந்தவிடத்தில் ஏதோ ஒரு ஸமயத்தில் அணிந்துகொள்ளும் ஆபரணத்தையும், செவ்வாய் சேர்ந்திருந்த விடத்தில் இரவல் நகையையும், செவ்வாய் தவிர மீதமுள்ளக்கிரஹங்கள் சேர்ந்திருந்த விடத்தில் சொந்தமான நகையையும் கண்டுகொள்ள வேண்டும். (109)

இரண்டாவது தாதுக்ஞானகாண்டம் முற்றிற்று.

மூன்றாவது மூலக்ஞானகாண்டம்.

ஸூரியாதிகளுக்குரிய மரம், செடி, கொடிகள்.

मूलचिन्ताविधौ मूलान्युच्यन्ते पूर्वशास्त्रतः ।
क्षुद्रसस्यानि भौमस्य सस्यानि बुधजीवयोः ॥ १०३ ॥

कक्षाणि ज्ञस्य भानोश्च वृक्षाश्चन्द्रस्य वल्लरी ।
गुरोरिक्षुर्भृगोश्चिञ्चाभूरुहाःपरिकीर्तिताः ।
शनिभौमोरगाणां च तिक्तकण्टकभूरुहाः ॥ १०४ ॥

(க—ரை) மூலங்களைப் பற்றிச் சிந்திப்பதென்ற இந்தப் பிரகரணத்தில் முந்திய சாஸ்திரங்களை அனுஸரித்து மூலங்கள் கூறப்படுகின்றன. செவ்வாய்க்கு க்ஷுத்திரஸஸ்யங்களும், (புஞ்சைப்பயிர்களும்) புதன், குரு இவர்களுக்கு நஞ்சைப் பயிர்களும், புதனுக்குப் புதர்களும், ஸூரியனுக்கு மரங்களும், சந்திரனுக்குக் கொடியும், குருவுக்குக் கரும்பும், சுக்கிரனுக்குப் புளியமரங்களும், சனி, செவ்வாய், ராஹு, இவர்களுக்கு, கசப்பும், முள்ளுமுள்ள மரங்களும், உரியனவாகும். (103, 104)

ராசிகளுக்குரிய மரம் செடி கொடி முதலியன.

आजाली क्षुद्रसस्यानि वृषकर्कतुला लताः ।
कन्यकामिथुने वृक्षाः कण्टकद्रुर्घटो मृगः ।
इक्षुर्मीनः क्रमाच्चैवं केचिदाहुर्मनीषिणः ॥ १०५ ॥

(க—ரை) மேஷம் விருஶ்சிகம் இவைகள் புஞ்சைப்பயிர்களாகவும், விருஷபம், கடகம், துலாம் இவைகள் கொடிகளாகவும், கன்னி, மிதுனம் இவை மரங்களாகவும், கும்பம், மகரம் இவை முள்ளுள்ளமரமாகவும், மீனம் கரும்பாகவும் ஆகுமென்ச் சில வித்வான்கள் கூறுகின்றனர். (105)

மேற்கூறியவிஷயமாய் வேறுசிலரின் மதம்.

अकण्टकद्रुमास्सौम्याः क्रूराः कण्टकभूरुहाः ।
युग्मकण्टक आदित्यो भूमिजो ह्रस्वकण्टकः ।
सवक्रकण्टकौ प्रोक्तौ शनैश्चरभुजङ्गमौ ॥ १०६ ॥

पापग्रहाणां क्षेत्राणि तथा कण्टकिनो द्रुमाः ।
श्लिष्टकक्षाणि सौम्यस्य भृगोर्निष्कण्टकद्रुमाः ॥ १०७ ॥
कदली चौषधीशस्य गिरिवृक्षा विवस्वतः ।
बृहत्पत्रयुता वृक्षा नारिकेळादयो गुरोः ।
ताळश्शनिभुजङ्गानां सारासारौ तरू वदेत् ॥ १०८ ॥
सारहीनाः शनीन्द्वर्का अन्तस्सारौ कवीज्यकौ ।
बहिस्सारास्स्वराशिस्थाश्शनीज्यकुजपन्नगाः ।
अन्तस्सारास्स्वराशिस्था बहिस्सारास्तदन्यके ॥ १०९ ॥

(க—ரை) சுபக்கிரஹங்கள் முள்ளில்லாத மரங்களாகவும், பாபக்கிரஹங்கள் முள்ளுள்ள மரங்களாகவுமாவர். அவற்றுள்ளும் ஸூரியன் இரண்டிரண்டாகச் சேர்ந்திருக்கின்ற முள்ளுகளையுடைய மரமாகவும், செவ்வாய் குட்டையான முள்ளுள்ள மரமாகவும், சனைஶ்சரன் ராஹு இவர்கள் வளைந்த முள்ளுகளையுடைய மரங்களாகவுமாவர். (106) பாபக்கிரஹங்களின் ராசிகள் முள்ளுள்ள மரங்களாகவும், (சுபர்களின் ராசிகள் முள்ளில்லாத மரங்களாகவும்) ஆகும். நெருக்கமான புதர்கள் புதனுக்கும், முள்ளில்லாத மரங்கள் சுக்கிரனுக்கும், (107) வாழை சந்திரனுக்கும் மலையில் வளரும் மரங்கள் ஸூரியனுக்கும், பெரிய இலைகளுடன் கூடின தென்னை முதலிய மரங்கள் குருவுக்கும், சனி, ராஹு இவர்கட்கு பனைமரமும், ஸாரமுள்ளதும் ஸாரமற்றதுமான மரங்களும், உரியதாகும். (108) சனி, சந்திரன், ஸூரியன் இவர்கள் பலமற்ற மரங்களாகவும், சுக்கிரன், குரு இவர்கள் உள்பலமுள்ள மரங்களாகவுமாவர். சனி, குரு, செவ்வாய், ராஹு இவர்கள் தமது சொந்த ராசியிலிருந்தால் வெளியில் பலமுள்ள மரங்களாவர். ஸூரியாதிக்கிரஹங்கள் தமது சொந்தராசியிலிருந்தால் உள்பலமுள்ளமரங்களென்றும், மற்ற ராசியிலிருந்தால் வெளியில் பலமுள்ள மரங்களென்றும் சிலர் சொல்லுகின்றனர். (109)

இவ்விஷயத்தில் ஜினேந்திரமாலை கூறுவதாவது:—

மூதுணர்ந்தோர் நூலின்முறைதெரிந்துமூலங்க
ளோதகவேயானுமெடுத்துரைப்ப—னேதிய

செவ்வாய்ச்சிறுபயிராஞ்சீர்சால்புதன்வெள்ளி
வவ்வார்விளைவயலதாம். (110)

இதுவுமது.

தூராகுமேதைசுடரோன்பெருமரமா
மாருமதிகொடியாம்வாழ்பொன்னேன்—மாருத
தீங்கரும்பாம்வெள்ளிதிகழ்காரிபாம்பிரண்டு
மோங்குகின்றமுண்மூலமோது. (111)

(க—ரை) எனக்கு முந்திய வித்வான்களால் எழுதப்பட்ட நூல்களின் முறையையறிந்து நானும் மூலங்களை எடுத்துக் கூறுகிறேன். ஸூரியனுக்கு மரங்களும், சந்திரனுக்குக் கொடிகளும், செவ்வாய்க்குப் புஞ்சைப்பயிர்களும், புதன் சுக்கிரன் இவர்களுக்கு நன்செய்பயிர்களும், குருவுக்குக் கரும்பும், சனி, ராஹு இவர்கட்கு முட்செடிகளு முரியனவாகும். (110–111)

ராசிகளுக்குரிய மரம்முதலியன.

ஆடுதேள்புன்பயிராமாய்ந்தகோலேறலவ
னீடுகொடியாநெடும்வல்லி—நீடுந்
திருமடந்தையாழ்புதராந்திண்சிலைநற்சீயம்
பெருமரங்களாமென்றேபேசு. (112)

இதுவுமது.

மூழிமகரமிவை முள்ளுடைய மூலமாம்
வாழிகரும்பாகும்வான்கயலேற்—றேழி
கடுங்கொட்குமுள்ளோடுஞ்சாகுநற்கோட்
கொடுங்காதுமுள்ளிலதென்றோது. (113)

(க—ரை) மேஷம் விருஸ்சிகம் இவற்றுக்குப் புஞ்செய்ப் பயிர்களும், விருஷபம், கடகம், துலாம் இவற்றுக்குக் கொடிகளும், நெடும்வல்லிமுதலிய நன்செய்பயிர்களும், மிதுனம், கன்னி இவற்றுக்கு முள்ளற்றசெடிகளும், ஸிம்ஹம், தனுஸ் இவற்றுக்கு மரங்களும், மகரம், கும்பமிரண்டிற்கும் முட்செடிகளும், மீனத்துக்குக் கரும்பு முரியதாகச் சொல்லப்படும். பாபக்கிரஹங்களுக்கு முள்ளுள்ள மரம் முதலியனவும், சுபக்கிரஹங்களுக்கு முள்ளற்றமரம் முதலியனவு முரியதாகும். (113)

கிரஹாதிகளுக்குரிய மரம், செடி கொடிகளிலுள்ள விசேஷம்.

புகைதூறு புந்தி புகர் மரங்களாகும்
வகையான்மதியெழுந்தவாழை—தொகையான்
மலைமரங்கள் வெய்யோன் மதித்துணரிற்செம்பொ
னிலைநெருங்குந்தேங்கென்றியம்பு. (114)

இதுவுமது.

சினங்கூறும் வாளரவந்திண் சனிகட்காகிற்
பனங்காடாமென்றுபகர்க—மனங்கூறு
முட்காய்ப்புடன் புறக்காய்ப்புற்றுணர்ந்திராசிகட்குந்
திட்காதுகோட்குளபோற்செப்பு. (115)

(க—ரை) ஸூரியனுக்கு மலையில்வளரும் மரமும், சந்திரனுக்கு வாழையும், குருவுக்குத்தென்னைமரமும், சனி ராஹு இவர்கட்கு பனைமரமும், புதன் சுக்கிரன் இவர்கட்கு வாழை முதலிய நாட்டில் வளரும் மரங்களும், செவ்வாய்க்குச் செடிகளு முறியனவாகும். அந்தந்தக் கிரஹங்களுக்குச் சொல்லியமரம் செடி முதலியவைகளையே அந்தக் கிரஹங்களின் சொந்தமான ராசிகளுக்கு முரியதாயறிய வேண்டும். இனிமேற் சொல்லப்படும் விதிகளிலும் இவ்விதமே காண்க. (115)

ஸூரியாதிகளுக்குரிய விருக்ஷாதிகளின் பாகங்கள்.

त्वक्कन्दपुष्पछदनफलपक्कफलानि च ।
मूलं लता च सूर्याद्या स्वस्वक्षेत्रेषु ते तथा ॥ ११० ॥

(க—ரை) ஸூரியன் பட்டையாகவும், சந்திரன் கிழங்காகவும், செவ்வாய் புஷ்பமாகவும், புதன் இலையாகவும், குரு பழமாகவும், சுக்கிரன் காயாகவும், சனி வேராகவும், ராகு கொடியாகவுமாவான். மேற்கூறியபட்டை, கிழங்கு முதலியனவே அந்தந்தக்கிரஹங்களின் சொந்த ராசிகட்கு முரியனவாகும். (110)

தோல்கிழங்குபூவிலைநற்றாய்பழமும்காயொடும்வே
ரேல்கொடிகளென்னவினிதுரைக்கச்—சால
விலங்கொலிவெய்யவனுதிபாப்பீர
நிலங்களுமிங்கிலையினோர். (116)

(க-ரை) ஸூரியனுக்கு மரத்தின் பட்டையும், சந்திரனுக்குக் கிழங்கும், செவ்வாய்க்குப் பூவும், புதனுக்கு இலையும், குருவுக்குப் பழமும், சுக்கிரனுக்குக் காயும், சனிக்கு வேரும், ராஹுவுக்கு கொடியு முறியதாகும். அந்தந்தக் கிரஹங்களின் சொந்தராசிகளுக்கும் மேற்கூறியவைவயே உரியனவாகும். (117)

கிரஹங்களின் முட்களாவன.

காரியரவங்கவிழ்ந்த முட்காய்கதிரோன்
நேரில்விலங்குமுட்சேய்சிறுமுட்—டேரிற்
சொரிசாற்சுரூமறிதேட்டுன்னரும்பொற்சியங்
தெரிவாதுமிவ்வகையிற்செப்பு. (118)

(க-ரை) சனி ராகு இவற்றிற்கு வளைவுள்ளமுட்களும், ஸூரியனுக்கு வளைவில்லாத பெருமுட்களும், செவ்வாய்க்கு வளைந்திராத சிறுமுட்களும், உரியனவாகும். மேற்கூறிய கிரஹங்களின் ராசிகளுக்கு மிவ்விதமே கண்டுகொள்ளவேண்டும். அதாவது:—மகரம் கும்பமிவற்றுக்கு வளைவுள்ளமுட்களும், ஸிம்ஹத்துக்கு வளைவில்லாத பெரியமுட்களும், மேஷம், விருஸ்சிகம் இவற்றுக்கு வளைவில்லாத சிறியமுட்களுமுரியனவாகும். (118)

கிரஹங்களுக்குரிய காய்க்கும், காய்க்காதமரம் முதலியவற்றையும், காய்க்கும் மரத்தின் உட்பிரிவைபும், பழங்களின் நிறத்தையும் கூறல்—

சந்திரனும்வெய்யோன்சனிமூன்றுங்காய்ப்பில்லை
மந்திரியும்வெள்ளியுமேயுட்காய்ப்பாங்—தந்த
நிறத்திற்குரியனசேய்ஞேகம்புந்தி
புறக்காய்ப்பாமாட்சிகட்குட்பூட்டு. (119)

(க-ரை) ஸூரியன், சந்திரன், சனி இவர்கள் காய்க்காதமரம் முதலியனவாகவும், மற்றவை காய்க்கின்ற மரம் முதலியனவாகவுமாகும். காய்ப்புள்ள வற்றுள்ளும் குரு சுக்கிரன் இவர்கள் உட்காய்ப்புள்ளமரம் முதலியனவாகவும், செவ்வாய், புதன், ராஹு இவர்கள் வெளிக்காய்ப்புள்ள மரம் முதலியனவாகவுமாவர். பழங்களின் நிறம் அந்தந்தக் கிரஹங்களின் நிறங்களுக்கு ஒத்ததாகவிருக்கும். மேற்கூறிய முறையையே அந்தந்தக்கிரஹங்களின் சொந்த ராசிகளுக்கும் பொருத்திக்கொள்ளவேண்டும். (119)

கிரஹங்களுக்குரிய தான்யங்கள்.

मुद्गो ज्ञस्याढकी श्वेता भृगोश्च चणकं कुजः ।
तिलश्शशाङ्को निष्पावा रविर्जीवोरुणाढकी ।
माषं शनिभुजङ्गौ च तथान्यद्धान्यमुच्यते ॥ १११ ॥

(க-ரை) புதனுக்குப் பயரும், சுக்கிரனுக்கு வெள்ளைத்துவரையும், செவ்வாய்க்குக் கடலையும், சந்திரனுக்கு (வெண்ணிறமான) எள்ளும், ஸூரியனுக்கு அவரையும், குருவுக்குச் சிவந்த துவரையும், சனி, ராஹு இவர்களுக்கு உளுந்து முரியதாகும். இவ்விதமே வேறுவிதமான தான்யமும் பின்வருமாறு கூறப்படுகின்றது. (111)

प्रियङ्गुर्भूमिपुत्रस्य बुधस्य व्रीहयः स्मृताः ।
स्वस्वरूपानुसारेण तेषां धान्यानि निर्दिशेत् ॥ ११२ ॥

(க-ரை) செவ்வாய்க்கு ப்ரியங்குவும் (இதைத்தினையென்கின்றனர்) புதனுக்கு நெல்முதலியனவு முரியனவாகும், அந்தத் தான்யங்களை அவரவரின் ஸ்வரூபத்தை யனுஸரித்து சொல்லவேண்டும்.

ஜினேந்திரமாலை.

சேய்க்குத்தினைவரகாந் திண்மதிக்கு வெண்ணெல்லாம்
வாய்த்த சனி பொன் புகற்கு வன்முதிரை—பூத்த
புகர் தன்னிறத்தெள் புகல்வர் கடுங்கோ
டிகழ்நிறத்த மென் முதிரையாம். (120)

(இ-ள்) செவ்வாய்க்குத் தினை வரகுமுதலிய தானியங்களென்றும், சந்திரனுக்கு வெண்ணெல்லென்றும், சனி குரு புதன் இவர்களுக்கு முதிரை என்றும், (அவரை, காராமணி, கொள்ளு துவரை முதலியன முதிரையெனப்படும்) ஸூரியன் செவ்வாய் ராகு சனி ஆகிய அசுபக்கிரஹங்கட்கு அவற்றின் நிறமுள்ள முதிரையென்றும், சந்திரன் புதன் குரு சுக்கிரன் இந்தச் சுபக்கிரஹங்கட்கு அவற்றின்நிறமுள்ள தானியங்களென்றும் சொல்வதுண்டு. (120)

சிறுபயறு புந்தி புகர்வெண்டுவரை
மறுகடலை சேய் மதியம் வெள்ளெட்—டுகுரயி
லவரை கதிர் பொன்னவன்றுன்றுவரை
தவிர் சனி பாம்பெள்ளுந் தாஞ்சாற்று. (121)

(இ-ள்) புதனுக்குச்சிறுபயரும், சுக்கிரனுக்கு வெண்துவரையும், செவ்வாய்க்குக் கடலையும், சந்திரனுக்கு வெள்ளெள்ளும், ஸூரியனுக்கு அவரையும், சனி ராகு இவர்கட்கு எள்ளும் தானியங்களாகும். (121) (எ-று)

उन्नते भानुकुजयोर्वल्मीके बुधभोगिनोः ।
सलिले चन्द्रसितयोर्गुरोश्शैलतले तथा ।
शनेः कृष्णशिलास्थाने मूलान्येतानि भूमिषु ॥ ११३ ॥

वर्णं रसं कुलं रत्नमायुधं चोक्तमूलिकाः ।
पत्रं पुष्पं पक्कफलं त्वङ्मूलं पूर्वभाषिताम् ।
ग्रहोक्तमूलिकां ज्ञात्वा कथयेदुदयादिभिः ॥ ११४ ॥

(க-ரை) முற்கூறிய பொருள் விளையுமிடம்—செவ்வாய் ஸூரியன் இவர்கட்கு மேட்டுப்பாங்கானவிடமும், புதன் ராகு இவர்கட்கு கரையான்புத்தும், சந்திரன் சுக்கிரன் இவர்கட்கு ஜலமும், குருவுக்கு மலையடிவாரமும், அவ்விதமே சனிக்கு கறுநிறமான கற்பாறையும், ஆகியபூமிகள் முற்கூறிய மூலப்பொருளுண்டாகுமிடமாகக் காணவேண்டும். (113) அந்தந்தக் கிரஹத்துக்குரிய நிறம், ரஸம், குலம், ரத்தினம், ஆயுதம் இவற்றையும் முற்கூறியமூலங்களையும், முன்னர்கூறப்பட்ட இலை, பழம், பழுத்தபழம், பட்டை, வேர், ஆகிய கிரஹங்களுக்குச் சொல்லிய மூலங்களையும் கண்டறிந்து கொண்டு உதயாரூடச்சத்திரங்களைக் கொண்டு பலன் சொல்லவேண்டும்.

ஜினேந்திரமாலை.

செங்கதிர்மான் மேடாகுந் தீநாகம்புற்றாகுந்
துங்கமதிபுகரேற் றாய் நீராம்—துங்கமுள்ள
மந்திரி சேய் கல்லாஞ் சனியேற்களரறைந்த
தந்தநிலந்தானறிந்து சாற்று. (122)

(இ-ள்) ஸூரியனுக்கு மேட்டானவிட்டமும், ராகுவுக்குப் புற்றுள்ள விட்டமும், சந்திரன் சுக்கிரன் இவர்கட்கு நீர்ப்பாங்கானவிடமும், குரு செவ்வாய் இவர்கட்கு கற்பாங்கானவிடமும், சனிக்கு களர்பாங்கானவிடமும் அவரவரின் நிலமென்றறிந்து சொல்லவும்,

வண்ணஞ்சுவைகுலங்கள் வாய்ந்தமணிக்கருவி
யெண்ணரிய மூலமியங்குவன—நண்ணு
மிலை காய் பழந்தோல் வேர் பூவுமற்று
மலையாதவை யவையே யாம். (123)

(இ-ள்) நிறம், ரஸம், குலம், மணி, ஆயுதம், முதலியவற்றையும் இலை, காய், பழம், தோல், வேர், புஷ்பம் முதலியவற்றையும் இதுவரைசொன்ன முறைப்படி கண்டுகொண்டு பலன் சொல்லவேண்டுமென்றும். (123) (எ-று)

மூன்றாவது மூலக்ஞானகாண்டம் முற்றிற்று.

நான்காவது ஜீவக்ஞான காண்டம்.

चन्द्रो माता पितादित्यः सर्वेषां जगतामपि ।
गुरुशुक्रारविन्मन्दाः पञ्चभूतस्वरूपिणः ॥ ११५ ॥

(க-ரை) எல்லாஜகத்துக்கும் சந்திரன் மாதாவும், ஸூரியன் பிதாவுமாகும். குரு சுக்கிரன் செவ்வாய் புதன் சனி இவர்கள் ஆகாசாதி பஞ்சபூதஸ்வரூபிகளாகவுமாவர். (எ-று) (115)

श्रोत्रत्वङ्नेत्ररसनाघ्राणाः पञ्चेन्द्रियाणि च ।
शब्दस्पर्शौ रूपरसौ गन्धश्च विषया अमी ॥ ११६ ॥

(க-ரை) குருவாதிய ஐந்துகிரஹங்களும் அதாவது:—குரு சுக்கிரன் செவ்வாய் புதன் சனி இவர்கள் முறையே சுரோத்ரம், த்வக், சக்ஷுஸ், ரஸனை, க்ராணம்என்ற இந்திரியங்களும் முறையே சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற அவ்விந்திரியங்களின் விஷயங்களுமாவர். (116) (எ-று)

ज्ञानं गुर्वादिपञ्चानां ग्रहाणां कथयेत्क्रमात् ।
गुरोः पञ्चभृगोश्चाब्धि ज्ञस्यद्विस्त्रिः कुजस्य च ।
एकज्ञानं शनेः प्रोक्तं शास्त्रे ज्ञानप्रदीपके ॥ ११७ ॥

(க-ரை) குருவாதியஐந்து கிரஹங்களுக்கும் முறையே அவற்றின் (சப்தாதிவிஷயங்களின்) க்ஞானத்தைச் சொல்லவேண்டும். அதாவது: குருவுக்கு 5 க்ஞானங்களும், சுக்கிரனுக்கு நான்கு க்ஞா

னங்களும், புதனுக்கு இரண்டு க்ஞானங்களும், செவ்வாய்க்கு மூன்று க்ஞானங்களும், சனிக்கு ஒரு க்ஞானமுமாக இந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—குருவுக்கு சுரோத்ரம் த்வக் சக்ஷுஸ் ரஸனைக்ராணம் ஆகிய ஐந்து இந்திரியங்கள் மூலமேற்படும் சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களான ஐந்துவிஷயங்களின் க்ஞானமும், சுக்கிரனுக்கு த்வக்சக்ஷுஸ், ரஸனைக்ராணம் ஆகிய இந்நான்கு இந்திரியங்கள் மூலமேற்படும் ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற நான்கு விஷயங்களின் க்ஞானமும், செவ்வாய்க்கு சக்ஷுஸ் ரஸனை க்ராணம் என்ற மூன்று இந்திரியங்கள் மூலமேற்படும்ரூபம், ரஸம், கந்தம் என்ற மூன்றுக்ஞானங்களும், புதனுக்கு ரஸனைக்ராணம் என்ற இரண்டு இந்திரியங்கள்மூல மேற்படுகின்ற ரஸம், கந்தம் என்ற இரண்டு க்ஞானங்களும், சனிக்கு க்ராணம் என்ற ஒரு இந்திரியமூலமேற்படுகின்ற கந்தமென்ற ஒரு ஞானமுமுரியதாகுமெனக் கண்டுகொள்ளவேண்டும். (எ—று) (117)

ஜினேந்திரமாலை கூறுவதாவது—

சந்திரனேதாயாகத்தாழ்வில்கதிர்தந்தையாய்
வந்துதித்தபொன்வெள்ளிசேய்மாலு—மந்தனு
மெய்முறையேமண்ணீர்தீக்காலிவற்றூடாகாய
மெய்வாய்கண்மூக்குச்செவி. (124)
ஆங்காரியோரறிவாமீரறிவுமால்சேய்மூன்
றூங்குபுகர்நான்கறிவாமொன்பொன்ன—னீங்கைந்து
மிக்குசெவிமூக்குகண்வாய்மெய்யாமிவற்றி
ஞெக்குமுறையேயுறை. (125)

(இ—ள்) சந்திரன் மாதாவாகவும், ஸூரியன் பிதாவாகவும், ஆவர். இவ்விருவர்காரணமாக வெளிவந்து தோன்றுகின்ற குரு, சுக்கிரன், செவ்வாய், புதன், சனி இவர்கள் முறையே பூமி, ஜலம், நெருப்பு, வாயு, ஆகாசம் என்ற ஐந்துபூதங்களாகவும், த்வக், ஜிஹ்வா, சக்ஷுஸ், க்ராணம், ஸ்ரோத்ரம் என்ற ஐந்துஇந்திரியங்களாகவும் ஆவர். (124) (எ—று)

குறிப்பு—ப்ரக்ஞானதீபிகையில் குருவை ஸ்ரோத்தமாகவும், சுக்கிரனை த்வக்காகவும், செவ்வாயைச் சக்ஷுஸ்ஸாகவும், புதனை ரஸனையாகவும், சனியை க்ராணமாகவும் கூறப்பட்டது. அதன்

மொழிபெயர்ப்பான ஜினேந்திரமாலையில் அதற்குமாறாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் ப்ருஹத்லம்பாகம் முதலிய வேறுசாஸ்திரங்களுக் கொத்திருப்பதால் ப்ரக்ஞானதீபிகையிற்கூறியமுறைப்படிக்கொள்ளுவதுதான் உசிதமென நாம் எண்ணுகிறோம். (எ—று)

(இ—ள்) சனிக்கு க்ராணேந்திரியம் ஒன்றினால் மட்டுமேற்படும் கந்தக்ஞானமென்றும், இம்முறைப்படியே புதனுக்கு இரண்டறிவென்றும், செவ்வாய்க்கு மூன்றறிவென்றும், சுக்கிரனுக்கு நான்கறிவென்றும், குருவுக்கு ஐந்தறிவென்றும் கண்டுகொள்ள வேண்டும். (125) (எ—று)

बुधवर्गा इमे प्रोक्ताः शङ्खः शुक्तिर्वराटिका ।
मत्कुणाश्शिथिली यूका मक्षिकाश्च पिपीलिकाः ।
भौमवर्गा इमे प्रोक्ताः षट्पदा ये भृगोस्तथा ॥ ११८ ॥
देवा मनुष्याः पशवो भुजगा विहगा गुरोः ।
तथैकज्ञानिनो वृक्षाः शनिवर्गाः प्रकीर्तिताः ॥ ११९ ॥

(க—ரை) சங்கம், முத்துச் சிப்பி, சோழி, இவை புதனுடைய வர்க்கங்களாகும். மூட்டைப்பூச்சி, சிதிலீ (இதுஒருவகைப்பூச்சி) ஈர், தேனீக்கள், எறும்பு, இவை செவ்வாயின் வர்க்கங்களாகும். வண்டுவகைகள் எவையுண்டோ அவை சுக்கிரனது வர்க்கங்களாகும். தேவர், மனிதர், பசு, பாம்பு, பக்ஷிகள் இவை குருவினது வர்க்கங்களாகும். ஒரே அறிவுள்ளவைகளான மரங்கள் சனியினது வர்க்கங்களாகும் (118-119) (எ—று)

ஜினேந்திரமாலை.

சங்கலகொடிப்பிமுதற்றண்புதனதீரறிவா
மிங்கெறும்புபேன்முசுடீச்சிதலுந்தங்கிய
மூன்றறிவாஞ்செவ்வாய்முரல்வண்டுதும்பிமுந்
ஞன்கறிவு சுங்கனெனநாட்டு. (126)

(இ—ள்) சங்கு, கவடி, அதாவது:—சோழி, சிப்பி இவை புதனைச்சார்ந்த ஈரறிவுள்ள ப்ராணிகளென்றும், எறும்பு, பேன், முசுடு, ஈ, சிதல்=(இதுஒருவகைப்பூச்சி அல்லது கறையான் என்றும் சொல்லப்படும்) ஆகியஇவை செவ்வாயைச்சேர்ந்த மூன்றறிவுள்ளப்ராணி

களாம். முரல் (இது ஒருவகைமீன்) வண்டு, தும்பி=(இதைஒரு வகைமீன், கரும்பு, கருவண்டு, கொத்தான், சுரை, துட்டை, தும்பி ரம், என நிகண்டு, கூறுகிறது.) ஆகிய இவை சுக்கிரனைச் சார்ந்த நான்கறிவுள்ள ப்ராணிகளாம். (126) (எ-று)

தேவர்கண்மக்கள்விலங்குகடோர்புட்க
ளேவியசீவன்களியாவு—மேவிய
வையறிவதாங்குருக்காமங்கிசமாக
மெய்யறிவுகொண்டுவிளம்பு. (127)

(இ-ள்) தேவர்கள், மனிதர்கள், பசுக்கள், பக்ஷிகள், ஆகிய ஐந்தறிவுள்ள ஜீவன்கள் யாவும் குருவைச் சார்ந்தனவாகும். (127)

மீனமகரம் பறப்பனவாமீங்கிவற்றை
யூனமிலாச் சேய்சனியுங்காணுறமே—லூனமிலாக்
கான்கோழியாகும்புகரன்னமால்கிளியாம்
வான்றூகையாகுமதி. (128)

(இ-ள்) மீனம் மகரம் இந்தராசிகளைப் பலம்பெற்ற சனி செவ்வாய் இவர்கள் பார்ப்பரேல் ஊனமில்லாத கான்கோழி என்றும் (அதாவது:—கானுங்கோழி என்பதைக்கான்கோழி யென்றுரைத்ததாகக்கொண்டு வான்கோழிஎன அதற்குப் பொருள் கொள்ளவேண்டும்.) சுக்கிரன் பார்த்தால் அன்னமென்றும், புதன்பார்த்தால்கிளியென்றும், சந்திரன்பார்த்தால் மயிலென்றும், பறக்கும் பக்ஷிகளைப் பிரித்துக்கொள்ளவேண்டும். (129) (எ-று)

அங்கட்கருடனருக்கற்காம்பொன்னவர்க்குக்
செங்கட்குருகாகுஞ்சீறரவம்—பொங்கு
முருவாகுங்காக்கையஃதுள்ளனமற்றெல்லா
முருவாகுமவ்வவற்றூனோர். (130)

(இ-ள்) மீனம்மகரம் இவைகளை ஸூரியன் பார்த்தால் அப்பொழுது காணவேண்டுவது கருடனாகும். குருபார்த்தால் குருகாகும்=அதாவது நாரை, கோழி, நீர்பறவை முதலியன குருகு எனப்படும். ராகுபார்த்தால் காக்கையாகும். இவ்விடத்திற் சொல்லாத பக்ஷிகளை அவ்வவற்றுக்கு வேறிடத்திற் சொல்லியபடி கண்டு கொள்ளவேண்டும். (130) (எ-று)

एक द्वि त्रि चतुः पञ्च गगनादिगुणाः स्मृताः ।
देहो जीवः सितो जिह्वा बुधो नासेक्षणे कुजः ।
श्रोत्रं शनैश्चरश्चैव ग्रहावयव ईरितः ।
द्विपाच्चतुष्पाद्बहुपाद्विहगाः जानुगाः क्रमात् ॥ १२० ॥
शङ्खशम्बूकसङ्घांश्च पादहीनान्विनिर्दिशेत् ।
यूका मत्कुणमुख्याश्च बहुपादा उदाहृताः ।
गोधा कमठमुख्यास्तु तथा चङ्क्रमणोचिताः ॥ १२१ ॥

(க-ரை) ஆகாசத்துக்குச் சப்தமென்ற ஒருகுணமும், வாயுவுக்குசப்தம், ஸ்பர்சம் என்ற இரண்டுகுணங்களும், தேஜஸ்ஸுக்குச் சப்தம் ஸ்பர்சம் ரூபம் என்ற மூன்றுகுணங்களும், அப்புக்குச் சப்தம் ஸ்பர்சம், ரூபம் ரஸம் என்ற நான்குகுணங்களும், பூமிக்குச் சப்தம் ஸ்பர்சம் ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்துகுணங்களு முரியனவாம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. குரு தேஹமாகவும், சுக்கிரன் நாக்காகவும், புதன் மூக்காகவும், செவ்வாய் கண்களாகவும், சனி ஸ்ரோத்ரமாகவும், ஆகும் எனக்கிரஹங்களின் அவயவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குரு இரண்டுகாலுள்ள ப்ராணியென்றும், சுக்கிரன் நான்குகாலுள்ள ப்ராணியென்றும், புதன் வெகுகாலுள்ள ப்ராணியென்றும், செவ்வாய் பக்ஷிகளென்றும், சனி முழங்காலால் நடக்கும் ப்ராணியென்றும், முறையே யறியவேண்டும். (120) சங்கம், தவக்களை இவற்றைப் பாதஹீனங்களாகச் சொல்லவேண்டும். ஈர், பேன் மூட்டைப் பூச்சி இவைகளை வெகுகாலுள்ளனவாகச் சொல்லவேண்டும். உடும்பு ஆமை முதலியவற்றை நகர்ந்து செல்லும் பிராணிகளாகச் சொல்லவேண்டும். (121)

சிந்தித்த பொருளின்னதென்பது.

मृगमीनौ तु खचरौ तत्रस्थौ मन्दभूमिजौ ।
वनकुक्कुटकाकौ च चिन्तिताविति कीर्तयेत् ॥ १२२ ॥
तद्राशिस्थे सिते हंसः शुकः सौम्ये विधौ शिखी ।
वीक्षिते च तथा ब्रूयात् ग्रहे राशौ विचक्षणः ॥ १२३ ॥

तद्राशिस्थे रवौ तेन दृष्टे ब्रूयात्खगेश्वरम् ।
बृहस्पतौ सितबको भरद्वाजस्तु भोगिनि ॥ १२४ ॥
कुक्कुटो ज्ञस्य शुक्रस्य दिवान्धः परिकीर्तितः ।
अन्यराशिस्थिते खेटे तत्तद्राशिफलं वदेत् ।
सौम्येखेटे द्विजास्सौम्याः क्रूराः क्रूरगृहेस्थिताः ॥ १२५ ॥

(க—ரை) மகரம் மீனம் இவ்விரண்டுராசிகளும் ஆகாசஸஞ்சாரிகளாகும். அந்த மகரமீனங்களில் சனியும் செவ்வாயுமிருந்தால் அப்பொழுது காட்டுக்கோழி காக்கை இவை சிந்திக்கப்பட்டனவென்று காணவேண்டும். (122) அந்தராசிகளில் (மகரமீனங்களில்) சுக்கிரனிருந்தால் சிந்திக்கப் பட்டது ஹம்ஸமென்றும், புதனிருந்தால் கிளியென்றும், சந்திரனிருந்தால் மயிலென்றும், சொல்லவேண்டும். முற்கூறியக்கிரஹங்களால் அந்த மகரமீனராசிகள் பார்க்கப்பட்டாலும் முற்கூறியபடியே சொல்லவேண்டும். (123) ஸூரியன் அந்த ராசிகளிலிருந்தாலும் அல்லது பார்த்தாலும் கருடனென்றும், குருவிருந்தாலும் பார்த்தாலும் வெண்கொக்கென்றும், ராகுவிருந்தாலும் பார்த்தாலும் வால்நீண்ட கருங்குருவி யென்றும், புதனிருந்தாலும் பார்த்தாலும் கோழியென்றும், சுக்கிரனிருந்தாலும் பார்த்தாலும் ஊமைக் கோட்டானென்றும் சொல்லவேண்டும். (124) மேலும் கிரஹமானது மகரமீனந் தவிர்த்து வேறுராசியிலிருந்தாலும் பார்த்தாலும் அந்தராசிக்குரியபலனைச் சொல்லவேண்டும். அவற்றுள் சுபக்கிரஹங்களிருந்தாலும் பார்த்தாலும் சுபமான பக்ஷிகளென்றும், குரூரமான கிரஹங்களிருந்தாலும் பார்த்தாலும் குரூரமான பக்ஷிகளென்றும் சொல்லவேண்டும். (125)

उच्चराश्युदये सूर्ये दृष्टे भूपस्तदाश्रितः ।
उच्चस्थानेक्षिते राजा नेता स्वक्षेत्रगे क्षिते ॥ १२६ ॥
राजाश्रितास्तु मित्रस्थवीक्षिते समगे भटाः ।
अन्यराशिषु युक्तेषु दृष्टे वा सङ्करान्वदेत् ॥ १२७ ॥
कांस्यकारः कुलालश्च कांस्यविक्रयिणस्तथा ।
शङ्खच्छेदी धातुचूर्णान्वेषिणः स्वर्णकारिणः ॥ १२८ ॥

(க—ரை) உச்சராசியானது உதயமாகி அதில் ஸூரியனிருந்தாலும் அல்லது அதைஸூரியன் பார்த்தாலும் பூமியையாளுபவனாகவோ அவனையாஸ்ரயித்தவனாகவோ நினைக்கப் பட்டவன் இருப்பானென்றும், ஸூரியன் உச்சஸ்தானத்தில் அதாவது மேஷத்தில் இருந்து உதயலக்கினத்தைப்பார்த்தால் ராஜா (சக்கிரவர்த்தி) என்றும்,ஸ்வக்ஷேத்திரத்திலிருந்து உதயத்தைப்பார்த்தால் சேனைத்தலைவனென்றும், மித்திரன்வீட்டிலிருந்து உதயத்தைப்பார்த்தால் ராஜனையாஸ்ரயித்தவனென்றும், ஸமன் வீட்டிலிருந்து உதயத்தைப் பார்த்தால் யுத்தவீரர்களென்றும் சொல்லவேண்டும். ஸூரியனது உச்சராசியான மேஷம்தவிர மற்றராசிகள் உதயமாகி அவற்றில் ஸூரியனிருந்தாலும், அவற்றை ஸூரியன்பார்த்தாலும் முற்கூறியவற்றில் ஸங்கரஜாதிமனிதர்களைச் சொல்லவேண்டும். (127) அதாவது:—வெண்கலவேலை செய்பவன், குயவன், வெண்கலவியாபாரஞ் செய்பவன், அதுபோல சங்கை உடைப்பவன், தாதுப்பொடியைத் தேடுபவன் (ரஸவாதஞ் செய்பவன் என்றும் சொல்லலாம்) தங்கவேலை செய்பவன் (தட்டான் என்றும் சொல்லாம்) இவர்களாகவும் கண்டு பலன் சொல்லவேண்டும். (எ—று) (128)

नृराशौ जीवदृष्टे वा भानुवद्ब्राह्मणादयः ।
बुधयुक्तेऽथवा दृष्टे तद्वद्ब्रूयात्तपस्विनः ॥ १२९ ॥
तद्वच्छुक्रे तु वृषलाः सङ्कराश्शशिभोगिनौ ।
किञ्चिदत्र विशेषोऽस्ति मीने भास्करकिङ्कराः ॥ १३० ॥
चन्द्रस्य भिषजो ज्ञस्य वैश्याश्चोरगणाः स्मृताः ।
राहोर्गरदचाण्डालास्तस्कराः परिकीर्तिताः ॥ १३१ ॥
शनेस्तरुच्छिदः प्रोक्ताः राहोर्धीवरमालिनः ।
शङ्खच्छेदी नटः कारुर्नर्तकाः शिल्पिनस्तथा ॥ १३२ ॥
चूर्णकृन्मौक्तिकग्राही शुक्रस्य परिकीर्तितः ।
तत्तद्राशिवशाज्जातिस्तत्तद्राशिस्थितैर्ग्रहैः ।
तत्तद्राशिस्थ खेटानां बलतो नष्टनिर्गमः ॥ १३३ ॥

(க—ரை) மனிதராசி உதயமாகி அது குருவினால் பார்க்கப்பட்டால் முன்ஸூரியன்மூலம் காணவேண்டியதாய்க் கூறியமுறைப்படி அதனால் காணவேண்டியவர் ப்ராம்ஹணாதிகளென்றும், மனிதராசி உதயமாகி அது புதனுடன் கூடினாலும், புதனால் பார்க்கப்பட்டாலும் அதனால் காணவேண்டியவர் தபஸ்வியென்றும், (129) மனிதராசி உதயமாகி அது சுக்கிரனால் பார்க்கப்பட்டால் சூத்திரர்களென்றும், அதுபோலவே உதயமான மனிதராசியை சந்திரன் ராகு இவர்கள் பார்த்தால் ஸங்கரஜாதி மனிதர்களென்றும், காணவேண்டும். ஆனால் இங்கு ஒருவிசேஷமுண்டு. (130) அதாவது: மீனம் உதயமாகி ஸூரியன் பார்த்தால் வேலைக்காரர்களென்றும், சந்திரனுடைய பார்வையிருந்தால் வைத்தியர்களென்றும், புதனுடைய பார்வையிருந்தால் வைஸ்யர்களென்றும், திருட்டுக்கூட்டங்களென்றும், ராகு வினுடைய (இதைச் செவ்வாயினுடைய என்றும் சொல்லலாம்) பார்வையிருந்தால் விஷமிடுபவன், சண்டாளன், திருடர் இவர்களென்றும் (131) சனியின் பார்வையிருந்தால் மரம் வெட்டுபவரென்றும், ராஹுவினுடைய பார்வையிருந்தால் மீன் பிடிப்பவரென்றும், மாலைகட்டுபவரென்றும், சங்கத்தைப் பிளப்பவரென்றும், நர்த்தனஞ் செய்பவரென்றும், கைத்தொழில் (வண்ணான் தச்சன் முதலியோரின் தொழில்) செய்பவரென்றும் கூத்தாடுபவர் என்றும், சில்பவேலை செய்பவரென்றும், சொல்லப்படுவர். (132) மேலும், சுக்கிரனுடைய பார்வையிருந்தால் பொடி செய்து விற்பவர், முத்துச்சலாபம் குளித்து முத்தெடுப்பவரென்றும் சொல்லப்படுவர். அந்தந்த ராசியைக் கொண்டும், அந்தந்தராசியிலிருக்கும் கிரஹங்களைக் கொண்டும் ஜாதியை அறியவேண்டும். அந்தந்த ராசியிலிருக்கும் கிரஹங்களின்வலுவைக் கொண்டு நஷ்டமான வஸ்து வெளியாகுதலைக் காணவேண்டும். (எ—று) (133)

குறிப்பு—இதுவரை நாம் இந்த ப்ரக்ஞானதீபிகையைத் தமிழில் பெயர்த்தெழுதியவிடத்தில் ஜிநேந்திரமாலையையும் 130 பாட்டுவரை எழுதிவெளியிட்டோம். ஜிநேந்திரமாலை யென்ற இந்த நூலானது வடமொழியிலுள்ள ப்ரக்ஞானதீபிகையின் மொழிபெயர்ப்பே யொழிய தனியான சோதிடநூலன்று என்பதை நேருக்குநேராகக் காட்டவேண்டியே இவ்விதஞ் செய்தோம். இப்

புஸ்தகத்தில் ஜிநேந்திரமாலை முழுவதையும் வெளியிடுவதாயிருந்தால் வீணில் சொன்னதையே சொல்லிப்புஸ்தகம் விரிவடைவதைத் தவிர அதிகமான பலன் ஏற்படுவதற்கில்லை யென நிஸ்சயமாகப் படுவதால் இனி அதைவெளியிடுவதாக உத்தேசமில்லை. மேலும் ப்ரஸ்னாரூடபலநிர்ணயம் என்ற பெயருடன் வெளியாகும் இப்புஸ்தகத்தின் முடிவில் இதுவரை தமிழில் வெளிவராத புவனதீபம் என்றநூலையும் மற்றும் இதுவிஷயமான நூல்களையுமே வெளியிடுவதானது புதிதாய் விஷயங்களை யறிய விருப்பமுள்ளவர்க்குப்பயன்படலாமென எண்ணமேற்படுவதால் அவ்விதமே செய்யத் தீர்மானித்திருக்கிறோம். (எ—று)

நஷ்டமுஷ்டி சிந்தாகாண்டத்தில் மனுஷ்யகாண்டம் முற்றிற்று.

நஷ்டமுஷ்டி சிந்தாகாண்டத்தில் தாதுமூல ஜீவகாண்டம்.

மேஷராசியில் ஸூரியாதிகளிருப்பதால் காணவேண்டியவை.

मेषराशिस्थिते भौमे मेषमाहुर्मनीषिणः ।
तस्मिन्नर्के स्थिते व्याघ्रं गोलाङ्गूलं बुधे स्थिते ॥ १३४ ॥
शुक्रे गौर्वृषभश्चन्द्रे गुरावश्वस्ततः परम् ।
महिषस्सूर्यतनये राहौ गवय उच्यते ॥ १३५ ॥

(க—ரை) மேஷராசியில் செவ்வாயிருந்தால் நினைக்கப்பட்டது ஆடென்றும், அதில் ஸூரியனிருந்தால் வேங்கைப் புலியென்றும், புதனிருந்தால் கொண்டமுசுரு (இது குரங்குவகுப்பைச் சேர்ந்தது) என்றும், (134) சுக்கிரனிருந்தால் பசுவென்றும், சந்திரனிருந்தால் விருஷபம்(எருது)என்றும், குருவிருந்தால் குதிரையென்றும், சனி இருந்தால் எருமை என்றும், ராஹுவிருந்தால் கவயம் (இது மான் வகுப்பிற் சேர்ந்தது. இதன்கொம்பில் தீர்த்தம் விட்டு ஈஸ்வராதிகளுக்கு அபிஷேகம் செய்வதுண்டு) என்றும், சொல்லப்படும்.

விருஷபத்தில் ஸூரியாதிகளிருப்பதால் காணவேண்டியவை.

वृषभस्थे भृगौ धेनुः कुजे मृग उदाहृतः ।
बुधे कपिर्गुरावश्वः शशाङ्के धेनुरुच्यते ।
आदित्ये शरभः प्रोक्तो महिषी शनिसर्पयोः ॥ १३६ ॥

(கர—ரை) விருஷபத்தில் சுக்கிரனிருந்தால் புதிதாய்க் கன்று போட்ட பசுவென்றும், செவ்வாயிருந்தால் மானென்றும், புதனிருந்தால் குரங்கென்றும், குருவிருந்தால் குதிரையென்றும், சந்திரனிருந்தால் தேனு(புதிதாய் கன்றுபோட்டபசு)என்றும், ஸூரியனிருந்தால் சரபம் (இதுஸிம்ஹத்தைப் போன்றதொரு மிருகம் இது ஸிம்ஹத்தை ஸம்ஹரிக்குமென்றும் சொல்லுவதுண்டு) என்றும், சனிராகுக்களிருந்தால் எருமை மாடென்றும் சொல்லவேண்டும். (எ—று) (136)

कर्कस्थे च खरो भौमे महिषी नक्रगे कुजे ।
वृषभस्थे हरिर्युग्मकन्ययोः श्वाच फेरवः ॥ १३७ ॥

(க—ரை) கடகத்தில் செவ்வாயிருந்தால் கழுதையென்றும், மகரத்தில் செவ்வாயிருந்தால் சிந்திக்கப்பட்டது எருமை யென்றும், விருஷபத்தில் செவ்வாயிருந்தால் சிங்கமென்றும், மிதுனம் கன்னி இவைகளிலிருந்தால் முறையே நாயென்றும், குள்ளநரி யென்றும் சொல்லவேண்டும். (137) (எ—று)

हरिस्थे भूमिजे व्याघ्रो रवीन्द्वोस्तत्र केसरी ।
शुक्रे श्वा वानरः सौम्ये त्वन्यैः श्वाकृतयो मृगाः॥१३८॥

(க—ரை) ஸிம்ஹத்தில் செவ்வாயிருந்தால் சிந்திக்கப்பட்டது புலியென்றும், அதேவிடத்தில் ஸூரியன் சந்திரன் இவர்களிருந்தால் சிங்கமென்றும், சுக்கிரனிருந்தால் நாயென்றும், புதனிருந்தால் குரங்கென்றும், வேறுகிருஹங்களிருந்தால் நாயின் வடிவமுள்ள மிருகங்களென்றும் சொல்லவேண்டும். (எ—று) (138)

तुलागते भृगौ वत्सश्चन्द्रे गावः प्रकीर्तिताः ।
धनुःस्थितेषु जीवेन्दुकुजेषु तुरगो भवेत् ॥ १३९ ॥
सपुत्रेऽर्के स्थिते कुम्भे मत्तो गज उदाहृतः ।
सर्पे च तत्र महिषो वानरो बुधजीवयोः ॥ १४० ॥

(க—ரை) சுக்கிரன் துலாத்திலிருந்தால் கன்றுக்குட்டியென்றும், சந்திரனிருந்தால் பசுக்களென்றும், தனுஸ்ஸில் குரு சந்திரன், செவ்வாய் இவர்களிருந்தால் குதிரையென்றும் சொல்லவேண்டும். கும்பத்தில் சனியுடன்கூட ஸூரியனிருந்தால் மதங்கொண்ட யானை

என்றும் ராகுவிருந்தால் எருமை யென்றும், புதனும் குருவும் இருந்தால் குரங்கென்றும் சொல்லவேண்டும். (139–140)

शुक्रामृतांशुसूर्येषु स्थितेषु पशुरुच्यते ।
जीवसूर्येक्षिते गर्भो वन्ध्या रविजवीक्षिते ।
अङ्गारकेक्षिते शुष्कमिति ज्ञात्वा वदे त्सुधीः ॥ १४१ ॥

(க—ரை) (கும்பத்தில்) சுக்கிரன் சந்திரன் ஸூரியன் இவர்களிருந்தால் பசுவென்றும், (கும்பம்) குரு சூர்யன் இவர்களால் பார்க்கப்பட்டால் கர்ப்பமுள்ள பசுவென்றும், சனியினால் பார்க்கப்பட்டால் மலடான பசுவென்றும், செவ்வாயினால் பார்க்கப்பட்டால் இனி கன்றுபோடத் தகுதியற்ற பசுவென்றும், அறிந்து புத்திமானுயுள்ளவன் பலன் செல்லவேண்டும். (எ—று) (141)

இனியும் சிந்தனாதிகள் சொல்லப்படும்.

அவதாரிகை—ஒருவன் ஒன்றை மனத்தில் எண்ணிக்கொண்டு தான் எண்ணினபொருள் யாதெனக் கேட்டால் அதைஅறிதல் சிந்தனையெனப்படும். அம்முறையைப் பின்வருவனவற்றுற் காண்க—

वक्ष्येऽहं चिन्तनां सूक्ष्मां जनैस्तु परिचिन्तिताम् ।
धिषणे कुम्भराशिस्थे त्रिकोणेवाऽथ पश्यति ।
स्मृतो गजस्तथा मीनधनुषी वीक्षिते शुभैः ॥ १४२ ॥

(க—ரை) நான் ஜனங்களாலெண்ணப்பட்ட மிக்க நுட்பமான சிந்தனையைச் சொல்லப்போகிறேன். கும்பத்தில் குருஇருந்தாலும், கும்பத்துக்கு த்ரிகோணத்தில் (அதாவது:—மிதுனம் துலாம் இவற்றில்) இருந்தாலும், அல்லது இவ்விடங்களைப் பார்த்தாலும் எண்ணப்பட்ட பொருள் யானையென்றும், மீனம் தனுஸ் இவ்விடங்கள் சுபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும் எண்ணினது யானையென்றும் சொல்லவேண்டும். (எ—று) (142)

स्मृतः कपिर्मेषगते शनौ ब्रूयान्मतङ्गजम् ।
कुजे मेषगते छागः बुधे नर्तकगायकौ ॥ १४३ ॥
गुरुशुक्रदिनेशेषु वणिजं वस्त्रजीविनम् ।
चन्द्रे तथा वदेन्मन्दे सिह्मस्थे रिपुचिन्तनम् ॥ १४४ ॥

वृषस्थे महिषो तौलौ चक्रिणं वृश्चिके गदम् ।
मेषगे सूर्यतनये मृत्युक्लेशादयस्तथा ।
मित्रादिपञ्चवर्गञ्च ज्ञात्वा ब्रूयात्पुरोक्तितः ॥ १४५ ॥

(க—ரை) மேஷத்தில் சனியிருந்தால் நினைக்கப்பட்டது குரங்கென்றும், யானையென்றும் சொல்லவேண்டும். செவ்வாய் மேஷத்திலிருந்தால் ஆடென்றும், புதன் மேஷத்திலிருந்தால் நர்த்தனமாடுபவன் காயகன் (பாட்டுப்பாடுபவன்) இவர்களென்றும் சொல்லவேண்டும். (143) குரு சுக்கிரன் ஸூரியன் இவர்கள் மேஷத்திலிருந்தால் வஸ்திரத்தினால் ஜீவிக்கின்ற வியாபாரியென்றும், சந்திரன் மேஷத்திலிருந்தாலும் முற்கூறிய வியாபாரி என்றும், சொல்லவேண்டும். சனி ஸிம்ஹத்திலிருந்தால் சத்துரு சிந்தையென்று சொல்லவேண்டும். (144) விருஷபத்தில் சனியிருந்தால் எருமையைப்பற்றிய நினைவென்றும், அவன் துலாத்திலிருந்தால் சக்கிரமுள்ளவனைப் பற்றிய சிந்தனையென்றும், விருஶ்சிகத்தில் சனியிருந்தால் வியாதியைப் பற்றிய சிந்தனையென்றும், மேஷத்தில் சனியிருந்தால் மரணம் கிலேசம் முதலியவற்றைப்பற்றிய சிந்தனையென்றும் சொல்லவேண்டும். அத்துடன் மித்திராதி ஐந்துவர்க்கங்களையும் அறிந்துகொண்டு அதாவது:—(மித்திரன், உச்சன், ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பவன், ஸமன், சத்துரு, இவர்களைக் கண்டுகொண்டு என்றும்.) முன் 127, 128வது சுலோகங்களில் சொன்னபடி பலன் சொல்லவேண்டும். (எ—று) (145)

धातुराशौ धातुखगैर्दृष्टे तच्छत्रसंयुते ।
धातुचिन्ता भवेत्तद्वन्मूलजीवौ तथा वदेत् ।
धातुभस्थे मूलखेटे जीवमाहुर्विपश्चितः ॥ १४६ ॥

(க—ரை) தாதுராசியானது தாதுக்கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும் தாதுராசியை சத்திரராசியாகவடைந்தாலும், தாதுவைப் பற்றிய சிந்தையாக விருக்கும். மூலஜீவராசிகள் மூலஜீவக்கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும் மூலஜீவராசிகளைச் சத்திரமா யடைந்தாலும் முன்போலவேதான் சொல்லவேண்டும். அதாவது முறையே மூலஜீவ சிந்தனைகளை யறியவேண்டும் என்பதாம். மூலக்கிரஹமானது தாதுராசியிலிருந்தாலும் வித்வான்கள் ஜீவனெனச் சொல்லுகின்றனர். (146) (எ—று)

जीवराशौ मूलखगैर्दृष्टे वा युजि मूलकाः ।
मूलराशौ जीवखगैर्धातुचिन्ता प्रकीर्तिता ॥ १४७ ॥

(க—ரை) ஜீவராசியானது மூலக்கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும் மூலக்கிரஹங்களுடன் சேர்ந்தாலும் சிந்திக்கப்பட்டது மூலங்களேயாகும். மூலராசியானது ஜீவக்கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது ஜீவக்கிரஹங்களுடன் கூடினாலும் தாதுப் பொருளைப்பற்றிய சிந்தை யென்றே சொல்லவேண்டும். (எ—று)

त्रिवर्गखेटकै र्दृष्टे युक्ते बलवशाद्वदेत् ।
पश्यन्ति चन्द्रञ्चेदन्ये वदेत्तत्तद्ग्रहाकृतिम् ॥ १४८ ॥

(க—ரை) முற்கூறிய தாதுமூல ஜீவராசிகள், தாதுமூல ஜீவக்கிரஹங்களால் சேர்ந்துப் பார்க்கப்பட்டாலும் அல்லது அவற்றுடன் சேர்ந்தாலும் கிரஹங்களின் பலத்தை யனுஸரித்து சிந்திக்கப்பட்ட பொருளின்னதெனச் சொல்லவேண்டும். மற்றக்கிரஹங்கள் சந்திரனைப் பார்த்தால் அந்தந்த கிரஹங்களுக்குரிய ஆகிருதியுள்ள பொருளைச் சொல்லவேண்டும். (எ—று) (148)

धातुं मूलञ्च जीवञ्च वंशं वर्णं स्मृतं वदेत् ।
उदयारूढयोश्छत्रे ग्रहयोगेक्षणात्तथा ॥ १४९ ॥

(க—ரை) உதயம் ஆரூடம் இவைகளிலும் சத்திரராசியிலுமுள்ளக் கிரஹங்களின் சேர்க்கை அவ்விதமே கிரஹங்களின் பார்வை இவற்றைக்கொண்டும் சிந்திக்கப்பட்ட தாதுவையும், மூலத்தையும், ஜீவனையும், வம்சத்தையும், நிறத்தையும், சொல்லவேண்டும். (149)

ज्ञात्वा नष्टञ्च मुष्टिञ्च चिन्तनां क्रमशो वदेत् ।
कण्टकादिचतुष्के तु स्वोच्चमित्रग्रहैर्युते ।
दृष्टे वा सर्वकार्याणां सिद्धिं ब्रूयाच्च चिन्तिताम् ॥ १५० ॥
उदये धातुचिन्ता स्यादारूढे मूलचिन्तनम् ।
छत्रेषु जीवचिन्ता स्यादिति कैश्चिदुदाहृतम् ॥ १५१ ॥
केन्द्रं पणफरं प्रोक्तमापोक्लिममिति क्रमात् ।
चिन्तनामुष्टिनष्टानि कथयेत्कार्यसिद्धये ॥ १५२ ॥

(க—ரை) நஷ்டம், முஷ்டி, சிந்தனை இவற்றை முறையே பின்வருமாறு யறிந்துகொண்டு சொல்லவேண்டும். அதாவது;—கண்டகாதி நான்கிலும் (1, 4, 7, 10 மிடங்களில்) ஸ்வக்ஷேத்திரத்திலோ, உச்சவீட்டிலோ, மித்திரன் வீட்டிலோ உள்ளக் கிரஹங்களிருந்தாலும், அல்லது 1, 4, 7, 10, மிடங்களை முற்கூறிய கிரஹங்கள் பார்த்தாலும் ஸர்வகாரியங்களுடையவும் ஸித்தியைச் சொல்லவேண்டும். உதய லக்கினத்தைக்கொண்டு தாதுஸம்பந்தமான சிந்தைகளையும், ஆருடலக்கினத்தைக்கொண்டு மூலங்களைப்பற்றிய சிந்தனைகளையும், சத்திரராசியைக்கொண்டு ஜீவசிந்தையையும் செய்யவேண்டும் எனச் சிலரால் சொல்லப்பட்டிருக்கிறது. கேந்திரம், பணபரம், ஆபோக்லிமம் என்ற மூன்றுஸ்தானங்களும் முறையே சிந்தனை, முஷ்டி நஷ்டம் இவற்றை யாராயுமிடமாகவாகும். அவ்விடங்களைக்கொண்டு சிந்தனாதிகளில் காரியஸித்தி முதலியவற்றைக் கூறவேண்டும். (எ—று) (152)

குறிப்பு—122-வது சுலோகம்முதல் கூறியமுறைகளை நஷ்டம் முஷ்டி சிந்தனை மூன்றிலும் இடத்திற்குத் தகுந்தபடி பொருத்திக் கொள்ளவேண்டும்.

நஷ்டமுஷ்டி சிந்தனாகாண்டத்தில் தாதுமூல
ஜீவகாண்டம் முற்றிறு.

ஆறுவது ஆருடகாண்டம்.

तत आरूढगे चन्द्रे न नष्टं रूढशाश्वती ।
आरूढाद्दशमे वृद्धिश्चतुर्थे पूर्ववद्वदेत् ।
नष्टद्रव्यस्य लाभश्च सर्वहानिश्च सप्तमे ॥ १५३ ॥

(க—ரை) சந்திரன் ஆருடராசியிலிருந்தால் பொருள் நஷ்டமில்லையென்றும், ஓரிடத்தில் மறைக்கப்பட்டோ, அல்லது அழிவற்றதாகவோ இருக்கின்றதென்றும் சொல்லவேண்டும். ஆருடராசிக்கு 10 மிடத்தில் சந்திரனிருந்தால் விருத்தியையும் (பெருக்கையும்.) நான்காமிடத்தில் சந்திரனிருந்தால் முன்போலவும் (அதாவது காரியஸித்தியையும்) நஷ்டத்திரவியத்தின் லாபத்தையும், ஆருடத்திற்கு 7 மிடத்தில் சந்திரனிருந்தால் ஸர்வஹானியையும் சொல்லவேண்டும். (எ—று) (153)

उदयाद्द्वादशे षष्ठेऽष्टम आरूढके सति ।
चिन्तितार्थो न भवति धनहानिर्द्विषद्बलम् ॥ १५४ ॥

(க—ரை) உதயலக்கினத்துக்கு 12லோ, 6லோ, 8லோ, ஆருடலக்கினமிருக்குமானால் சிந்திதமான பொருள் கிடைக்கமாட்டாது. அத்துடன் தனஹானியும், சத்துருவுக்குப் பலமும் ஏற்படும். (151)

तनुं कुटुम्बं सहजं जननीं तनयं रिपुम् ।
कलत्रं निधनं चैव गुरुं कर्म फलं व्ययम् ।
उदयादिक्रमाद्भावं तस्य तस्य फलं वदेत् ॥ १५५ ॥

(க—ரை) (1) சரீரம், (2) குடும்பம், (3) ஸஹோதரன், (4) மாதா, (5) புத்திரன், (6) சத்துரு, (7) பத்னீ, (8) மரணம், (9) குரு, (தகப்பன்) (10) கர்மம், (11) லாபம், (12) வியயம் (செலவு) என உதயலக்கினம் முதற்கொண்டு பாவகல்பனை செய்துகொண்டு அந்தந்தப் பாவத்தின் பலனைச் சொல்லவேண்டும். (எ—று) (155)

रवीन्दुशुक्रजीवज्ञा नृराशिषु यदा स्थिताः ।
मर्त्यचिन्ता ततः सौरिदृष्टे नष्टं कुजे तथा ।
कुजस्य कलहः सौरेस्तस्करं गरळं वदेत् ॥ १५६ ॥
रविदृष्टे तथायुक्ते चिन्तना देवभूपयोः ।
शुभचिन्ता गुरौ ज्ञेया विवाहो बुधशुक्रयोः ॥ १५७ ॥

(க—ரை) ஸூரியன், சந்திரன், சுக்கிரன், குரு, புதன், இவர்கள் மனித ராசியிலிருந்தால் மனிதனைப்பற்றிய சிந்தையென்றும், உதயராசி சனியினால் பார்க்கப்பட்டும், செவ்வாயின் ஸம்பந்தம் பெற்றுமிருந்தால் நஷ்டத்திரவியத்தைப் பற்றிய சிந்தை என்றும், ஷை ராசிக்கு செவ்வாயின் ஸம்பந்தம் மட்டுமிருந்தால் கலஹத்தைப் பற்றிய சிந்தை என்றும், சனியின் ஸம்பந்தம் மட்டுமிருந்தால் திருடன், விஷம் இவற்றைப்பற்றிய சிந்தை என்றும்; ஸூரியனுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் தேவதை அரசன் இவர்களைப்பற்றிய சிந்தை என்றும், குருவிருந்தாலும் பார்த்தலும் சுபத்தைப்பற்றிய சிந்தை என்றும், புதன் சுக்கிரன் இவர்களிருந்தாலும் பார்த்தாலும் கல்யாணத்தைப்பற்றிய சிந்தை என்றும் கண்டுகொள்ளவேண்டும். (எ—று) (157)

ஆறுவது ஆருடகாண்டம் முற்றிற்று.

ஏழாவது சத்திரகாண்டம்.

द्वितीये द्वादशे छत्रे सर्वं कार्यं विनश्यति।
गुरौ पश्यति युक्ते वा तत्र कार्यं शुभं वदेत् ॥ १५८ ॥
तृतीयैकादशे छत्रे सर्वं कार्यं शुभं वदेत्।
तस्मिन्पापयुते दृष्टे विषमं भवति ध्रुवम् ॥ १५९ ॥
तस्मिन्सौम्ययुते दृष्टे सर्वं कार्यं शुभं वदेत्।
मिश्रे मिश्रफलं ब्रूयाच्छास्त्रे ज्ञानप्रदीपके ॥ १६० ॥
पञ्चमे नवमे छत्रे सर्वसिद्धिर्भविष्यति।
तद्वच्छुभाशुभैर्दृष्टे मिश्रे मिश्रफलं भवेत् ॥ १६१ ॥
द्वितीये चाष्टमे षष्ठे द्वादशे छत्रसंयुते।
नष्टद्रव्यागमो नास्ति न व्याधिशमनं भवेत्।
न कार्यसिद्धिर्नद्वेषशान्तिर्गृहवशाद्भवेत् ॥ १६२ ॥

(க—ரை) சத்ரராசியானது ப்ரஸ்னலக்கினத்துக்கோ, ஆரூடலக்கினத்துக்கோ 2-வதாகவோ, 12-வதாகவோ வந்தால் எல்லாக்காரியமும் நாசமடைந்துவிடும். அந்தச் சத்திரராசியில் குருவிருந்தாலும் பார்த்தாலும் எல்லாக்காரியமும் சுபமாகவே இருக்குமென்று சொல்லவேண்டும். (158) சத்திரராசியானது முற்கூறிய ராசிகளுக்கு 3-வதாகவோ, 11-வதாகவோ வந்தால் எல்லாக்காரியமும் சுபமாகவே யிருக்குமென்று சொல்லவேண்டும். அதில் பாபனின் சேர்க்கையோ பார்வையோ இருந்தால் நிஸ்சயமாய் விபரீதபலனே யுண்டாகும். (159) அந்தச் சத்ரராசியானது சுபனுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் எல்லாக் காரியத்தையும் சுபமாகவே சொல்லவேண்டும். அந்தச் சத்ரராசிக்கு சுபன், அசுபன், இருவரின் ஸம்பந்தமிருந்தால் க்ஞானப்ரதீபகம் என்ற சாஸ்திரத்தில் சுபம், அசுபம், இரண்டும் கலந்த பலனே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. (160) சத்திரராசியானது 5-வதாகவோ 9-வதாகவோ இருந்தால் எல்லாக்காரியத்துக்கும் ஸித்தி ஏற்படும். அந்தச் சத்ரராசியானது சுபர் அசுபர் இவர்களுடன் தனித்தனியே கூடினுல் முறையே சுபம் அசுபம், இவையுண்டாகும். அந்தச் சத்ரராசியானது சுபர், அசுபர், இருவருடனும் கூடினுல் பலனையும் சுபாசுபங்கலந்ததாகவே யடைவான். (161) சத்ரராசியானது 2-வதாகவோ, 8-வதாகவோ, 6-வதாகவோ 12-வதாகவோ, ஆனுல் நஷ்டமான பொருளின் லாபம் ஏற்படாது. வியாதிக்கும் சாந்தியேற்படாது. கோறின காரியம் முடிவுபெறுது. பகை நிவிருத்தியாகாது. (எ—று) (162)

ஏழாவது சத்ரகாண்டம் முற்றிற்று.

எட்டாவது உதயகாண்டம்.

बृहस्पत्युदये श्रेयो धनं विजय आगमः।
द्वेषशान्तिस्सर्वकार्यसिद्धिरेव न संशयः ॥ १६३ ॥
सौम्योदये रणोद्योगी जित्वा तद्धनमाहरेत्।
पुनरेष्यति सिद्धिस्स्याचन्द्रसन्दर्शने तथा।
व्यवहारे च विजयश्छत्रे प्येवमुदाहृतम् ॥ १६४ ॥
चन्द्रोदयेऽर्थलाभश्चोपायेनागमनन्तथा।
चिन्तितार्थस्य लाभश्च छत्रारूढस्थितेऽपि च ॥ १६५ ॥
शुक्रोदयेऽर्थसिद्धिस्स्यात् स्त्रीलाभो व्याधिमोचनम्।
जयो यान्त्यरयस्स्नेहं छत्रेऽप्येवमुदाहृतम् ॥ १६६ ॥
उदयारूढछत्रेषु शन्यर्काङ्गारका यदि।
अर्थनाशं मनस्तापं मरणं व्याधिमादिशेत् ॥ १६७ ॥
एतेषु फणियुक्तेषु बन्धं चोरभयं गरम्।
मरणं चैव दैवज्ञो न सन्दिग्धो वदेत्सुधीः ॥ १६८ ॥
निधनारिधनस्थेषु पापेष्वशुभमादिशेत्।
एषु स्थानेषु केन्द्रेषु शुभास्स्युश्चेच्छुभं वदेत् ॥ १६९ ॥
तन्वादिभावः पापैस्तु युक्तो दृष्टो विनश्यति।
शुभैर्युक्ते च दृष्टे च तत्तद्भावाभिपोषणम् ॥ १७० ॥

(க—ரை) குரு உதயராசியிலிருந்தால் நன்மையும், பொருளும் ஜயமும், மேன்மேல்வரவும், பகைசாந்தமாகுதலும், எல்லாக்காரிய

மும் ஸித்திபெறுதலும் நிஶ்சயமாயுண்டாகும். (163) புதன் உதய ராசியிலிருந்தால் யுத்தத்தில் முயர்ச்சி செய்த மனிதன் சத்ருவை ஜயித்து அவனது பொருளைக் கொண்டுவருவான். உதயராசியைச் சந்திரன் பார்த்தால் கோறியகாரியத்தைச் செய்வதற்குச் சென்றவன் காரியத்தின் பலனுடன் திரும்பி வருவான். வ்யவஹாரத்தில் ஜயமுண்டாகும். சத்திர ராசியில் குரு புதன், சந்திரன், இவர்களிருப்பதற்கும் இப்பலனே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. (164) சந்திரன் உதயராசியிலிருந்தால் பலவித உபாயங்களால் பொருள்லாபமும் திரும்பிவருதலும், நினைத்த காரியத்தின் லாபமும், உண்டாகும். சந்திரன் சத்ரராசி, ஆரூடராசி இவைகளிலிருந்தாலும், இப்பலனே யுண்டாகும். (165) உதயராசியில் சுக்கிரனிருந்தால் பொருள் லாபமும், ஸ்திரீலாபமும், வியாதி நிவிருத்தியும், ஜயமும், சத்ருக்களுடன் ஸ்னேஹமும் உண்டாகும். சுக்கிரன் சத்ர ராசியிலிருந்தாலும் இப்பலனே கூறப்பட்டிருக்கிறது. (166) உதயம் ஆரூடம் சத்ரம் இவைகளில் சனி, ஸூரியன், செவ்வாய் இவர்களிருந்தால் பொருள் நாசம், மனஸ்தாபம் மரணம், வியாதி இவற்றை யுபதேசிக்கவேண்டும். (167) உதயம், ஆரூடம், சத்ரம், இவைகள் ராகுவுடன் கூடினால் கட்டுப்படுதல், திருடர்பயம், விஷம், மரணம், இவற்றை நிஶ்சயமாய் ஜ்யௌதிஷிகன் உபதேசிக்கவேண்டும். (168) 8, 6, 2, இவ்விடங்களில் பாபர்களிருந்தால் கெடுதலை யுபதேசிக்கவேண்டும். முற்கூறிய ஸ்தானங்களிலோ கேந்திரங்களிலோ சுபர்களிருந்தால் நன்மையை யுபதேசிக்கவேண்டும். (169) லக்கினம் முதலிய பாவங்கள் பாபர்களுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் அந்தப்பாவங்கள் அழிந்துவிடும். அவைகளே சுபர்களுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் அந்தந்தபாவத்திற்கு விருத்தியுண்டாகும். (எ—று) (170)

எட்டாவது உதயகாண்டம் முற்றிற்று.

ஒன்பதாவது நஷ்டகாண்டம்.

तुलोदये क्रियारूढे नष्टसिद्धिर्न संशयः ।
विपरीते न नष्टाप्तिर्वृषारूढेऽलिभोदये ।
नष्टसिद्धिर्महालाभो विपरीते विपर्ययः ॥ १७१ ॥

चापारूढे नष्टसिद्धिर्भविता मिथुनोदये ।
विपरीते न सिद्धिस्स्यात्कर्कारूढे मृगोदये ।
सिद्धिश्च विपरीते तु न सिद्ध्यति न संशयः ॥ १७२ ॥
सिंह्मोदये घटारूढे नष्टसिद्धिर्न संशयः ।
विपरीते न सिद्धिस्स्याज्झषारूढेऽङ्गनोदये ।
नष्टसिद्धिर्विपर्यासे दृष्टादृष्टे निरूपयेत् ॥ १७३ ॥

(க—ரை) துலாம் உதயராசியாகிமேஷம் ஆரூடராசியானால் நிஶ்சயமாய் நஷ்டமான பொருளின் லாபமுண்டாகும். இதற்கு மாறி இருந்தால் அதாவது:—மேஷம் உதயராசியாகவும், துலாம் ஆரூடராசியாகவு மிருந்தால் நஷ்டமானபொருளின் லாப முண்டாகமாட்டாது. விருஶ்சிகம் உதயமாகி விருஷபம் ஆரூடராசியாக வானால் நஷ்டமான பொருளின் லாபமும், பெரியலாபமு முண்டாகும். இதற்கு மாறி இருந்தால் அதாவது:— விருஷபம் உதயராசியாகவும் விருஶ்சிகம் ஆரூடராசியாகவு மிருந்தால் பலனும் மாறியே நடக்கும். (171) மிதுனம் உதயமாகி தனுஸ் ஆரூடராசியாகவானால் நஷ்டமானபொருளின் லாபமுண்டாகும். இதற்கு மாறி இருந்தால் அதாவது:— தனுஸ் உதயமாகவும் மிதுனம் ஆரூடராசியாகவு மானால் நஷ்டமான பொருளின் லாபமுண்டாகாது. மகரம் உதயமாகி கடகம் ஆரூடராசியானால் காரியஸித்தியுண்டாகும். இதற்குமாறி இருந்தால் அதாவது:—கடகம் உதயமாகவும், மகரம் ஆரூடராசியாகவு மிருந்தால் நிஶ்சயமாய் கார்யஸித்தி ஏற்படாது. (172) ஸிம்ஹம் உதயமாகி கும்பம் ஆரூடராசியானால் நஷ்டமானபொருளின் லாபம் நிஶ்சயமாயுண்டாகும். இதற்கு மாறிஇருந்தால் அதாவது: கும்பம் உதயமாகவும், ஸிம்ஹம் ஆரூடராசியாகவு மிருந்தால் நஷ்டமான பொருளின் லாபமுண்டாகாது. கன்னி உதயமாகி மீனம் ஆரூடராசியானால் நஷ்டமானபொருளின் லாபமுண்டாகும். இதற்கு மாறிஇருந்தால் அதாவது: மீனம் உதயமாகவும், கன்னி ஆரூடராசியாகவு மிருந்தால் நஷ்டமான பொருளின் லாபமுண்டாகாது.

स्थिरोदये स्थिरारूढे स्थिरच्छत्रं भवेद्यदि ।
न मृतिर्नच नष्टञ्च न रोगशमनं तथा ॥ १७४ ॥

द्विदेहभोदयारूढे छत्रे नष्टं न सिद्ध्यति ।
न व्याधिशमनं शत्रोस्सन्धिं विद्यान्नचस्थिराम् ॥१७५॥

चरराश्युदयारूढछत्रेषु स्त्र्यादिसिद्धयः ।
नष्टसिद्धिश्च भवति व्याधिशान्तिश्च जायते ॥ १७६ ॥

सर्वागमनकार्याणि भवन्त्येव न संशयः ।
ग्रहस्थितिबलेनैव सर्वं ब्रूयाच्छुभाशुभम् ।
चरोदये स्थितास्सौम्यास्सर्वकार्यार्थसाधकाः ॥ १७७ ॥

(க-ரை) உதயம், ஆரூடம், சத்திரம் இவைகள் ஸ்திரராசியாக வானால் மரணப்ரஸ்னமானால் மரணமுண்டாகாதென்றும், நஷ்டப் பிரஸ்னமானால் பொருள் நாசமடைபவில்லை என்றும், ரோகபிரஸ்ன மானால் ரோகசாந்தி யுண்டாகாதென்றும் சொல்லவேண்டும். (174) உதயம், ஆரூடம், சத்திரம் இவைகள் உபயராசியாகவானால் நஷ்ட ப்ரஸ்னத்தில் நஷ்டமானபொருள் கிடைக்காதென்றும்,வியாதி பிரஸ் னத்தில் வியாதி சாந்தமாகாதென்றும், ஸந்திப்ரச்னத்தில் சத்துரு வுடன் ஏற்பட்ட ராஜியானது ஸ்திரமாக இராதென்றும் சொல்ல வேண்டும். (175) உதயம் ஆரூடம், சத்திரம் இவையாக சரராசி யானால் ஸ்திரீமுதலியவற்றின் லாபமும், நஷ்டமான பொருளின் லாபமும், வியாதி சாந்தியும், வரவேண்டிய எல்லாக்கார்யங்களின் லாபமும் நிஸ்சயமாயுண்டாகும். அவ்வவற்றிலிருக்கும் கிரஹத்தின் வலுவை அனுஸரித்தே எல்லாவிதமான சுபாசுபபலனையும் சொல்ல வேண்டும். உதய லக்கினமாயான சரராசியில் சுபர்களிருந்தால் எல்லாவிதமான கார்யத்தின் பயனையும் கொடுப்பவர்களாக வாவர்.

आरूढछत्रलग्नेषु क्रूरेष्वस्तङ्गतेषु च ।
परेणापहृतं ब्रूयात्तत्सिद्ध्यति शुभेषु च ॥ १७८ ॥

नवमे पञ्चमेऽस्ते च नष्टलाभः शुभोदये ।
एषु पापे न नष्टाप्तिरुदयादित्रिकेषु च ॥ १७९ ॥

भ्रातृस्थानयुते पापे पञ्चमे वाशुभेक्षिते ।
नष्टद्रव्याणि केनापि दीयन्ते स्वयमेव च ॥ १८० ॥

K. Krishnamurthi Iyer 72 Pechiamman Road Madurai

प्रश्नकाले शुभेपापे धूमेन परिवेष्टिते ।
नष्टं नष्टे न भवति तत्तदाशासु तिष्ठति ॥ १८१ ॥

पृष्ठोदये शशाङ्के तु नष्टद्रव्यं न गच्छति ।
तद्राशिश्शनिदृष्टश्चेन्नष्टं व्योम्नि कुजे न तत् ॥ १८२ ॥

(க-ரை) ஆரூடம், சத்திரம், உதயம் என்ற ராசிகளில் பாபர் களோ, அஸ்தமனமடைந்த கிரஹமோ இருந்தால் பொருள் பிறரால் அபஹரிக்கப்பட்டதாகச் சொல்லவேண்டும். அவற்றில் சுபனிருந் தால் அப்பொருள் திரும்பவும் கிடைக்குமென்றும் சொல்லவேண் டும். (178) உதயாரூட சத்திரராசிகளுக்கு 9, 5, 7, மிடங்களில் சுபனிருந்தால் நஷ்டமானபொருள் திரும்பவும் கிடைக்கும். இவற் றில் பாபனிருந்தால் நஷ்டமானபொருள் கிடைக்கமாட்டாது. உத யம், ஆரூடம், சத்திரம் இவற்றில் சுபாசுபக் கிரஹங்களின் ஸ்திதி யைக் கொண்டும் நஷ்டத்திரவியத்தின் லாபாலாபங்களைச் சொல்ல வேண்டும். (179) 3 மிடத்தில் பாபனிருந்தாலும், 5 மிடத்தில் சுபனிருந்தாலும் நஷ்டமான பொருள்களை எவனாவொருவன் தானே கொடுத்துவிடுவான். (180) சுபனோ பாபனோ ப்ரஸ்னஸமயத்தில் தூமம் என்ற உபக்கிரஹத்துடன் கூடியிருந்தால் நஷ்டமானதாகக் கருதப்படும்பொருள் நஷ்டமாக வில்லை என்றும், அந்தந்தக்கிரஹத் துக்குரிய திசையில் (வீட்டிலேயே) இருப்பதாகவும் சொல்லவேண் டும். (181) ப்ரஸ்னகாலத்தில் பிருஷ்டோதயராசியில் சந்திரனிருந் தால் நஷ்டமான பொருள் வெளியேறவில்லை என்றும், அந்த பிருஷ் டோதயராசி சனியினால் பார்க்கப்பட்டால் நஷ்டமானபொருள் உயர மான விடத்திலிருப்பதாகவும், அந்தப் பிருஷ்டோதயராசி செவ்வா யுடன் ஸம்பந்தமடைந்தால் உயரமான இடத்திலில்லை என்றும் சொல்லவேண்டும். (எ-று) (182)

बृहस्पत्युदये स्वर्णं नष्टं नास्तीति निर्दिशेत् ।
शुक्रे चतुर्थगे रौप्यं नष्टं न भवति ध्रुवम् ॥ १८३ ॥

अस्ते कुजे शनौ कृष्णलोहं नष्टं न जायते ।
बुधोदये त्रपु प्रायो नष्टं नास्ति चतुर्थगे ॥ १८४ ॥

कांस्यं नष्टं न भवति पङ्कनाभौ च सप्तमे।
आरकूटं पञ्चमस्थे भानौ नष्टं न जायते ॥ १८५ ॥

(க—ரை) உதயலக்கினத்தில் குருவிருந்தால் நஷ்டமாகக் கருதப்படும் பொருள் ஸ்வர்ணமென்றும், ஆனால் அது உண்மையில் நஷ்டமாக வில்லையென்றும் குறிப்பிட வேண்டும். சுக்கிரன் 4மிடத்திலிருந்தால் நஷ்டமாகக் கருதப்படும் பொருள் வெள்ளியென்றும், ஆனால் அது உண்மையில் நஷ்டமாகவில்லை யென்றும் சொல்லவேண்டும். (183) செவ்வாயோ சனியோ 7 மிடத்திலிருந்தால் நஷ்டமாகக் கருதப்படும் பொருள் இரும்பென்றும், ஆனால் அது உண்மையில் நஷ்டமாகவில்லை யென்றும் சொல்லவேண்டும். புதன் உதயத்திலோ 4மிடத்திலோ இருந்தால் நஷ்டமாகக்கருதப்படுவது ஈயம் அல்லது துத்திநாகம் என்றும் ஆனால் அது உண்மையில் நஷ்டமாகவில்லை யென்றும் சொல்லவேண்டும். (184) சந்திரன் 7 மிடத்திலிருந்தால் நஷ்டமாகக் கருதப்படுவது வெண்கலமென்றும் ஆனால் அது உண்மையில் நஷ்டமாகவில்லை யென்றும் சொல்லவேண்டும். ஸூரியன் 5 மிடத்திலிருந்தால் நஷ்டமாகக் கருதப்படுவது பித்தளை யென்றும், ஆனால் அது உண்மையில் நஷ்டமாக வில்லை யென்றுஞ் சொல்லவேண்டும். (எ—று) (185)

दशमे पापसंयुक्ते न नष्टाश्च चतुष्पदाः।
चतुष्पदोदये राहौ स्थिते नष्टाश्चतुष्पदाः ॥ १८६ ॥
बन्धनस्था भवेयु स्ते तद्वद्द्विपदराशयः।
बहुपादुदये राहौ बहुपान्नष्टिमादिशेत्।
पक्षिराशौ यदा नष्टमेतेषां बन्धनं भवेत् ॥ १८७ ॥

(க—ரை) 10 மிடத்தில் பாபரின் சேர்க்கை யிருந்தால் நஷ்டமாகக்கருதப்படும் நாற்கால் பிராணிகள் உண்மையில் நஷ்டமாக வில்லையென்றும், நாற்கால் ராசி உதயமாகி அதில் ராகு இருந்தால் நாற்கால்பிராணி நஷ்டமாகிவிட்டதாகவும் சொல்லவேண்டும். (186) இரண்டு கால்ராசி உதயமாகி அதில் ராகுவிருந்தால் இரண்டுகால் பிராணிகள் பந்தனத்தில் (ஜயிலில்) இருக்குமென்றும், அனேகங் காலுள்ள ராசி உதயமாகி அதில் ராகுவிருந்தால் அனேகங் காலுள்ள

பிராணி நஷ்டமாகிவிட்டதாயும் சொல்லவேண்டும். பக்ஷிராசி உதயமாகி அதில் ராகுவிருந்தால் முற்கூறியவைகளுக்கு பந்தனத்தை (ஜயில், பவுண்டு முதலியவற்றை) யுபதேசிக்கவேண்டும். (187)

कर्कवृश्चिकयोर्लग्ने नष्टं सद्मनि कीर्तयेत्।
मृगमीनोदये नष्टं कपोतान्तरयोर्वदेत् ॥ १८८ ॥
कलशे भूमिजस्सौम्यो घटे रक्तघटे गुरुः।
शुक्रश्च करके लग्ने घटे भास्करनन्दनः ॥ १८९ ॥
आरनाळघटे भाण्डे चन्द्रो लवणभाण्डके।
नष्टद्रव्याश्रितं स्थानं सद्मनीति विनिर्दिशेत् ॥ १९० ॥

(க—ரை) கடகம், விருஶ்சிகம் இவை உதயலக்னமானால் நஷ்டமானபொருள் வீட்டிலிருப்பதாகவும், மகரம் மீனம் இவை உதயலக்கினமானால் கபோதத்திலோ (அதாவது புராமுதலியன தங்குமிடத்திலோ,) அல்லது வீட்டின்மத்தியிலோ இருப்பதாகவும் சொல்லவேண்டும். (188) (உதயலக்கினத்தில்) செவ்வாய் இருந்தால் நஷ்டமான பொருள் குடத்திலிருப்பதாகவும், புதனிருந்தாலும் குடத்திலேயே இருப்பதாகவும், குருவிருந்தால் சிவந்த (சுட்டமண்) குடத்திலிருப்பதாகவும், சுக்கிரனிருந்தால் ஜலபாத்திரத்தி லிருப்பதாகவும், சனியிருந்தால் கழிவுநீர் பானையிலிருப்பதாகவும், சந்திரனிருந்தால் உப்புச் சட்டியிலிருப்பதாகவும், இம்முறையில் வீட்டில் நஷ்டமானத் திரவியமிருக்கும் ஸ்தானத்தைக் குறிப்பிடவேண்டும்.

पुंराशिः पुङ्ग्रहैर्दृष्टः पुरुषस्तस्करो भवेत्।
स्त्रीराशिः स्त्रीग्रहैर्दृष्टः तस्करी च वधूर्भवेत् ॥ १९१ ॥
उदयादोजराशिस्थे पुङ्ग्रहे पुरुषो भवेत्।
समराश्युदये चोरी समस्थे स्त्रीग्रहे वधूः।
उदयारूढयोश्चैव बलाबलवशाद्वदेत् ॥ १९२ ॥

(க—ரை) புருஷராசி புருஷக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் திருடன் புருஷனாகவிருப்பான். அவ்விதமே ஸ்திரீராசி ஸ்திரீ கிரஹங்களால் பார்க்கப்பட்டால் திருடினவள் ஸ்திரீயாக விருப்பாள்.

(191) உதயராசியிலிருந்து ஒற்றைப்படையாயான ராசியில் புருஷக்கிரஹமிருந்தால் திருடன் புருஷனாக விருப்பான். இரட்டைப் படையாயான ராசி உதயமாகி அதனின்றும் இரட்டைப் பட்டராசியில் ஸ்திரீகிரஹமிருந்தால் திருடினவள் ஸ்திரீயாவாள். முற்கூறியவை யாவையும் உதயம், ஆரூடம், இவற்றினுடைய பலாபலத்தைக் கொண்டே சொல்லவேண்டும். (எ-று) (192)

कार्किनक्रपुरन्ध्रीषु नष्टद्रव्यं न सिध्यति।
तुलावृषभकुम्भेषु नष्टद्रव्यं च सिध्यति।
जीवं विना सर्वखगे सपत्नस्थे न सिध्यति॥ १९३॥
पश्यन्ति ये ग्रहाश्चन्द्रं चोरास्तत्तुल्यरूपिणः।
द्रव्याणि च तथैव स्युरिति ज्ञात्वा वदेत्सुधीः॥ १९४॥

(க-ரை) கடகம், மகரம், கன்னி, இவைகள் உதயமானால் நஷ்டமான திரவியம் கிடைக்கமாட்டாது. துலாம், விருஷபம், கும்பம், இவை உதயமானால் நஷ்டதிரவியம் கிடைத்துவிடும். குருவைத் தவிர மற்றெல்லாக்கிரஹங்களும் சத்ருராசியிலிருந்தால் நஷ்டமான திரவியம் கிடைக்கமாட்டாது. (193) சந்திரனை எந்தக் கிரஹங்கள் பார்க்கின்றனவோ அந்தக்கிரஹத்தின் உருவமுள்ளவர்களாக சோரர் முதலியோரிருப்பர். திருடப்பெற்ற பொருளும் சந்திரனைப் பார்க்குங் கிரஹத்திற்கு ஒத்ததாகவே இருக்கும் என்று சொல்லவேண்டும். (எ-று) (194)

यस्यामारूढभं याति तस्यां दिशि गतं वदेत्।
तत्तद्ग्रहांशुसङ्ख्यानि तत्तत्सङ्ख्यादिनादिकम्।
स्वभावकवशादेव मन्यदृष्टिवशाद्वदेत्॥ १९५॥
चन्द्रस्थर्क्षादुदयभं यावत्तावत्फलं वदेत्।
चरस्थिरोभयवशादेकद्वित्रिगुणो भवेत्॥ १९६॥

(க-ரை) ஆரூடராசி எந்தத் திசையை யடைந்ததாக வாகுமோ அந்தத்திசையை நஷ்டமான பொருளடைந்ததாகச் சொல்லவேண்டும். அந்தந்தக் கிரஹங்களுக்குரிய ரஶ்மிகளின் (கிரணங்களின்) எண்ணுக்கொப்பான எண்ணுள்ள நாட்களையோ, அல்லது அந்தந்தக் கிரஹங்களுக்குக் கூறிய நாள்மாதம்,வருஷம் முதலியவற்றையோ நஷ்டமானபொருள் கிடைக்குங் காலமாக உபதேசிக்கவேண்டும். இவ்விதமே அந்தந்த கிரஹங்களின் ஸ்வபாவத்தைக் கொண்டும் மற்றக் கிரஹங்களின் பார்வையைக்கொண்டும் பலன்களை ஊஹித்துக் கூறவேண்டும். (195) சந்திரனிருக்கும் ராசியிலிருந்து உதயராசி எத்துணை எண்ணுள்ளதாக வாகின்றதோ அவ்வளவெண்ணுள்ள நாட்களில் பலனின்லாபத்தை யுபதேசிக்கவேண்டும். சந்திரனிருக்கும் ராசி, உதயராசி, இவைகள் சரராசியானால் முற்கூறியதினத்தை ஒருமடங்காகவும், ஸ்திரராசியானால் இரண்டுமடங்காகவும், உபயராசியானால் மூன்றுமடங்காகவுங் கண்டுகொள்ளவேண்டும். (எ-று) (196)

ஒன்பதாவது நஷ்டகாண்டம் முற்றிற்று.

பத்தாவது லாபாலாபகாண்டம்.

सुवस्तुलाभं राज्यञ्च राष्ट्रलाभं स्त्रियः पतिम्।
उपायनं स्वकार्याणां लाभालाभौ वदेत्सुधीः॥ १९७॥
उदयादित्रिकान्खेटाः पश्यन्त्युच्चेश्वरा यदि।
चिन्तितार्थागमश्चैव स्त्रीलाभो राज्यसिद्धयः॥ १९८॥
तान्नीचद्वेषिणो खेटाः पश्यन्ति यदि नाशयेत्।
एवं विवाहकार्येच शुभाशुभनिरूपणम्॥ १९९॥

(க-ரை) உதயம், ஆரூடம், சத்ரம் இந்த ராசிகளை உச்சத்திலிருக்குங் கிரஹங்கள் பார்த்தால் நல்லவஸ்துக்களின் லாபத்தையும், ராஜ்யத்தையும், பெரியராஜ்யத்தின் லாபத்தையும், ஸ்திரீயுக்குக் கணவன் லாபத்தையும், வெகுமதியையும், தனது காரியங்களின் லாபாலாபத்தையும், நினைத்தபொருளின் வரவையும், ஸ்திரீலாபத்தையும், உத்யோகலாபத்தையும் புத்திமான் கூறவேண்டும். உதயாரூடசத்ரங்களை நீசகிரஹங்களோ சத்ருக்கிரஹங்களோ பார்த்தால் முற்கூறிய பலன்களை நாசஞ்செய்து விடுவார்கள். இவ்விதமே விவாஹகாரியத்திலும் நன்மை தீமைகளை யுபதேசிக்கவேண்டும். (197, 198, 199)

उदयारूढछत्राणि पश्यन्ति सुहृदो यदि ।
शत्रुर्मित्रत्वमायाति रिपुः पश्यति चेद्रिपुः ॥ २०० ॥
उदयञ्चन्द्रलग्नञ्च रिपुः पश्यति वा युतः ।
आयुर्हानी रिपुस्थानं गतश्चेद्बन्धनं भवेत् ।
गतो न यदि नष्टञ्चेद्बहिरेव गतं वदेत् ॥ २०१ ॥
बलवच्चन्द्रजीवाभ्यां केन्द्रेषु सहितेषु च ।
नष्टप्रश्ने न नष्टं स्यात् मृत्युप्रश्ने न नश्यति ।
पापदृष्टे युते केन्द्रे ब्रूयात्तस्य विपर्ययम् ॥ २०२ ॥
शत्रोरागमनं नास्ति चतुर्थे पापसंयुते ।
दशमैकादशे सौम्यग्रहाश्चेत्सर्वसिद्धयः ॥ २०३ ॥

(க—ரை) உதயாரூட சத்ரராசிகளை (அவற்றின் அதிபனின்) சுஹிருத் கிரஹங்கள் பார்த்தால் சத்துரு மித்ரனுவான். முற்கூறிய ஸ்தானங்களை சத்துருகிரஹம் பார்த்தால் மித்திரன் சத்துருவாவான். (200) உதலயக்கினத்தையோ சந்திரலக்கினத்தையோ சத்துருக் கிரஹம் பார்த்தாலும் அவற்றில் சத்துருக்கிரஹ மிருந்தாலும் ஆயுளுக்குக் குறைவுண்டாகும். சத்துருராசியை யடைந்திருந்தால் கட்டுப்படுத லுண்டாகும். (சந்திரன்) சத்துருஸ்தானத்தை யடையாமலிருந்தால் நஷ்டமான பொருள் வெளியேறிவிட்டதாகச் சொல்லவேண்டும். (201) பலம் பொருந்திய சந்திரன், குரு, இவர்கள் கேந்திரங்களிலிருந்தால் அதுஸமயம் நஷ்டத்தைப் பற்றிய கேள்வி நேர்ந்தால் பொருள் நஷ்டமாகவில்லை யென்றும், மரணத்தைப் பற்றிய ப்ரஸ்னம் நேர்ந்தால் மரணம் ஏற்படாதென்றும், சொல்லவேண்டும். கேந்திரத்தில் பாபரின் பார்வையோ சேர்க்கையோ இருந்தால் முற்கூறிய பலனுக்கு மாறுன பலனை யுபதேசிக்கவேண்டும். அதாவது:—நஷ்ட ப்ரஸ்னத்தில் நஷ்டமானது கிடைக்காதென்றும், மரணப்ரஸ்னத்தில் மரணம் நேருமென்றும் சொல்லவேண்டும். (202) 4 மிடத்தில் பாபரிருந்தால் சத்துரு வரமாட்டான். 10, 11 மிடத்தில் சுபரிருந்தால் எல்லாக் காரியங்களின் ஸித்தியுமுண்டாகும். (எ—று) (203)

उदयारूढछत्रेषु केन्द्रेषु भुजगो यदि ।
दूरस्थितो नचाऽऽयाति तत्र बद्धो भविष्यति ॥ २०४ ॥
विषादिपीडा प्रश्नेतु रोगिणो मरणं भवेत् ।
गमनं विद्यते प्रष्टुर्नास्तीति कथयेद्बुधः ।
प्रारब्धकार्यहानिस्स्याद्धनस्यापत्तिरीरिता ॥ २०५ ॥
चन्द्राद्दशमस्थिते शुक्रे जीवाद्दशमस्थिते रवौ ।
तल्लग्ने कार्यसिद्धिस्स्यात्पृच्छकानां न संशयः ॥ २०६ ॥
उदयात्सप्तमे व्योम्नि शुक्रश्चेत्स्त्रीसमागमः ।
धनागमश्च सौख्यञ्च चन्द्रेऽप्येवं प्रकीर्तितम् ॥ २०७ ॥
मित्रस्वात्युच्चमायान्ति यदा खेटा स्तदेष्टदाः ।
नीचारिबलयोगाभ्यां सर्वकार्यविनाशनम् ॥ २०८ ॥

(க—ரை) உதயம், ஆரூடம், சத்ரம் என்ற ராசிகளிலோ அவற்றின் கேந்திரங்களிலோ ராகு விருந்தால் தூரத்திலிருப்பவன் திரும்பி வரமாட்டான். அங்கு கட்டுப்பட்டிருத்தல் ஏற்படும். (204) அவனுக்கு முற்கூறிய நிமித்தத்திலேயே விஷாதிகளின் பாதையைப் பற்றிய ப்ரஸ்னம் நேர்ந்தால் ரோகிக்கு மரணமுண்டாகுமென்றும், கேட்பவன் ரோகியிருக்குமிடம் போய் சேருவானென்றும், போவதால் ப்ரயோஜனமெதுவும் உண்டாகாதென்றும், ஆரம்பிக்கப்பட்ட எல்லாக்காரியங்களுக்கும் அழிவே உண்டாகுமென்றும், பொருளுக்கு நாசமுண்டாகுமென்றும் சொல்லவேண்டும். (205) சுக்கிரன் சந்திரனுக்கு 10 மிடத்திலும், ஸூரியன் குருவுக்கு 10 மிடத்திலும் இருக்கும் பொழுது ப்ரஸ்னம்நேர்ந்தால் கேட்பவர்களின் எல்லாவிதமான காரியமும் நிஸ்சயமாய் ஸித்திக்கும். (206) உதயலக்கினத்திற்கு 7மிடத்திலோ, 10மிடத்திலோ, சுக்கிரனிருந்தால் ஸ்திரீயுடன்சேர்க்கையும், தனத்தின் வரவும், சௌக்கியமு முண்டாகும் சந்திரன் உதயத்திற்கு 7, 10மிடங்களிலிருந்தாலும் முற்கூறிய பலனே சொல்லப் பட்டிருக்கிறது. (207) எப்பொழுது கிரஹங்கள் மித்திரவீடு, சொந்தவீடு, அத்யுச்சபாகம், இவற்றை யடைகின்றனரோ அப்பொழுது அவர்கள் நற்பலனைத் தருபவர்களாகவும், நீசராசி,

சத்ருராசி, இவற்றை யடையுங்கால் எல்லாக்காரியங்களுக்கும் அழிவைத் தருபவர்களாகவு மாவர். (எ-று) (208)

பத்தாவது லாபாலாபகாண்டம் முற்றிற்று.

பதினொன்றாவது ரோககாண்டம்.

पूर्वशास्त्रानुसारेण व्याधिमृत्युविनिर्णयः ।
षष्ठो य उदयाद्व्याधिरष्टमो मृत्युसंज्ञकः ।
तत्र षष्ठे व्याधिचिन्ता निधने मृत्युचिन्तना ॥ २०९ ॥
तत्तद्ग्रहयुते दृष्टे व्याधिं मृत्युं वदेत्क्रमात् ।
पापनीचारयः खेटाः पश्यन्ति यदिसंयुताः ।
न व्याधिशमनं मृत्युं प्रविचार्य वदेत्सुधीः ॥ २१० ॥
एतयोश्चन्द्रभुजगौ तिष्ठतो यदि चोदये ।
गरादिना भवेद्व्याधिर्नशाम्यति न संशयः ।
पृष्ठोदयर्क्षे तच्छत्रे व्याधिमोक्षो न जायते ॥ २११ ॥

(க-ரை) முந்திய சாஸ்திரங்களை யனுஸரித்து வியாதி மரணம் இவற்றின் நிர்ணயம் செய்யப்படுகின்றது. உதயலக்கினத்தினின்றும் 6-வதுராசி வியாதிஎன்றும், 8-வதுராசி மரணம்என்றும் பெயருள்ளதாகவாகும். அவற்றுள் 6-வது ராசியைக்கொண்டு வியாதியையும், 8-வதுராசியைக்கொண்டு மரணத்தையும் ஆராயவேண்டும். (209) அந்த 6,8 மிடங்கள் அந்தந்தக் கிரஹங்களுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் பின்சொல்லப்படும் முறைப்படி வியாதி மரணம் இவற்றைச் சொல்லவேண்டும். அந்த 6, 8 மிடங்களில் பாபிகளோ, நீசக்கிரஹங்களோ, சத்துருக்கிரஹங்களோ இருந்தாலும், அல்லது அவர்கள் பார்த்தாலும் வியாதிசாந்தமாகாதென்றும், மரணமுண்டாகுமென்றும் புத்தியுள்ளவன் ஆராய்ந்து சொல்லவேண்டும். (210) 6, 8, மிடங்களிலோ, உலயலக்கினத்திலோ சந்திரன் ராஹு இவர்களிருந்தால் விஷம் (மருந்திடுதல்) முதலியவற்றால் வியாதியுண்டாகுமென்றும், ஆனால் அது நிஸ்சயமாய் சாந்தமாகாதென்றும், சொல்லவேண்டும். அந்த உதயராசியின் சத்திரராசி பிருஷ்டோதயராசியாக வானாலும் வியாதி சாந்தி ஏற்படாதென்றே சொல்லவேண்டும். (எ-று) (211)

व्याधिस्थानमिदं प्राहुर्मूर्ध्नि वक्त्रे भुजे करे ।
वक्षसि स्तनयोः कुक्षौ कक्षे मूले च मेहने ।
ऊरौ पादौ च मेषाद्या राशयः परिकीर्तिताः ॥ २१२ ॥

(க-ரை) மேஷம் தலையாகவும், விருஷபம் முகமாகவும், மிதுனம் புஜமாகவும், கடகம் கையாகவும், ஸிம்ஹம் மார்பாகவும், கன்னி இரண்டுஸ்தனங்களாகவும், துலாம் வயிறாகவும், விருஸ்சிகம் கக்ஷமாகவும், தனுஸ் மலத்வாரமாகவும், மகரம் ஆண் பெண் குறியாகவும், கும்பம் தொடையாகவும், மீனம் கால்களாகவும் கல்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தந்தராசிகள்மூலம் அந்தந்த ரோகஸ்தானத்தைக் காணவேண்டும். (எ-று) (212)

कुजो मूर्ध्नि मुखे शुक्रः कण्ठे राहुर्भुजे बुधः ।
चन्द्रो वक्षसि कुक्षौ च भानु र्नाभेरधो गुरुः ।
ऊरौ शनिरहिः पादे ग्रहाणां स्थानमीरितम् ॥ २१३ ॥

ஜீவனது சரீரத்தில் கிரஹங்களுக்குரியஸ்தானங்கள்.

செவாய்க்குத் தலையிலும், சுக்கிரனுக்கு முகத்திலும், ராஹுவுக்குக் கழுத்திலும், புதனுக்கு புஜத்திலும், சந்திரனுக்குமார்பிலும், ஸூரியனுக்கு வயிற்றிலும். குருவுக்கு தொப்பிளுக்குக் கீழ்பாகத்திலும், சனிக்குத் தொடையிலும், ராஹுவுக்கு பாதத்திலும் ஜீவனது சரீரத்தில் ஸ்தானம் கற்பித்துக் கூறப்பட்டிருக்கிறது.

एतेऽष्वेव स्थलेषु स्यान्नष्टमेतेषु राशिषु ।
पापयुक्तेषु दृष्टेषु नीचारिस्थेषु रुग्भवेत् ॥ २१४ ॥

மேஷாதிராசிகளுக்கும், கிரஹங்களுக்கும் பிராணியின் சரீராவயவஸ்திதி கூறியதின் பயன்—மேஷாதிராசிகள் ப்ரஸ்ன ஸமயத்தில் உதயமானால் நஷ்டமான பொருள் அந்த மேஷாதி ராசிகளுக்குக் கூறியஸ்தானங்களிலிருந்ததாகக் கூறவேண்டும். இவ்விதமே ரோகஸ்தானமாயான முற்கூறிய ராசிகளில் பாபரிருந்தாலும், பாபரால் பார்க்கப்பட்டாலும், நீசக்கிரஹம், சத்துருக்கிரஹம் இவை இருந்தாலும் அந்தந்த ராசி, கிரஹம் இவற்றுக்குக் கூறிய மனிதனுடைய அவயவத்தில் ரோகமுண்டாகும். (எ-று) (214)

पश्यन्ति ये ग्रहाश्चन्द्रं व्याधिस्थानावलोकिनम् ।
पूर्वोक्तमासवर्षाणि दिनानि च वदेद्बुधः ॥ २१५ ॥
षष्ठाष्टमे पापयुते रोगशान्तिर्न जायते ।
षष्ठाष्टमे शुभयुते तदा व्याधिविमोचनम् ॥ २१६ ॥
किञ्चिदत्र विशेषोऽस्ति रोगमृत्युस्थिते शुभाः ।
यावद्भिर्दिवसैर्यान्ति तावद्भिर्व्याधिमोचनम् ॥ २१७ ॥

ரோகநிவிருத்தி யுண்டாகும் காலம்.—வியாதிஸ்தானமாயான 6மிடத்தைப் பார்க்கின்ற சந்திரனை எந்தக்கிரஹங்கள் பார்க்கின்றனவோ அந்தக் கிரஹங்களுக்கு (முன் 84, 85-வது சுலோகத்தில்) கூறியமாஸம், வருஷம், நாள் முதலியவற்றை ரோகசாந்தியுண்டாகும் காலமாக உபதேசிக்கவேண்டும். (215) உதயத்துக்கு 6, 8மிடங்கள் பாபருடன் கூடியிருந்தால் ரோகசாந்தி ஏற்படாது. முற்கூறிய 6, 8மிடங்கள் சுபனுடன் கூடி இருந்தால் வியாதி நிவிருத்தியுண்டாகும். (216) ஆனால் இங்கு ஒருவிசேஷமிருக்கின்றது. அதாவது:—சுபர்கள் 6, 8 மிடங்களிலிருந்தால் அந்தக் கிரஹங்கள் அந்த 6, 8மிடங்களைக் கோசரரீதியாய்க் கடப்பதற்கு எவ்வளவு நாளாகுமோ அவ்வளவுநாட்கள் சென்றதும் வியாதி நிவிருத்தி ஏற்படும் என்பதாம். (எ—று) (217)

रोगस्थानाद्भवेऽस्ते वा पांपखेटयुते तथा ।
षष्ठाष्टमे चन्द्रयुते मरणं रोगिणां भवेत् ॥ २१८ ॥
रोगस्थानं कुजः पश्येच्छिरस्तोदो ज्वरो भवेत् ।
भृगुर्विषूचिस्सौम्यश्चेत्कक्षे ग्रन्थिर्भविष्यति ॥ २१९ ॥
रविश्चेदुदरव्याधिः शनिर्वातश्च पङ्गुता ।
राहुर्विषं शशी पश्येन्नेत्ररोगो भविष्यति ॥ २२० ॥
मूलव्याधिः गुरुः पश्येचन्द्रवत्स्याद् भृगुः परे ।
परिधाविन्द्रकोदण्डदृष्टे प्रश्ने युते सति ।
कुष्ठव्याधिमिति ब्रूयाद्धूमे भूताहतं वदेत् ।

सर्वेऽपस्मारमादित्ये पिशाचपरिपीडनम् ।
काशं श्वासं च शूलं च शनौ शीतज्वरः कुजे ॥ २२२ ॥
शुक्रे कोदण्डपरिधिदृष्टे प्रश्ने तु रोगिणाम् ।
न व्याधिशमनं किञ्चिद्यदि नेक्षन्ति चेच्छुभाः ।
रोगशान्तिर्भवेच्छीघ्रं मित्रस्वात्युच्चसंस्थिताः ॥ २२३ ॥

(க—ரை) ரோகஸ்தானத்தை அந்தந்தக்கிரஹங்கள் பார்ப்பதன் மூலம் காணவேண்டிய ரோகங்கள்.—ரோகஸ்தானமான 6 மிடத்துக்கு 11லோ, 7மிடத்திலோ ப்ரஶ்னஸமயத்தில் பாபனிருந்தாலும், 6, 8 மிடங்களில் சந்திரனிருந்தாலும் ரோகமுள்ளவர்களுக்கு மரணமுண்டாகும். (218) ரோகஸ்தானத்தைச் செவ்வாய் பார்த்தால் தலைவலி ஜ்வரம் இவை யுண்டாகும். சுக்கிரன் ரோகஸ்தானத்தைப் பார்த்தால் காலராவும், புதன் பார்த்தால் கக்ஷத்தில் கட்டிச் சிரங்குமுண்டாகும். (219) ஸூரியன் பார்த்தால் வயிற்றுவலியும், சனி பார்த்தால் வாயுரோகம், நொண்டியாகுதல் இவையும், ராஹு பார்த்தால் விஷஸம்பந்தமான வியாதியும், சந்திரன்பார்த்தால் நேத்திரத்தில் ரோகமுமுண்டாகும். குருபார்த்தால் மூலவியாதியும், சுக்கிரன் பார்த்தால் சந்திரனுக்குச் சொன்னபலனெனச்சிலரும் சொல்லுகின்கின்றனர். (220) ப்ரஶ்னகாலததில் பரிவேஷமென்ற கிரஹமானது இந்திரதனுவினுல் பார்க்கப்பட்டாலும், அல்லது இந்திரதனுஸூடன் கூடினுலும் குஷ்டவியாதியைச் சொல்லவேண்டும். தூமக்கிரஹமானது இந்திரதனுஸ்ஸின் பார்வை அல்லது சேர்க்கை இவற்றை யடைந்தால் பூதங்களின் பீடையைச் சொல்லவேண்டும். (221) எல்லாக்கிரஹங்களும் இந்திரதனுஸ்ஸின் பார்வை அல்லது சேர்க்கை இவற்றை யடைந்தால் அபஸ்மாரரோகத்தை (காக்கை வலிப்பு) யும், ஸூரியன் இந்திரதனுஸ்ஸின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றையடைந்தால் பிசாசத்தின் பீடையையும் சொல்லவேண்டும். சனி இந்திரதனுஸ்ஸின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றை யடைந்தால் ஶ்வாசகாச ரோகத்தையும், சூலரோகத்தையும், செவ்வாய் அவ்விதமானுல் குளிர் ஜ்வரத்தையும் சொல்லவேண்டும். (222) ப்ரஶ்னகாலத்தில் சுக்கிரன், இந்திரதனுஸ் பரிவேஷம் இந்தக் கிரஹங்களால் பார்க்கப்பட்டு சுபர்பார்வையும் பெரு

விடில் கொஞ்சமும் வியாதிசாந்தி யுண்டாகாது. ஆனல் சுபக்கிரஹங்கள் மித்திரன் வீடு சொந்தவீடு அத்யுச்சபாகம் இவற்றில் இருந்தால் ரோகசாந்தியானது வெகுசீக்கிரமாக உண்டாகி விடும். (223)

शिरोललाटभ्रूनेत्रनासिकाश्रुतयोऽधरः ।
चुबुकञ्चाङ्गुलिश्चैव कृत्तिकाद्या नवोडवः ॥ २२४ ॥
कण्ठवक्षःस्थलकुचोदरमध्यनितम्बकाः ।
शिश्नमण्डोऽधरः प्रोक्तश्चोत्तराद्या नवोडवः ॥ २२५ ॥
जानुजङ्घापादसन्धि पृष्ठान्तः स्फिचगुल्फकाः ।
पादाग्रतालिकाङ्गुल्यो विश्वर्क्षाद्या नवोडवः ॥ २२६ ॥
उदयर्क्षवशादेवं ज्ञात्वा तत्र गदं वदेत् ।
अर्कनक्षत्रकं ज्ञात्वा नष्टद्रव्यं तथा वदेत् ॥ २२७ ॥

(க—ரை) ப்ரஸ்னகாலத்தி லுதயமடைந்த நக்ஷத்திரத்தைக் கொண்டு இன்னின்னவிடத்தில் வியாதி யிருக்குமென்பது—கிருத்திகைமுதல் பூரம் முடியவுள்ள ஒன்பது நக்ஷத்திரங்கள் முறையே தலை, நெற்றி, புருவம், கண், மூக்கு, காது கீழுதடு மேல்வாய்கட்டை, விரல் என்ற இந்த அவயவங்களாகும். (224) உத்திரம் முதல் பூராடம் முடியவுள்ள ஒன்பது நக்ஷத்திரங்கள் முறையே கழுத்து, மார்பு, முலை, வயிறு, இடை, பின்தட்டு, ஆண்குறி, அண்டம், மேலுதடு இவைகளாகும். (225) உத்திராடம் முதல் பரணி முடியவுள்ள ஒன்பது நக்ஷத்திரங்கள் முறையே முழங்கால், ஜங்கை (முழங்காலுக்கும் பாதத்துக்கும்இடையிலுள்ள இடம்) பாதத்தின் ஸந்தி, (அதாவது பூட்டு) பின்தட்டின் முடிவிடம், துடையின் பின்பக்கம், குதிகால் பாதத்தின் நுனி, பாதத்திலுள்ள இரண்டு முடிச்சு, கால் விரல் இவைகளாகும். (226) ப்ரஸ்னகாலத்தி லுதயமான நக்ஷத்திரத்தைக்கொண்டு இவ்விதம் அவயவங்களை யறிந்து கொண்டு அந்தந்த விடங்களில் ரோகத்தைச் சொல்லவேண்டும். ஸூரியனிருக்கும் நக்ஷத்திரத்தை அறிந்து கொண்டு அவ்விதமே நஷ்டமான பொருளையும் சொல்லவேண்டும். (எ—று) (227)

त्रिकोणलग्नदशमे शुभाश्चेद्व्याधयो नहि ।
तेषु नीचारियुक्तेषु देहपीडा भविष्यति ॥ २२८ ॥

(க—ரை) த்ரிகோணம், லக்னம், 10மிடம் இவற்றில் சுபரிருந்தால் வியாதிகள் கிடையாது. அவ்விடங்களில் நீசக்கிரஹமோ, சத்துருக்கிரஹமோ இருந்தால் தேஹபீடை யுண்டாகும். (228)

பதினேன்ருவது ரோககாண்டம் முற்றிற்று.

பன்னிரண்டாவது மரணகாண்டம்.

मरणस्य विधानानि ज्ञातव्यानि मनीषिभिः ।
वृषस्य वृषभश्छत्रं सिंहश्छत्रं हरेर्भवेत् ॥ २२९ ॥
अलिनो वृश्चिकश्छत्रं कुम्भश्छत्रङ्घटस्य च ।
उच्चस्थानमिति ज्ञात्वाऽऽरूढे स्यादुदये यदि ।
मरणं न भवेत्तस्य रोगिणो नात्र संशयः ॥ २३० ॥

(க—ரை) மரணத்தைப்பற்றிய முறைகள் புத்திமான்களால் பின் வருமாறு காணத்தக்கன. அவையாவன—ஆரூடத்திலோ, அல்லது உதயத்திலோ விருஷபத்துக்கு விருஷபமும், ஸிம்ஹத்துக்கு ஸிம்ஹமும், (229) விருஶ்சிகத்துக்கு விருஶ்சிகமும், கும்பத்துக்குக் கும்பமும் சத்திரமாக வருமாயின் (அதாவது:—விருஷபம், ஸிம்ஹம், விருஶ்சிகம், கும்பம் இந்த ராசிகள் ஆரூடத்திலோ ப்ரஶ்னத்திலோ தமக்குத் தாமே சத்திரராசியாகவாகுமானல்) அவற்றை * உச்சஸ்தானமாக அறியவேண்டுமானதுபற்றி அந்தப்ரஶ்னாரூடங்களில் ரோகமுள்ளவனுக்கு மரணமுண்டாக மாட்டாதென நிஶ்சயமாய் அறிந்து பலன் சொல்லவேண்டும். இதில் ஸந்தேஹமில்லை.

तुलाया कार्मुकं छत्रं नीचं मृत्युर्विपर्यये ।
मेषस्य मिथुनं छत्रं नीचं मृत्युर्विपर्यये ॥ २३१ ॥
कन्या छत्रं कुलीरस्य नीचं मृत्युर्विपर्यये ।
नक्रस्य मीनच्छत्रं च नीचं मृत्युर्विपर्यये ।
नीचे न शाम्यति व्याधिर्मृत्यौ मरणमादिशेत् ॥ २३२ ॥

* ப்ரச்ன சாஸ்திரத்தில் தனக்குத்தானே சத்திரராசியாகவானல் அது உச்சம் எனப்படும்.

(க—ரை) தனுஸுக்குத் துலாம் சத்திரமாகுமானால் அது நீசஸ்தானமாகவாகும். இந்த நீசஸ்தானமானது ரோகிக்கு கண்டத்தைத் தருவதாகவாகும். அதாவது:—இதில் நிஶ்சயமாய் மரணத்தைச் சொல்லமுடியாதென்றும். இதற்கு மாறியிருந்தால் அதாவது துலாத்துக்குத் தனுஸ் சத்திரமானால் ரோகிக்கு மரணம் நிஶ்சயமெனச் சொல்லவேண்டும். அதுபோலவே மேஷத்துக்கு மிதுனம் சத்திரமானால் நீசஸ்தானமென்றும் (ரோகிக்குக் கண்டமென்றும்) மாறி யிருந்தால் அதாவது:—மிதுனத்துக்கு மேஷம் சத்திரமானால் மரணம் நிஶ்சயமென்றும், சொல்லவேண்டும். (231) கடகத்துக்குக் கன்னிச் சத்திரமானால் அது நீசஸ்தானமென்றும் (ரோகிக்குக் கண்டமென்றும்) மாறியிருந்தால் அதாவது:—கன்னிக்குக் கடகம் சத்திரமானால் மரணம் நிஶ்சயமென்றும், மகரத்துக்கு மீனம் சத்திரமானால் அது நீசஸ்தானமென்றும்(ரோகிக்குக் கண்டமென்றும்) மாறியிருந்தால் அதாவது:—மீனத்துக்கு மகரம் சத்திரமானால் ரோகிக்கு மரணம் நிஶ்சயமென்றும், சொல்லவேண்டும். நீசமாகச் சொன்ன விடத்தில் வியாதிசாங்கமாவதில்லை யென்றும், மிருத்யுவாகச் சொன்னவிடத்தில் மரணமேற்படுமென்றும் சொல்லவேண்டும்.

ग्रहेषु बलवान्सूर्यो यदि मृत्युस्तदाग्निना ।
मन्दःक्षुधा जलेनेन्दुः शीतेन कविरुच्यते ॥ २३३ ॥
बुधस्तुषारवाताभ्यां शस्त्रेणारो बली यदि ।
राहुर्विषेण जीवस्तु कुक्षिरोगेण नश्यति ॥ २३४ ॥

ஸூரியாதிகிரஹங்கள் பலம் பெறுவதன் மூலம் காணவேண்டிய மரணநிமித்தம்.—ப்ரஶ்னஸமயத்தில் கிரஹங்களுள் ஸூரியன் பலமுள்ளவனா யிருந்தால் அக்கினியினால் மரணமுண்டாகும். சனி பலம் பெற்றவனாயிருந்தால் பசியினாலும், சந்திரன் பலம்பெற்றிருந்தால் ஜலத்தினாலும், சுக்கிரன் பலம் பெற்றிருந்தால் குளுமையினாலும், (233) புதன் பலம் பெற்றிருந்தால் பனி, காற்று இவற்றாலும், செவ்வாய் பலம் பெற்றிருந்தால் ஆயுதத்தினாலும், ராஹு பலம் பெற்றிருந்தால் விஷத்தினாலும், குரு பலம் பெற்றிருந்தால் வயிற்றிலுண்டாகும் வியாதியினாலும் மரணத்தை யடைகிறான்.

विधोः षष्ठाष्टमे पापास्सप्तमे वा यदि स्थिताः ।
रोगमृत्युस्थलाभ्यां वा रोगिणां मरणं ध्रुवम् ॥ २३५ ॥

आरूढं मरणस्थानं तस्मादष्टमगश्शशी ।
पापाः पश्यन्तिचेन्मृत्युं रोगिणां कथयेत्सुधीः ॥ २३६ ॥

சந்திரனுக்கு 6,8மிடத்திலோ 7மிடத்திலோ பாபரிருப்பதைக் கொண்டும், முற்கூறிய ரோகஸ்தானம், மரணஸ்தானம் இவற்றைக் கொண்டும் ரோக முள்ளவர்களுக்கு மரண நிஶ்சயம் செய்யவேண்டும். முற்கூறியபடி ஆரூடமானது மரணஸ்தானமாகவாகி அதற்கு 8மிடத்தில் சந்திரனிருந்து அந்தச் சந்திரனைப் பாபர்பார்ப்பாராயின் ரோகிகளுக்கு மரணத்தைப் புத்திமான் சொல்லவேண்டும்.

तृतीये भानुसंयुक्ते दशमे पापसंयुते ।
दशाहान्मरणं ब्रूयाच्छुक्रजीवौ तृतीयगौ ।
सप्ताहान्मरणंब्रूयाद्रोगिणामतिबुद्धिमान् ॥ २३७ ॥
उदये चतुरस्रे वा पापास्त्वष्टदिनान्मृतिः ।
लग्नाद्द्वितीयगाः पापाश्चतुर्दशदिनान्मृतिः ॥ २३८ ॥
त्रिदिनान्मरणं किन्तु दशमे पापसंयुते ।
तस्मात्सप्तमगे पापे दशाहान्मरणं भवेत् ।
निधनारूढगे पापे दृष्टे वा मरणं भवेत् ।
तत्तद्ग्रहवशेनैव दिनमासादिनिर्णयः ॥ २३९ ॥

இத்துணை தினங்களுள் மரணமுண்டாகும் என்பது.—உதயலக்கினத்துக்கு மூன்றுமிடத்தில் ஸூரியனிருந்தாலும், 10மிடத்தில் பாபனிருந்தாலும், 10தினங்களுள் மரணமுண்டாகும். சுக்கிரன், குரு இவர்கள் மூன்றுமிடத்திலிருந்தால் ரோகிகளுக்கு 7நாட்களுள் மரணத்தை உபதேசிக்கவேண்டும். (237) உதயராசியிலோ, 4,8மிடங்களிலோ பாபரிருந்தால் 8தினங்களுள் மரணமுண்டாகும். லக்கினத்துக்கு 2மிடத்தில் பாபரிருந்தால் 14 நாட்களுள் மரணமுண்டாகும். (238) 10மிடத்தில் பாபரிருந்தால் 3 தினங்களுள் மரணமுண்டாகும். உதயலக்கினத்துக்கு 7மிடத்தில் பாபரிருந்தால் 10 தினங்களுள் மரணமுண்டாகும். அத்துடன் அந்தந்தக் கிரஹங்களுக்குச் சொல்லிய தினம் மாஸம் முதலியவற்றையும் கண்டு மரணகாலநிஶ்சயம் செய்யவேண்டும். (எ—று) (239)

குறிப்பு—இவ்விதம் மரணத்தைத் தெரிவிக்கும் ராசிஸ்திர ராசியானால் சொந்ததேசத்திலும், சரராசியானால் வேறுதேசத்திலும், உபயராசியானால் தன்தேசத்துக்கு அடுத்த தேசத்திலும் மரணமுண்டாகுமென வேறுநூல் கூறுகிறது.

பன்னிரண்டாவது மரணகாண்டம் முற்றிற்று.

பதிமூன்றாவது ஸ்வர்க்ககாண்டம்.

ग्रहोच्चे स्वर्गमायाति रिपौ मृगकुले भवः ।
नीचे नरकमायाति मित्रे मित्रकुले भवः ।
स्वक्षेत्रे स्वजने जन्म मृतानां कथयेद्बुधः ॥ २४० ॥

ப்ரஸ்னகாலத்தில் (லக்கினாதிபன்) உச்சம் பெற்றிருந்தால் மரித்தவன் ஸ்வர்க்கத்தை யடைவான். சத்துருஸ்தானம் பெற்றிருந்தால் மிருகஜாதியில் பிறவியுண்டாகும். நீசஸ்தானம் பெற்றிருந்தால் நரகத்தையடைவான். மித்திரனின் வீட்டிலிருந்தால் சிநேகிதனின் வீட்டில் பிறப்பான். ஸ்வக்ஷேத்திரம் பெற்றிருந்தால் தனது பந்துஜனங்களிடத்தில் பிறவியையடைவான். (எ—று) (240)

பதிமூன்றாவது ஸ்வர்க்ககாண்டம் முற்றிற்று.

பதினான்காவது போஜனகாண்டம்.

कथयामि विशेषेण भुक्तद्रव्यस्य निर्णयम् ।
पाकभाण्डानि भुक्तानि व्यञ्जनानि रसास्ततः ।
सहभोक्तॄन्भाजनानि तद्दातृस्नेहिनो रिपून् ॥ २४१ ॥

புஜிக்கப்பட்ட பொருள் இன்னதென்ற நிர்ணயத்தை நன்கு கூறுகிறேன். அதாவது:—சமையல் செய்த பாத்திரங்கள், உண்ணப்பட்ட பொருள்கள், காய்கறி முதலிய வ்யஞ்ஜனங்கள், சுவைகள், கூடசாப்பிடுகிறவர்கள், போஜனபாத்திரங்கள், அன்னதானம் செய்பவனின் சிநேஹிதர்கள், அவர்களின் சத்துருக்கள் ஆகியவற்றை விரிவாய் கூறுகிறேன். (எ—று) (241)

मेषराशौ भवेच्छागं वृषभे गव्यमुच्यते ।
धनुर्मिथुनसिंहेषु मत्स्यमांसादिभोजनम् ॥ २४२ ॥

नक्रालिकर्कमीनेषु परिपक्वफलादिकम् ।
तुलाकन्याघटेष्वेव शुद्धान्नमिति कीर्तयेत् ॥ २४३ ॥

மேஷாதிராசிகள் உதயமாவதன் மூலம் காணவேண்டிய போஜ்யவஸ்துக்கள்.—மேஷராசி ப்ரஸ்னகாலத்தில் உதயமானால் உணவாகவுள்ளது ஆடு என்றும், விருஷபமுதயமானால் பசுவின் மாம்ஸம் முதலியன வென்றும், தனுஸ் மிதுனம், ஸிம்ஹம் இவை உதயமானால் மீன்மாம்ஸம் முதலியன வென்றும், (242) மகரம், விருஸ்சிகம், கடகம், மீனம் இவை உதயமானால் நன்கு பழுத்த பழம் முதலியன வென்றும், துலாம், கன்னி, கும்பம் இவை உதயமானால் உணவாகவுள்ளது சம்பா நெல்லன்னமென்றும் கூறவேண்டும். (எ—று) (243)

भानौ तिक्तकटुक्षारमिश्रं भोजनमुच्यते ।
कृष्णान्नं क्षौद्रसंयुक्तं भूमिपुत्रस्य भोजनम् ॥ २४४ ॥
भर्जितान्युपदंशानि सौम्यस्याहुर्मनीषिणः ।
प्रायसान्नं घृतयुतं गुरोर्भोजनमीरितम् ॥ २४५ ॥
सतैलकोद्रवान्नं च भवेन्मन्दस्य भोजनम् ।
चणकं राहुकेत्वोश्च रसवर्ग उदाहृतः ॥ २४६ ॥

கிரஹங்கள் மூலமறிய வேண்டிய ரஸங்கள்.—ப்ரஸ்னகாலத்தில் உதயமான லக்கினத்தில் ஸூரியனிருந்தால் கசப்பு, உரப்பு, உப்பு இவைகலந்த போஜனத்தையும், செவ்வாயிருந்தால் தேன் கலந்த கறுநிறமான ஆஹாரத்தையும், (244) புதனிருந்தால் தாளிக்கப்பட்ட கரி, ஊருகாய் முதலியவற்றையும், குருவிருந்தால் நெய் கலந்தபாயஸான்னத்தையும், (245) சனியிருந்தால் எண்ணெயுடன் கூடின கேழ்வரகு அன்னத்தையும், ராஹு, கேது இவர்களிருந்தால் கடலைச்சுண்டல் முதலியவற்றையும் கண்டுகொள்ள வேண்டும். இவ்விதம் கிரஹங்களின் ரஸவர்க்கம் கூறப்பட்டிருக்கிறது. (246)

जीवस्य म षवटकं सूपमिश्रं तु भोजनम् ।
चन्द्रस्य कन्दप्रसवमत्स्याद्यैर्भोजनं भवेत् ।
क्षौद्रापूपपयोयुग्भिर्व्यंजनैर्भोजनं भृगोः ॥ २४७ ॥

குருவைக் கொண்டு உளுத்தம்வடை, பருப்புகலந்த ஆஹாரம் இவற்றையும், சந்திரனைக் கொண்டு கிழங்கு, புஷ்பம், மீன் முதலியன சேர்ந்த போஜனத்தையும், சுக்கிரனைக் கொண்டு தேன்வடை, (ஜிலேபி எனலாம்) பால் இவற்றுடன் கூடினவ்யஞ்ஜனங்களுடன் போஜனத்தையும், கண்டுகொள்ளவேண்டும். (எ–று) (247)

ओजराशौ शुभैर्दृष्टे सुरुच्या भोजनं भवेत् ।
समराशौ मन्दरुच्या भुंक्तेऽल्पं पापवीक्षिते ।
केचित्पश्यन्ति पापाश्चेत्पुराणान्नं क्षुधार्दितः ॥ २४८ ॥
अर्कारौ मांसभोक्तारावुशनश्चन्द्रभोगिनः ।
नवनीतघृतक्षीरदधिभिर्भोजनं भवेत् ॥ २४९ ॥
जलराशिषु पापेषु ससौम्येष्वीक्षितेषु च ।
सतैलभोजनं ब्रूयादितिज्ञात्वा विचक्षणः ॥ २५० ॥
पूर्वोक्तधातुवर्गेण भाजनानि विनिर्दिशेत् ।
मूलवर्गेण शाकादीनुपदंशान्वदेद्बुधः ॥ २५१ ॥
जीववर्गेण भोक्तृंश्च मत्स्यमाषादिकानपि ।
सर्वमालोक्य निश्चित्य प्रश्नान्नृणां बुधो वदेत् ॥ २५२ ॥

ஒத்தைப் படையான ராசி உதயமாகி அது சுபர்களால் பார்க்கப்பட்டால் நல்ல சுவையுடன் கூடின போஜனத்தையும், ஸமராசி உதயமாகி அது அசுபர்களால் பார்க்கப்பட்டால், ஸ்வல்பருசியுள்ள ஸ்வல்ப ஆஹாரத்தையும், உபதேசிக்கவேண்டும். சிலரோவெனில் பாபர்களின் பார்வை உதயலக்கினத்துக்கு இருந்தால் பழைய அன்னத்தை பசியினால் பீடிக்கப்பட்டு புஜிப்பான் என்கின்றனர். (248) ஸூரியன் செவ்வாய் இவர்கள் மூலம் மாம்ஸபோஜனத்தையும், சுக்கிரன், சந்திரன் ராஹு இவர்கள் மூலம் வெண்ணை, நெய், பால், தயிர் இவைகளுடன் கூடின போஜனத்தையும் சொல்லவேண்டும். (249) ஜலராசியில் பாபனிருந்து சுபனுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும், எண்ணையுடன் கூடின ஆஹாரத்தை உபதேசிக்கவேண்டும். இவ்விதம் புத்தியுள்ளவன் அறிந்துகொண்டு முன்கிரஹங்களுக்கும் ராசிகளுக்கும் சொல்லிய தாதுவர்க்கங்களைக் கொண்டு

சமையல்பாத்திரம் போஜனபாத்திரம் முதலியவற்றையும், மூலவர்க்கங்களைக் கொண்டு காய்கரி முதலிய உபதம்சங்களையும், ஜீவவர்க்கத்தினால் உண்பவர்களையும், மீன், உளுந்து இவற்றால் செய்த ஆஹாரங்கள் முதலியவற்றையும் சொல்லவேண்டும். ப்ரஶ்னபலன் சொல்லும் பொழுது எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து நிஶ்சயித்து புத்திமானாயுள்ளவன் பலன் சொல்லவேண்டும். (250–252)

பதினான்காவது போஜனகாண்டம் முற்றிற்று.

பதினைந்தாவது ஸ்வப்னகாண்டம்.

स्वप्ने यान् परिपश्यन्ति सर्वान्वक्ष्यामि सर्वथा ।
मेषोदये देवगृहं प्रासादाः संभवन्ति च ।
वृषोदये दिनाधीशे ज्ञातगेहस्य दर्शनम् ॥ २५३ ॥
वृश्चिकस्योदयेऽर्कारौ व्याकुलं मृतदर्शनम् ।
मिथुनस्योदये विप्रं तपस्विवचनानि च ॥ २५४ ॥
कुलीरस्योदये क्षेत्रे सस्यं दृष्ट्वा पुनर्गृहम् ।
तृणान्यादाय हस्ताभ्यां गच्छतीति विनिर्दिशेत् । २५५॥
सिंह्मोदये किरातांश्च महिषान् गिरिपद्धतिम् ।
कन्योदयेऽपि चारूढे मुण्डस्त्रीभ्यः पिबन्त्यपः ॥ २५६ ॥

மேஷாதிராசிகள் உதயமாவதன்மூலம் சொல்லவேண்டிய ஸ்வப்னத்தில் காணப்படும் பொருள்கள்—ஸ்வப்னத்தில் எந்தெந்தப்பொருள்களைக் காண்பரோ அவற்றை எல்லாமுறையினாலும் சொல்லுகிறேன். மேஷம் உதயராசியானால் கோயில் மாடிவைத்துக் கட்டினவீடுகள் இவற்றின்தர்சனம் ஸ்வப்னத்திலுண்டாகும். விருஷபம் உதயமாகி அதில் ஸூரியனிருந்தால் முன்னர் அறியப்பட்ட வீட்டையே மறுபடியும் ஸ்வப்னத்தில் பார்ப்பான். (253) ப்ரஶ்னகாலத்தில் விருஶ்சிகமுதயமாகி அதில் ஸூரியன் செவ்வாய் இவர்களிருந்தால் ஸ்வப்னத்தில் துக்கமும், இறந்துபோனமனிதனின் தர்சனமு முண்டாகும். மிதுனமுதயமானால் ப்ராம்ஹணன் தவம் செய்பவர்களின் உபதேசம் இவற்றை ஸ்வப்னத்தில் காண்

பான். (254) கடகமுதயமானால் வயலுக்குச் சென்று பயிர்களைப் பார்த்து விட்டு கைகளில் புல்லை எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவருவதாய்க் காண்பான். (255) ஸிம்ஹராசி உதயமானால் வேடர்களையும், எருமைகளையும், மலைப்பாதைகளையும் ஸ்வப்னத்தில் காண்பான். கன்னியாராசி உதயராசியாகவோ ஆரூடராசியாகவோ ஆனால் ஸ்வப்னத்தில் வஸ்திரமில்லாத ஸ்திரீயினால் விடப்பட்ட தீர்த்தத்தைக்குடிப்பார்கள். (256)

तुलोदये नृपं स्वर्णं वणिजं च स पश्यति ।
वृश्चिकस्योदये स्वप्ने पश्यत्यलिमृगादिकम् ।
वृषांश्चैव तथा दृष्ट्वा स्वप्ने ब्रूयादशङ्कितः ॥ २५७ ॥
उदये धनुषः पश्येत्पुष्पं पक्वफलं लभेत् ।
मृगोदये नदीं नारीं पुमान्स्वप्नेषु पश्यति ।
कुम्भोदये च मुकुरं मीने स्वर्णं जलाशयम् ॥ २५८ ॥

(க—ரை) துலாராசி உதயமானால் ஸ்வப்னத்தில் அரசனையும், ஸுவர்ணத்தையும், வியாபாரியையும் பார்ப்பான். விருச்சிகமுதயமானால் வண்டு மிருகம் முதலியவற்றைப் பார்ப்பான். காளைகளையும் ஸ்வப்னத்தில் கண்டு பயமடையாமல் அதட்டுவான். (257) தனுஸ் உதயமானால் புஷ்பத்தை ஸ்வப்னத்தில் பார்ப்பான். பழுத்த பழத்தை ஸ்வப்னத்தில் அடைவான். மகரமுதயமானால் ஆறு, ஸ்திரீ இவற்றை ஸ்வப்னத்தில் பார்ப்பான். கும்பராசி உதயமானால் கண்ணாடியையும், மீனராசி உதயமானால் ஸ்வர்ணம், ஏரி குளம் இவற்றையும் பார்ப்பான். (258)

तुर्ये तिष्ठति शुक्रे च राजतं वस्तु पश्यति ।
आदित्यश्चेन्मृतान् पुंसः पतनं शुष्कशाखिनाम् ।
चन्द्रश्चेत्प्लवनं सिन्धौ राहुर्मद्यं विषं भवेत् ॥ २५९ ॥
अत्र किञ्चिद्विशेषोऽस्ति च्छत्रारूढोदयेषु च ।
शुक्रस्स्थितश्चेत्सुश्वेतसौधं सौम्योऽमरान्वदेत् ॥ २६० ॥
चतुर्थस्थ वशात्स्वप्नं ब्रूयाद्ग्रहनिरीक्षणैः ।
अत्रानुक्तं तदखिलं ब्रूयात्पूर्वोक्तवर्त्मना ॥ २६१ ॥

(க—ரை) நான்காமிடத்தில் சுக்கிரனிருந்தால் வெள்ளி ஸாமானை ஸ்வப்னத்தில் காண்பான். அங்கு ஸூரியனிருந்தால் மரித்த புருஷர்களையும், உலர்ந்த மரத்தினின்றும் கீழ்விழுதலையும், பார்ப்பான். சந்திரனிருந்தால் ஸமுத்திரத்தில் நீஞ்ஜுதலையும், ராஹுவிருந்தால் கள்ளு, விஷம் இவற்றையும், ஸ்வப்னத்தில் பார்ப்பான். (259) இங்கு ஒருவிசேஷ மிருக்கின்றது. அதாவது:—சத்திரம், ஆரூடம், உதயம் என்றராசிகளில் சுக்கிரனிருந்தால் வெளுத்த மாடியையும், புதனிருந்தால் தேவர்களையும் பார்ப்பான் என்று சொல்லவேண்டும். (260) நான்காமிடத்திலிருக்கும் கிரஹங்கள் மூலமும், 4 மிடத்துக்கு ஏற்பட்டுள்ள கிரஹங்களின் பார்வைமூலமும் ஸ்வப்னத்தைச் சொல்லவேண்டும். இங்கு சொல்லப்படாத எந்த விஷயங்களுண்டோ அவையாவையும் எனக்கு முன் கூறப்பட்ட மார்க்கப்படி சொல்லவேண்டும். (எ—று) (261)

பதினைந்தாவது ஸ்வப்னகாண்டம் முற்றிற்று.

பதினாறாவது நிமித்தகாண்டம்.

अथोभयर्क्षे पथिको दुर्निमित्तो निवर्तते ।
चरोदये निमित्तानि त्वादायेयादितीरयेत् ।
स्थिरोदये निमित्तानां विरोधे न च गच्छति ॥ २६२ ॥

(க—ரை) யாத்திரையைப்பற்றி பிரச்னம் செய்யுங்கால் உபயராசி உதயமானால் கெட்ட நிமித்தத்துடன் திரும்பிவிடுவான் என்றும், சரராசி உதயமானால் நல்லசகுனங்களை யடைந்து யாத்திரை செய்வான் என்றும் சொல்லவேண்டும். ஸ்திரராசி உதயமானால் சகுனத்தடையால் யாத்திரை செய்யமாட்டான் என்று சொல்லவேண்டும். (262)

चन्द्रोदये दिवाभीतचाषपारावतादयः ।
शकुना भयदा दृष्टा इति ब्रूयाद्विचक्षणः ॥ २६३ ॥
गुरूदये तथाकाकभारद्वाजादिपक्षिणः ।
मन्दोदये कुलिङ्गस्स्याज्ज्ञोदये पिङ्गलो भवेत् ।
सूर्योदये च गरुडः सव्यासव्यवशाद्भवेत् ॥ २६४ ॥

(க—ரை) சந்திரன் உதயலக்கினத்திலிருந்தால் கோட்டான், காடை, புழு இவைரூபமான பயத்தைத்தரும் சகுனங்கள் பார்க்கப்பட்டன என புத்திமான் சொல்லவேண்டும். (263) குரு உதயத்திலிருந்தால் காக்கை பாரத்வாஜம் (ஒருவகைப்பக்ஷி வால்நீண்ட குருவி என்பார்கள்) முதலியபக்ஷிகளும், சனி உதயத்திலிருந்தால் குலிங்கம் என்ற பறவையும், புதன் ப்ரஸ்னலக்கினத்திலிருந்தால் பிங்களம் என்ற பறவையும், காணப்பட்டதாக வாகும். உதயராசியில் ஸூரியன் வலதுபக்கத்திலிருந்தால் கருடன் வலமாகக் காணப்பட்டதாகவும், இடதுபக்கத்திலிருந்தால் கருடன் இடதுபக்கத்தில் காணப்பட்டதாகவும் சொல்லவேண்டும். (எ—று) (264)

स्थिरराशौ स्थिरान्पश्येच्चरे तिर्यग्गतानिति ।
उभयेऽध्वनि वृत्तिस्स्याद्ग्रहस्थितिवशादमी ॥ २६५ ॥
राहोर्गोधा विधोश्चाषो ज्ञस्य छुच्छुन्दरी भवेत् ।
दधि शुक्रस्य जीवस्य क्षीरं सर्पिरुदाहृतम् ॥ २६६ ॥
भानोश्च श्वेतगरुडः शिवा भौमस्य कीर्तिता ।
शनेस्तस्करवह्नीच निमित्तं दृष्टमादिशेत् ॥ २६७ ॥
भौमस्य श्वानभल्लूकभारद्वाजशशा इति ।
उलूकस्तित्तिरिश्चैव कपोतश्च गुरोरमी ॥ २६८ ॥
शुक्रस्य पक्षिणो ब्रूयाद्गगने सरटस्तथा ।
जीवकाण्डप्रकारेण पक्षिणोऽन्यान्विचारयेत् ॥ २६९ ॥

(க—ரை) ஸ்திரராசி உதயமானால் ஸ்திரமான சகுனங்களையும், சரராசி உதயமானால் குறுக்காகச் செல்லுகின்ற பக்ஷி முதலியவற்றின் சகுனத்தையும், உபயராசி உதயமானால் மார்க்கத்தில் சகுனத்தையும்சொல்லவேண்டும். (265) உதயராசியில்கிரஹங்களிருப்பதன் மூலம் காணவேண்டிய சகுனங்கள் பின்வருமாறு:—உதயலக்கினத்தில் ராஹுவிருந்தால் உடும்பும், சந்திரனிருந்தால் காடையும், புதனிருந்தால் மூஞ்சூறும், சுக்கிரனிருந்தால் தயிரும், குருவிருந்தால் பால் நெய் இவையும், (266) சூரியனிருந்தால் வெள்ளை கருடனும், செவ்வாயிருந்தால் நரியும், சனியிருந்தால் திருடன் நெருப்பு

இவைகளும், ஆகிய இந்த சகுனம் காணப்பட்டதாகக் கூறவேண்டும். (267) செவ்வாய்க்கு நாய், கரடி, பாரத்வாஜம் என்ற பறவை, முயல் இவையும், குருவுக்கு, கோட்டான், தித்திரி என்ற பறவை, புறா இவையும், சுக்கிரனுக்கு பறக்கும் பறவைகள், அவ்விதமே ஓணான் இவையும் உரியதாகும். (அதாவது: செவ்வாய் முதலியகிரஹங்கள்மூலம் முற்கூறிய சகுனங்களைக் காணவேண்டும்) ஜீவகாண்டத்தில்கூறிய முறைப்படி மற்றபக்ஷிகளைக் கண்டுகொள்ளவேண்டும்.

பதினாறுவது நிமித்தகாண்டம் முற்றிற்று.

பதினேழாவது விவாஹகாண்டம்.

प्रश्ने वैवाहिके लग्ने कुजसूर्यबुधा यदि ।
वैधव्यं शीघ्रमायाति सा नारी नात्र संशयः ॥ २७० ॥
उदये मन्दगे नारी रिक्ता मृतसुता भवेत् ।
चन्द्रोदयेतु मरणं दंपत्योश्शीघ्रमेव च ।
सितजीवबुधा लग्ने यदि तौ दीर्घजीविनौ ॥ २७१ ॥

விவாஹப்ரஸ்ன லக்கினத்தில் ஸூரியாதி கிரஹங்களிருப்பதன் பலன்.—விவாஹத்தைப் பற்றிய ப்ரஸ்னலக்கினத்தில் செவ்வாய், ஸூரியன் புதன் இவர்களிருந்தால் அப்பொழுது கல்யாணம் செய்யப்படும் பெண் சீக்கிரமாய் வைதவ்யத்தை யடைவாள். (270) ப்ரஸ்னலக்கினத்தில் சனியிருந்தால் கல்யாணம் செய்யப்படும் பெண் ஏழையாகவும், மரித்தபிள்ளைகளை யுடையவளாகவுமிருப்பாள். சந்திரன் உதயத்திலிருந்தால் தம்பதிகளுக்கு சீக்கிரமாய் மரணமுண்டாகும். சுக்கிரன், குரு, புதன் இவர்கள் ப்ரஸ்னலக்கினத்திலிருந்தால் தம்பதிகள் நீண்டகாலம் ஜீவிப்பவர்களாவார்கள். (271)

ப்ரஸ்னலக்கினத்துக்கு 2மிடம் முதலியவற்றில் ஸூரியாதிகளிருப்பதன் பலன்.

द्वितीयस्थे निशानाथे बहुपुत्रवती भवेत् ।
स्थिता यद्यर्कमन्दारा मनःक्लेशो दरिद्रता ॥ २७२ ॥
द्वितीये राहुसंयुक्ते सा भार्या व्यभिचारिणी ।
शुभग्रहाः द्वितीयस्था माङ्गल्यबहुपुत्रदाः ॥ २७३ ॥

तृतीये जीवराहू चेत्सा वन्ध्या भवति ध्रुवम् ।
अन्ये तृतीयराशिस्था धनसौभाग्यवृद्धिदाः ॥ २७४ ॥
चतुर्थेऽर्कनिशाधीशौ तिष्ठतो यदि पापिनौ ।
शनौ स्तन्येन हीना स्याद्राहौ सापत्न्यवत्यसौ ।
बुध शुक्रारजीवाश्चेदल्प जीवनवत्यसौ ॥ २७५ ॥

(க—ரை) பிரஸ்னலக்கினத்துக்கு 2மிடத்தில் சந்திரனிருந்தால் கல்யாணம் செய்யப்படும் பெண் அநேகம் புத்திரனை யுடையவளாவாள். 2மிடத்தில் ஸூரியன், சனி, செவ்வாய் இவர்களிருந்தால் மனத்துக்குக் கிலேசமும், தாரித்திரியமும் உண்டாகும். (272) 2மிடத்தில் ராஹு இருந்தால் மனைவி வியபிசாரியாவாள். சுபக்கிரஹங்கள் 2மிடத்திலிருந்தால் மாங்கள்யம் சுபமான புத்திரன் இவர்களைத் தருபவராவர். (273) ப்ரஸ்னலக்கினத்துக்கு 3மிடத்தில் குரு, ராஹு இவர்களிருந்தால் அந்த மனைவி நிச்சயமாய் மலடியாவாள். மற்றவர்கள் 3மிடத்திலிருந்தால் தனம், ஸௌபாக்கியம் இவற்றின் விருத்தியை தருபவராவர். (274) 4மிடத்தில் பாபிகளான ஸூரியன், சந்திரன் இவர்களிருந்தாலும், சனி இருந்தாலும் மனைவி முலைப்பாலற்றவளாக வாவாள். ராஹு இருந்தால் சக்களத்தியுள்ளவளாவாள். 4 மிடத்தில் புதன், சுக்கிரன், செவ்வாய், குரு இவர்களிருந்தால் மனைவி அல்பாயுளுள்ளவளாவாள்.

पञ्चमे यदि सौरिस्स्याद्व्याधिना सा प्रपीडिता ।
शुक्रजीवबुधास्स्युश्चेद्बहुपुत्रवती वधूः ॥ २७६ ॥
चन्द्रादित्यौ तु वन्ध्या स्यादहिश्चेन्मरणं भवेत् ।
आरश्चेत्पुत्रनाशस्स्यात्प्रश्ने पाणिग्रहोचिते ॥ २७७ ॥
षष्ठे शशीचेद्विधवा बुधः कलहकारिणी ।
षष्ठेतिष्ठति शुक्रे च दीर्घमङ्गळहारिणी ।
अन्ये तिष्ठन्ति चेन्नारी सुखिनी वृद्धिमत्यपि ॥ २७८ ॥
सप्तमस्थे शनौ नारी तरसा विधवा भवेत् ।
व्याधिग्रस्ता भवेन्नारी सप्तमस्थे रवौ यदि ॥ २७९ ॥

सप्तमस्थे निशानाथे ज्वरपीडावती भवेत् ।
परेणापहृता याति कुजे तिष्ठति सप्तमे ॥ २८० ॥
बुधजीवौ समृद्धिस्स्याद्राहुश्चेद्विधवा भवेत् ।
शुक्रश्चेत्सप्तमे राशौ वधूर्मृत्युं प्रयास्यति ॥ २८१ ॥

(க—ரை) விவாஹ ப்ரஸ்னகாலத்தில் சனி 5மிடத்திலிருந்தால் கல்யாணம் செய்யப்படும் பெண் வியாதியினால் பீடிக்கப்படுவாள். சுக்கிரன், குரு, புதன் இவர்கள் 5மிடத்திலிருந்தால் அனேகம் புத்திரனுள்ளவளாவாள். (276) சந்திரன், ஸூரியன் இவர்கள் 5 மிடத்திலிருந்தால் மலடியாவாள். 5 மிடத்தில் ராஹுவிருந்தால் மரணமுண்டாகும். 5மிடத்தில் செவ்வாயிருந்தால் புத்திரனுக்கு நாசமுண்டாகும். (277) 6மிடத்தில் சந்திரனிருந்தால் கல்யாணம் செய்யப்படும் பெண் விதவையாவாள். புதன் 6 மிடத்திலிருந்தால் கலஹத்தைச் செய்பவளாவாள். 6 மிடத்தில் சுக்கிரனிருந்தால் தீர்க்க ஸுமங்கலியாவாள். சந்திரன், புதன் சுக்கிரன் இவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் 6 மிடத்திலிருந்தால் ஸ்திரீயானவள் ஸுகமுள்ளவளாகவும், மேன்மேலும் விருத்தியுள்ளவளாகவு மிருப்பாள். (278) சனி 7மிடத்திலிருந்தால் சீக்கிரத்தில் விதவையாவாள். 7மிடத்தில் ஸூரியனிருந்தால் ஸ்திரீயானவள் வியாதியினால் பீடிக்கப்பட்டவளாக வாவாள். (279) 7மிடத்தில் சந்திரனிருந்தால் ஸ்திரீயானவள் ஜ்வரபீடையுள்ளவளாவாள். 7மிடத்தில் செவ்வாயிருந்தால் பிறரால் அபஹரிக்கப்பட்டு அவனுடன் சென்றுவிடுவாள். (280) 7மிடத்தில் புதன், குரு இவர்களிருந்தால் ஐஸ்வர்யமுள்ளவளாவாள். ராஹுவிருந்தால் விதவையாவாள். சுக்கின் 7மிடத்திலிருந்தால் ஸ்திரீமரணத்தை யடைவாள். (281)

अष्टमस्था शुक्रगुरुभुजङ्गा नाशयन्ति च ।
शनि ज्ञौवृद्धिदौ चन्द्रो मारयत्येव भामिनीम् ।
आदित्यारौ पुनर्भूस्स्यात्प्रश्ने वैवाहिके वधोः ॥ २८२ ॥
नवमे यदि सौम्यस्स्याद्व्याधिहीना भवेद्वधूः ।
जीवचन्द्रौ यदि स्यातां बहुपुत्रवती भवेत् ।
अन्ये तिष्ठन्ति नवमे यदिवन्ध्या नसंशयः ॥ २८३ ॥

दशमे यदि चन्द्रस्स्याद्वन्ध्या भवति भामिनी ।
भार्गवो यदि वेश्यास्याद्विधवार्किकुजादयः ।
रिक्ता गुरुश्चेज्ज्ञादित्यौ यदि तस्याश्शुभंवदेत् ॥२८४॥
लाभस्थानगतास्सर्वे पुत्रसौभाग्यवृद्धिदाः ।
लग्नाद्द्वादशगश्चन्द्रो यदि स्यान्नाशमादिशेत् ।
शनिभौमौ यदि स्यातां सुरापानवती भवेत् ॥ २८५ ॥
बुधे पुत्रवती जीवे धनधान्यवती वधूः ।
सर्पादित्यौ स्थितौ वन्ध्या शुक्रे सुखवती भवेत् ॥२८६॥

(க—ரை) சுக்கிரன், குரு, ராஹு இவர்கள் ப்ரஸ்னலக்கினத்துக்கு 8மிடத்திலிருந்தால் நாசத்தைச் செய்வார்கள். சனி புதன் இவர்கள் 8மிடத்திலிருந்தால் விருத்தியைத் தருபவராவர். 8மிடத்தில் சந்திரனிருந்தால் ஸ்திரீயை நாசம் செய்வான். ஸூரியன் செவ்வாய் இவர்கள் ப்ரஸ்னலக்கினத்துக்கு 8மிடத்திலிருந்தால் ஸ்திரீ இருமுறை கல்யாணம் செய்யப்படுவாள் * (282) 9மிடத்தில் புதனிருந்தால் ஸ்திரீவியாதியற்றவளாவாள். குரு சந்திரன் இவர்கள் 9மிடத்திலிருந்தால் ஸ்திரீ அனேகம் புத்திரனுள்ளவளாவாள். மற்றக் கிரஹங்கள் (ஸூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி, ராஹு, கேது இவர்கள்) 9மிடத்திலிருந்தால் ஸ்திரீ மலடியாவாள். இதில் ஸந்தேஹமில்லை. (283) விவாஹ ப்ரஸ்னலக்கினத்துக்கு 10மிடத்தில் சந்திரனிருந்தால் ஸ்திரீ மலடியாவாள். சுக்கிரனிருந்தால் வேசியாவாள். சனி செவ்வாய் முதலியோரிருந்தால் விதவையாவாள். குரு 10மிடத்திலிருந்தால் ஸ்திரீ ஏழையாவாள். புதன் ஸூரியன் இவர்களிருந்தால் ஸ்திரீக்கு சுபத்தை உபதேசிக்கவேண்டும். (284) லாபஸ்தானத்தை யடைந்த எல்லாக்கிரஹங்களும் புத்திரன், ஸௌபாக்யம் இவற்றின் விருத்தியைத்தருபவராவர். ப்ரஸ்னலக்கினத்துக்கு 12மிடத்தில் சந்திரனிருந்தால் நாசத்தைச் சொல்லவேண்டும். சனி, செவ்வாய் இவர்கள் 12மிடத்திலிருந்தால் பார்யை

* முதலில் ஒருவனுக்கு கல்யாணம் செய்துதருவதாய் வாக்தானம் செய்யப்பட்டு, அவனுக்குயாதோ ஒருகாரணத்தினால் கொடுக்கப்படாமல் வேறு ஒருவனுக்குக் கொடுக்கப்படுவாள் என்றும் கொல்லாம்.

மத்யபானம் செய்பவளாவாள். (285) 12மிடத்தில் புதனிருந்தால் ஸ்திரீ பிள்ளையுள்ளவளாகவும், குருவிருந்தால் தனம், தான்யம் இவையுள்ளவளாகவுமிருப்பாள். ராஹு ஸூரியன் இவர்கள் 12லிருந்தால் மலடியாகவும் சுக்கிரனிருந்தால் சுகமுள்ளவளாகவுமிருப்பாள். (எ—று) (286)

பதினேழாவது விவாஹகாண்டம் முற்றிற்று.

பதினெட்டாவது காமகாண்டம்.

स्त्रीपुंसोरतिभोगांश्च स्नेहास्नेहौ पतिव्रतम् ।
शुद्धाशुद्धौ क्रमात्प्रोक्ता शास्त्रे ज्ञानप्रदीपके ॥ २८७ ॥
पृच्छकादुदयारूढकेन्द्रेषु भुजगो यदि ।
तेषां दुष्टास्त्रियस्साक्षाद्देवानामप्यसंशयः ॥ २८८ ॥
लग्नादेकादशेऽस्ते च तृतीये दशमे शशी ।
जीवदृष्टियुतस्तिष्ठेद्यदि भार्या पतिव्रता ॥ २८९ ॥
चन्द्रं पश्यन्ति पुंखेटास्तेन युक्ता भवन्ति चेत् ।
तद्भार्या दुर्जनीभूयादितिशास्त्रविदो विदुः ॥ २९० ॥

(க—ரை) ஞானப்ரதீபகம் என்றசாஸ்திரத்தில் ஸ்திரீபுருஷர்களுக்கு அதிகமான விஷயஸுகானுபவம், ஒருவருக்கொருவர் ஸ்நேஹம் ஸ்நேஹமின்மை, கற்பு, சுத்தி, அசுத்தி ஆகிய இவைகள் முறையே சொல்லப்பட்டிருக்கின்றன. (287) ப்ரஸ்னஸமயத்தில் உதயலக்கினம், ஆரூடலக்கினம் இவற்றின் கேந்திரங்களில் ராஹு இருந்தால் ப்ரஸ்னம் செய்பவர்கள் தேவர்களாயினும் அவர்களது ஸ்திரீகள் துஷ்டைகளாகவே இருப்பார்கள். இதில் ஸந்தேஹமில்லை. (288) லக்கினத்துக்கு 11, 7, 3, 10 இவற்றில் சந்திரன் இருந்து குருவினால் பார்க்கப்பட்டால் மனைவி பதிவிரதையாக விருப்பாள். (289) புருஷக்கிரஹங்கள் சந்திரனைப் பார்த்தாலும், சந்திரனுடன் புருஷக்கிரஹங்கள் கூடி இருந்தாலும், அவனுடைய பார்யை கெட்டவளாக விருப்பாள் எனச் சாஸ்திரமறிந்தவருபதேசிக்கின்றனர். (290)

सप्तमस्थद्विषत्खेटैर्दृष्टो नीचारिगश्शशी ।
बन्धुविद्वेषिणी लोके भ्रष्टा स्याच्च शुभे शुभा ॥ २९१ ॥
भानुजीवौ निशाधीशं पश्यन्तौ वा युतौ यदि ।
पतिव्रता भवेन्नारी रूपिणीति वदेद्बुधः ॥ २९२ ॥

शुक्रेण युक्तो दृष्टो वा भौमश्चेत्परगामिनी ।
बृहस्पतिर्बुधाराभ्यां युक्तश्चेत्कन्यकारतिः ॥ २९३ ॥
शुक्रवर्गयुते भौमे भौमवर्गयुते भृगौ ।
प्रष्टुस्स्याद्विधवा भार्या तस्या दोषो भविष्यति ॥ २९४ ॥

भानुवर्गयुते शुक्रे राजस्त्रीरतिभागिनी ।
जीववर्गयुते चन्द्रे स्नेहेन रतिभागिनी ॥ २९५ ॥
चन्द्रः स्त्रीवर्गयुक्तश्चेत् स्त्री स्वतन्त्रवती भवेत् ।
शनैश्चरेण युक्तश्चेदतीव व्यभिचारिणी ॥ २९६ ॥
पापवर्गयुते दृष्टे शुक्रे चेद्व्यभिचारिणी ।
अरिवर्गयुतश्चन्द्रो यद्यमित्रवधूरतिः ॥ २९७ ॥

(க—ரை) நீசஸ்தானத்தையோ, சத்துருஸ்தானத்தையோ அடைந்திருக்கின்ற சந்திரன் 7மிடத்திலிருக்கின்ற சத்துருக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் ஸ்திரீயானவள், பந்துக்களை த்வேஷிப்பவளாகவும், லோகாசாரத்தினின்றும் வழுவினவளாகவுமிருப்பாள். அந்தச்சந்திரனுக்கு சுபனுடைய பார்வையோ சேர்க்கையோ இருந்தால் அந்த ஸ்திரீ நந்நடத்தை யுள்ளவளாவாள். (291) ஸூரியன், குரு இவர்கள் சந்திரனைப் பார்த்தாலும், சந்திரனுடன் கூடினாலும், மனைவியானவள் பதிவிரதையாகவும், ரூபமுள்ளவளாகவு மிருப்பாள் எனச்சொல்லவேண்டும். (292) செவ்வாய் சுக்கிரனுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் ஸ்திரீ பிறருடன் சேருபவளாவாள். குரு, புதன் செவ்வாய் இவர்களுடன் கூடியிருந்தால்கன்னிகையுடன் சேர்க்கையுண்டாகும். (293) செவ்வாய் சுக்கிரனின் வர்க்கத்திலும், செவ்வாயின் வர்க்கத்தில் சுக்கிரனுமிருந்தால் ப்ரஶ்னம் செய்பவ

னின்மனைவி விதவையாவாள். அவளுக்கு தோஷமும் உண்டாகும். (294) சுக்கிரன் ப்ரஶ்னஸமயத்தில் ஸூரியனின் வர்க்கம் பெற்றிருந்தால் ராஜஸ்திரீயுக்கொத்த ஸம்போக ஸுகமுள்ளவளாவாள். சந்திரன் குருவின்வர்க்கம்பெற்றிருந்தால்ஸ்னேஹத்துடன்போகஸௌக்யமுள்ளவளாவாள். (295) சந்திரன் ஸ்திரீகிரஹவர்க்கம் பெற்றிருந்தால் ஸ்திரீயானவள் ஸ்வாதந்திரியம்பெற்றவளாவாள். சந்திரன் சனைஶ்சரனுடன் கூடினால் அதிகமாய் வியபிசாரம் செய்பவளாவாள். (296) சுக்கிரன் பாபனின் வர்க்கம்பெற்றோ பாபனால் பார்க்கப்பட்டோஇருந்தால் ஸ்திரீவியபிசாரம்செய்பவளாவாள். சந்திரன் பாபனின் வர்க்கம் பெற்றோ, பாபனால் பார்க்கப்பட்டோ இருந்தால் சத்துருஸ்திரீயின் போகமுண்டாகும். (297)

नीचवर्गयुतश्चन्द्रो नीचस्त्रीभोगकामुकः ।
मित्रवर्गयुतश्चन्द्रो मित्रवर्गवधूरतिः ॥ २९८ ॥
स्वक्षेत्रे यदि शीतांशुस्स्वभार्यायां रतिर्भवेत् ।
स्ववर्गयुक्तश्चन्द्रश्चेत्स्वोच्चवंशस्त्रिया रतिः ॥ २९९ ॥
उदासीनग्रहयुतो दृष्टो वा यदि चन्द्रमाः ।
उदासीनवधूभोग इतिचाहुर्मनीषिणः ॥ ३०० ॥
लग्ने च दशमेऽस्ते च पञ्चमे शनियुक् शशी ।
चोररूपेण कथयेद्रात्रौ स्वंप्रवधूरतिम् ॥ ३०१ ॥

(க—ரை) சந்திரன் ப்ரஶ்னஸமயத்தில் நீசவர்க்கம் பெற்றிருந்தால் தாழ்ந்தஸ்திரீயின் போகத்தில் ஆசைகொண்டவனாவான். சந்திரன் ப்ரஶ்னஸ்மயத்தில் மித்திரவர்க்கம் பெற்றிருந்தால் ஸ்நேஹித வர்க்கத்தைச் சேர்ந்த ஸ்திரீயின் போகமுண்டாகும். (298) சந்திரன் சொந்தவீட்டிலிருந்தால் தனதுபார்யையினிடம் போகமுண்டாகும். சந்திரன் தனது வர்க்கம் பெற்றிருந்தால் தனது வம்சத்தைக் காட்டிலும் சிறந்தவம்சத்தைச் சேர்ந்த ஸ்திரீயின் போகமுண்டாகும். (299) சந்திரன் ஸமனான கிரஹத்துடன் கூடியோ, பார்க்கப்பட்டோ இருந்தால் உதாஸீனையான ஸ்திரீயின் போகமுண்டாகுமென மேதாவிகள்கூறுகின்றனர். (300) 1, 10, 7, 5, இவ்விடங்

களில் சந்திரன் சனியுடன் கூடியிருந்தால் இரவில் சோரரூபத்துடன் தூங்கும் ஸ்திரீயுடன் சேர்க்கையுண்டாகும். (301)

ओजोदये तदधिपे त्वेकमैथुनमुच्यते।
समोदये तदधिपे समस्थे द्वे रती तथा॥ ३०२॥
लग्नेश्वरबलं ज्ञात्वा तेषां किरणसङ्ख्यया।
अथवा कथयेद्विद्वांस्तन्द्रष्टृग्रहसङ्ख्यया॥ ३०३॥
चन्द्रे भौमयुते दृष्टे कलहेन पृथक्शयः।
भृगौ सौरियुते दृष्टे स्वस्त्रीकलह उच्यते॥ ३०४॥
चतुर्थे च तृतीये च पञ्चमे सप्तमेऽपि वा।
चन्द्रे शुक्रयुते दृष्टे स्वस्त्रिया कलहो भवेत्॥ ३०५॥
तदीयवसनच्छेदं रचितं परिकीर्तयेत्।
सप्तमे पापसंयुक्ते दशमे पापसंयुते॥ ३०६॥
तृतीये बुधसंयुक्ते स्त्रीविवादात्स्थले शयः।
लग्ने चन्द्रयुते भौमे द्वितीयस्थे तदा निशि॥ ३०७॥

(க—ரை) ப்ரஸ்னஸமயத்தில் ஒத்தைப்பட்டராசி உதயமாகி அதனதிபனும் ஒத்தைப்பட்டராசியிலிருந்தால் ஒருதடவை போகத்தைச் சொல்லவேண்டும். இரட்டைப்பட்டராசி உதயமாகி அதனதிபனும் இரட்டைப்பட்டராசியிலிருந்தால் இரண்டுதடவை போகத்தைச் சொல்லவேண்டும். (302) லக்கினேஸ்வரனின் பலத்தை அறிந்து அவனதுகிரணத்தின் எண்ணையோ பார்க்கின்ற மற்றக்கிரஹங்களின் எண்ணையோ அனுஸரித்து போகத்தின் எண்ணைச் சொல்லவேண்டும். (303) சந்திரன் செவ்வாயுடன் கூடினாலும், செவ்வாயினால் பார்க்கப்பட்டாலும், கலஹத்தினால் தனியே படுக்கையேற்படும். சுக்கிரன் சனியுடன் கூடினாலும், சனியினால் பார்க்கப்பட்டாலும், தனதுஸ்திரீயுடன் கலஹமுண்டாகும். (304) 4, 3, 5, 7 இவற்றுள் யாதானுமோரிடத்தில் சந்திரன் சுக்கிரனுடன்கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் தனதுஸ்திரீயுடன் சண்டையுண்டாகும்.(305)7, 10 மிடங்களில் பாபனின் ஸம்பந்தமிருந்தால் ஸ்தி

ரீயின் வஸ்திரம் கிழிக்கப்பட்டதாகக் கூறவேண்டும். (306) 3மிடத்தில் புதனிருந்தால் ஸ்திரீயுடன் சண்டையினால் பூமியில் படுக்கை ஏற்படும். பிரஸ்னலக்கினத்தில் சந்திரனும், 2மிடத்தில் செவ்வாயுமிருந்தால் முற்கூறியபலனே இரவில் நடைபெறுமெனக் கண்டுகொள்ளவேண்டும். (307)

जागरं चोरभीत्यर्थं राशिनक्षत्रसंधिषु।
दृष्टश्चेद्विधवाभोगमकरोदिति कीर्तयेत्॥ ३०८॥
तत्संधौ शुक्रसौम्यौ चेत्तदा दास्याः पतिं वदेत्।
यत्र कुत्रापि शशिनं पापाः पश्यन्ति चेत्तदा।
पुंसि चासज्जयति वधूः शुभाश्चेत्पुरुषप्रिया॥ ३०९॥
सात्विकाश्चन्द्रजीवार्का राजसौ शुक्रसोमजौ।
तामसौ शनिभूपुत्रौ चैवं स्त्रीपुंगुणास्मृताः॥ ३१०॥

(க—ரை) ராசிஸந்தி, நக்ஷத்திரஸந்தி இவைகளில் ப்ரஸ்னம் நேர்ந்தால் திருடனின்பயம் காரணமாய் கண்விழித்தலையும், முற்கூறியவைகள் வேறுகிரஹத்தினால் பார்க்கப்பட்டால் விதவையின் போகத்தைச் செய்தான்என்றும் சொல்லவேண்டும். (308) அந்த ராசி நக்ஷத்திரஸந்தி இவைகளில் சுக்கிரன் புதன் இவர்களிருந்தால் அப்பொழுது வேசியைப் போகித்தவனெனச் சொல்லவேண்டும். ப்ரஸ்னஸமயத்தில் சந்திரன் எந்தவிடத்திலிருந்தாலும் அவனைப் பாபக்கிரஹங்கள் பார்த்தால்ஸ்திரீயானவள் பரபுருஷனிடம் ஆசையுள்ளவளாயிருப்பாளென்று சொல்லவேண்டும். சந்திரனை சுபர்கள்பார்த்தால் தனதுபுருஷனிடம் ஸ்நேஹமுள்ளவளாகவிருப்பாள் எனச் சொல்லவேண்டும். (309) சந்திரன், குரு, ஸூரியன் இவர்கள் ஸாத்விகர்களாவர். சுக்கிரன் புதன் இவர்கள் ராஜஸர்களாவர். சனி, செவ்வாய் இவர்கள் தாமஸர்களாவர். கிரஹங்களின் குணத்தை அனுஸரித்து ஸ்திரீ புருஷர்களின் குணங்களும் காணத்தக்கன என்று சொல்லப்பட்டிருக்கிறது. (310)

பதினெட்டாவது காமகாண்டம் முற்றிற்று.

பத்தொன்பதாவது புத்திரகாண்டம்.

पुत्रोत्पत्तिनिमित्तं यत्प्रश्ने स्त्रीभिः कृते सति ।
उदयारूढछत्रेषु राहुश्चेद्गर्भमादिशेत् ॥ ३११ ॥
लग्नाद्वा चन्द्रलग्नाद्वा त्रिकोणे सप्तमेऽपि वा ।
बृहस्पतौ स्थिते वापि यदि पश्यति गर्भिणी ॥ ३१२ ॥
शुभवर्गेण युक्तश्चेत्सुखप्रसवमादिशेत् ।
अरिनीचगृहस्थश्चेत्सुतारिष्टं भविष्यति ॥ ३१३ ॥
प्रश्नकाले तु परिधौ वृषे गर्भवती भवेत् ।
तदन्तस्थग्रहवशात्पुंस्त्रीभेदं वदेद्बुधः ।
यत्रतत्र स्थितश्चन्द्रः शुभैर्युक्तस्तु गर्भिणी ॥ ३१४ ॥
लग्नात्त्रिनवभूतेषु शुक्रादित्येन्दवः क्रमात् ।
तिष्ठन्ति चेन्न गर्भस्स्यादेकत्रैते स्थिता नच ॥ ३१५ ॥

(க—ரை) புத்திரனுண்டாவதைப்பற்றிய ப்ரஶ்னம் ஸ்திரீகளால் செய்யப்பட்டால் புத்திரோத்பத்திக்குரிய நிமித்தங்களைச் சொல்லுகிறேன். உதயலக்கினம், ஆரூடலக்கினம், சத்திரலக்கினம் இவற்றில் ராஹு இருந்தால் கர்ப்பமுண்டாகுமெனச் சொல்லவேண்டும். (311) உதயலக்கினத்துக்கோ சந்திரலக்கினத்துக்கோ 5, 9, மிடங்களிலோ, 7மிடத்திலோ குருஇருந்தாலும், ஷேஸ்தானங்களை குரு பார்த்தாலும் கர்ப்பத்தைச் சொல்லவேண்டும். (312) குரு சுபவர்க்கம் பெற்றிருந்தால் சுகமான பிரஸவத்தையும், குரு சத்துருவீடு, நீசவீடு இவற்றிலிருந்தால் புத்திரனுக்கு அரிஷ்டத்தையும் சொல்லவேண்டும். (313) பரிவேஷம் என்ற உபக்கிரஹம் ப்ரஶ்னகாலத்தில் விருஷபத்திலிருந்தால் ஸ்திரீ கர்ப்பமுள்ளவளாவாள். அந்த பரிவேஷத்துடனிருக்கும் மற்றக்கிரஹங்களைக்கொண்டு கர்ப்பத்தில் ஆண் பெண் என்ற பேதத்தைச் சொல்லவேண்டும். சந்திரன் எந்தவிடத்திலாவது ப்ரஶ்னஸமயத்தில் சுபனுடன் கூடியிருந்தால் ஸ்திரீ கர்ப்பிணியாவாள். (314) லக்கினத்தினின்றும் 3, 9, 5, இவ்விடங்களில் முறையே சுக்கிரன், ஸூரியன், சந்திரன் இவர்களிருந்தாலும், இவர்கள்சேர்ந்து இவற்றுள் யாதானும் ஓரிடத்திலிருந்தாலும், கர்ப்பமுண்டாகாது. (315)

स्त्रीपुंविवेके गर्भिण्याः पृष्टे वा तत्र कालके ।
परिवेषादिकैर्दृष्टे तस्या गर्भो विनश्यति ॥ ३१६ ॥
लग्नादोजस्थिते चन्द्रे पुत्रं सूते समे सुताम् ।
वशान्नक्षत्रराशीनां यथायोगं सुतं सुताम् ॥ ३१७ ॥
लग्नात्तृतीयनवमदशमैकादशेष्वपि ।
भानुः स्थितश्चेत्पुत्रस्स्यात्तथैव च शनैश्चरः ॥ ३१८ ॥
ओजस्थानगतास्सर्वे ग्रहाश्चेत्पुत्रसंभवः ।
समस्थानगतास्सर्वे यदि पुत्री न संशयः ॥ ३१९ ॥
आरूढात्सप्तमं राशिं यावच्छीतांशुरेष्यति ।
तावन्नक्षत्रसंख्याकैस्सूते सा दिवसैस्सुतम् ॥ ३२० ॥

(க—ரை) ஆண் பெண் விபாகமறிதல்—ஸ்திரீயின்கர்ப்பத்தில் வஸிப்பது ஆணு பெண்ணு என்ற ப்ரஶ்னம் நேர்ந்தால் அதற்குப்பதிலை பின்வருமாறுகூறவேண்டும். ப்ரஶ்னஸமயத்தில் லக்கினம் பரிவேஷம் முதலியவற்றால் பார்க்கப்பட்டால் ஸ்திரீயின் கர்ப்பம் நாசமடைந்துவிடும். (316) சந்திரன் ப்ரஶ்னலக்கினத்துக்கு ஒத்தைப்பட்ட ராசியிலிருந்தால் பிள்ளையைப்பெறுவாள். சந்திரன்இரட்டைப்பட்டராசியிலிருந்தால் பெண்ணைப்பெறுவாள். ப்ரஶ்னகாலத்திய நக்ஷத்திரம், ராசி இவற்றை அனுஸரித்து பிள்ளை, பெண் இவர்களைச் சொல்லவேண்டும். (317) ப்ரஶ்னலக்கினத்துக்கு 3, 9, 10, 11 இவ்விடங்களில் ஸூரியனிருந்தாலும் சனிஇருந்தாலும் பிள்ளை பிறக்கும். (318) ப்ரஶ்னஸமயத்தில் எல்லாக்கிரஹங்களும் ஒத்தைப்பட்டராசியிலிருந்தால் பிள்ளைபிறக்கும். எல்லாக்கிரஹங்களும் ஸமராசியிலிருந்தால் பெண்பிறக்கும் இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை. (319) ஆரூடராசியினின்றும் 7மிடத்தை சந்திரன் எவ்வளவு நாள்களில்செல்வானோ, ஆரூடம், 7மிடம் இவற்றுக்கு மத்தியிலுள்ள ராசிகளில் அடங்கிய நக்ஷத்திரங்களின் எண்ணுக்கொப்

பான எண்ணுள்ளநாட்களுள் ஸ்திரீ பிரஸவிப்பாள். (320)

பத்தொன்பதாவது புத்திரகாண்டம் முற்றிற்று.

இருபதாவது புத்திராரிஷ்டகாண்டம்.

सुतारिष्टमथो वक्ष्ये सद्यः प्रत्ययकारकम् ।
लग्नात्षष्ठस्थिते चन्द्रे तदस्ते पापसंयुते ॥ ३२१॥
मातुस्सुतस्य मरणं किन्तु पंचमषष्ठयोः
पापास्तिष्ठन्ति चेन्मातुर्मरणं भवति ध्रुवम् ॥ ३२२ ॥
द्वादशे चन्द्रसंयुक्ते पुत्रवामाक्षिनाशनम् ।
व्ययस्थे भास्करे नश्येत्पुत्रदक्षिणलोचनम् ॥ ३२३ ॥
पापाः पश्यन्ति भानुं चेत्पितुर्मरणमादिशेत् ।
चन्द्रेण युक्ते दृष्टे वा मातुर्मरणमादिशेत् ॥ ३२४ ॥

(க—ரை) அப்பொழுதே நம்பிக்கையைத்தருகின்ற புத்திரனுக்குண்டாகக்கூடிய அரிஷ்டங்களை இனி சொல்லுகிறேன். ப்ரஶ்ன லக்கினத்துக்கு 6மிடத்தில் சந்திரனிருந்து அவனுக்கு 7மிடத்தில் பாபனுமிருந்தால் தாய், பிள்ளை இருவருக்கும் மரணமுண்டாகும். ஆனால் 5, 6மிடங்களில் பாபனிருந்தால் தாய்க்கு நிஶ்சயமாய் மரணமுண்டாகும். (321–322) ப்ரஶ்னஸமயத்தில் 12மிடத்தில்சந்திரனிருந்தால் பிள்ளையின் இடதுகண்ணும், 12ல் ஸூரியனிருந்தால் பிள்ளையின் வலதுகண்ணும் நாசமடைந்துவிடும். (323) ஸூரியனை பாபர்கள் பார்த்தால் பிதாவுக்கு மரணத்தையும், ஸூரியன் சந்திரனுடன் கூடியோபார்க்கப்பட்டோ இருந்தால் மாதாவுக்குமரணத்தையும் சொல்லவேண்டும். (324)

चन्द्रादित्यौ गुरुः पश्येन्मातापित्रोर्गदो भवेत् ।
यदि लग्नगतो राहुर्जीवदृष्टिविवर्जितः ॥ ३२५ ॥
जातस्य मरणं शीघ्रं वदेदत्र न संशयः ।
द्वादशस्थावर्कचन्द्रौ नेत्रयुग्मं विनश्यति ॥ ३२६ ॥

षष्ठे वा पंचमे पापाः पश्यन्तीन्दुदिवाकरौ ।
मातापित्रोस्तु मरणं तयोर्मन्दः स्थितो यदि ।
भ्रातृनाशं तथा भौमो मातुलस्य मृतिं वदेत् ॥ ३२७ ॥
उदयादित्रिकानां तु कण्टकेषु शुभा यदि ।
मित्रस्वात्युच्चवर्गेषु सर्वारिष्टं विनश्यति ॥ ३२८ ॥
लग्नं च चन्द्रलग्नं च जीवो यदि न पश्यति ।
पापाः पश्यन्ति चेत्पुत्रो व्यभिचारेण जायते ॥ ३२९ ॥

(க—ரை) ப்ரஶ்னஸமயத்தில் குருவானவன் சந்திரன், ஸூரியன் இவர்களைப் பார்த்தால் தாய் தகப்பன் இருவருக்கும் வியாதியுண்டாகும். ராஹு லக்கினத்திலிருந்து குருவினால் பார்க்கப்படாமலிருந்தால் பிறந்த குழந்தைக்கு சீக்கிரமாகவே மரணத்தைச் சொல்லவேண்டும். இதில் ஸந்தேஹமில்லை. ஸூரியன் சந்திரன் இவர்கள் ப்ரஶ்னலக்கினத்துக்கு 12மிடத்திலிருந்தால் இரண்டு கண்ணும் அழிந்துவிடும். (325–326) ப்ரஶ்னலக்கினத்துக்கு 6மிடத்திலோ, 5மிடத்திலோ இருக்கின்ற சந்திரன் ஸூரியன் இவர்களை பாபக்கிரஹங்கள் பார்த்தால் தாய்தகப்பன் இருவருக்கும் மரணமுண்டாகும். 6, 5மிடங்களில் சனியிருந்தால் ஸஹோதரனுக்கு நாசத்தையும், முற்கூறியவிடங்களில் செவ்வாயிருந்தால் மாமனுக்கு மரணத்தையும் சொல்லவேண்டும். (327) உதயம், ஆரூடம், சத்திரம் என்ற மூன்றுலக்கினங்களின் கேந்திரங்களில் சுபரிருந்தாலும், அல்லது சுபர் மித்திரன்வீடு, சொந்தவீடு, அத்யுச்சபாகம், உச்சவர்க்கம் இவற்றிலிருந்தாலும் எல்லாவிதமான அரிஷ்டமும் நாசமடைந்துவிடும். (328) ப்ரஶ்ன லக்கினம், சந்திரலக்கினம் இவற்றை குரு பார்க்காமலிருந்து பாபர்கள் ஷலக்கினங்களை பார்ப்பாராயின் புத்திரன் வேறுபுருஷனுக்குப் பிறந்தவனாயாவான். (329)

இருபதாவது புத்திராரிஷ்டகாண்டம் முற்றிற்று.

இருபத்தொன்றாவது சுரிகாகாண்டம்.

छुरिकालक्षणं सम्यक्प्रवक्ष्यामि यथातथम् ।
राहुणा संयुते चन्द्रे शस्त्रभङ्गो भविष्यति ॥ ३३० ॥

नीचारिस्थाः प्रपश्यन्ति यदि शस्त्रस्य भञ्जनम् ।
शुभग्रहयुते चन्द्रे दृष्टे वास्ते शुभं भवेत् ॥ ३३१ ॥
पापग्रहसमेतेषु छत्रारूढोदयेषु च ।
प्रष्टा प्रश्नाश्रितः किन्तु तदस्त्रेण हतो भवेत् ॥ ३३२ ॥
अथवा कलहात्खड्गं परेणापहृतं भवेत् ।
तेषु स्थानेषु सौम्येषु खड्गस्तु शुभदो भवेत् ॥ ३३३ ॥
प्रदर्शितस्य खड्गस्य लग्नेऽस्ते पापसंयुते ।
खड्गस्यादौ व्रणं ब्रूयात्त्रिकोणे पापसंयुते ॥ ३३४ ॥
शस्त्रभङ्गस्ततो व्योम्नि चतुर्थे पापसंयुते ।
खड्गस्य भङ्गो मध्ये स्यादितिज्ञात्वा वदेत्सुधीः ।
एकादशे तृतीये च पापे शस्त्राग्रभञ्जनम् ॥ ३३५ ॥

(க—ரை) கத்தியின் லக்ஷணத்தை உள்ளபடி சொல்லப்போகிறேன். சந்திரன் ராஹுவுடன் கூடி இருந்தால் கத்தி ஒடிந்துவிடும். நீசராசி, சத்துருராசி இவற்றிலிருக்கின்ற கிரஹங்கள் சந்திரனைப் பார்த்தாலும் கத்தி ஒடிந்துவிடும். (330) சந்திரன் சுபனுடன் கூடியோ பார்க்கப்பட்டோ 7மிடத்திலிருந்தால் கத்திக்கு சுபமுண்டாகும். (331) ப்ரச்னஸமயத்தில் சத்திரம், ஆரூடம், உதயம் என்ற ராசிகள் பாபக்கிரஹத்துடன் கூடி இருந்தால் அதே கத்தியினால் ப்ரச்னம் செய்பவன் கொல்லப்பட்டவனாவான். அல்லது கலஹம் காரணமாய் கத்தியானது சத்துருவினால் அபஹ்ரிக்கப்பட்டதாகும். முற்கூறிய ஸ்தானங்களில் சுபர்களிருந்தால் கத்தி நன்மையைத் தருவதாகும். (332–333) காண்பிக்கப்பட்ட கத்தியின் லக்கினத்திலோ (தைவக்ஞனிடம் கத்தி எந்த லக்கினத்தில் காண்பிக்கப்பட்டதோ அதுவே கட்கலக்கினமாகும்.) அதற்கு 7மிடத்திலோ பாபனிருந்தால் கத்தியின் அடிபாகத்தில் முறிவு உண்டாகும். 5, 9மிடங்களில் பாபனிருந்தால கத்தியின் முறிவு உண்டாகும். 10 ,4மிடங்களில் பாபனிருந்தால் கத்தியின் மத்தியில் முறிவுண்டாகும் என்றறிந்து புத்திமான் கூறவேண்டும். 11, 3 இவ்விடங்களில் பாபனிருந்தால கத்தியின் நுணி முறிந்துவிடும். (334–335)

मित्रस्वात्युच्चनीचारिवर्गानधिगता ग्रहाः ।
तत्तद्वर्गस्थलायत्तं शस्त्रमित्यभिधीयते ॥ ३३६ ॥
सन्मुखो यदि खेटस्स्यात्तदीयं खड्गमुच्यते ।
तिर्यङ्मुखश्चेत्तच्छस्त्रमन्यदीयमितीरयेत् ॥ ३३७ ॥
अधोमुखश्चेत्सङ्ग्रामे च्युतमाहृतमुच्यते ।
तत्तच्चेष्टानुरूपेण स्वान्याहरणविस्मृतिः ॥ ३३८ ॥

(க—ரை) உதயாரூடசத்திரராசிகளை மித்திரவர்க்கம், தனதுவர்க்கம், அத்யுச்சவர்க்கம், சத்துருவர்க்கம், நீசவர்க்கம் இவற்றை அடைந்தகிரஹங்கள்பார்த்தால் கத்தியானது அந்தந்தவர்க்கத்துக்கு ஸமானமானவர்களுக்குச் சொந்தமானதாகவாகும். அதாவது:—உதயாரூடசத்திரராசிகளை மித்திரவர்க்கம் பெற்ற கிரஹம் பார்த்தால் கத்தி மித்திரனுடையதென்றும், ஸ்வவர்க்கம் பெற்ற கிரஹம் பார்த்தால் ப்ரச்னம் செய்பவனுக்குச் சொந்தமென்றும், அத்யச்சவர்க்கம் பெற்ற கிரஹம் பார்த்தால் தனக்கு மேலானவனுடையதென்றும், நீசவர்க்கமடைந்த கிரஹம் பார்த்தால் கத்திதனக்குத் தாழ்ந்தவனுடையதென்றும், சத்துருவர்க்கமடைந்த கிரஹம் பார்த்தால் கத்தி சத்துருவினுடையதென்றும், கண்டுகொள்ள வேண்டும். (336) (1) எதிர்நோக்குள்ள கிரஹம் உதயாரூடச்சத்திரராசிகளைப் பார்க்குமானால் கத்தி அவனுக்குச் சொந்தமாகும். முற்கூறியவிடங்களை (2) திர்யங்முகமான கிரஹம் பார்க்குமானால் கத்தி பிறருடையதென்றும், (3) முற்

1, 2, 3, எதிர்முகம், திர்யங்முகம், அதோமுகம் என்ற கிரஹங்கள் இன்னின்னவை என்பதை இதேபுஸ்தகம் 16-வதுபக்கம் 49, 50-வது சுலோகங்களின் உரையில் கண்டுகொள்க.

सन्मुखो यदि खड्गी स्यात् எனஅச்சிட்ட வேறுபுஸ்தகத்தில் பாடம் காணப்படினும் அதன்பொருள் பொருந்தாமையால் ஜினேந்திரமாலை 336-வது பாட்டுக்கிணங்க सन्मुखो यदिखेटः स्यात् என்ற பாடமும் सन्मुख என்றதற்கு எதிர்நோக்குள்ள கிரஹம் என்ற பொருளும் கொள்ளப்பட்டது. ஜினேந்திரமாலை 336-வது பாட்டு பின்வருமாறு—

தன்னேர் முகநோக்கிற்றனன் தாந்தற்பிறிந்து
பின்னை முகநோக்கிற் பிறரதா—மின்னே
கவிழ்ந்து நிலநோக்கிற் கையுடையான்சாகு
மவிழ்ந்து நிலன் சேர்வதறை

கூறியவிடங்களை அதோமுகமான கிரஹம் பார்க்குமானல் பிறரால் அடிக்கப்பட்டு யுத்தத்தில் கீழ்விழுந்த கத்தியென்றும் சொல்லவேண்டும். அந்தந்தக்கிரஹத்தின் சேஷ்டைக்குத் தக்கபடி தன்னுடையதாகவோ, பிறருடையதாகவோ உள்ள ஆயுதத்தின் மறதிமுதலியவற்றைக் காணவேண்டும். (337–338)

இருபத்தோன்ருவது சுரிகாகாண்டம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது சல்யகாண்டம்.

शल्यप्रश्ने तु तत्काले पादभा वसुनेत्रयुक् ।
अभ्यस्ता नृपसङ्ख्याभि.शेषाणां फलमुच्यते ॥ ३३९ ॥

(க—ரை) சல்லியத்தைப் பற்றிய ப்ரஶ்னத்தில் ப்ரஶ்னகாலத்திலுள்ள சரீரநிழலைக்காலால் அளந்து (அவச்சாயை பாதச்சாயை நீக்கி) அத்தொகையுடன் 28 கூட்டி அதை 12ஞல் பெருக்கிவந்த தொகையை 16ஞல் வகுத்து வரும்ஈவுபோக மீதம் வருவன எவையோ அவற்றுக்குப் பலன் சொல்லப்படுகின்றது. (எ—று) (339)

குறிப்பு—16ஞல் வகுத்துமீதம் வராவிடில் அந்த 16யும் வைத்துகொண்டுஅவற்றுக்கேபின் வருமாறுபலன் சொல்லவேண்டும்.

(அ—கை) சல்லியம் 16ஆகும். அவை இன்னின்னவை என்பதை இதனுல் சொல்லுகிருர்—

कपालास्थीष्टकालोष्टकाष्ठदेवविभूतयः ।
शवाङ्गारकधान्यानि धनपाषाणदर्दुराः ।
गोस्थिश्वास्थिपिशाचाश्च क्रमाच्छल्यानि षोडश ॥

(க—ரை) (1) மண்டையோடு, (2) எலும்பு, (3) செங்கல், (4) ஓடு, (5) விறகு, (6) ஈஶ்வராதிகளின்விக்கிரஹம், (7) சாம்பல் (8) பிணம், (9) கரி, (10) தான்யம், (11) தனம், (பொன், வெள்ளி முதலியன) (12) கருங்கல், (13) தேரை, (14) பசுவின் எலும்பு, (15) நாயின் எலும்பு, (16) பிசாசம் ஆகிய இந்த 16ம் சல்யங்களெனப்படும். (340)

एषु शल्येषु मण्डूकस्वर्णगोस्थि च धान्यकम् ।
दृष्टं चेदुत्तमं चान्ये सर्वे स्युरशुभावहाः ॥ ३४१ ॥

(க—ரை) இந்தச் சல்யம்16க்குள் தேரை, பொன் முதலிய தனம், பசுவின் எலும்பு ஆகிய இம்மூன்று சல்யங்களுள் ஒன்று ஏற்பட்டாலும், அவற்றில் தான்யம் என்ற சல்யம் காணப்படுமாயினும், அந்தச் சல்யம் உத்தமமானதாகும். மற்ற சல்யங்கள் காணப்படுமாயின் அவை அசுபங்களாகும். (341)

குறிப்பு—பாதத்தால் அளந்துவரும் சாயையில் 28கூட்டியும், அதை:–12ஞல்பெருக்கியும் வரும் மொத்தத்தொகையை 16ஞல் வகுத்து ஈவுபோகமீதமாகவரும் எண் எவ்வளவோ அந்தஎண்ணுக்கொப்பாக இந்த 16சல்யங்களுள் சல்யநிஶ்சயம் சொல்லவேண்டும். அதாவது அவச்சாயை பாதச்சாயை நீக்கி காலால் அளந்த நிழல் 16அடி இருந்ததாக வைத்துக்கொள்வோம். இந்த 16டன் 28கூட்டினுல் 44வரும். இதை 12ஞல் பெருக்கினுல் 528வரும். இதை16ஞல் வகுத்தால் ஈவு 33போக மீதம் 0 பூஜ்யம் வரும். இதில் முற்கூறிய படி சேஷமில்லாததால் 16சேர்த்துக்கொண்டு மண்டையோடு தொடங்கி கணக்கிட்டால் 16வதாக பிசாசசல்யம்வரும். ஆகவே அங்கு பிசாசம் என்ற சல்யமிருப்பதாக ஏற்படும். காலால் அளந்தது 13 அடி இருந்ததாகவைத்துக் கொண்டால் இத்துடன் 28 கூட்டினுல் 41வரும். இதை 12ஞல் பெருக்கினுல் 492வரும். இதை 16ஞல்வகுத்தால் ஈவு30போக 12மீதம்வரும். இந்தவிடத்தில் 1வதான மண்டையோடுமுதல் கணக்கிட்டால் 12வதாக கருங்கல்என்ற சல்யம்வரும். இதை அசுப சல்யமாகக் கருதவேண்டும். இவ்விதம் காண்பதில் 10 வதானதான்யம், 11 வதான தனம், 13 வதான தேரை, 14தான பசுவின் எலும்பு என்ற சல்யங்கள் காணப்பட்டால் இவற்றை உத்தமமென்றே கொள்ளவேண்டும்.

அஹிசக்கிரமும் சல்யமிருக்குமிடமும்.

अहिचक्रं प्रवक्ष्यामि यथासर्वज्ञभाषितम् ।
द्रव्यं शल्यं तथाशून्यं येन जानाति साधकः ॥ ३४२ ॥

ऊर्ध्वं रेखाष्टकं लेख्यं तिर्यक्पञ्च तथैव च।
अहिचक्रं भवेदेवमष्टाविंशतिकोष्ठकम् ॥ ३४३ ॥
अष्टाविंशतिकोष्ठेषु वह्निधिष्ण्यादिकं न्यसेत्।
यत्र भे तिष्ठति शशी तत्र शल्यमुदाहृतम् ॥ ३४४ ॥
उदयर्क्षादिकं न्यस्येदष्टाविंशतिकोष्ठके।
गणयेच्चन्द्रनक्षत्रं तत्र शल्यं प्रकीर्तितम् ॥ ३४५ ॥

(க—ரை) ஸர்வக்ஞர்களால் சொல்லியமுறைப்படி அஹிசக்கிரத்தைச் சொல்லுகிறேன். இதனல் திரவியம், சல்யம், சூன்யம் இவற்றை ஸாதகன் அறிந்துகொள்வான். (342) மேல் நோக்கி 8கோடுகளையும் குறுக்கில் 5கோடுகளையும் வரையவேண்டும். இவ்விதம் வரைந்தால் இகில் 28அரைகள் வரும். இதுவே அஹிசக்கிரமெனப்படும். (343) இந்த 28அரைகளிலும் கிருத்திகாநக்ஷத்திரம் தொடங்கி முறையே நக்ஷத்திரங்களை யடைக்கவேண்டும். அவற்றுள் எந்த நக்ஷத்திரத்தில் சந்திரனிருக்கிருனே அங்கு சல்லிய மிருப்பதாகக் காணவேண்டும். (344) ப்ரச்னகாலத்திலுதயமான நக்ஷத்திரத்தை ஆதியாகக்கொண்டு இருபத்தெட்டு அரைகளிலும் நக்ஷத்திரங்களை அடைத்து சந்திரனிருக்கும் நக்ஷத்திரம்வரை எண்ணி அதில் சல்யமிருப்பதாகவும் காணலாம். (345)

निधेर्निवर्तनैकस्थसंभ्रान्तो यत्र भूतले।
तत्र चक्रमिदं स्थाप्यं स्थानद्वारमुखस्थितम् ॥ ३४६ ॥

(க—ரை) நிதியைக் காண்பதில் அக்கரைக்கொண்டு எந்தவிடத்தில் சுத்துகிருனே அந்தவிடத்தில் இந்த அஹிசக்கிரத்தை அந்த ஸ்தானத்துக் நேராக விருக்கும்படி ஸ்தாபிக்கவேண்டும். (346)

तत्र पौष्णाश्वियाम्यर्क्षं कृत्तिकापितृभाग्यकम्।
उत्तराफल्गुनी लेख्यं पूर्वपङ्क्त्यां भसप्तकम् ॥ ३४७ ॥
अहिर्बुध्न्यादिपादर्क्षं शतभं ब्रह्मसार्पभम्।
पुष्यहस्तं समालेख्यं द्वितीयां पङ्क्तिमास्थितम् ॥ ३४८ ॥
विधिविष्णुधनिष्ठाख्यं सौम्यं रौद्रपुनर्वसू।
चित्राभं च तृतीयायां पङ्क्तौ धिष्ण्यस्य सप्तकम् ॥
विश्वर्क्षं तोयभं मूलं ज्येष्ठामैत्रविशाखके।
स्वाती पङ्क्तौ चतुर्थ्यां तु कृत्वा चक्रं विलेखयेत् ॥

एवं प्रजायते चक्रे प्रस्तारा पन्नगाकृतिः।
द्वारशाखे मखायाम्ये द्वारस्था कृत्तिका मता ॥ ३५१ ॥

(க—ரை) அந்தச் சக்கிரத்தின் அரைகளுள் கிழக்கிலுள்ள முதலாவது 7அரைகளில் (1) ரேவதீ (2) அஸ்வதீ (3) பரணீ (4) கிருத்திகை (5) மகம், (6) பூரம், (7) உத்திரம், ஆகிய இந்த 7நக்ஷத்திரங்களை முறையே அடைக்கவேண்டும். (347) அதற் கடுத்துள்ள 2வது 7அரைகளில் (1) உத்திரட்டாதி (2) பூரட்டாதி (3) சதயம் (4) ரோஹிணீ (5) ஆயில்யம் (6) புஷ்யம் (7) ஹஸ்தம் என்ற 7 நக்ஷத்திரங்களையும் முறையே அடைக்கவேண்டும். (348) அதற் கடுத்துள்ள 3வது 7அரைகளில் (1) அபிஜித் (2) திருவோணம் (3) அவிட்டம் (4) மிருகசீர்ஷம் (5) திருவாதிரை (6) புனர்வஸு (7) சித்திரை என்ற 7நக்ஷத்திரங்களையும் முறையே அடைக்கவேண்டும். (349) அதற்கடுத்துள்ள 4வது 7அரைகளில் (1) உத்திராடம் (2) பூராடம் (3) மூலம் (4) கேட்டை (5) அனுஷம் (6) விசாகம் (7) ஸ்வாதீ ஆகிய 7நக்ஷத்திரங்களையும் முறையே அடைக்கவேண்டும். (350) இவ்விதமமைத்தால் அஹிசக்கிரத்தின் அமைப்புண்டாகும். அவற்றுள் சக்கிரத்தின் துவாரத்தின் சாகையில் மகம் பரணீ இவைகளும், துவாரத்தில் கிருத்திகையும் வரும்.

அஹிசக்கிரம்

கிழக்கு.

		துவாரசாகை.	துவாரம்.	துவாரசாகை.		
ரேவதீ. சந்திர	அச்வதீ. சந்	பரணீ. சந்	கிருத்திகை. சந்	மகம். சந்	பூரம்.	உத்திரம்.
உத்திரட்டாதி.	பூரட்டாதி. சந்	சதயம்.	ரோஹிணீ.	ஆயில்யம். சந்	புஷ்யம். சந்	ஹஸ்தம்.
அபிஜித்.	திருவோணம். சந்	அவிட்டம். சந்	மிருகசீர்ஷம்.	திருவாதிரை. சந்தி	புனர்வஸு. சந்	சித்திரை.
உத்திராடம். சந்	பூராடம் சந்	மூலம்.	கேட்டை.	அனுஷம்.	விசாகம்.	ஸ்வாதீ

வடக்கு.

தெற்கு.

மேற்கு.

மேற்காட்டிய சக்கிரத்தில் "சந்திரன்" என்று எழுதப்பட்ட அறைகளிலுள்ள நக்ஷத்திரங்கள் 14ம் சந்திரனுடையதென்றும், மற்றவை ஸூரியனுடையதென்றும், கொள்ளவேண்டும்.

अश्वीशपूर्वाषाढादित्रिकं पञ्च चतुष्टयम् ।
रेवतीपूर्वाभाद्रेन्दोर्भान्यन्यानितु भास्वतः ॥ ३५२॥

(க—ரை) அசுவதியிலிருந்து 3நக்ஷத்திரங்களும், திருவாதிரையிலிருந்து 5நக்ஷத்திரங்களும், பூரட்டாதியிலிருந்து 4நக்ஷத்திரங்களும், ரேவதீ, பூரட்டாதி இந்த இரண்டு நக்ஷத்திரங்களும் சந்திரனுடைய நக்ஷத்திரங்களாகும். அதாவது:—அசுவதீ, பரணீ, கிருத்திகை, திருவாதிரை, புனர்ப்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், ரேவதி, பூரட்டாதி ஆகிய 14நக்ஷத்திரங்கள் சந்திரனது வீடுகளென்றும், மற்றரோஹிணீ, மிருகசீர்ஷம், பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், அபிஜித், உத்திரட்டாதி, சதயம் ஆகிய 14நக்ஷத்திரங்கள் ஸூரியனுடைய வீடுகளென்றும், ஏற்பட்டது. (352)

उदयादिगता नाड्यो भग्नाः षष्ट्याप्तशेषके ।
दिनेन्दुभुक्तयुक्तोऽसौ भवेत्तत्कालचन्द्रमाः ॥ ३५३ ॥
षष्टिघ्नं तं निशानाथं शरवेदाप्तकं पुनः ।
युगैश्शेषं भवेद्यत्तत्प्रागादिचक्रवर्गगम् ।
चन्द्रवत्साधयेत्सूर्यमृक्षस्थं चेष्टकालिकम् ॥ ३५४ ॥

(க—ரை) தத்கால சந்திரனேறியிருக்கும் நக்ஷத்திரத்தில் செல்லான நாழிகையை 27னால் பெருக்கி 60னால் வகுத்து வரும் ஈவு போக மீதத்தொகையை தத்காலசந்திரனிருக்கும் ராசியாதியாக எண்ணிக்கண்ட நக்ஷத்திரம் எதுவோ அதில் தத்கால சந்திரன் தினேந்து புக்தனாவான். தத்காலசந்திர புக்தநாழிகையை 60னால் பெருக்கி 25னால் வகுத்து வரும் ஈவை திரும்பவும் 4ல்வகுத்துவரும் ஈவுபோக மீதத்தொகையை கிழக்கு முதலாக எண்ணிக்காணும் திசையில் தத்காலசந்திரனிருப்பான் எனக்கண்டுகொள்ளவேண்டும்.

உதாஹரணம்—தத்காலநக்ஷத்திரம் மிருகசீர்ஷம் என்றும், அதில் சந்திரபுக்த நாழிகைகள் 52என்றும் வைத்துக் கொள்வோம். அந்த 52ஐ 27னால் பெருக்கினால் 1404வரும். இதை 60ல்வகுத்தால் ஈவு 23ம், பாக்கி 24வரும். இந்த24யும் மிருகசீர்ஷம்முதல் எண்ணிக் கண்டால் 24வதாக அஸ்வதீவரும். இந்த அஸ்வதியில் தினேந்து இருப்பதாகக் கொள்ளவேண்டும். (353) முன்போலவே சந்திர புக்தநாழிகை 52யும் 60னால் பெருக்கினால் 3120வரும். இதை 45னால் வகுத்தால் 69ஈவு வரும். இந்த ஈவை 4ல் வகுத்தால் மீதம் 1வரும். கிழக்குதிக்கு 1வதாகவாவதால் அதில் சந்திரனிருப்பதாகவேற்படும். இவ்விதமே ஸூரியனுக்கும் கணிதம் பண்ணிக்கொள்ளவும். (எ—று) (354)

முக்கியமான திருத்தம் — 112-வது பக்கம் 7-வது வரியில் "பூரட்டாதியிலிருந்து" என்றிருப்பதை "பூராடத்திலிருந்து" என்றும், அதேபக்கம் 27-வது வரியில் "25னால் வகுத்து" என்றிருப்பதை "45னால் வகுத்து" என்றும் திருத்திப்படிக்கவும்.

पश्चाद्विलोकयेत्तौ च स्वर्क्षे वाचान्यभे स्थितौ ।
चन्द्रर्क्षे यदार्केन्दू निधिस्तत्र न संशयः ।
भानुर्क्षे स्थितौ तौ चेत्तदा शल्यं च नान्यथा ॥३५५॥

(க—ரை) இதுவரை சொல்லியமுறைப்படி சந்திரன் ஸூரியன் இவர்களிருக்குமிடத்தை கணிதம்செய்து கண்டுகொண்டு அந்தச் சந்திரஸூரியர்கள் சொந்தவீட்டிலிருக்கின்றனரா? அல்லது வேறு வீட்டிலிருக்கின்றனராஎனக் காணவேண்டும். அவ்விதம் கண்டதில் சந்திரனதுவீட்டில் சந்திரன் ஸூரியன் இருவருமிருப்பாராயின் அந்தவிடத்தில் புதையலிருக்கும். இதில் ஸந்தேஹமில்லை. அந்த சந்திரன் ஸூரியன் இருவரும் ஸூரியனுடைய வீட்டிலிருந்தால் முற்கூறிய சல்யமங்கிருக்கும். இதற்குமாறிஇருந்தால் அவ்விடத்தில் சல்யமில்லை எனக் கண்டுகொள்ளவேண்டும். (எ—று) (355)

स्वस्वभद्वितयं ज्ञेयं नास्ति किञ्चिद्विपर्यये ।
स्थितं न लभते द्रव्यं चन्द्रे क्रूरग्रहान्विते ॥ ३५६ ॥

(க—ரை) இவ்விதம் அவ்விருவருள் ஒருவன் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பதையும், அல்லது இருவரும் தத்தமக்குரிய ஸ்வக்ஷேத்திர்

மான இரண்டிடத்திலிருப்பதையும் கண்டு புதையல் சல்யம் இவற்றைக் காணவேண்டும். இதற்குமாறி இருந்தால் ஒன்றுமில்லை எனக் காணவேண்டும். சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்திலிருப்பினும், க்ரூரக்கிரஹத்துடன்கூடி இருப்பானாயின் திரவியமிருந்தபோதிலும் அதை அடையமாட்டான் எனக் காணவேண்டும். (எ—று) (356)

पुष्टे चन्द्रे भवेन्मुद्रा क्षीणे चन्द्रेऽल्पको निधिः ।
ग्रहदृष्टिवशात्सोऽपि विज्ञेयो नवधा बुधैः ॥ ३५७ ॥
हेम तारं च ताम्रारं रत्नं कांस्यायसं त्रपु ।
नागं चन्द्रे विजानीयाद्भास्करादिग्रहेक्षिते ॥ ३५८ ॥

(க—ரை) சந்திரன் பூர்ணனாகவிருந்தால் நிதியில் முத்திரை இருக்குமென்றும், (முத்திரா என்ற பதத்துக்குச் சிலர் அதிகம் எனப் பொருள் கொள்ளுகின்றனர்) க்ஷீணனாக இருந்தால் புதையல் அற்பமாக இருக்குமென்றும், காணவேண்டும். சந்திரனுக்கு சூரியன் முதலிய கிரஹங்களின் வீக்ஷணமிருப்பதைக்கொண்டு அந்த நிதி (புதையல்) 9விதமாக இருப்பதாகக் காணவேண்டும். அதாவது:—கணிதப்படி கிடைத்த சந்திரனை ஸூரியன் பார்த்தால் நிதி ஸ்வர்ணமென்றும், ப்ரஶ்னகாலத்தியசந்திரன் கணிதப்படி கிடைத்த சந்திரனைப் பார்த்தால் வெள்ளி அல்லது முத்து என்றும், செவ்வாய் பார்த்தால் தாம்பிரமென்றும், புதன்பார்த்தால் பித்தளை என்றும், குருபார்த்தால் ரத்தினமென்றும், சுக்கிரன்பார்த்தால் வெண்கலமென்றும், சனிபார்த்தால் இரும்பென்றும், ராகுபார்த்தால் ஈயமென்றும், கேதுபார்த்தால் துத்திநாகம் என்றும் கண்டுகொள்ளவேண்டும்.

मिश्रैर्मिश्रं भवेद्द्रव्यं शून्यं दृष्टिविपर्यये ।
सर्वग्रहेक्षिते चन्द्रे निर्दिष्टोऽसौ महानिधिः ॥ ३५९ ॥

(க—ரை) சந்திரன் இரண்டு மூன்று கிரஹங்களால் பார்க்கப்பட்டால் நிதியும் அனேகம் பொருள்கலந்ததாகவே இருக்கும். எந்தக்கிரஹத்தினாலும் சந்திரன் பார்க்கப்படாவிடில் நிதி சூன்யமாக இருக்கும். எல்லாகிரஹத்தாலும் சந்திரன் பார்க்கப்பட்டால் பெரிய நிதி கிடைக்கும். (எ—று) (359)

शुभक्षेत्रगते चन्द्रे लाभस्स्यान्नात्र संशयः ।
पापक्षेत्रे न लाभोहि विज्ञेयः खगपारगैः ॥ ३६० ॥

(க—ரை) சந்திரன் சுபக்ஷேத்திரத்திலிருந்தால் முற்கூறிய திரவியலாபமுண்டாகும். இதில் ஸந்தேஹமில்லை. பாபக்ஷேத்திரத்திலிருந்தால் லாபமுண்டாகாதென சல்ய நிர்ணயமறிந்தவர் காணவேண்டும். (எ—று) (360)

हेम तारं च ताम्रारं पाषाणं मृण्मयायसम् ।
सूर्यादिगृहगे चन्द्रे द्रव्यभाण्डं प्रजायते ॥ ३६१ ॥

(க—ரை) சந்திரன் ஸூரியனுடைய வீட்டிலிருந்தால் திரவியமிருக்கும் பாத்திரமானது தங்கமயமானதென்றும், தனது வீட்டிலிருந்தால் முத்துப்பதித்த, அல்லது வெள்ளிமயமான பாத்திரமென்றும், செவ்வாயின் வீட்டிலிருந்தால் தாம்பிரபாத்திரமென்றும், புதனுடையவீட்டிலிருந்தால் பித்தளைபாத்திரமென்றும், குருவின் வீட்டிலிருந்தால் கற்பாத்திரமென்றும், சுக்கிரன்வீட்டிலிருந்தால் மண்சட்டி என்றும், சனியின் வீட்டிலிருந்தால் இரும்பாலான பாத்திரமென்றும், திரவ்யபாத்திரத்தைக் கண்டுகொள்ளவேண்டும். (361)

भुक्तराश्यंशमानेन भूमानं कोविदैः करैः ।
नीचे विघ्नं परं नीचे जलस्थोऽसौ भवेन्निधिः ॥ ३६२ ॥
स्वोच्चस्थ ऊर्ध्वगं द्रव्यं नवांशक क्रमेण च ।
परमोच्चे परे तुङ्गे भित्तिस्थं त्वृक्षसंक्रमे ॥ ३६३ ॥

(க—ரை) சந்திரனிருக்கும் ராசியின் அம்சக்கணக்கைக் கொண்டும், அங்குள்ள கிரஹாதிகளுடையகிரணங்களைக் கொண்டும் புதையலிருக்கும் பூமியின் அளவைக் காணவேண்டும். சந்திரன் நீசாம்சத்திலிருந்தால் விக்னமுண்டாகுமென்றும், பரமநீசாம்சத்திலிருந்தால் புதையல் ஜலத்திலிருக்கு மென்றும் காணவேண்டும். (362) சந்திரன் தனது உச்சராசியிலிருந்தாலும், அம்சத்தில் உச்சத்திலிருந்தாலும் புதையல் மேல்பாகத்திலேயே இருக்கும். சந்திரன் பரமோச்சத்திலிருந்தால் மிகவும் மேல்பாகத்திலும், ராசி சந்தியிலிருந்தால் சுவரிலுமிருக்கும். (எ—று) (363)

चन्द्रांशभुक्तमानेन द्रव्यसङ्ख्या विधीयते ।
तस्या दशगुणा वृद्धिः षड्वर्गेन्दुबलक्रमात् ॥ ३६४ ॥
ग्रहो मुखं ग्रहश्चैव क्षेत्रपालञ्च मातृकाः ।
दीपेशं भीषणं रुद्रं यक्षं नागं विदुःक्रमात् ॥ ३६५ ॥

ग्रहे होमः प्रकर्तव्यो मुखे नारायणो बलिः ।
क्षेत्रपाले सुरां मांसं मातृकायां महाबलिः ॥ ३६६ ॥
दीपेशे दीपजा पूजा भीषणे भीषणार्चनम् ।
रुद्रे च रुद्रजो जाप्यो यक्षे यक्षादिशान्तयः ॥ ३६७ ॥
नागे नागग्रहाः पूज्या गणनाथेन संयुताः ।
लक्ष्मीधरादितत्वानि सर्वकार्येषु पूजयेत् ॥ ३६८ ॥

(க—ரை) சந்திரனால் அடையப்பட்ட அம்சமானத்தைக் கொண்டு திரவ்யத்தின் எண் உபதேசிக்கப்படுகிறது. சந்திரனுக்கு ஷட்வர்க்கத்திலும் ஏற்படும் பலத்தையொட்டி அந்த எண்ணுக்குப் பத்துமடங்கு பெருக்கும் உண்டு. (364) அந்த 10மடங்கான எண்ணின் பெருக்கில் முதலாவதுக்குக் கிரஹம், 2-வதுக்கு முகம், 3-வதுக்கு கிரஹம், 4-வதுக்கு க்ஷேத்திரபாலன், 5-வதுக்கு மாதிருகைகள், 6-வதுக்கு தீபேசன், 7-வதுக்கு பீஷணம், 8-வதுக்கு ருத்திரன், 9-வதுக்கு யக்ஷன், 10-வதுக்கு நாகன் என முறையே எண்ணின் பெருக்கின் பெயரைக் காணவேண்டும். (365) முதலாவது கிரஹம் என்றவிருத்தி வருமாயின் அப்பொழுது ஹோமம் செய்யவேண்டும். 2-வது முகம் என்ற விருத்தியில் நாராயண பலியைப் போடவேண்டும். 3-வது கிரஹம் என்ற விருத்தியிலும் ஹோமமேதான் செய்யவேண்டும். 4-வது க்ஷேத்திரபாலன் என்ற விருத்தியில் கள்ளையும் மாம்ஸத்தையும் கொடுக்கவேண்டும். 5-வது மாதிருகை என்ற விருத்தியில் பெரியபலியைப போடவேண்டும். (366) 6-வது தீபேசன் என்ற பெருக்கில் தீபபூஜையைச் செய்யவேண்டும். 7-வது பீஷணம் என்ற விருத்தியில் பயங்கரதேவதையைப் பூஜிக்கவேண்டும் 8-வது ருத்திரமென்ற பெருக்கில் ருத்திரமந்திர ஜபத்தைச் செய்யவேண்டும். 9-வது யக்ஷன் என்ற விருத்தியில் யக்ஷாதிசாந்திகளைச் செய்யவேண்டும். (367) 10-வது நாகம் என்றவிருத்தி ஏற்படுமாயின் கணநாதனுடன் கூடின நாகக் கிரஹங்களைப் பூஜிக்கவேண்டும். எல்லாக் காரியங்களிலும் லக்ஷ்மீதராதிதத்துவங்களையும் பூஜிக்கவேண்டும். (எ—று) (368)

एवं कृते विधाने हि निरसाध्योऽपि सिद्ध्यति ।
निधिप्राप्त्या नरा लोके वन्दनीया न संशयः ॥ ३६९ ॥

(க—ரை) இவ்விதம் செய்யும் பக்ஷத்தில் ஸாதிக்கமுடியாததும் சித்தித்துவிடுகிறது. புதையலையடைவதால் உலகில் மனிதர் பூஜிக்கப்படுகிறார் என்பதில் ஸம்சயமில்லை. (எ—று) (369)

शङ्कास्थलस्य विस्तारायामावन्योन्यताडितौ ।
विंशत्यापहृतं शेषमरत्निरिति कीर्तितम् ॥ ३७० ॥
रत्निं गुणित्वा नवभि र्निरिसन्तानमुच्यते ।
तत्प्रदेशं गुणित्वाङ्कै र्हृत्वा विंशतिभिर्यदि ॥ ३७१ ॥
शिष्टमङ्गुलमेवोक्तं रत्निप्रादेशमङ्गुलम् ।
एवं क्रमेण रत्न्याद्यमगाधं कथयेदधः ॥ ३७२ ॥

(க—ரை) சங்கிக்கப்பட்ட இடத்தினுடைய நீளத்தையும் அகலத்தையும் தனித்தனியே அளந்து ஒன்றினால் மற்றொன்றைப் பெருக்கிவரும் மொத்தத்தொகையை 20னால் வகுத்துவரும் ஈவு அரத்னி எனப்படும். மீதமுள்ளரத்தினியை 9னால் பெருக்கிவரும் தொகை நிரிஸந்தானம் என்று சொல்லப்படும். அதைத் திரும்பவும் 9னால் பெருக்கி 20னால் வகுத்துவரும் ஈவுபோக மீதமாகவுள்ளது அங்குலம் எனப்படும். இது ரத்னிப்ராதேசமங்குளம் எனப்படும். இம்முறைப்படி பூமிக்குள் சல்லியமானது இத்துணை அரத்னி இத்துணை அங்குலம் தூரத்தில் இருப்பதாகச் சொல்லவேண்டும்.

केन्द्रेषु पापयुक्तेषु पृष्टं शल्यं न दृश्यते ।
शुभग्रहयुतेष्वेषु शल्यं तत्र प्रजायते ।
पापसौम्ययुते केन्द्रे शल्यमस्तीति निर्दिशेत् ॥ ३७३ ॥

(க—ரை) கேந்திரங்களில் பாபரிருந்தால் கேட்கப்பட்ட சல்லியமானது காணப்படமாட்டாது. கேந்திரங்கள் சுபக்கிரஹத்துடன் கூடியிருக்குமாயின் அங்கு சல்யமானது உண்டாகும். (காணப்படும்) பாபர் சுபர் இருவரும் கேந்திரத்தில் சேர்ந்திருந்தால் சல்லியமிருப்பதாகமட்டும் சொல்லவேண்டும். (எ—று) (373)

रविः पश्यति चेद्देवं कुजश्चेद्ब्रह्मराक्षसम् ।
केन्द्रे चन्द्रारसहिते कुजनक्षत्रकोष्ठके ॥ ३७४ ॥
पिपीलिकाधः केन्द्रे तु जीवचन्द्रसमन्विते ।
जीवस्थोड्डुगते कोष्ठे स्वर्णं गोपुरुषास्थिनी ॥ ३७५ ॥

(க—ரை) கேந்திரத்தைச் சூரியன்பார்த்தால் தேவனையும், செவ்வாய்பார்த்தால் ப்ரம்ஹராக்ஷஸனையும் சொல்லவேண்டும். கேந்திரத்தில் சந்திரன் செவ்வாய் இருவருமிருந்து அது செவ்வாயின் நக்ஷத்திர கோஷ்டமாகவுமாகுமானால் கீழில் எரும்புகளிருக்கும். கேந்திரத்தில் குரு சந்திரன் இவர்களிருந்து ஜீவனிருக்கும் நக்ஷத்திரத்தில் கோஷ்டமிருந்தாலோ ஸ்வர்ணத்தையோ பசு புருஷன் இவர்களுடைய எலும்பையுமோ சொல்லவேண்டும். (375)

उदयारूढकेन्द्रेषु स्वर्भानुर्यदि तिष्ठति।
राहुस्थर्क्षगते कोष्ठे वल्मीकमुपदीपयुक्॥ ३७६ ॥

(க—ரை) உதயாரூடகேந்திரங்களில் ராகு இருந்து ராகு இருக்கும் நக்ஷத்திரத்தில் கோஷ்டமுமிருக்குமானால் ஸமீபத்தில் தீபத்துடன் கூடின கரையான் புத்தைச் சொல்லவேண்டும். (376)

शुभान् केन्द्रे युतान् पापाः पश्यन्ति बलिनो यदि।
तत्क्षेत्रे विद्यते शल्यमेषु पापाः यदि स्थिताः॥ ३७७॥
देवयक्षपिशाचाद्यास्तत्र तिष्ठन्त्यसंशयम्।
ग्रहांशुसङ्ख्यया तेषां खातमानं वदेत्सुधीः॥ ३७८॥

(க—ரை) கேந்திரத்திலிருக்கும் சுபக்கிரஹங்களை பலம்பெற்ற பாபக்கிரஹங்கள் பார்த்தால் அந்த க்ஷேத்திரத்தில் சல்லியமிருப்பதாகச் சொல்லவேண்டும். கேந்திரங்களில் பாபர்களிருந்தால் தேவர் யக்ஷர் பிசாசர் முதலியன அங்கிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. கிரஹங்களுக்குச் சொல்லியகிரணங்களின் எண்ணுக்கொப்பான தூரத்தில் பூமியின் கீழ்ப்பள்ளத்தில் அவர்களிருப்பர் என புத்திமான் காணவேண்டும். (எ—று) (378)

चन्द्रे बुधेन संयुक्ते बुधनक्षत्रकोष्ठगे।
स्वशल्यं विद्यते तत्र केन्द्रे शुक्रेन्दुसंयुते॥ ३७९॥
शुक्रस्थितर्क्षगे कोष्ठे रौप्यं श्वेतशिलापिवा।
पञ्चषडसुभूतानि सपादैकं तथैव च॥ ३८०॥

सार्धरूपाक्षिरवयः सूर्यादीनां करास्स्मृताः।
शल्यागाधमनेनैव करेण कथयेत्सुधीः॥ ३८१॥

(க—ரை) சந்திரன் புதனுடன்கூடி புதநக்ஷத்திரகோஷ்டத்திலிருந்தால் புதனுக்குச் சொந்தமானசல்யம் அங்கிருக்கும். கேந்திரமானது சுக்கிரன் சந்திரன் இவர்களுடன்கூடி கோஷ்டமானது சுக்கிரனிருக்கும் நக்ஷத்திரத்தை யடைந்திருக்குமாயின் வெள்ளியோ, வெள்ளைக்கல்லோ இருக்கும். ஸூரியாதிகளான கிரஹங்களுக்கு முறையே 5, 6, 8, 5, $1\frac{1}{4}$, $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$, 2, 12 எனக் கிரணங்கள் சொல்லப்படுகின்றன. இந்தக்கிரணக் கணக்குப்படி பூமியின்கீழ் சல்லியமிருக்கும் ஆழத்தைக்கண்டு புத்திமான் சொல்லவேண்டும்.

இருபத்திரண்டாவது சல்யகாண்டம் முற்றிற்று.

இருபத்துமூன்றாவது கூபகாதகாண்டம்.

अथ वक्ष्ये विशेषेण कूपखाते विनिर्णयम्।
आयामे त्वष्टरेखाः स्युस्तिर्यग्रेखास्तु पञ्चच।
एवङ्कृते भवेत्कोष्ठमष्टाविंशति सङ्ख्यकम्॥ ३८२॥
प्रभाते प्राङ्मुखं कृत्वा कोष्ठेष्वेतेषु बुद्धिमान्।
ऐशये कोष्ठद्वयं त्यक्त्वा तृतीयादिषु च क्रमात्।
कृत्तिकादित्रयं न्यस्य रौद्रञ्च तदधो न्यसेत्॥ ३८३॥
तदुत्तरत्रयेष्वेव पुनर्वस्वादिकं त्रयम्।
तत्पश्चिमादियाम्येषु यथा चित्रावसानकम्॥ ३८४॥
तत्कोष्ठपूर्वयोः स्वातिविशाखे न्यस्य तत्परम्।
प्रदक्षिणक्रमादग्निनक्षत्रान्ताश्च तारकाः॥ ३८५॥
मध्याह्नाद्दक्षिणाशास्यं पश्चिमास्यं निशामुखात्।
चक्रमालोकयेद्विद्वान् रात्र्यर्धादुत्तराननम्॥ ३८६॥

(க—ரை) இனி கிணறுவெட்டும் விஷயமான நிர்ணயத்தைச் சொல்லுகிறேன். நீளத்தில் 8கோடுகளையும் குறுக்கில் 5கோடுகளை

யும் கிழிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் 28 கோஷ்டங்கள் (அறைகள்) ஏற்படும். இந்த 28அறைகளிலும் அந்தந்தக் காலத்துக்குத் தக்கபடி அந்தந்த நக்ஷத்திரங்களை ஆதியாகக்கொண்டு பின் வருமாறு அடைக்கவேண்டும். மேலும், விடியற்காலத்தில் ப்ரஸ்னம் கேட்டால் கோஷ்டத்தைக் கிழக்கை முகமாகவுள்ளதகாவும், மத்யான்ஹத்தில் ப்ரஸ்னம் கேட்டால் கொஷ்டத்தைத் தேற்கை முகமாகவுள்ளதாகவும், ஸாயங்காலத்தில் கேட்டால் மேற்கை முகமாகவுள்ளதாகவும், பாதிராத்திரிக்குமேல் கேட்டால் சக்கிரத்தை வடக்கை முகமாகவுள்ளதாகவும், காணவேண்டும். (எ—று) (386)

பிராதக்காலம் முதல் மத்தியாங்ஹம்வரை அமைக்கவேண்டிய கூபகாத சக்கிரம்.

கிழக்கு.

வடக்கு. (இடம்) — தெற்கு. (வலம்)

அசுவதீ.	பரணீ.	கார்த்திகை.	ரோஹிணீ.	மிருகசீர்ஷம்.	விசாகம்	அனுஷ
ரேவதி.	ஆயில்யம்.	பூசம்.	புனர்பூசம்.	திருவா	ஸ்வாதி.	கேட்டை.
உத்திரட்டாதி.	மகம்.	பூரம்.	உத்திரம்.	ஹஸ்தம்	சித்திரை.	மூலம்.
பூரட்டாதி.	சதயம்.	அவிட்டம்.	திருவோ	அபிஜித்	உத்திராடம்.	பூராடம்

மேற்கு.

மத்யாங்ஹம்முதல் ஸாயம்காலம்வரை அமைக்கவேண்டிய கூபகாத சக்கிரம்.

தெற்கு.

கிழக்கு. (இடம்) — மேற்கு. (வலம்)

பூசம்.	ஆயில்யம்.	மகம்.	பூரம்.	உத்திரம்.	திருவோ	அவிட்டம்.
புனர்பூசம்.	விசாகம்	ஸ்வாதி.	சித்திரை.	ஹஸ்தம்	அபிஜித்.	சதயம்.
திருவா	அனுஷம்.	கேட்டை.	மூலம்.	பூராடம்.	உத்திராடம்.	பூரட்டாதி.
மிருகசீர்ஷம்.	ரோஹிணீ.	கார்த்திகை.	பரணீ.	அசுவதீ.	ரேவதி.	உத்திரட்டாதி.

வடக்கு.

ஸூர்யாஸ்தமனம்முதல் பாதிராத்திரிவரையில் அமைக்க வேண்டிய கூபகாதசக்கிரம்.

மேற்கு.

தெற்கு. (இடம்) — வடக்கு. (வலம்)

ஸ்வாதி.	விசாகம்	அனுஷ	கேட்டை.	மூலம்.	பரணீ.	கார்த்திகை.
சித்திரை.	திருவோ	அபிஜித்	உத்திராடம்.	பூராடம்	அசுவதீ.	ரோஹிணீ.
ஹஸ்தம்	அவிட்டம்.	சதயம்.	பூரட்டாதி.	உத்திரட்டாதி.	ரேவதி.	மிருகசீர்ஷம்.
உத்திரம்.	பூரம்.	மகம்.	ஆயில்யம்.	பூசம்.	புனர்பூசம்.	திருவா

கிழக்கு.

பாதிராத்திரிக்குமேல் ஸூரியோதயம்வரையில் அமைக்க வேண்டிய கூபகாதசக்கிரம்.

வடக்கு.

மேற்கு. (இடம்) — கிழக்கு. (வலம்)

அபிஜித்.	திருவோ	அவிட்டம்.	சதயம்.	பூரட்டாதி.	ஆயில்யம்.	மகம்.
உத்திராடம்.	பரணீ.	அசுவதீ.	ரேவதி.	உத்திரட்டாதி.	பூசம்.	பூரம்.
பூராடம்.	கிருத்திகை.	ரோஹிணீ.	மிருகசீர்ஷம்.	திருவா	புனர்பூசம்.	உத்திரம்.
மூலம்.	கேட்டை.	அனுஷம்.	விசாகம்	ஸ்வாதி.	சித்திரை.	ஹஸ்தம்

தெற்கு.

मध्याह्ने पैत्रमारभ्य मैत्रमाद्यं निशामुखे ।
अर्धरात्रे धनिष्ठाद्यं पूर्ववद्गणयेत्क्रमात् ॥ ३८७ ॥
आग्नेय्यां दिशि नैर्ऋत्यां वायव्यां कोष्ठकद्वयम् ।
त्यक्त्वा प्रत्येकमेवं हि तृतीयाद्यं विलोकयेत् ॥ ३८८ ॥

(க—ரை) மத்யான்யத்தில் ப்ரஸ்னம் நிகழ்ந்தால் தென்கிழக்கில் இரண்டுகோஷ்டங்கள் (அரைகள்) விட்டு மூன்றுவது அறை முதல் தொடங்கி மகாநக்ஷத்திரம் முதல் முற்கூறிய முறைப்படி நக்ஷத்திரங்களை அறையில் அடைக்கவேண்டும், ஸாயங்காலத்தில்

ப்ரஸ்னம் நிகழ்ந்தால் தென்மேற்குதிக்கில் முதலில் இரண்டு அறைவிட்டு மூன்றாவது அறைதொடங்கி அனுஷம் முதல் முற்கூறிய முறைப்படியே நக்ஷத்திரங்களை அடைக்கவேண்டும். நடுராத்திரியில் பிரஸ்னம் நிகழ்ந்தால் வடமேற்குதிக்கில் முதலில் இரண்டு அறைவிட்டு 3-வது அறைமுதல் அவிட்டம் முதலான நக்ஷத்திரங்களை அடைக்கவேண்டும். (எ—று) (388)

दिनार्धं सप्तभिर्हृत्वा यल्लब्धं नाडिकादिकम् ।
ज्ञात्वा तत्तत्प्रमाणेन कृत्तिकादीनि विन्यसेत् ।
यन्नक्षत्रं तदा सिद्धं प्रश्नकाले विशेषतः ॥ ३८९ ॥

कृत्तिकास्थानमारभ्य पूर्ववद्गणयेत्सुधीः ।
यत्कोष्ठे चन्द्रनक्षत्रं तत्रोदयक्रमाल्लिखेत् ।
तदादीनि क्रमेणैव पूर्ववद्गणयेत्सुधीः ॥ ३९० ॥

(க—ரை) அஹர்மானத்தின் பாதியை 7னால் வகுத்துவரும் ஈவான நாழி விநாடி இவைகளை அறிந்துகொண்டு அந்தநாழி விநாடி இவைகளுக்குத் தக்கபடி கிருத்திகாதி 7நக்ஷத்திரங்களையும் கோஷ்டத்தில் அடைக்கவேண்டும். அதாவது: அஹர்மானம் $29\frac{3}{4}$நாழிகையாக வைதுக்கொண்டால் அதன்பாதி $14\frac{7}{8}$ பதினான்கே முக்காலரைக்காலாகும். இதை 7னால் வகுத்தால் $2\frac{1}{8}$ இரண்டே அரைக்கால் நாழிகைவரும். ஆகவே காலையில் ப்ரஸ்னம் நிகழ்ந்தால் முதல் $2\frac{1}{8}$ல் நாழிகை கிருத்திகை என்றும் இரண்டாவது $2\frac{1}{8}$ நாழிகை ரோகிணியென்றும் இவ்விதமே $2\frac{1}{8}$ நாழிகைக்கு ஒவ்வொரு நக்ஷத்திரம் வீதம் முற்கூறிய முறைப்படி 7 அறைகளிலும் கிருத்திகை முதலிய 7நக்ஷத்திரங்களிருப்பதாகக் காணவேண்டும். இதுபோல் மத்தியான்ஹத்தில் பிரஸ்னம் நிகழ்ந்தபோது பகலின் பின்பாகத்தை 7னால்வகுத்துவரும் ஈவான நாழி விநாடிகளில் முறையே மகம் முதல் விசாகாந்தமான நக்ஷத்திரங்கள் அந்த 7 அறைகளிலுமிருப்பதாகக் காணவேண்டும். இவ்விதமே ராத்திரியின் முற்பாதிக்கும் பிற்பாதிக்குமுள்ள நாழிகையைக் கண்டுகொண்டு அதை 7ல் வகுத்துவரும் ஈவான அந்தந்த நாழி விநாடிகளில் அந்தந்த அறைகளில் முறையே அனுஷம், அவிட்டம் இவற்றை ஆதியாகக் கொண்ட

7நக்ஷத்திரங்களிருப்பதாகக் காணவேண்டும். மேலும், ப்ரஸ்னகாலத்தில் எந்த நக்ஷத்திரமானது பஞ்சாங்கப்படி ஸித்தமாக இருக்கிறதோ அந்த நக்ஷத்திரத்தை காலையானால் கிருத்திகை முதலும், மத்யான்ஹத்திலானால் மகம் முதலும் ஸாயங்காலமானால் அனுஷம் முதலும், நடுராத்ரிக்குமேலானால் அவிட்டம் முதலும் எண்ணிக்கண்டு எந்த அறையில் அந்தநக்ஷத்திரம் வருமோ அதில் அந்த சந்திரநக்ஷத்திரத்தை எழுதவேண்டும். (எ—று) (390)

यत्रेन्दुर्दृश्यते तत्र समृद्धमुदकं भवेत् ।
शुक्रनक्षत्रकोष्ठे वा जलमस्तीत्युदाहरेत् ॥ ३९१ ॥
जीवनक्षत्रकोष्ठेतु तत्र स्वर्णमुदीरयेत् ।
तुलोक्षकर्ककुंभालिमीननक्राश्च राशयः ॥ ३९२ ॥
जलरूपा स्तदुदये जलमस्तीति निर्दिशेत् ।
तत्रस्थौ चन्द्रशुक्रौ चेदस्ति तत्र बहूदकम् ॥ ३९३ ॥

(க—ரை) இவ்விதம் காண்பதில் எதில் சந்திரனிருக்கிறானோ (அது சந்திரநக்ஷத்திர கோஷ்டமானால் அதில்) அதிகம் ஜலமிருப்பதாகக் காணவேண்டும். சுக்கிரநக்ஷத்திரமிருக்கும் கோஷ்டமானால் ஜலமிருக்கென்றுமட்டும் சொல்லவேண்டும். குருநக்ஷத்திர கோஷ்டமானால் அதில் ஸ்வர்ணமிருப்பதாகச் சொல்லவேண்டும். துலாம், விருஷபம், கடகம், கும்பம், விருஸ்சிகம், மீனம், மகரம் இவை ஜலராசிகளெனப்படும். அந்த ஜலராசிகளுதயமானால் ஜலமிருக்கென்று சொல்லவேண்டும். அவற்றில் சந்திர சுக்கிரர்களிருந்தால் அங்கு அதிகம் ஜலமிருக்கும். (எ—று) (393)

बुधजीवोदये तत्र किञ्चिज्जलमुदीरयेत् ।
एतान् राशीन् प्रपश्यन्ति यदि शन्यर्कभूमिजाः ।
जलं न विद्यते तत्र फणिदृष्टे बहूदकम् ॥ ३९४ ॥

(க—ரை) அந்த உதயராசியில் புதஜீவர்களிருந்தால் கொஞ்சம் ஜலமிருப்பதாகச் சொல்லவேண்டும். சனி சூரியன் செவ்வாய் இவர்கள் முற்கூறிய ராசிகளைப் பார்ப்பாராயின் ஜலமிராது. ராகுபார்த்தால் அதிகம் ஜலமிருக்கும். (எ—று) (394)

अधस्तादुदयारूढात्तच्छत्रेत्तूपरि स्थिते ।
जलग्रहयुते दृष्टे चाधश्चेत्स्यादधोजलम् ।
ऊर्ध्वदृष्टिर्ग्रहो राशावूर्ध्वमेवोदकं भवेत् ॥ ३९५ ॥

(க—ரை) கீழுள்ள உதயாரூடராசிக்குமேல் அதன் சத்திரராசியிருந்து ஜலக்கிரஹத்தினால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் ஜலம் கீழில் (ஆழத்தில்) இருக்கும். மேல் *நோக்குள்ளக் கிரஹமானது ராசியிலிருக்குமானால் ஜலம் மேலிலேயே இருக்கும். (395)

ऊर्ध्वाधः स्थलयोः पापास्तिष्ठन्ति यदि नोदकम् ।
अधो जलं चतुस्स्थानादस्तान्नद्यागमो भवेत् ॥ ३९६ ॥
दशमे नवमे वर्षे केचिदाहुर्मनीषिणः ।
जलाजलग्रहवशाज्जलनिर्णयमीरयेत् ॥ ३९७ ॥

(க—ரை) (உதயாரூடசத்திரராசிக்கு) மேலிலும் கீழிலும் பாபர்களிருந்தால் ஜலமிருக்கமாட்டாது. உதயாரூடராசிக்கு 4மிடத்துக்குக்கீழ்(பாபக்)கிரஹங்களிருந்தால் ஜலம் கீழிலிருகும். 7மிடத்துக்குக் கீழிருந்தால் நதியின்வரவு (ஜலநாடீ) ஏற்படும். (396) சிலவித்வான்கள் 10-வது வருஷத்திலோ, 7-வது வருஷத்திலோ நதி வருமென்கின்றனர். ஜலக்கிரஹம், அவையல்லாதக் கிரஹம் இவற்றைக் கொண்டு ஜலநிர்ணயஞ்செய்யவேண்டும். (397)

केन्द्रेषु तिष्ठतश्चन्द्रजीवौ यदि शुभोदकम् ।
चन्द्रे शुक्रयुते केन्द्रे पर्वतेऽपि जलं वदेत् ॥ ३९८ ॥

(க—ரை) கேந்திரங்களில் சந்திரன் குரு இவர்களிருந்தால் நல்ல ஜலம்கிடைக்கும். கேந்திரத்தில் சந்திரசுக்கிரர்களிருந்தால் மலையானாலும் அங்கு ஜலம் கிடைக்கும். (எ—று) (398)

चन्द्रसौम्ययुते केन्द्रे जीर्णञ्च लवणोदकम् ।
आरूढात् केन्द्रगे चन्द्रे परिध्याद्यभिवीक्षिते ॥ ३९९ ॥

---

* சூரியனிருக்கும் ராசிதொடங்கி 6-ராசிவரையிருக்கும் கிரஹம் கீழ்நோக்குள்ளதென்றும், 6க்கு மேல் 12ராசிவரையிருக்கும் கிரஹம் மேல்நோக்குள்ளதென்றும் சொல்லப்படும்.

अधो जलं ततोऽगाधं पूर्वोक्तग्रहरश्मिभिः ।
शुक्रेण सौम्यो युक्तश्चेत्कषायं जलमादिशेत् ॥ ४०० ॥

(க—ரை) கேந்திரத்தில் சந்திரன் புதன் இவர் இருந்தால் பழைய ஜலம் கிடைக்கும். அது உப்பாக இருக்கும். ஆரூடலக்கினத்துக்குக் கேந்திரத்தில் சந்திரனிருந்து பரிவேஷம் முதலியவற்றால் பார்க்கப்பட்டால் ஜலம் கீழிலிருக்கும். முன்னர் கூறியகிரஹங்களின் கிரணங்களை யனுஸரித்து மேன்மேலுமகழத்தைச் சொல்லவேண்டும். புதன் சுக்கிரனுடன்கூடி கேந்திரத்திலிருந்தால் துவர்ப்புள்ள ஜலத்தைச் சொல்லவேண்டும். (எ—று) (399, 400)

कन्यामिथुनभे सौम्ये जलं स्यादन्तरालगम् ।
बृहस्पतौ राहुयुते पाषाणो जायतेऽन्तरा ॥ ४०१ ॥
शुक्रचन्द्रयुते राहावगाधे जलमेधते ।
भास्करे क्षारसलिलं परिवेषे धनुर्यदि ।
राहुणा संयुते मन्दे जलं स्यादन्तरालगम् ॥ ४०२ ॥

(க—ரை) புதன், கன்னி மிதுனம் இவற்றுள்ளிருந்தால் ஜலம் அதிகக் கிட்டத்திலும், அதிக ஆழத்திலுமில்லாது நடுத்தரமான ஆழத்திலிருக்கும். குரு ராஹுவுடன்கூடி இருந்தால் மத்தியில் கற்பாறை ஏற்படும். ராஹு, சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் கூடி இருந்தால் அகழத்தில் ஜலம் விருத்தியடையும். தனுவில் சூரியனோ பரிவேஷமோ இருந்தால் உப்புகலந்த ஜலம் கிடைக்கும். சனி ராஹுவுடன் கூடி இருந்தால் ஜலம் மத்தியிலிருக்கும். (402)

अर्कस्योषरभूमिस्स्यात्पापाद्या कंटकस्थली ।
नारिकेळादिपुन्नागपूगयुक्ता क्ष्मा गुरोः ॥ ४०३ ॥
शुक्रस्य कदली वल्ली बुधस्य पनसो भवेत् ।
वल्मीकं राहुकेत्वोश्च त्विति ज्ञात्वा वदेद्बुधः ॥ ४०४ ॥

(க—ரை) சூரியனுக்கு ஊஷர பூமியும், செவ்வாய், சனிமுதலிய பாபர்களுக்கு முள்ளுள்ளமரம் செடிவளரும் பூமியும், குருவுக்கு தேங்காய், புன்னைமரம், பாக்குமரம் இவையுள்ள பூமியும், சுக்

கிரனுக்கு வாழைக் கொல்லையும், கொடிகள்படர்ந்த இடமும், புதனுக்கு பலாமரமுள்ள பூமியும், ராஹு கேதுக்களுக்கு புத்துள்ள இடமும் உரியதாகும். (சூரியாதி கிரஹங்கள்மூலம் மேற்கூறிய பூமிகளை கிணறுவெட்டும்பொழுது கண்டு கொள்ளவேண்டும் என்பது கருத்து.) (எ—று) (403, 404)

शनिराहूदये काष्ठोरगवल्मीकदर्शनम् ।
स्वामिदृष्टियुते वापि स्वक्षेत्रमिति कीर्तयेत् ।
अन्यैर्युक्तेऽथवा दृष्टे परकीयस्थलं वदेत् ॥ ४०५ ॥

(க—ரை) உதயலக்கினத்தில் சனி, ராஹு இவர்களிருந்தால் கட்டை, பாம்பு, கரையான்புத்து, இவற்றின் தர்சனம் கிணறுவெட்டுமிடத்திலுண்டாகும். லக்கினத்துக்கு லக்கினதிபதியின் திருஷ்டி இருந்தால் கிணறுவெட்டுமிடம் தனக்குச் சொந்தமானதென்றும், மற்றகிரஹங்களால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் கிணறுவெட்டுமிடம் பிறருடையதென்றும் சொல்லவேண்டும். (405)

இருபத்துமூன்றாவது கூபகாதகாண்டம் முற்றிற்று.

இருபத்துநான்காவது ஸேநாகாண்டம்.

सैन्यस्यागमनं वक्ष्ये शत्रोरागमनं तथा ।
चरोदये चरारूढे पापाः पंचमगा यदि ॥ ४०६ ॥
सेनागमनमस्तीति कथयेच्छास्त्रवित्तमः ।
चतुष्पादुदयेजाते युग्मराश्युदये तथा ॥ ४०७ ॥
लग्नस्याधिपतौ वक्रे सेना पथि निवर्तते ।
शत्रोरागमनं नास्ति चतुर्थे पापसंयुते ॥ ४०८ ॥
उदयारूढछत्रेषु केन्द्रेषु भुजगो यदि ।
दूरस्थिता च नायाति सेना पथि निवर्तते ॥ ४०९ ॥

(க—ரை) ஸைந்யத்தின் வரவைப்பற்றியும், சத்துருவின் வரவைப்பற்றியும் இனிகூறுகிறோம். சரராசி உதயராசியாகவும், ஆரூடராசியாகவுமாகி பாபர்கள் 5மிடத்திலுமிருந்தால் ஸேனையின் வரவு இருப்பதாய் ப்ரஸ்ன சாஸ்திரமறிந்தவன் கூறவேண்டும். 4 கால் ராசியோ இரட்டைக்கால் ராசியோ உதயமாகி லக்கினதிபதி வக்கிரனாகவுமிருந்தால் ஸைந்யம் மார்க்கத்தில் திரும்பிவிடும். 4மிடத்தில் பாபனிருந்தால் சத்துரு வரமாட்டான். உதயம், ஆரூடம், சத்திரம் இவைகளிலோ, கேந்திரத்திலோ ராஹு இருந்தால் ஸேனை தூரத்திலிருக்கும். தனதுபட்டினத்துக்கு வராது. நடுப்பாதையிலேயே திரும்பிவிடும். (எ—று) (409)

आरूढे ह्युदिताः कुंभकुलीरालिझषा यदि ।
चतुर्थकेन्द्रे बलिनो यदि सेना निवर्तते ॥ ४१० ॥
चरोदये चरारूढे भौमार्कगुरवस्तदा ।
तिष्ठन्ति यदि पश्यन्ति सेना याति महत्तरा ॥ ४११ ॥
अरूढे स्वामिमित्रोच्चग्रहयुक्तेऽथ वीक्षिते ।
स्थायिनो विजयं ब्रूयाद्यायिनो भङ्गमादिशेत् ॥ ४१२ ॥

(க—ரை) கும்பம், கடகம், விருஸ்சிகம், மீனம் இவைகள் ஆரூடராசியையடைந்து, 4-வது கேந்திரத்தில் பலம்பெற்றக் கிரஹமுமிருந்தால் சத்துருஸைன்யம் திரும்பிப்போய்விடும். சரராசி உதயமாகவும், ஆரூடராசியாகவுமாகி அவற்றில் செவ்வாய் சூரியன், குரு இவர்கள் இருந்தாலும், அல்லது அவர்கள் மேற்கூறிய ராசிகளைப் பார்த்தாலும் பெரியஸைன்யம் வருவதாகக் கூறவேண்டும். ஆரூடராசியானது அதனதிபன், அதிபனுடைய மித்திரன், உச்சமடைந்தக் கிரஹம் இவற்றுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் ஸ்தாயிக்கு விஜயத்தையும், யாயிக்குத் தோல்வியையும் சொல்லவேண்டும். (எ—று) (410–412)

குறிப்பு—எதிர்த்துவரும் சத்துரு "யாயி" என்றும், அந்தச் சத்துருவினால் எதிர்க்கப்படுபவன் "ஸ்தாயி" என்றும் சொல்லப்படுவதாய்க் காணவேண்டும்.

एवं छत्रे विशेषोऽस्ति विपरीते जयो भवेत् ।
यायी बलं समायाति छत्रे बलसमन्विते ।
आरूढे बलसंयुक्ते स्थायी विजयमाप्नुयात् ॥ ४१३ ॥

(க—ரை) சத்திரராசியில் மட்டும் கொஞ்சம் விசேஷமிருக்கின்றது. முற்கூறியதற்குமாறி ஜயமேற்படும். அதாவது: சத்திரராசி பலமடைந்திருந்தால் சண்டைக்குவேண்டி எதிர்த்து வருபவன் ஜயமடைகிறான். ஆரூடராசி பலமடைந்திருந்தால் தானிருக்குமிடத்திலேயே ஸ்திரமாக இருப்பவன் அதாவது: சத்துருவால் எதிர்த்து வரப்பட்டவன் ஜயமடைவான். (எ—று) (413)

आरूढे नीचरिपुभिर्ग्रहैर्युक्तेऽथ वीक्षिते ।
स्थायी परगृहीतस्स्याच्छत्रेष्वेवं विपर्ययः ॥ ४१४ ॥

(க—ரை) ஆரூடராசியானது நீசமாகவோ, சத்துருவாகவோ இருக்கின்ற கிரஹங்களுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் ஸ்தாயியானவன் சத்துருவினால் பிடிக்கப்பட்டவனாவான். சத்திரராசி முற்கூறியபடி இருந்தால் இதற்குமாறானபலனை அறியவேண்டும். அதாவது:—ஸ்தாயியானவன் ஜயமடைவானென்றும், யாயி தோல்வியடைவான் என்றும் கண்டு கொள்ளவேண்டும். (414)

शुभोदये तु पूर्वाह्णे यायिनो विजयो भवेत् ।
शुभोदये तु सायाह्ने स्थायी विजयमाप्नुयात् ॥ ४१५ ॥
छत्रारूढोदये वापि क्रूरांशे पापसंयुते ।
तत्काले पृच्छतां सद्यः कलहो जायते महान् ॥ ४१६ ॥
पृष्ठोदये तथारूढे पापैर्युक्तेऽथ वीक्षिते ।
दशमे पापसंयुक्ते चतुष्पादुदयेऽपि वा ।
कलहो जायते शीघ्रं सन्धिस्स्याच्छुभवीक्षिते ॥ ४१७ ॥

(க—ரை) பூர்வான்ஹத்தில் சுபன் உதயராசிலிருந்தால் சத்துரு ஜயமடைவான். ஸாயம் காலத்தில் சுபன் உதயராசியிலிருந்தால் ஸ்தாயியானவன் ஜயமடைவான். சத்திரராசியோ ஆரூடராசியோ, உதயராசியோ க்ரூராம்சம்பெற்றோ பாபனுடன் கூடியோ இருந்தால் அந்த ஸமயம் ஸ்தாயிக்கு உடனே மிகுந்த சண்டையுண்டாகுமெனச் சொல்லவேண்டும். பிருஷ்டோதயராசி ஆரூடராசியாகி அது பாபனுடன்கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தாலும், 10மிடத்தில் பாபனிருந்தாலும், நாற்கால்ராசி உதயராசியாகவானாலும்

சீக்கிரமாய்க் கலஹமுண்டாகும். முற்கூறியவை சுபனால் பார்க்கப்பட்டால் ஸந்தி (சினேஹம்) உண்டாகும். (எ—று) (417)

उदयादिषु षट्केषु शुभा राशिषु चेत्स्थिताः ।
स्थायिनो विजयं ब्रूयादूर्ध्वं चेद्यायिनो जयः ॥ ४१८ ॥
पापग्रहयुते व्यस्तं मिश्रे सन्धिः प्रजायते ।
उभयत्र स्थिताः पापा बलवन्तस्समो जयः ॥ ४१९ ॥

(க—ரை) உதயம்முதல் ஆறுராசிகளில் எல்லாச் சுபக்கிரஹங்கள் மட்டுமிருந்தால் ஸ்தாயிக்கு ஜயத்தைச் சொல்லவேண்டும். 6ராசிக்கு மேலுள்ளராசிகளில் எல்லாச் சுபக்கிரஹங்களுமிருந்தால் யாயிக்கு ஜயமுண்டாகும். பாபர்கள் முற்கூறிபடிக்கிருந்தால் பலன் மாறிநடக்கும். அதாவது: உதயலக்கினம் முதல் 6ராசிகளுள் எல்லாப் பாபக்கிரஹங்களு மிருந்தால் ஸ்தாயிக்குத் தோல்வியையும் யாயிக்கு ஜயத்தையும், 6ராசிகளுக்கு மேலுள்ளராசிகளில் பாபர்களிருந்தால் யாயிக்குத் தோல்வியையும்,ஸ்தாயிக்கு ஜயத்தையும் சொல்லவேண்டும். மேற்கூறிய ஸ்தலங்களில் பாபர், சுபர் இருவரும் கலந்திருந்தால் (சத்துருவுடன்) சினேஹமுண்டாகும். பலம் பெற்ற பாபக்கிரஹங்கள் லக்கினத்துக்கு இருபுரத்திலும், (அதாவது: 2, 12மிடங்களிலும்) அல்லது முற்கூறிய இரண்டு ஸ்தானங்களிலும் இருந்தால் ஜயம் ஸமமாக இருக்கும். (அதாவது:—சத்துருவுக்குச் சிலவிஷயத்திலும், தனக்குச் சிலவிஷயத்திலும் ஜயமுண்டாகும்.)

तुर्यादिराशिभिः षड्भिरागतस्य फलं वदेत् ।
तदन्यराशिभिः षड्भिः स्थायिनः फलमादिशेत् ।
एवं ग्रहस्थितिवशात्पूर्ववत्कथयेद्बुधः ॥ ४२० ॥

(க—ரை) உதயராசியிலிருந்து 4-வதுராசிமுதலுள்ள 6 ராசிகளைக்கொண்டு சத்துருவுக்குப் பலனையும், அதற்குமேலுள்ள 6ராசிகளைக் கொண்டு ஸ்தாயிக்குப் பலனையும் சொல்லவேண்டும். இவ்விதம் கிரஹங்களின் ஸ்திதியைக் கொண்டு முற்கூறியபடி கூறவேண்டும். (எ—று) (420)

ग्रहोदये विशेषोऽस्ति शन्यर्काङ्गारकोदये ।
आगतस्य जयं ब्रूयात्स्थायिनो भङ्गमादिशेत् ।
बुधशुक्रोदये, यायी जयी चन्द्रगुरूदये ॥ ४२१ ॥
पञ्चषड्लाभरिःफेषु तिग्मांशुः संस्थितो यदि ।
आगतः स्त्रीधनादीनि हृत्वा वस्तूनि गच्छति ॥ ४२२ ॥

(க—ரை) கிரஹங்கள் உதயராசியிலிருப்பதன்மூலம் காணவேண்டிய பலன்கள் இனிகூறப்படும். ப்ரஶ்னலக்கினத்தில் சனி ஸூரியன், செவ்வாய் இவர்களிருந்தால் வந்த சத்துருவுக்கு ஜயத்தைக் கூறவேண்டும். புதன் சுக்கிரன் இவர்கள் உதயலக்கினத்திலிருந்தால் ஸ்தாயியானவன் தோல்வியையடைவான். சந்திரன், குரு இவர்கள் லக்கினத்திலிருந்தால் வந்தசத்துரு ஜயமடைவான். 5, 6, 11, 12 இவ்விடங்களில் ஸூரியனிருந்தால் வந்தசத்துரு ஸ்திரீகள், தனங்கள், முதலியபொருள்களை அபஹரித்துக் கொண்டு செல்லுவான். (எ—று) (422)

द्वितीये दशमे सौरिर्यदि सेनासमागमः ।
यदि शुक्रः स्थितः षष्ठे योज्यं संधिर्भविष्यति ॥ ४२३ ॥
चतुर्थे पञ्चमे शुक्रो यदि तिष्ठति तत्क्षणात् ।
स्त्रीधनादीनि वस्तूनि यायी दत्वा प्रयास्यति ॥ ४२४ ॥
सप्तमे शुक्रसंयुक्ते स्थायी भवति दुर्बलः ।
नवाष्टसप्तसहजादन्यत्र हि कुजो यदि ।
स्थायी विजयमाप्नोति परसेना समागमे ॥ ४२५ ॥

(க—ரை) ப்ரஶ்னலக்கினத்துக்கு 2மிடத்திலோ 10 மிடத்திலோ சனி இருந்தால் ஸைன்யத்துடன் சேர்க்கையுண்டாகும். சுக்கிரன் 6மிடத்திலிருந்தால் ஸந்தி (ராஜி) உண்டாகும் என்று கூறவேண்டும். 4மிடத்திலோ, 5மிடத்திலோ சுக்கிரனிருந்தால் யாயியானவன் ஸ்திரீ, தனம் முதலிய பொருள்களைக் கொடுத்துவிட்டு (அதாவது: தோல்வியையடைந்து செல்லுவான்) 7மிடத்தில் சுக்கிரனிருந்தால் ஸ்தாயியானவன் பலமற்றவனுவான். 9, 8, 7, 3, இவற்றைத் தவிர மற்ற விடங்களில் செவ்வாயிருந்தால் ஸ்தாயியானவன் சத்துருஸைன்யத்துடன் சேர்க்கை ஏற்பட்டபொழுது ஜயம் பெறுவான். (எ—று) (425)

चतुर्थे पञ्चमे चन्द्रे स्थायी च विजयी भवेत् ।
तृतीये पञ्चमे भानौ यदि सेनासमागमः ॥ ४२६ ॥
मित्रस्थाने स्थिते संधिर्नोचेत्स्थायी जयी भवेत् ।
चतुर्थे वित्तदः स्थायी षष्ठे चेत्स्थायिनो मृतिः ॥ ४२७ ॥
उदयात्सहजे सौम्ये द्वितीये यदि भास्करः ।
स्थायिनो विजयं ब्रूयाद्व्यत्यस्ते यायिनो जयः ॥ ४२८ ॥

(க—ரை) சந்திரன் 4மிடத்திலோ, 5மிடத்திலோ இருந்தால் ஸ்தாயியானவன் ஜயம் பெறுவான். 3மிடத்திலோ, 5மிடத்திலோ, சூரியனிருந்தால் ஸைந்யத்துடன் சேர்க்கையுண்டாகும். சூரியன் மித்திரன் வீட்டிலிருந்தால் சத்துருவுடன் ஸந்தி (சிநேஹம்) உண்டாகும். அவ்விதமில்லாவிடில் ஸ்தாயியானவன் ஜயம் பெறுவான். சூரியன் 4மிடத்திலிருந்தால் ஸ்தாயியானவன் பொருளைச் சத்துருவினிடம் கொடுத்துவிடுவான். சூரியன் 6மிடத்திலிருந்தால் ஸ்தாயியானவன் மரணமடைவான். லக்கினத்துக்கு 3மிடத்தில் புதனும், 2மிடத்தில் சூரியனு மிருந்தால் ஸ்தாயிக்கு ஜயத்தைச் சொல்லவேண்டும். இதற்குமாறி இருந்தால் சத்துருஜயமடைவான். (428)

सप्तमे भास्करे याते समयुद्धं वदेद्बुधः ।
लग्नात्पञ्चमगे सौम्ये यायी भवति चार्थदः ।
द्वित्रिस्थे सोमजे यायी विजयी भवति ध्रुवम् ॥ ४२९ ॥
एकादशे व्यये सौम्ये स्थायी विजयमेष्यति ।
एकादशेऽर्के यायी तु हतस्त्रीबान्धवो भवेत् ।
शत्रुनीचस्थिते सूर्ये स्थायिनो भङ्गमादिशेत् ॥ ४३० ॥

(க—ரை) சூரியன் புதனுடன் கூடி இருந்தால் ஒருவருக்கொருவர் சளைப்பில்லாத யுத்தமுண்டாகுமெனச் சொல்லவேண்டும். புதன் லக்கினத்துக்கு 5மிடத்திலிருந்தால் யாயியானவன் தனத்

தைக் கொடுப்பவனாவான். புதன் 2, 3மிடங்களிலிருந்தால் யாயியானவன் நிச்சயமாய் ஜயமடைவான். புதன் 11, 12மிடங்களிலிருந்தால் ஸ்தாயியானவன் ஜயப்பெறுவான். சூரியன் 11மிடத்திலிருந்தால் யாயியானவன் கொல்லப்பட்ட ஸ்திரீகள், பந்துக்கள் இவர்களுடன் கூடினவனாயாவான். சூரியன் சத்துருவீடு நீசவீடு இவற்றிலிருந்தால் ஸ்தாயியானவன் தோல்வியையடைவான். (430)

उदयात्पञ्चमभ्रातृव्ययेषु धिषणो यदि ।
यायी भङ्गं समायाति द्वितीये संधिरुच्यते ।
दशमैकादशे जीवो यदि याय्यर्थदो भवेत् ॥ ४३१ ॥

(க—ரை) உதயலக்கினத்துக்கு 5, 3, 12மிடங்களில் குருவிருந்தால் யாயியானவன் தோல்வியை யடைவான். குரு 2மிடத்திலிருந்தால் சத்துருவுடன் ஸந்தி (சிநேஹம்) உண்டாகும். 10, 11மிடங்களில் குரு இருந்தால் யாயியானவன் தனத்தைத் தருபவனாகவாவான். (எ—று) (431)

चन्द्रादित्यौ समस्थाने संधिस्स्यात्तिष्ठतो यदि ।
विपरीते तु युद्धं स्याद्भानोर्द्वादशगे विधौ ।
तत्र युद्धं न भवति शास्त्रे ज्ञानप्रदीपके ॥ ४३२ ॥
चरराशिस्थिते चन्द्रे चरराश्युदयेऽपि वा ।
शत्रुरागत्य संधाता विपरीते विपर्ययः ॥ ४३३ ॥

(க—ரை) சந்திரன் சூரியன் இவர்கள் ஸமராசியில் சேர்ந்திருந்தால் சந்தி (ராஜி) உண்டாகும். இதற்குமாறி இருந்தால் சண்டையுண்டாகும். சூரியனுக்கு 12மிடத்தில் சந்திரனிருந்தால் யுத்தம் நடைபெறுதென ஞானப்ரதீபகம் என்ற சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. சந்திரன் சரராசியிலிருந்தாலும், சரராசி உதயமானாலும் சத்துருவானவன் வந்து ஸந்தி (ராஜி) அடைவான். இதற்குமாறி இருந்தால் பலனும் மாறியே நடக்கும். (எ—று) (433)

युग्मराशिस्थिते चन्द्रे स्थिरराश्युदये तथा ।
अर्द्धराज्यं समागत्य सेनानीर्विनिवर्तते ॥ ४३४ ॥

सिंहादिराशिषट्के तु स्थायिनो भङ्गदायकः ।
कर्क्यादिव्युत्क्रमात्षट्के यायिनश्चन्द्रमास्थितः ।
स्थायीयायीक्रमेणैवं ब्रूयाद्ग्रहवशात्फलम् ॥ ४३५ ॥

(க—ரை) சந்திரன் ஒத்தைப்பட்டராசியிலிருந்தாலும், ஸ்திரராசி உதயமானாலும், சத்துருஸேனாதிபதியானவன் தனது பாதி ராஜ்யம் வரை வந்து திரும்பிவிடுவான். சந்திரன் சிங்கம் முதலான 6ராசிகளில் (அதாவது: ஸிம்ஹம், கன்னி, துலாம், விருஶ்சிகம் தனுஸ், மகரம், என்ற ராசிகளில்) இருந்தால் ஸ்தாயிக்கு தோல்வியைத் தருவான். கடகம் முதல் தலைகீழான 6ராசிகளில் (அதாவது: கடகம், மிதுனம், விருஷபம், மேஷம், மீனம் கும்பம் என்ற ராசிகளில்) சந்திரனிருந்தால் யாயிக்கு தோல்வியைத் தருவான். மேற்கூறிய முறைப்படி ஸ்தாயீ யாயிகளுக்கு கிரஹங்கள் மூலம் பலனை உபதேசிக்க வேண்டும். (எ—று) (435)

இருபத்துநான்காவது ஸேனாகாண்டம் முற்றிற்று.

இருபத்துஐந்தாவது யாத்திராகாண்டம்.

यात्राकाण्डं प्रवक्ष्यामि सर्वेषां हितलिप्सया ।
गमनागमनं चैव लाभालाभौ शुभाशुभम् ।
सर्वं विचार्य कथयेत्पृच्छतां शास्त्रवित्तमः ॥ ४३६ ॥
मित्रक्षेत्राणि पश्यन्ति यदि मित्रग्रहा स्तदा ।
मित्रस्यागमनं ब्रूयान्नीचं नीचग्रहा यदि ॥ ४३७ ॥
नीचस्यागमनं ब्रूयादुच्चमुच्चग्रहा यदि ।
स्वाधिकाराय गमनं पुंराशौ पुंग्रहा यदि ॥ ४३८ ॥
पुरुषायेति गमनं स्त्रीराशौ स्त्रीग्रहा यदि ।
स्त्रियै गमनमित्युक्त मन्येष्वेवं विचारयेत् ॥ ४३९ ॥

(க—ரை) எல்லோருடைய நன்மையையும் கருதி யாத்திரா காண்டத்தைச் சொல்லுறேன். செல்லுதல், வருதல், லாபம், நஷ்டம்,

சுபம், அசுபம் இவைகள் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்துபார்த்து பிரஸ்னம் செய்பவர்களுக்குக் கூறவேண்டும். மித்திரக்கிரஹங்கள் ப்ரஸ்னகாலத்தில் மித்திரக்ஷேத்திரத்தைப் பார்த்தால் மித்திரனின் (சினேஹிதனின்) வரவையும், நீசக்கிரஹங்கள் நீசராசியைப் பார்த்தால் நீசனின் (தாழ்ந்தவனின்) வரவையும், சொல்லவேண்டும். உச்சமடைந்தக் கிரஹங்கள் உச்சஸ்தானத்தைப் பார்த்தால் தனது அதிகாரத்தை உத்தேசித்து கமனத்தை (செல்லுதலைச்) சொல்லவேண்டும். புருஷராசியில் புருஷக்கிரஹங்களிருந்தால் புருஷனை யுத்தேசித்த கமனமும், ஸ்திரீராசியில் ஸ்திரீ கிரஹங்களிருந்தால் ஸ்திரீயை யுத்தேசித்தயாத்திரையும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவிடங்களிலும் இவ்விதமே காணவேண்டும். (எ—று) (439)

चरराश्युदयारूढे तत्तद्ग्रहविलोकिते ।
तत्तदाशासु गच्छन्ति प्रष्टारः शास्त्रनिर्णयः ॥ ४४० ॥
स्थिरराश्युदयारूढे शन्यर्काङ्गारकाः स्थिताः ।
अथवा दशमस्थाश्चेद्गमनागमने न च ॥ ४४१ ॥
शुक्रसौम्येन्दुजीवाश्च तिष्ठन्ति चरराशिषु ।
विद्यते स्वेष्टसिध्यर्थं गमनागमनं तदा ॥ ४४२ ॥

(க—ரை) சரராசியானது உதயாரூடராசிகளாகவாகி அது அந்தந்தக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் பார்க்கின்ற அந்தந்தக் கிரஹங்களுக்குரிய திசையில் ப்ரஸ்னம் செய்பவனுக்கு கமனத்தைச் சொல்லவேண்டும். ஸ்திரராசி உதயாரூடராசியாகவாகி அதில் சனி, சூரியன், செவ்வாய் இவர்களிருந்தாலும், அல்லது 10மிடத்தில் மேற்கூறியவர்களிருந்தாலும் யாத்திரை, வருதல் இரண்டும் நடைபெறாது. சுக்கிரன், குரு, சந்திரன் இவர்கள் சரராசியிலிருந்தால் தனது இஷ்டஸித்திக்காக கமனாகமனங்கள் (போக்கு வரத்து) ஏற்படும்.

स्थितिप्रश्ने स्थितिं ब्रूयान्मस्तकोदयराशिषु ।
पृष्ठोदयेषु गमनं क्रमेण शुभदं वदेत् ॥ ४४३ ॥
द्वितीये च तृतीये च तिष्ठन्ति यदि पुंग्रहाः ।
त्रिदिनात्पत्रिकायाति दूतो वा प्रेषितस्य च ॥ ४४४ ॥

लग्नात्सहजव्योमलाभेष्विन्दुज्ञभार्गवाः ।
तिष्ठन्ति यदि तत्काले त्वावृत्तिः प्रेषितस्य च ॥ ४४५ ॥
चतुर्थे द्वादशे वापि तिष्ठन्तश्चेच्छुभग्रहाः ।
पत्रिका प्रेषितस्याशु समायाति न संशयः ॥ ४४६ ॥

(க—ரை) ஸ்திதியைப்பற்றிய பிரஸ்னம் நேர்ந்தால்—சீர்ஷோதயராசி உதயமாகில் ஸ்திதியும் (ஒரே இடத்தில் நிலைத்திருத்தலும்) பிருஷ்டோதயராசி உதயமானால் யாத்திரையும், நன்மையைத் தருவதாகச் சொல்லவேண்டும். ப்ரஸ்னலக்கினக்கு 2, 3மிடங்களில் புருஷக்கிரஹங்களிருந்தால் 3தினங்களுக்குள் பத்திரிகைவரும். அல்லது வெளியில் சென்றவனிடமிருந்து தூதனாவது வருவான். 1, 2, 3, 10, 11மிடங்களில் சந்திரன் புதன் சுக்கிரன் இவர்களிருந்தால் வெளியில் அனுப்பப்பட்டவன் திரும்பிவருவான். 4,12மிடங்களில் சுபக்கிரஹங்களிருந்தால் வெளியில் சென்றவனிடமிருந்து பத்திரிகைவரும். இதில் ஸந்தேஹமில்லை. (எ—று) (446)

षष्ठे वा पञ्चमे वापि यदि पापग्रहाःस्थिताः ।
प्रेषितो व्याधिपीडार्तः समायाति न संशयः ॥ ४४७ ॥
चापोक्षछागसिंहेषु यदि तिष्ठति चन्द्रमाः ।
चिन्तितः पुनरायाति चतुर्थे चेत्तदागमः ॥ ४४८ ॥
स्वस्वर्क्षेषु च तिष्ठन्ति शुक्रजीवेन्दुसोमजाः ।
प्रयाणागमने ब्रूयात्तत्तदाशासु सर्वदा ॥ ४४९ ॥

(க—ரை) ப்ரஸ்னலக்கினத்துக்கு 6லோ, 5லோ பாபக்கிரஹங்களிருந்தால் அனுப்பப்பட்டவன் வியாதியினால் பீடிக்கப்பட்டு திரும்பி வருவான். இதில் ஸந்தேஹமில்லை. சந்திரன் தனுஸ், விருஷபம், மேஷம் ஸிம்ஹம் இவைகளிலிருந்தால் நினைக்கப்பட்டவன் திரும்பி வருவான். 4மிடத்தில் சந்திரனிருந்தாலும் நினைக்கப்பட்டவன் திரும்பிவருவான். சுக்கிரன், குரு, சந்திரன், புதன் இவர்கள் தத்தமது சொந்தவீட்டிலிருந்தால் அப்பொழுது அந்தந்தக் கிரஹங்களுக்குரியதிக்கில் போக்குவரத்து ஏற்படும். (எ—று) (449)

ग्रहः स्वक्षेत्रमायाति यावत्तत्र फलं वदेत् ।
शुभग्रहवशात्सौख्यं पीडां पपग्रहैर्वदेत् ॥ ४५० ॥

सप्तमाष्टमयोः पापास्तिष्ठन्ति च यदिग्रहाः ।
प्रेषितो हृतसर्वस्वस्तत्रैव मरणं व्रजेत् ॥ ४५१ ॥

षष्ठे पापयुते मार्गे गामिबंधो भविष्यति ।
जलराशौ स्थिते पापे चिरेणायाति चिन्तितः ।
बलाबलानुरूपेण शुभाशुभनिरूपणम् ॥ ४५२ ॥

(க – ரை) கிரஹமானது ஸ்வக்ஷேத்திரத்தை எப்பொழுது அடைகிறதோ அப்பொழுது யாத்திரை முதலியவற்றில் பலனின்லாபத்தைச் சொல்லவேண்டும். அதிலும் சுபக்கிரஹங்கள் மூலம் ஸௌக்யத்தையும், பாபக்கிரஹங்கள் மூலம் துக்கத்தையும் சொல்லவேண்டும். உதயலக்கினத்துக்கு 7, 8மிடங்களில் பாபர்களிருந்தால் வெளியில் அனுப்பப்பட்டவன் அபஹரிக்கப்பட்ட எல்லாத் தனங்களையுமுடையவனாய் அங்கேயே மரணமடைவான். 6மிடத்தில் பாபனிருந்தால் சென்றவன் மார்க்கத்தில் கட்டுப்படுதலையடைவான். பாபன் ஜலராசியாலிருந்தால் எண்ணப்பட்டவன் வெகுகாலம் சென்று வருவான். கிரஹங்களின் பலம், பலக்குறைவு இவற்றை அனுஸரித்து சுபம், அசுபம் இரண்டையுமுபதேசிக்கவேண்டும். (452)

இருபத்தைந்தாவது யாத்திராகாண்டம் முற்றிற்று.

இருபத்தாறுவது விருஷ்டிகாண்டம்.

जलराशौ तु लग्ने वा जलग्रहनिरीक्षिते ।
कथयेद्वृष्टिरस्तीति विपरीते न वर्षति ॥ ४५३ ॥

जलराशिषु शुक्रेन्दू तिष्ठतो वृष्टिरुत्तमा ।
एतौ स्वक्षेत्रमुच्चं वा पश्यतो यदि केन्द्रगौ ॥ ४५४ ॥

त्रिचतुर्दिवसानन्तर्महावृष्टिर्भविष्यति ।
लग्नाच्चतुर्थे शुक्रस्स्यात्तद्दिने वृष्टिरुत्तमा ॥ ४५५ ॥

(க–ரை) ஜலராசிலக்கினமாகவானாலும், ஜலக்கிரஹத்தினால் லக்கினம் பார்க்கப் பட்டாலும் மழை பொழியுமெனக் கூறவேண்டும். இதற்குமாறி இருந்தால் மழை பொழியாது. சுக்கிரன் சந்திரன் இவர்கள் ஜலராசியிலிருந்தால் அதிகமான மழையுண்டாகும். இந்தச் சுக்கிர சந்திரர்கள் தத்தமது க்ஷேத்திரத்தையோ உச்சத்தையோ பார்த்தாலும், இவர்கள் கேந்திரத்திலிருந்தாலும் 3, 4 தினங்களுக்குள்ளேயே பெரியமழை பொழியப் போவதாய்ச் சொல்லவேண்டும். லக்கினத்துக்கு 4மிடத்தில் சுக்கிரனிருந்தால் பிரஶ்னம் செய்ததினத்தன்றே அதிகமானமழை ஏற்படப்போவதாய்க் கூறவேண்டும். (எ–று) (455)

जलराशिषु तिष्ठन्ति शुक्रजीवसुधाकराः ।
आरूढोदयराशींश्चेत्पश्यन्त्यधिकवृष्टय: ॥ ४५६ ॥
छत्रे पृष्ठोदये जाते पृष्ठोदयग्रहेक्षिते ।
तत्काले परिवेषादौ दृष्टे वृष्टिर्महत्तरा ॥ ४५७ ॥
केन्द्रेषु मन्दभौमज्ञराहवो यदि संस्थिताः ।
वृष्टिर्नास्तीति कथयेदथवा चण्डमारुतः ॥ ४५८ ॥
पापास्सौम्यविमिश्राश्चेदल्पवृष्टिर्भविष्यति ।
चापस्थौ मन्दराहू चेद्वृष्टिर्नास्तीति कीर्तयेत् ।
शुभः कार्मुकसंस्थश्चेद्घोरा वृष्टिर्भविष्यति ॥ ४५९ ॥

(க–ரை) சுக்கிரன், குரு, சந்திரன் இவர்கள் ஜலராசியிலிருந்தாலும், ஆரூடராசி, உதயராசி இவைகளைப் பார்த்தாலும் அதிகமான மழையுண்டாகும். பிருஷ்டோதயராசி சத்திரராசியாகி பிருஷ்டோதயமுள்ளக் கிரஹத்தால் பார்க்கப்பட்டு அச்சமயம் பரிவேஷாதிகளும் காணப்படுமானால் அதிகமானமழை ஏற்படும். கேந்திரத்தில் சனி, செவ்வாய், புதன், ராஹு இவர்களிருந்தால் மழை பொழியாதென்றோ, அல்லது பெரும் காற்று அடிக்குமென்றோ கூறவேண்டும். பாபியானக் கிரஹங்கள் சுபருடன் கூடி (கேந்திரத்தில்) இருந்தால் ஸ்வல்பம் மழையுண்டாகும். சனி ராஹு இவர்கள் ப்ரஶ்னகாலத்தில் தனுவிலிருந்தால் மழை பொழியாதெனக் கூறவேண்டும். சுபர்கள் தனுவிலிருந்தால் பெரும் மழை பொழியுமெனக் கூறவேண்டும். (எ–று) (459)

उच्चेन युक्ते दृष्टे वा त्वर्घवृद्धिर्भविष्यति ।
नीचेन युक्ते दृष्टे वा स्यादर्घक्षय ईरितः ॥ ४६० ॥
मित्रस्वामिवशात्साम्यमेवं ज्ञात्वा वदेत्सुधीः ।
शुभग्रहयुते वृद्धिरशुभेऽर्घस्य नाशनम् ॥ ४६१ ॥

(க—ரை) (உதயலக்கினமானது) உச்சமடைந்தக் கிரஹத்துடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் விலைக்கு விருத்தியுண்டாகும். நீசமடைந்தக் கிரஹத்துடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் விலைக்குக் குறைவு உண்டாகும். மித்திரக்கிரஹம், அதிபதியானக்கிரஹம் இவர்களின் பார்வையோ, சேர்க்கையோ லக்கினத்துக்கு இருந்தால் விலைநடுத்தரமாக இருக்குமெனக் கூறவேண்டும். லக்கினம் சுபக்கிரஹத்துடன்கூடி இருந்தால் விலைக்கு விருத்தியும், பாபனிருந்தால் விலைக்குக் குறைவுமேற்படும். (461)

இருபத்தாறுவது விருஷ்டிகாண்டம் முற்றிற்று.

இருபத்தேழாவது நௌகா(கப்பல்)காண்டம்.

(அ—கை) இக்காண்டத்தில் கப்பல்வரவுவிஷயமான பிரஶ்னம் நேர்ந்தால் அப்பொழுது பதில் சொல்லவேண்டியமுறைகள் கூறப்படுகின்றன.—

जलराशिषु लग्नेषु जीवशुक्रेन्दवो यदि ।
पोतस्यागमनं ब्रूयादशुभाश्चे न्नहीति च ॥ ४६२ ॥
आरूढच्छत्रलग्नेषु वीक्षितेष्वशुभग्रहैः ।
पोतभंगो भवेन्नीचशत्रुभिर्वा तथा वदेत् ॥ ४६३ ॥
अपृष्ठभोदये लग्ने दृष्टे देशात्तु नौर्व्रजेत् ।
तद्ग्रहेतु यदा दृष्टे तदा नौदर्शनं भवेत् ॥ ४६४ ॥

(க—ரை) ஜலராசி லக்கினமாகவாகி அதில் குரு, சுக்கிரன், சந்திரன் இவர்களிருந்தால் கப்பலின் வரவைச் சொல்லவேண்டும். லக்கினத்தில் பாபர்களிருந்தால் கப்பல்வராதென்று சொல்லவேண்டும். ஆரூடம், சத்திரம், லக்கினம் என்ற ராசிகள் அசுபர்களால் பார்க்கப்பட்டால் கப்பல் மூழ்கிவிடும். முற்கூறிய ராசிகள் நீசமடைந்தக்கிரஹம் சத்துருகிரஹம் இவற்றால் பார்க்கப்பட்டாலும் கப்பலுக்குச் சேதத்தையே சொல்லவேண்டும். பிருஷ்டோதயராசியல்லாதராசி லக்கினமானாலும், உதயலக்கினம் தனது அதிபனால் பார்க்கப்பட்டாலும், தேசத்தினின்றும் கப்பல் புறப்படும். லக்கினாதிபன் வேறுகிரஹத்தால் எப்பொழுது பார்க்கப்படுகிறானோ அப்பொழுது கப்பலின் தர்சனமுண்டாகும். (எ—று) (464)

चरराशौ चरच्छत्रे द्रुतमायाति नैस्तदा ।
चतुर्थे पञ्चमे चन्द्रो यदि नौः शीघ्रमेष्यति ॥ ४६५ ॥
द्वितीये वा तृतीये वा शुक्रश्चेन्नौसमागमः ।
अनेनैव क्रमेणैवं सर्वं वीक्ष्य वदेत्स्फुटम् ॥ ४६६ ॥

(க—ரை) சரராசி லக்கினமானாலும், சரராசி சத்திரராசியானாலும் கப்பல் சீக்கிரமாய் வந்துவிடுமெனக் கூறவேண்டும். 4மிடத்திலோ 5மிடத்திலோ சந்திரனிருந்தாலும் கப்பல்சீக்கிரமாய் வந்துவிடும். 2மிடத்திலோ 3மிடத்திலோ சுக்கிரனிருந்தாலும் கப்பல் வந்துசேரும். இவ்விதமே மற்றவிஷயங்களையும் நன்கு ஆராய்ந்து சொல்லவேண்டும். (எ—று) (496)

இருபத்தேழாவது நௌகா காண்டம் முற்றிற்று.

இருபத்தெட்டாவது ஸித்திகாண்டம்.

(அ—கை) இக்காண்டத்தில் கார்யஸித்தியுண்டாகும் காலம் கூறப்படுகிறது.—

लग्नस्थौ कार्यलग्नेशौ कार्यस्थौ लग्नकार्यपौ ।
कार्यस्य सिद्धिं कुरुतस्तदानीं निश्चयाद्वदेत् ॥ ४६७ ॥
लग्नं लग्नेश्वरः पश्येत्कार्यं पश्येत्तु कार्यपः ।
कार्येश्वरो लग्नगतः प्रपश्ये ल्लग्नपं तथा ॥ ४६८ ॥
वा विलग्नपतिः कार्यगृहस्थः कार्यपं तथा ।
पश्येल्लग्नाधिपः कार्यं लग्नं कार्यपतिस्तथा ॥ ४६९ ॥

कार्येशो लग्नपं पश्येल्लग्नेशः कार्यपं तथा ।
चन्द्रदृष्टिर्यदा चेत्स्यात्कार्यसिद्धिस्तदा स्मृता ॥ ४७० ॥

(க—ரை) (1) 10க் குடையவன் லக்கிஞதிபன் இவர்கள் லக்கினத்திலிருந்தாலும் (2) லக்கிஞதிபன் 10க் குடையவன் இவர்கள் 10மிடத்திலிருந்தாலும், (3) லக்கினத்தை லக்கிஞதிபனும் 10மிடத்தை 10க்குடையவனும் பார்த்தாலும், (4) 10க் குடையவன் லக்கினத்தையடைந்து லக்கிஞதிபனைப் பார்த்தாலும், (5) லக்கிஞதிபன் 10மிடத்தையடைந்து 10க் குடையவனைப் பார்த்தாலும், (6) லக்கிஞதிபன் 10மிடத்தையும், 10க் குடையவன் லக்கினத்தையும் பார்த்தாலும், (7) 10க் குடையவன் லஞதிபனையும், லக்கிஞதிபன் 10க் குயைவனையும் பார்த்தாலும் ஆகிய இவ்வேழும் கார்யஸித்தியைத் தரும் யோகங்களாகும். இந்த யோகங்களில் சந்திரனின் பார்வையானது எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுது கார்யஸித்தி நிஶ்சயமாயுண்டாகும். (எ—று) (470)

असत्स्वपि च योगेषु कार्येशो लग्नराशिगः ।
भविष्यति तदा काले कार्यं ज्ञानप्रदीपके ॥ ४७१ ॥
सम्यग्विचार्य प्रवदेन्न मिथ्यावाग्भविष्यति ।
प्रश्नादर्शमिदं शास्त्रं पृथिव्यां लोकभूषणम् ॥ ४७२ ॥

(க—ரை) முற்கூறிய காரியஸித்தி யோகங்களில்லாவிடினும் 10க்குடையவன் கோசரரீதியாய் லக்கினத்தை எப்பொழுது அடைகிருனே அப்பொழுது கார்யசித்தியுண்டாகப் போவதாய்க் கூற வேண்டும் என்பது ஞானப்ரதீப சாஸ்திரக்காரரின் மதமாகும். முன்பின் ஸமாசாரங்களை நன்கு ஆராய்ந்துபார்த்து பலன்களைக் கூறினல் பலன் சொல்லுபவன் பொய்யான வாக்குள்ளவனுகவாக மாட்டான். இந்த ப்ரஸ்னுதர்சமென்ற சாஸ்திரமானது லோகத்துக்கு அலங்காரமாக இருக்கின்றது. (எ—று) (472)

இருபத்தெட்டாவது ஸித்திகாண்டம் முற்றிற்று.

ப்ரஸ்னருடபல நிர்ணயம் முற்றிற்று.

ஸ்ரீமத் பாகவதம்.

தேவநாகர எழுத்தில் மூலமும் தமிழுரையுமுள்ளது.

இதற்கு, முற்றிலும் ஸ்ரீதரீய வியாக்கியானத்தையும், ஆங்காங்கு வம்சீதரீய வியாக்கியானத்தையும் தழுவி மூலசுலோகத்திலுள்ள ஒருபதங்கூட விடாமல் எளியநடையில் தமிழில் உரை எழுதப்பட்டிருக்கிறது. "கல்நெஞ்சையும் கரைத்து ஸ்ரீகிருஷ்ணபக்தியிலீடுபடும்படிச் செய்யவல்லது ஸ்ரீமத் பாகவதம்" என்ற அதன் ப்ரஸித்திக்கேற்ப இம்மொழிபெயர்ப்பும் அமைந்திருப்பதாகச் சொல்லுவது மிகையாகாது. மேலும், மூலத்தில் பதிந்துகிடக்கும் ஆழ்ந்த கருத்துக்கள் ஆங்காங்கு குறிப்புரைகளாலும் பிறவற்ருலும் விளக்கப்பட்டிருக்கின்றன. இம்மொழிபெயர்ப்போ கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பயன் தரக்கூடிய முறையில் அமைந்துள்ளது என்பதை நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை.

மேலும் கேரளத்தில் குருவாயூரென்ற திவ்யக்ஷேத்திரத்தில் வசித்துவந்த ஸ்ரீநாராயணபட்டர் என்ற மஹாகவியால் ஸ்ரீமத் பாகவதார்த்தத்தைச் சுருக்கி தொடர்ச்சியாக இயற்றப்பட்ட நாராயணீயம் என்ற பகவத்ஸ்துதியும் தமிழில் பதவுரையுடன் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஷிகவியானவர் ஒவ்வொரு தசகத்தின் (ஒவ்வொரு பத்துசுலோகத்தின்) முடிவிலும் தனது ரோக நிவிருத்தியை ப்ரார்த்தித்திருப்பதற்கேற்ப ரோகநிவிருத்தியையுமடைந்தார் என்பது கேரளீயர் அறிந்ததொரு விஷயமாகும். ஆகவே பகவத் பக்தசிகாமணிகள் இந்த நற்சமயத்தைக் கைநழுவவிடமாட்டார் எனவெண்ணுகிருேம்.